

# பெருந்தமிழர் பக்தவத்சலம்


ஆசிரியர்:

**கவிரத்ன காஞ்சி. அமிழ்தன்**



*விற்பனை உரிமை:*

**விசாலாட்சி பதிப்பகம்**

7, ராமசாமி நாயுடு கார்டன் தெரு,

புதுப்பாக்கம்.......சென்னை-14.

முதற் பதிப்பு—நவம்பர், 1964

உரிமை ஆசிரியர்க்கு.

V2.11 81:2 1M97
N64

[விலை : ரூ. 6-00]

ARCHIVES LIBRARY MADRAS
108314

Kabeer Printing Works, Madras (103)

## நூலுக்குள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| | பொன்னுரை | ... vii |
| | முன்னுரை | ... ix |
| | என்னுரை | ... xxi |
| | காணிக்கை | ... xxxi |
| | கோல்ட்ஸ்மித் கண்ட பக்தவத்சலம் | ... xxxv |
| 1. | எங்கும் பொங்கிய இன்பம் | ... 1 |
| 2. | வாணி நிலைய வாயிலிலே | ... 21 |
| 3. | குமுறலின் குரல் | ... 37 |
| 4. | அலைகடலின் நடுவிலே | ... 57 |
| 5. | கரையிலே கண்ட காட்சிகள் | ... 115 |
| 6. | குடும்ப விளக்கு | ... 135 |
| 7. | குன்றின் மேல் இட்ட விளக்கு | ... 161 |
| 8. | தங்கச் சுரங்கம் | ... 215 |
| 9. | எங்கும் தவழும் இசை | ... 253 |
| | பக்தவத்சலம் வாழ்கவே! | ... 269 |
| | சிறப்புப் பெயரகராதி | ... 279 |

## படங்களின் பட்டியல்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நூலுக்குப் பொன்னுரை வழங்கிய ஜகத்குரு | vi |
| 2. | அலுவலகத்தில் | xxxiv |
| 3. | பெருந்தமிழரும் பெருமாட்டியும் | 2 |
| 4. | பேட்டையில் பிறந்த மாளிகை | 14 |
| 5. | சிந்தனைச் சேர்க்கை | 32 |
| 6. | பேட்டை அம்மன் கோயில் | 39 |
| 7. | பெருந்தமிழரை உருவாக்கிய பெருமான் | 46 |
| 8. | அரசியல் அரங்கில் | 64 |
| 9. | 'மல்லிகா' | 131 |
| 10. | மணிவிழா | 134 |
| 11. | ஜெனீவாவில் தம் தந்தையாருடன் | 137 |
| 12. | மணக்கோலத்தில் மகனும் மருமகளும் | 140 |
| 13. | மருமகன் சித்தரஞ்சனோடு மாமனார் மேஜர் அழகப்பர் | 142 |
| 14. | மகள் திருமணத்தில் மலரடி வணக்கம் | 147 |
| 15. | மகளின் திருமணத்தில் அந்நாள் முதலமைச்சர் | 149 |
| 16. | சம்மந்தி வி.கே.ஆர். தம்பதிகளுடன் மகளும் மருமகனும் | 152 |
| 17. | தமது 'மல்லிகா' மாளிகையில் கவர்னர் பிரகாசாவுடன் | 153 |
| 18. | மனை விளக்கும் மலை விளக்கும் | 156 |
| 19. | உதகையில் குடும்பத்துடன் | 159 |
| 20. | காமராஜ் அமைச்சரவையில் | 166 |
| 21. | பெருந்தமிழரும் பெருந்தலைவரும் | 167 |
| 22. | முதலமைச்சரானதும் முதல் விழா | 170 |
| 23. | உழவுக் கருவிகள் பழுதுபார்க்கும் தொழிற்கூட வண்டி | 181 |
| 24. | நேருவுடன் | 186 |
| 25. | உதகமண்டலத்தில் | 188 |
| 26. | புதுதில்லி விநாயகர் கோயிலில் | 192 |
| 27. | பெண் கல்விக்குப் பெருமை | 206 |
| 28. | நூலாசிரியருக்குப் பொன்னாடை | 209 |
| 29. | கே. சி. ரெட்டி—கனுங்கோவுடன் | 211 |
| 30. | எட்டயபுரம் பாரதி விழாவில் | 213 |
| 31. | பெருந்தமிழரின் பெருங்குடும்பம் | 218 |
| 32. | பாரதக் குடியரசுத் தலைவருடன் | 228 |
| 33. | பிரதமருடன் முதல்வர் | 242 |
| 34. | கண்ணும் கருத்தும் கலந்தன | 247 |
| 35. | நேருவின் சாம்பலுக்கு வணக்கம் | 251 |
| 36. | அயல் நாட்டில் | 254 |
| 37. | உலக அரங்கில் கேட்கிறார் (ஜெனீவா) | 258 |
| 38. | அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் | 266 |
| 39. | பேட்டையிலே அருளரசர் | 268 |



நூலுக்கு பொன்னுரை வழங்கிய ஜகத்குரு

காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின்

# பொன்னுரை

வையம் பெறினும் பொய்யுரைக்கமாட்டார் தொண்டை நாட்டார் என்று ஐயன் புகழேந்தி உரைத்தான் என்னும் வாக்கியம் சோழ அரசன் திருமுகத்திலிருந்து உதித்தது. மெய்யடியார்களும் மெய்யன்பர்களுமான சிவனடியார்களை வாயாரப்பாடும் வாய்ப்பு கிடைத்த ஓர் அமைச்சர் தெய்வப் பெருந்தன்மையை உலகறிய நிலை நாட்டினர். சேக்கிழார் என்னும் தொண்டை நாட்டைச் சேர்ந்த அப் பெருந்தமிழர் ஆக்கியதால் அத்திருத்தொண்டர் புராணமும் பெரிய புராணமாயிற்று—தமிழும் தெய்வத் தமிழாயிற்று. இன்று 900 ஆண்டுகளுக்குப் பின்பு அதே தொண்டை நாட்டில் பிறந்த நாமெல்லோரும் காணும் ஓர் அமைச்சர் தமிழ்நாட்டையே தெய்வத் தமிழ்நாடாக ஆக்கிக்கொண்டிருக்கின்றார். கடவுள் அவர்பால் பொழியும் அருள் நாட்டின் ஒவ்வோர் ஆத்மாவினிடமும் சுரக்கும் அருளையாகும். நாடெங்கும் இத்தகைய அமைச்சர்களையே தந்து தமிழ்நாடு மாத்திரமல்லாமல் இமயம் முதல் குமரி வரையில் நல்லாட்சி ஓங்கவும், மக்களுக்கு நல்வாழ்வு பெருகவும், நமது ஸ்ரீ பக்த வத்சலம் அவர்கள் நோயற்ற வாழ்வுடன் நீடுழி

எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்க வேண்டுமென்று ஸ்ரீ காமாட்சியம்மை அருள் பாலிப்பாளாக.

இத்தகைய பெருந்தமிழராம் – அமைச்சரின் பெருவாழ்க்கையை ஒவ்வொரு தமிழனும் படித்து மேம்பாடடையும் வண்ணம் அவ்வாழ்க்கையை அமிழ்தம் என்னுமாறு தீந்தமிழாலான நூல்வடிவில் உருவாக்கித் தரும் பாக்கியம் காமகோட்ட நகரான இக்காஞ்சியம்பதியில் பிறந்த கவிரத்ன காஞ்சி அமிழ்தனுக்கு ஒரு பெரு வாய்ப்பாய்க் கிடைத்ததை எண்ணி பெருமிதம் அடைகின்றோம்.

சுபம்



## முன்னுரை

கவிஞர் – காஞ்சி அமிழ்தன் இளைஞர்; கலைஞர்; குள்ள உருவினர்; நெடிய நினைவினர்; கள்ளமற்ற உள்ளத்தினர்; களைப்பற்ற உழைப்பினர்; தமிழகத்தின் வடமலையில் தமிழ் பயின்றவர்; பாரதத்தின் வடமலையில் தவம் பயின்றவர். அவர்க்கு அமிழ்தன் எனப் பெயர் வைத்தவர் தமிழ் முனிவர் திரு. வி. க.; அவர் அமிழ்தனே ஆக அருள்வைத்தவர் தவமுனிவர் சிவானந்தர். ‘இமய மலையும் தியானமும்’ கண்ட இவரை அமிழ்தனாகவே ஆக்க அருள் புரிந்தன தமிழும் தவமும் எனலாம்.

*

காஞ்சி அமிழ்தன் கருவிலேயே திருவுடையராய்ப் பிறந்த கவிஞர் எனலாம். எளிய இனிய பாடல்களை அரிய பெரிய முயற்சி ஏதும் இன்றியே பாடவல்லவர் அவர். தமிழுணர்வோடு தெய்வவுணர்வும் நிரம்பிய அவர் திருவேங்கடம் உடையானிடம் ஈடுபட்டுப் பாடிய ‘திருவேங்கடவன் அருள்வேட்டல்’ ஒரு முறை கேட்டாரைப் பன்முறை கேட்கச் செய்யும்; பன்முறை கேட்டாரையும் மறுமுறை ஒருமுறையேனும் கேட்கத் தூண்டும். கவிஞர் காஞ்சி அமிழ்தனின் கவிதைகள்

அழகிய நூலுருப்பெறும் அந்நாள் தமிழ்க் கவிதைத் தாய்க்கு ஒரு நன்னாளே ஆகும்.

*

கவிஞர் காஞ்சி அமிழ்தன் நாட்டுத் தலைவர்கள் பலரிடமும் நட்பு கொள்ள நேர்ந்தது அவர் பெற்ற பேறும் அவர்கள் பெற்ற பேறுமே ஆகும். புலவர்களின் நட்பு புரவலர்களுக்கு அழியாப் புகழ் தருவதன்றோ? 'புலவர் பாடும் புகழ்' ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்து முடி சூடிய மன்னரெல்லாம் போற்றி விரும்பிய பெருஞ்செல்வம் அன்றோ? 'நாட்டைக் காக்கும் நற்பணியில் தவறுவேனாகில் என் நிலவரையைப் புலவர் பாடாது செல்வாராக'! என்று வஞ்சினம் கூறிய வாள் வேந்தன் வாழ்ந்த நாடு தமிழ்நாடு. எனவே உரையும் பாட்டும் உடையராகவே முடிசூடிய அந்நாள் மன்னரும் முடிசூடா இந்நாள் மன்னரும் விரும்புவது இயற்கை; ஏற்றது. புலவர் புகழ்பெறாப் புரவலர் வாழ்ந்தால் என்ன? வாழாவிட்டதால்தான் என்ன? புலவர் பாடும் புகழே புகழ். கடவுளரும் காதலிக்கும் புகழ் அதுவெனின் மண்ணுள் தலைவர் அதை அமிழ்தென அவாவுதல் அவர் கடமை அன்றோ? அமிழ்தளிக்கும் அமிழ்தினை - அமிழ்தனை - புலவனை - விரும்பாதார் யார்?

*

வாழ்க்கை வரலாறு ஓர் உயர்ந்த கலை - துறை; கலைத்துறை. அக்கலை - அத்துறை சுவை நிரம்பியது; பயன் நிறைந்தது. இவ்வுண்மைக்கு அரண் செய்யும்



வகையில் சான்றோர் பொன்மொழிகள் பலவற்றை மேற்கோளாகக் காட்டலாம். ஒரு சில வருமாறு:

*

வரலாற்றின் தனிப்பட்ட அகத்துறைப் பண்பே வாழ்க்கை வரலாறு.

சான்றோர்களின் வாழ்க்கைகளே மனித குலத்தின் தலைசிறந்த ஆசிரியர்கள். —பவுலர்.

*

பெரும்பாலும் பெரியோர்களின் வரலாறெல்லாம் சுருங்கியனவாகவே உள்ளன. அவர்களின் உண்மையான வாழ்க்கை அவர்களுடைய செயல்களாகிய புத்தகத்திலேயே அடங்கியுள்ளன. பார்க்கப்போனால் வாழ்க்கை வரலாறு தவிர வரலாறு என்பதே இல்லை.

—எமர்சன்.

*

வாழ்க்கை வரலாறே உண்மையான வரலாறு.

—கார்லைல்.

*

உயர்ந்தோர் வாழ்க்கை எல்லாம் நம் வாழ்க்கையை உயர்வுபடுத்தவே உந்துகின்றன. —லாங்பெல்லோ.

*

நன்றாக எழுதப்பட்ட வாழ்க்கை பெருமளவிற்கு நன்றாக வாழப்பட்ட வாழ்க்கையை ஒத்த அருமைப்பாடு உடையதாகும். —கார்லைல்.

எழுதப்படுதற்குரிய தகுதியுடைய வாழ்க்கை உண்டாயின் அது விவரமாகவும் உண்மையாகவும் எழுதப்படுதற்குரிய தகுதி வாய்ந்ததே ஆகும். —லாங்பெல்லோ.

*

சிறப்பாகத் தன்முயற்சியாலேயே உயர்நிலைக்கும் பயனுர்ந்த நிலைக்கும் உயர்ந்த பெரியோர் - நல்லோர் - வாழ்க்கை வரலாறுகள் ஊக்கமளிக்கும் உயர்வூட்டும் கல்வியே - ஆராய்ச்சியே ஆகும். அதனுடைய நேர்பயன் அது போற்றும் உயர்வைக் கற்பார் உள்ளத்தில் பதிப்பிப்பதே ஆகும். —எச். மான்.

*

எல்லாக் கல்வியினும் ஆய்வினும் மிகவும் இன்பமும் பயனும் தருவது வாழ்க்கை வரலாறே ஆகும்.

—லாண்டர்.

*

வாழ்க்கை வரலாறே யாண்டும் இன்பமும் பயனும் தரும் படிப்பாகும்.

—கார்லைல்.

*

பெரியோர்கள் சிறப்பாக நல்லோர்கள் வாழ்க்கை வரலாறுகள் பிறருக்கு வழிகாட்டியாகவும் தூண்டுதலாகவும் அறிவும் பயனும் வழங்கவல்லன. அவற்றுள் சிறப்பான சில வாழ்க்கை வரலாறுகள் உயர் வாழ்க்கையையும் உயர் சிந்தனையையும் ஊக்கச் செயலாண்மையும் ஒதுவார்



நலங்கருதியும் உலகோர் நலங்கருதியும் ஊட்டவல்ல மறை நூல்களை ஒத்த மாண்புடையனவாகும்.

—எஸ். சிமைபிலஸ்.

*

நிலையான கட்டடங்களில் இருந்தும் ஆவணங்களில் இருந்தும் வரலாறுகளை உருவாக்கக்கூடும். ஆனால் வாழ்க்கை வரலாறுகளைத் தாமே பெற்றுள்ள அறிவுநலங் கொண்டே எழுத இயலும். —ஜான்சன்.

*

என்னுடைய அறிவுரை உயர்ந்தோர் பிறர் வாழ்க்கையைக் கண்ணாடியைப் பார்ப்பதுபோலப் பார்த்து நம் நடத்தைக்கு எடுத்துக்காட்டுகளைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதே. —டெரன்ஸ்.

*

தமிழ் மொழியில் ஒருசில சிறந்த வாழ்க்கை வரலாறுகளே இதுவரை வெளிவந்துள்ளன. அவற்றின் வரிசையில் வைத்துப் போற்றத்தக்கது கவிஞர் காஞ்சி அமிழ்தன் அவர்கள் எழுதியுள்ள 'பெருந்தமிழர் பக்தவத்சலம்' என்ற பெயர்பூண்ட சிறந்த வாழ்க்கை வரலாற்று நூல்.

இந்நூலின் பெயரே சொற்பொருள் நலம் செறிந்து விளங்குவது இன்பந் தருவது. பெருந்தமிழராய் விளங்குகிறார் பக்தவத்சலம் என்பதோடு பெருந்தமிழரின் உரிமைப் பொருளாயும் உடைமைப் பொருளாயும் அவர் விளங்குகிறார் என்னும் தொனிப் பொருளையும் இத்

தலைப்பு தரும் இன்பத்தைக் கருதும்போது நூலாசிரியரின் நுண்ணறிவை வியப்பதா? தமிழ் மொழியின் ஆற்றலைப் போற்றுவதா?

ஒன்பது இயல்களாய்ப் பாகுபடுத்தப்பெற்று இருநூற்றெழுபத்தெட்டு பக்கங்களைக் கொண்டதாய் அமைந்துள்ள இந்நூல் இலக்கிய உணர்வோடும் வரலாற்றறிவோடும் எழுதப்பெற்றிருப்பது போற்றத்தக்கது. ஒவ்வோர் இயலுக்கும் தரப்பெற்றிருக்கும் தலைப்பும் அத்தலைப்பை அடுத்துப் பொறிக்கப் பெற்றுள்ள இலக்கிய அடிகளும் ஆசிரியரின் கலையுள்ளத்தைக் காட்டுவனவாகும். ஆங்காங்கே காணப்பெறும் இலக்கியச் சொல் ஆட்சிகள் நூலாசிரியரின் தமிழார்வத்தையும் தமிழறிவையும் புலப்படுத்துவனவாகும். எழுத்து இதயத்தைக் காட்டும். அந்த வகையில் இந்நூலைச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

*

'பெருந்தமிழர் பக்தவத்சலம்' நூலுள் தனித்தமிழ் மணம் வீசல் உள்ளத்தைக் குளிர்விப்பதாகும். கதரின் அடிப்படையும் தனித்தமிழின் அடிப்படையும் ஒன்றே. காந்தி அடிகள் கண்ட தன்னுட்டியல் (சுதேசிப்) பண்புக்கு உயிராக விளங்குவது கதரன்றோ? ஆடைமட்டுமன்றி அனைத்திலும் தன்னுட்டியல் மணங்கமழவேண்டும் என்பதே காந்தி அடிகள் கொள்கை அன்றோ? தன்னுட்டியல் (சுதேசி) கோட்பாடு மொழிவகையில் மட்டும் விலக்காக வேண்டுமோ?

உண்ணும் உணவில் கலப்படம் கூடாது என்று சட்டமும் செய்கிறோம். எண்ணும் எண்ணத்தின் குறியீட்டில்—உணர்வில்—சொற்சோற்றில் கலப்படம் செய்யலாமோ? வாயுணவு வயிற்றைக் கெடுக்கும்; செவியுணவு சிந்தையையே கெடுக்கும். வயிற்றினும் உயர்ந்தது சிந்தை அல்லவோ?



'தனித்தமிழ்' என்னும்போது ஒரோவழி அறிவியற் கலைச்சொற்களை – பிறமொழிச் சொற்களை – அப்படியே ஏற்க வேண்டியிருக்கும் என்று எண்ணி அச்சுறுத்துவார் உண்டு. அவர் கூற்று உண்மையேயாயினும் விதிவிலக்கு விதியாகாது.

இவ்வடிப்படை உண்மைகளில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு அமிழ்தனுர் இந்நூலை யாத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

*

கவிஞர் காஞ்சி அமிழ்தன் அவர்கள் 'பெருந்தமிழர் பக்தவத்சலம்' அவர்களிடம் பேரன்பும் பெருமதிப்பும் உடையவர்; நெருங்கிப் பழகும் பேறு பெற்றவர். அவர்தம் கைவண்ணம் முதலாக எவ்வண்ணமும் கண்டறியும் பெருமை பெற்றவர். எனவே முதலமைச்சர் வாயாலேயே அவர்தம் வாழ்க்கை வரலாற்றைக் கேட்டறியும் நல்வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது இயற்கையே. அந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தித் தாமறிந்த உண்மைகளை உலகறியச் செய்திருப்பது வரவேற்று வாழ்த்தற்குரியது.

இந்நூலாசிரியர் இந்நூலுடைத் தலைவரின் அரிய ஆக்கப் பணிகள் குறித்துத் தமிழ்நாட்டு அரசின் பல்வேறு துறைகளிடம் இருந்தும் அரிய செய்திகளை—

உண்மைகளை புள்ளி விவரங்களைத் திரட்டி இருப்பது வியந்து மகிழ்தற்குரியது. அவ்வாறே பெருந்தமிழரின் வாழ்க்கையோடு தொடர்புடைய பலரையும் கண்டு கேட்டு வினவி விடைபெற்று இந்நூலுள் உள்ள உண்மைகள் பலவற்றிற்கும் உரந்தேடியிருக்கும் அமிழ்தனுர் ஆர்வமும் உழைப்பும் இதுபோன்ற நூல் எழுதுவார்க்குச் சிறந்த முன்மாதிரி ஆகும்.

கருத்து வலிவுடைய இந்நூலுக்கு எழிலும் ஏற்றமும் தருவதாக அமைந்துள்ளது இந்நூலாசிரியரின் பெரு முயற்சியால் இந்நூலுள் காணப்பெறும் புகைப்படங் களின் தொகுப்பே ஆகும். இப்படங்கள் ஒவ்வொன்றின் அடியிலும் சுவை நலம் செறிந்த தலைப்புகளைத் தந்திருப் பது ஆசிரியரின் கலையுணர்வையே மீண்டும் நினைவு கூர்வதாகும். இந்த வகையில் இந்நூலாசிரியர் நூலுடைத் தலைவரின் பிறந்த ஊருக்கும் சென்று படங் கள் எடுத்துப் பதிப்பித்திருப்பது பாராட்டற்கு உரியது ஆகும். நூலின் மூவண்ண அட்டைப்படம் நூலாசிரிய ரின் சிந்தனை வண்ணத்தின் சிறப்பைக் காட்டுவதாகும். பேட்டையில் பிறந்த பெருமான் கோட்டையை ஆளும் பெருமையை அட்டைப் படம் விளக்கும் அழகு தனிச் சிறப்பு வாய்ந்தது ஆகும்.

சுருங்கச் சொன்னுல் நமது முதலமைச்சர் அவர் களைப் பற்றிய இவ்வளவு விரிவான – ஆதாரவுண்மை நிறைந்த – படங்கள் மலிந்த – கருத்தும் கவினும் கலந்த – புத்தகம் இதுவே எனலாம்.

*



முற்குறிப்பிட்டவாறு உரையும் பாட்டும் உடைய ராதலே உயர்ந்தோர்க்கு உயர்வு. அந்த வகையில் இந்த நூல் பெருந்தமிழர்க்குப் பெருமை செய்வது இன்பந் தருவது ஆகும். அமிழ்தனுரின் அருமையான பாடல்கள் பல இந்நூலின் முடிவில் அமைந்திருப்பது பக்தவத்சலனுரின் புகழ் தமிழ் உள்ளங்களில் நீடுவாழ வழி செய்வதாகும்.

*

'பெருந்தமிழர் பக்தவத்சலம்' நூலுக்குப் பொன் னுரை வழங்கியுள்ள பெரியார் யார்? ஜகத்குரு; காஞ்சி காமகோடி பீடாதிபதி; கலியுகத்தில் காசினிக்குத் தவம் நிறைந்த தமிழகம் தந்துள்ள கண்கண்ட தெய்வம்.

கல்வியின் பயன்—தவத்தின் பயன்—கடமையும் கருணையுமே ஆகும். இவ்வுண்மைக்கு ஓர் (ஆம். ஒரே ஒருவர்; ஒப்பற்றவர்) அரும்பெரு எடுத்துக்காட்டு இமய மாய் விளங்குபவரே அருளாளராகிய காமகோடி பீடத் தலைவர்.

'மூத்தோர் பாடியருள்' பத்துப்பாட்டுள் முதலாவ தாக விளங்கும் பெருமைசான்றது திருமுருகாற்றுப் படை; நாவீறு படைத்த நக்கீரர் பெருமான் அப்பாட்டுள் முனிவர்தம் இயல்பை அழகொழுகும் சொல்லோவியமாக ஆக்கித் தந்துள்ளார். அது வருமாறு:

*சீரை தைஇய உடுக்கையர் சீரொடு*
*வலம்புரி புரையும் வானரை முடியினர்*
*மாசற இமைக்கும் உருவினர் மானின்*
*உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்*

என்பெழுந் தியங்கும் யாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்ற நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்ருேர் அறியா அறிவினர் கற்ருேர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் 126—37

அழகொழுகும்—அருளொழுகும் இச்சொல்லோவியத்திற்கு ஓர் உயிரோவியமாக விளங்குகின்ற சான்ருேரே அருட்டிரு. சங்கராச்சாரிய அடிகளார்.

நாட்டுப் பெருந்தலைவர்களும் (ஜனுதிபதிகளும்) போற்றும் உலகப் பெருங்குரு (ஜகத்குரு)வாக விளங்குகின்ற அப்பெரியாரின் பொன்னுரை இந்நூலுக்குக் கிடைத்தது நூலுடைத் தலைவரும், நூலாசிரியரும் பல பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பயனே ஆகும்.

*

கவிஞர் காஞ்சி அமிழ்தன் அவர்கள் ஒருபெருந் தலைவர் உயர்திரு. காமராசர் அவர்களைத் தமது கண்கண்ட தெய்வமாகக் கருதுபவர்; போற்றுபவர். எனவே அவர் இந்நூலை அப்பெரியார்க்கே உரிமையாக்கியிருப்பது இந்நூலாசிரியரின் நன்றியுணர்வு நிறைந்த உள்ளப் பண்பாட்டின் உயர்வை காட்டுவதாகும். இச்செயல் தலைவர் காமராசரிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்ட பக்தவத்சலனுர் உள்ளத்திற்கும் உவகை தருவதே ஆகும். அனைத்திற்கும் மேலாக



வளரும் தமிழ் எழுத்தாளர் ஒருவர் முதல் வளர்ந்து சிறந்துள்ள தமிழ்நாட்டு முதலமைச்சர் ஒருவர் வரை எல்லோர் உள்ளத்தையும் கொள்ளை கொண்டுள்ள அனைத்திந்தியக் காங்கிரஸ் தலைவரின் அருமை பெருமையையே இது அடிப்படையில் விளக்குவதாகும்.

*

'பெருந்தமிழர் பக்தவத்சலம்' நூலை இந்நூலாசிரியர் தமது சொந்த வெளியீடாகவே வெளியிடுவது வரவேற்கத்தக்கது. தாம் பாடுபட்டு எழுதிய நூலின் பெரும் பயனைத் துய்க்க இயலாமல் நூலாசிரியர்கள் தவிக்கும் நிலை மெல்லமெல்ல மாறிவருவது தமிழ் எழுத்தாளர்க்குப் புத்தூக்கமும் புது வாழ்வும் தருவதாகும்.

கவிஞர் காஞ்சி அமிழ்தன் அவர்கள் இந்நூலைத் தமது சொந்த வெளியீடாகவே வெளியிடும் காரணம் பற்றி இந்நூல் வெளியீட்டினைச் சிறப்பாகச் செய்யும் பொருட்டு 'உயர்திரு. மீ. பக்தவத்சலனுர் வாழ்க்கை வரலாற்று வெளியீட்டுக் குழு'ஒன்று அமைக்கப்பெற்றது. அதன் தலைவர் உயர்திரு. எஸ். எஸ். வாசன் அவர்கள் அப்பெரியார் வளரும் எழுத்தாளர்களிடம் வைத்துள்ள கருணைக்குச் சான்ருய் விளங்கியது அவர் இந்நூல் சிறந்த முறையில் வெளியீடு பெறுவதற்கு எடுத்துக் கொண்ட ஆர்வமும் முயற்சியும். அவ்வாறே பெரும் புலவர் உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் இந்நூலுடைத் தலைவரிடம் கொண்டுள்ள பெருமதிப்புக் காரணமாகவும் இந்நூலாசிரியரிடம் கொண்ட பேரன்பு காரணமாகவும் இந்நூலின்

கையெழுத்துப் படி முழுவதையும் ஒரு முறை பார்த்துத் திருத்தங்கள் செய்துதவினூர்கள்.

இந்நூலைக் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சிட்டுதவியுள்ள கபீர் அச்சகத்தாரின் ஆற்றல் போற்றற்குரியது. அழகிய முறையில் பிளாக்குகளைத் தயாரித்துள்ள ‘கிளின் அண்டு பெரிள்’ ‘எச்சோகிராப்’ நிறுவனங்களின் திறமும் சிறந்த வகையில் மூவண்ண அட்டைப்படம் தயாரித்துள்ள ஓவியர் திரு. சி. எல். மணி அவர்கள் திறமும் வாழ்த்திற்குரியன.

இந்நூலாசிரியர்க்கு இந்நூல் வெளியீட்டுக் குழுவின் சார்பில் வெளியீட்டு விழாவின் போது பொன்னுடை போர்த்தப் பெறுகின்றது. அது மக்கள் மன்றத்தில் இவர் பெறும் புகழாடைக்கு ஓர் அறிகுறியே ஆகும். இந்நூலாசிரியர் அறிவும் உணர்வும் உண்மையும் உழைப்பும் நிரம்ப உடையவர். முதலமைச்சரைப் போலவே பிற அமைச்சர்களாலும் அன்பு செய்யப்பெறும் பேற்றினைப் பெற்றுள்ளவர். எனவே கால அடைவில் அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளையும் ஒன்றன்பின் ஒன்ருக இவர் எழுதி வெளியிடுவார் என்பது எதிர் பார்க்கக் கூடியதே. அமிழ்தனூர் ஆர்வமும் முயற்சியும் தமிழுலகுக்குப் பெருமை செய்வதாக!

வாழ்க அமிழ்தனூர்!
வாழ்க பெருந்தமிழர்!
வாழ்க பெருந்தலைவர்!

உயர்திரு. மீ. பத்தவத்சலம்
வாழ்க்கை வரலாறு வெளியீட்டுக் குழுவினர்.



## என்னுரை

‘ஒரு மனிதரின் உயர்வு அம்மனிதரின் புறவாழ்வைப் பொறுத்தது மட்டுமன்று. அவருடைய அகவாழ்வில் அடிமனத்தின் இயல்புகளாய்க் காணப்படும் பண்புகள் பலவற்றையும் பொறுத்ததே அம்மனிதரின் மாண்பு. அந்த வகையில் நமது முதலமைச்சரிடம் காணப்படும் மனப் பண்புகளுள் எல்லாம் தலையாயது புறம் வேறு-அகம் வேறு என்று போற்ருமையே என்றுகூடக் கூறலாம்’ என்று அண்மையில் என் இன்னுயிர் நண்பர் புலவர் திரு. க. ந. நன்றுடையான் அவர்கள் வாலாசாபாத் இந்து மத பாடசாலை வெளியீடாகிய “குருகுலத்தில்” எழுதியிருந்ததைப் படித்தபோது என் சிந்தையெல்லாம் திரு. எம். பக்தவத்சலம் அவர்களைத்தான் சுற்றிச்சுற்றி வந்தது.

உண்மையான ஒரு வாழ்க்கையை ஆராய்ந்து வரலாருக்க—அதுவும் வரலாற்றுக்குரிய தலைவர் வாழும் காலத்திலேயே குறிப்புகள் திரட்டி வரைய—எவ்வளவு பெரிய இமாலய இன்னல் இருக்கிறது என்பதை நன்கு பட்டறிந்த பிறகுதான் என்னல் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது.

பல ஆண்டுகளாக என்னுள்ளே அரும்பி இருந்த எண்ணம் ஐந்து ஆண்டுகளில் போதாகி—இப்போதே

மலர்ந்திருக்கின்றது என்றால் அதற்கு முழுமுதற் பொறுப்பு இந்நூலுடைத் தலைவரே ஆகும். இப்படியொரு நூலை எழுதுவதற்கு அமைச்சரிடம் ஒப்புதல் பெறுதற்கே ஓராண்டு முடிந்து கழிந்தது. ஒப்புதல் பெற்று அவரிடமிருந்து குறிப்புகளைத் திரட்டப் பலநாள்கள்—பல இரவுகள் சென்று அவருக்கு ஓய்வின்மையால் திரும்பவேண்டியிருந்தது.

'இன்று இரவு நிச்சயம் முடித்துவிடுவோம்'—என்பார். அன்று மாலையே எனக்குத் தொலைபேசி மூலம் 'நாளைக்கு வைத்துக்கொள்வோம் அவசர வேலையொன்று இருக்கின்றது' என்று கூறிவிடுவார். நானும் சளைத்ததே இல்லை. அவர் வரச்சொன்ன நேரமெல்லாம் சென்று— இருக்கச் சொன்ன இடங்களிலெல்லாம் இருந்தேன்.

இறுதியில் ஒருநாள் இரவு......எங்கோ ஒரு கோயில் விழாவிலே கலந்துகொண்டு பத்து மணிக்கு வந்தார். வாருங்கள் என்று அழைத்துப் பேட்டையில் பிறந்தது முதல்......கோட்டையில் கோலோச்சும் வரையில்—ஒன்றையும் விடாமல் குறிப்புகளைக் கொடுத்துதவினார். அமைச்சர் தந்த குறிப்புகளை வைத்துக்கொண்டு மேலும் குறிப்புகளைத் திரட்டி ஆராய்ந்து ஒரு பெரு நூலாக்க முதலிலே உதவியவர் திரு. ஏ. கே. சந்திரசேகர முதலியார் அவர்கள் ஆகும். திரு. சந்திரசேகர முதலியார் அவர்களும், டாக்டர் மு. வ., அவர்களும் என்னுடைய ஆராய்ச்சிப் பசியை அதிகமாக்கிவிட்டார்கள். சிறுகளத்தூர் கோவிந்தராஜ முதலியார் என்னுடைய பசியை ஓரளவுக்குத் தணித்தார் என்றுதான் கூறுதல் வேண்டும்.



மேலும் திருமதி கண்ணம்மாள்; திருமதி பக்தவத்சலம்; திருமதி சரோஜினி வரதப்பன்; திருமதி ருக்குமணி சுந்தரராஜன்; சி. என். வரதப்பன்; திரு. பி. டி. ராஜன்; திரு. மேஜர் ஜெனரல் அழகப்பர்; திரு. வி. கே. இராமசாமி முதலியார்; திரு. பாலசுப்பிரமணியம் ஆகிய உறவினர்கள் பலரிடமிருந்தும் அமைச்சரின் அகவாழ்வை என்னால் அதிகமாகத் தெரிந்துகொள்ள முடிந்தது.

திருவாளர்கள் கோ. வேங்கடாசலபதி; பேராசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம்; கிராமோத்யோகபவன் ஆர். கிருஷ்ணசாமி; முத்தமிழ் எஸ். காளப்ப முதலியார்; வி. ஆர். இராதா கிருஷ்ணன்; ஈ. கிருஷ்ணையர்; டி. பி. பாலகோபால்; பாதுகாப்பாளர் பி. இராதா கிருஷ்ணன்; பூவை. மதன்ராஜ்; திருமதி சங்கரய்யர் ஆகியோர் அமைச்சரின் புறவாழ்வைச் சொன்னார்கள்.

இந்நூலுக்குத் தேவையான எல்லா குறிப்புரைகளையும் விளக்கங்களையும் தந்துதவிய கல்வி இயக்குநர் திரு. என். டி. சுந்தரவடிவேலு, அறநிலையத்துறை ஆணையாளர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், செய்தித்துறை இயக்குநர் திரு. குழந்தைவேலு, திரு. மகாலிங்கம், சாம்பு என். எஸ். நடராசன், கன்னிமரா பொது நூலக நூலகர் வே. தில்லை நாயகம், ஜயா பிரின்டர்ஸ் உரிமையாளர்கள் திரு. கா. சச்சிதானந்தம், திரு. டி. நாகநாதன் ஆகியவர்கள் என் நன்றி கலந்த வணக்கத்திற்குரியவர்கள்.

இக்குறிப்புகளேந்திய கரங்களோடு மீஞ்சூர், பூவிருந்தவல்லி, நசரத்பேட்டை, சிறுகளத்தூர்,

ஸ்ரீபெரும்பூதூர், பொன்னேரி, திருநீர்மலை, திருவள்ளூர், திருமழிசை ஆகிய புண்ணியத் தலங்களுக்குச் சென்று அமைச்சரின் புண்ணியச் செயல்களைப் புரிந்துகொள்ள எனக்கு வ்ழிபிறந்தது.

இவை அனைத்தையும் வைத்துக்கொண்டு பல இரவுகள் எழுதினேன். நான் எழுதி முடித்ததை நல்ல தாளிலே—பலர் படித்து தெரிந்துகொள்ளும் வகையில் வேலூர் கவிஞர் விசாலன் அழகு மணக்க எழுதி உதவினார். அவர்க்கு என் பாராட்டுகள்.

மறுபடியும் அமைச்சரிடம் படித்துக் காண்பிக்க 'மல்லிகா' மாளிகையை நோக்கி மீண்டும் பல நாள்கள் முற்றுகை!

அப்போதுதான் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அமைச்சர் பணி அதுவும் அறத்தோடு அரசோச்சும் திரு. பக்தவத்சலம் போன்றவர்கள் மேற்கொண்டுள்ள அமைச்சர் பணி—எவ்வளவு சிரமமானது என்பதை ஒரு சில நாள்கள் அவர் செல்லுகின்ற இடங்களுக்கெல்லாம் சென்று படித்துக் காண்பித்தேன்.........பேசுகின்ற பேச்சுக்களை எல்லாம் கேட்டேன்—செய்கின்ற செயல்களை எல்லாம் கண்டேன்....ஏனோ, நான் தேடுகின்ற ஒன்று நீண்ட நாள்களாகக் கிடைக்காமலேயே இருந்தது.

அவர் முதலமைச்சரானார்......
நானும் தேடியதைப் பெற்றேன்... ..!

அந்நேரத்தில் எல்லாம் என் எழுத்துப் பணி மேலும் மேலும் சிறக்கப் பேரூக்க மளித்தவர் எழுத்து வேந்தர் திரு. அகிலன் அவர்கள் ஆகும்.



கையெழுத்துப் பிரதியை - நான் போற்றி மகிழும் திரு. க. ந. நன்றுடையான் அவர்களிடம் காண்பித்தேன். அவர்கள் படித்து முடித்ததோடு நூலை அழகாக்கும் கருத்துரைகள் பல கூறினார். அவர் விருப்பப்படியே பக்தவத்சலம் வரலாறு 'பெருந்தமிழர் பக்தவத்சல'மாகியது. இந்நூலை ஒரு பொன்னூலாக ஆக்கித்தந்த பெருமை திரு. க. ந. நன்றுடையான் அவர்களையே சாரும். அவர் என் நன்றிக்குரியவர்.

*

இந்நூலை நன்னூலாகவே ஆக்கித்தந்தார் பேரறிஞர் மகாவித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள். அவர்களுக்கு மனப்பூர்வமான வணக்கங்களை வாரிவழங்கக் கடமைப்பட்டுள்ளேன்.

*

இந்நூல் உருக்கொள்ள துவக்கத்திலே ஊக்குவித்த திரு. நித்தியானந்தம், திரு. தணிகைமலை (விசாலாட்சி பதிப்பகம்) ஆகியோருக்கு என்றுமே கடமைப்பட்டுள்ளேன். பிழைதிருத்தி உதவிய திருவாளர்கள் பி. ஏ. சுப்பிரமணிய பிள்ளை, விசாலன், சி. வி. இராசன், திருமதி மனோரமாதேவி ஆகியவர்கள் என் போற்றுதலுக்குரியவர்கள்.

*

என்னிடத்திலும், இந்நூலுடைத் தலைவரிடத்திலும் பற்று கொண்ட அன்பர்கள் சிலர் 'பக்தவத்சலம் வரலாறு வெளியீட்டுக் குழு' ஒன்றைத் துவக்கினார்கள். என்

கவிதைகளிடத்தில் நீங்கா பற்று கொண்டு பாராட்டும் திருவினர் ஜெமினி அதிபர் திரு. எஸ். எஸ். வாசன் அவர்களே அக்குழுவிற்குத் தலைவராக அமைந்தது பொன்மலர் நாற்றம்பெற்ற பேருண்மையினைத்தான் காட்டியது. அப்பெரியார் என்பால் கொண்டுள்ள கருணையை என்றென்றும் மறவேன். அவர்க்குப் பல்லாண்டு பல்லாண்டு கூறுகின்றேன்.

வெளியீட்டுக் குழுவை திருவாளர்கள் செய்யூர்ச் செம்மல் வி. கே. இராமசாமி முதலியார், டி. எம். நாராயணசாமி பிள்ளை ; பேராசிரியர்கள் அ. மு. பரமசிவானந்தம் ; எம்.ஏ. டபுள்யூ. புகாரி ; கி. வா. ஜகந்நாதன் ; மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை : மயிலை சீனிவேங்கடசாமி ; க. ந. நன்றுடையான் ; டாக்டர் சுந்தர வதனம் ; திருமதி பத்மஸ்ரீ அம்புஜம்மாள் ஆகியோர் மேலும் அழகுபடுத்தினர். என் பணிவார்ந்த நன்றியினை அக்குழுவிற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

*

அருளரசர் காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் இந்நூலுடைத் தலைவரிடத்திலும் என்பாலுங் கொண்டுள்ள பெருங்கருணையால் இந்நூலுக்கு பொன்னுரையாம் ஆசியுரையை வழங்கியுள்ளார்கள். ஆசாரிய சுவாமிகளைக் கண்டு மனமுருகி நான் பாடிய கவிதைகளை ஏற்றுக்கொண்டதோடு எளியேனுக்கு பொன்னாடையும் போர்த்தி ஆசி கூறினார்கள். அதை யான் பெற்ற பேருகவும் தமிழ்



பெற்ற பேருகவும்தான் கொள்ளமுடிகின்றது. ஜகத் குருவாம் அருளரசரின் பொன்னடிகட்கு என் இதயாஞ்சலியை இதன் மூலம் உரிமையாக்கிக் கொள்ளுகின்றேன்.

அதோடு இந்நூலுக்கு முன்னுரை வழங்கியுள்ள நூல் வெளியீட்டுக் குழுவினருக்கும் என் மனமார்ந்த நன்றிகலந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியாரைக் காணவும், அவர்களுடைய ஆசிகளைப் பெறவும் நல்ல பெரும் வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த அறநிலைய பாதுகாப்புத் துறை வட்டாரக் குழுத் தலைவர் காஞ்சி திரு. பெருமாள் நாயுடு அவர்களுக்கு அன்பு கலந்த வணக்கங்களை வழங்கக் கடமைப் பட்டுள்ளேன்.

என்னுடலையும் உள்ளத்தையும் தேசிய மயமாக்கிப் பேச்சாலும் தொண்டாலும் ஈர்த்து, என் போன்றோர் இலக்கியப் பணிக்குத் தேவையானவை எல்லாம் தந்துதவும் ஒரே தலைவர் திரு. கு. காமராஜ் அவர்கள் அப்பெரியாருக்கே இந்நூலை உரிமையாக்கி இருக்கின்றேன் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

என் இலக்கியப் பணி மேலும் மேலும் சிறப்படைய ஊக்கமும் முயற்சியும் தந்து தேவைப்பட்டபோதெல்லாம் உதவிகள் பல புரிந்த இன்றைய சடையப்ப வள்ளலாம் என்னுடைய மாமனூர் திரு. என். சக்கரபாணி அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்குகின்றேன்.

என் எழுத்தை அச்சிலேற்றி அழகியதொரு நூலாக்கிய பெருமை கபீர் அச்சகத்தையே சாரும்.

கபீர் அச்சகத்தோடு நெருங்கிய சம்பந்தத்தை ஏற்படுத்தி வைத்த கபீர் அச்சக நிருவாகி திரு. சம்பந்தம் அவர்கள் என் மனதிலே என்றும் வாழ்பவர் - அவர் வாழ்க! கேட்ட போது - கேட்ட முறையில் - பொறுமை குறையாமல் - அச்சாக்கித் தரும் அச்சுக்கலை மன்னர்கள் கபீர் அச்சக ஊழியர்கள் என்ருல் அஃது மிகையன்று - அவர்கள் என்றும் வளர்க!

*

மேலட்டையில் மூவண்ணத்தைக் குழைத்து முதலமைச்சரை சிறக்க வைத்த ஓவியர் சி. எல். மணி அவர்களுக்கும், கிளின் அண்டு பேரிள் நிறுவனத்தார்க்கும் எச்சோ கிராப் நிறுவனத்தார்க்கும் என் நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

*

இந்நூல் உருப்பெறத் தேவையான உதவிகளை எல்லாம் செய்துதவிய என் மனைவியார் திருமதி பிரேமா அமிழ்தன் அவர்களுக்கும் என் பாராட்டுகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

கடைசியாகப் புகைப்படங்கள் தந்துதவிய திரு. வி. ஆர். இராதாகிருஷ்ணன்; திரு. பெருமாள் உடையார்; ஞான. மெய்கண்டான் பி.இ.; பி. இராதா கிருஷ்ணன்; திரு. கே. நீலகண்ட ஐயர் ஆகியவர்களுக்கும் திருமதி கண்ணம்மாள், திருமதி பத்தவத்சலம், தலைமை ஆசிரியை திருமதி ருக்குமணி ஆசார்யா, மேஜர் ஜெனரல் அழகப்பா, திரு. வி. கே. இராமசாமி முதலியார் ஆகியவர்களுக்கும் அன்புகலந்த வணக்கங்கள்.

*



என் இதயத்தை ஏற்றருளிய தலைவர் எவரோ — அவரே என் இதயத்தின் வெளிப்பாடாக விளங்கும் இந்த நூலையும்—நான் உரிமைப்படுத்தியுள்ளதை—ஏற்றருள்கின்ருர். அவர்க்கு என் வணக்கங்கள் என்ன — வாழ்க்கையே உரியதுதான்.

*

முடவன் நான் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டேன். பக்தவத்சலம் — அடியார்க்கு அன்பர் (ஆம், அதுவே அவர் பெயரின் பொருள்) எனக்கும் அருள் புரிந்தார். இல்லையேல் முடவன் கொம்புத்தேனைக் குடிப்பது எங்ஙனம்? அவர் வாழ்க. அவர் ஆட்சி வாழ்க, அவர் குடும்பத்தின் மாட்சி வாழ்க.

இந்நூலின் விற்பனை உரிமையை ஏற்றுக்கொண்டுள்ள விசாலாட்சி பதிப்பகத்திற்கும் என் நன்றிகலந்த பாராட்டுகள். அப்பதிப்பகம் என்றும் வளர்க.

முடிவாக ஒரு முடிவைத் தமிழ் மக்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். பெரியவர்களைப் போற்றும் நாடே பெருமைபெறும், பக்தவத்சலம் பெரியவர் — அவரைப் போற்றுவதால் தமிழ் நாடும் பெருமைபெறும்.

இதுவே இந்நூலின் அடிப்படை — இதயத்துடிப்பு.

சென்னை—4,
2—11—1964

அன்பன்
காஞ்சி. அமிழ்தன்.



# காணிக்கை

★

நம் தலைவர்

ஒருவர்

அவர்

உயர்திரு கு. காமராஜ்

இந்நூல்

அவர்

ஒருவருக்கு

அன்புக் காணிக்கை



# கோல்ட்ஸ்மித் கண்ட பக்தவத்சலம்

'இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் —திருவள்ளுவர்

ஆங்கிலக் கவிதை மண்டபத்தின் மிக முக்கிய தூண்களுள் ஒன்றாய் இருந்த கவிஞர் கோல்ட் ஸ்மித்து, 'பாழடைந்த கிராமம்' (Deserted Village) என்ற அழகு மிக்க கவிதை நூல் ஒன்றை எழுதியிருக்கிறார்; நெஞ்சத்தைத் தொடும் அந்தக் காப்பியத்தில் பண்பும் அறிவும் மிகுந்த பாதிரியார் ஒருவரை அறிமுகப்படுத்துகின்றார். அந்தப் பாத்திரப் படைப்பு, வேறு எந்த இலக்கிய ஆசிரியனாலும் உருவாக்க இயலாத அளவுக்குச் சிறப்பாய் இருக்கிறது என்று அறிஞர்கள் கருது கிறார்கள். அப்பாதிரியார் தெய்வ பக்தி நிரம்பிய வர்; மற்றவர்க்குத் தீங்கு நினையாதவர்; தம்மைப் போலவே பிறரும் வாழவேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் படைத்தவர்; மற்றவர்கள் துன்பப் படுவதைக் காணத் துன்பப்படுகிறவர்; நலிந் தோரைக் கண்டால், நாடிச் சென்று துணை செய் கிறவர்; கனிந்த உள்ளமும், கூர்மையான அறிவும் பெற்றவர். இத்தகைய பண்புகளினால், அந்தப் பாதிரியார் படிப்போர் நெஞ்சிற் குடிபுகுந்து விடுகிறார்.

**'போலி'தான் :**

அத்தகைய சீரிய பண்பும், சிறந்த ஆற்றலு மிக்க அந்தப் பாதிரியாரைக்கூட, 'போலி' என்றும் 'வேஷதாரி' என்றும் இழித்தும் தூற்றி யும் பேசுகின்றனர் கவிதையில் வருகின்ற சிலர். நல்ல நினைவுகளுக்குக் கிடைப்பன, நாவும் கூசும் தூற்றல்கள் ; அன்புள்ளத்திற்குக் கிடைப்பன ஆணவ சொற்கள் ; அருள் நெஞ்சிற்குக் கிடைப்பன காழ்ப்பும் கள்ளத்தனமும் மிக்க வஞ்சகர்களின் வசைச்சொற்கள். பாதிரியார் வாழ்வில் இப்படியொரு துயர நிகழ்ச்சியை உண் டாக்கி, படிப்போருடைய அனுதாபங்களை எல்லாம் அவர்மேல் திரும்பும்படி செய்கிறார் கவிஞர். மக் கள் பாதிரியாரை நெருங்கிப் பாராமலே பேசி வருகிறார்கள் ; அவருடன் தொடர்பு கொள்ளாமலே தூற்றிப் பேசுகிறார்கள். இப்படி ஏற்படுகிற பயங் கரச் சூழ்நிலையைப் பார்க்கிற போது, நம்மையும் அறியாமல் நமது நெஞ்சம், அவருக்காக அனு தாபப் படுகிறது ! வேதனைப்படுகிறது ! அம்மக்கள் மீது, நமக்கு ஆத்திரமும், வெறுப்பும் ஏற்படு கின்றன.

**திடீர் மாற்றம் :**

'பாதிரியாரைப் பார்க்கக்கூடாது ; அவருடன் பேசக்கூடாது,' என்று உறுதி செய்துகொண் டிருந்தவர் அனைவரும், அவரைக் கண்டு அவருடன் பேசியதும் மனமாற்றமடைகின்றனர். தூரத்தில் நின்று இழித்தும் பழித்தும் பேசியவர்கள் எல்லாம், அவரை அருகில் சந்தித்துச் சில விநாடிகள் பேசி



விட்டால் போதும் !—தம் தவறுகளை உணர்ந்து, வெட்கித் தலை குனிகிறார்கள் ; அவரை நெருங்கிய போது, நெடு நாள் பழகிய நண்பர்களைப் போன்ற உணர்ச்சியைப் பெறுகிறார்கள் ; திடீரென்று மனம் மாறி, சில விநாடிகளிலேயே அவர் காட்டிய பாதை யில் நடந்து செல்லத் தயாராகவும் இருக்கிறார்கள். அந்தக் கவிஞர் இப்படிச் சொல்வதை நாம் வியப்புடன் படிக்கிறோம் :

" Those who came to scoff remain to pray "

(தூற்ற வந்தவர்கள், போற்றி நிற்கிறார்கள்.)

கோல்ட்ஸ்மித்துப் படம் பிடித்துக் காட்டி இருக்கிற பாதிரியாருக்கும், இந்த விளக்கத்திற்கும் என்ன தொடர்பு ? ஆம் ! இது நியாயமான கேள்வி. ஆனால், இதில்தான் பக்தவத்சலம் அவர்களின் முழுமையான வாழ்க்கையும் அடங்கி யிருக்கிறது !

**பாதிரியாரும் பக்தவத்சலமும் :**

பாழடைந்த கிராமத்திலே இருக்கிற பாதிரி யாரைப்போல, தமிழகத்திலே வாழ்கின்ற பக்த வத்சலமும் திகழ்ந்தார் என்பதைத்தான் இந்த நூல் கூறுகிறது. பாதிரியாரைப் போன்ற சிறப்புகளும், தெய்வ பக்தியும், வைதாரையும் வாழ வைக்கும் எண்ணமும், கடமையில் தவறாத பண்பும் மிக்கவராய்த்தான் பக்தவத்சலம் வாழ் கிறார். தம்மைத் தாழ்த்திப் பேசுகின்றவர்களையும், வாழ்த்திப் பேசுகின்ற இயல்பு பக்தவத்சலத்திட மிருக்கிறது என்பதற்கு எத்தனையோ சான்று

களைச் சொல்லலாம். அவ்வளவு சிறப்புகளும் ஒருங்கே பெற்ற உத்தமரே பக்தவத்சலம்.

அப்போது தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டிக்குச் சத்தியமூர்த்தி தலைவராய் இருந்தார். காமராஜும் பக்தவத்சலமும் செயலாளர்களாய் இருந்தார்கள். அச்சமயத்திலேதான் சென்னையில் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் ஒன்று நடந்தது. அந்தக் கூட்டத்தில் எதிர் பாராத ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது; மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் ஏதோ ஒரு பொருள் பற்றிப் பேசுகையில் பக்தவத்சலத்தைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். அவர் பேச்சிலே கனிவைவிடக் காரம் மிகுதியாயிருந்தது.

**தண்டிக்க வேண்டாவோ ? :**

அவர் கூறியவற்றையெல்லாம் மிக அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த பக்தவத்சலம் ஒன்றுமே நிகழாதது போல் அமைதியாகவே பதில் சொன்னார். அதோடு மதுரை வாசி பேசுகையில் அசைவின்றி அமைதியாய் உட்கார்ந்து பேசுவதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்தார். அவர் எதிர்த்து ஒன்றுமே பேசவில்லை.

அடுத்த நாள் காலையில் மயிலாப்பூர் சந்நதித் தெருவிலிருந்த பக்தவத்சலம் வீட்டில் காண்பவர்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். அந்த 'விசிட்டர்க'ளில் முந்தினநாள் கடுமையாய் இழித்தும் பழித்தும் பேசியவரும் வந்திருந்தார். வந்



திருந்த அவரை எல்லாரும் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர். பக்தவத்சலம் அப்போது செங்கற்பட்டு மாவட்டக் கழகத் துணைத்தலைவராய் இருந்ததால், முந்தினநாள் பழித்துப் பேசிய மதுரை வாசி, தம் மைத்துனர் ஒருவருக்கு ஆசிரியர் வேலைக்கு சிபாரிசு கூறும்படிகேட்கவே அன்று காலையில் வந்திருந்தார். வந்தவரை எந்த வித முகமாறுபாடும் இல்லாமல் வரவேற்று மிகவும் அமைதியாகவும், அன்பாகவும் பேசினார் பக்தவத்சலம்; ஆசிரியர் வேலைக்குச் செல்பவருடைய தகுதிகளைக் குறித்துக் கொண்டு, ஆவன செய்வதாகக் கூறினார்.

**நன்னயம் செய்துவிடல் :**

மதுரை உறுப்பினருக்கு எந்த விதமான உதவியையும் பக்தவத்சலம் செய்யமாட்டார் என்றுதான் முந்தின நாள் சம்பவத்தின் போது நேரில் பார்த்தவர்களுள் சிலர் அப்போது அங்கு நினைத்தனர். ஆனால், பண்பு மிக்க பக்தவத்சலம் அப்படி எண்ணவே இல்லை. 'மன்னிக்கும் மனப் பண்புதான் மனிதனை உயர்த்தும்; மன்னிப்பவன் தான் மனிதன்,' என்னும் உயர்ந்த கொள்கைக்கு விளக்கம் போல, அவர் அந்த மதுரை அங்கத்தினரை மனத்திற்குள்ளேயே மன்னித்துவிட்டார். அது மட்டுமன்றி, தமது சொந்த ஊரான மீஞ்சூரில் உள்ள பள்ளியில் மதுரை உறுப்பினர் மைத்துனருக்கு ஆசிரியர் வேலை ஒன்றும் வாங்கிக் கொடுத்தார். ஆத்திரமாகப் பேசிய மதுரை வாசி தலை குனிந்தார்.

" இன்னுசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் "

என்னும் குறள் வழியில் நடந்து, அன்றும் இன்றும் அதே பாதையில் போய்க்கொண்டிருக்கிருர் பக்தவத்சலம்; இனியும், அந்தச் சீரிய பாதையிலே தான் நடந்து செல்வார். ஆம், அவருடைய வரலாறு, தித்திக்கும் தேனுறு! இனி நீங்கள்...... நீந்துங்கள்!......



பெருமாட்டியும்



பெருந்தகையும்

# 1

## எங்கும் பொங்கிய இன்பம்

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கள் பேறு.

—திருவள்ளுவர்

இரட்டைக்காளைகள் பூட்டிய வில் வண்டிகள் இரண்டு செம்பரம்பாக்கமென வழங்கும் சமுத்திரப் பாக்கத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தன. ஊருக்கு ஒதுக்குப்புறம் – ஒரு பெரிய ஆலமரம் – ஆலமரத்தடியில் ஒரு குளம்; குளத்தையடுத்து ஒரு கோயில் – அக்கோயிலை என்றுமில்லாவகையில் அன்று வண்ணப் பூக்களாலும் தோரணங்களாலும் அணி செய்திருந்தனர்.

'பேட்டை முதலியார் வீட்டிலே திருமணம்; பெரிய தம்பிரானுக்குப் பூசை போட முன்னுலேயே வருகின்றனர்,' என்றுதான் அவ்வூரார் பேசிக் கொண்டனர். முன்னேர்கள் காலத்திலிருந்து ஆண்டுக்கொருமுறை குலதெய்வமான பெரிய தம்பிரானுக்குப் பூசை போட்டு வழிபடுகின்ற அவர்கள், நசரத்துப் பேட்டைக்குக் குடிபோன பிறகுங்கூட ஆண்டிற்கொருமுறை செம்பரம் பாக்கம் வந்து பொங்கலிட்டுப் பூசை போட்டு அந்த ஆண்டில் நடக்கவேண்டிய நல்ல செயல் களுக்கு வெற்றியும் குடும்பத்தில் மகிழ்ச்சியும் மாண்பும் ஏற்பட வேண்டுமென்று வேண்டிக் கொள்வதில் தவறுவதேயில்லை.

**பழைய சிந்தனைகள் :**

வரதப்ப முதலியாரும், அவர் மனைவியார் ருக்குமணியம்மையாரும், அறிவறிந்த மக்கள் எழுவரும் பெரிய தம்பிரான் பூசைக்காக வண்டி களில் வந்துகொண்டிருந்தனர். முதல் வண்டியில் இருந்த முதலியாரின் சிந்தனை, சில ஆண்டு களுக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சியில் ஆழ்ந்தது....

அன்றுகூட இதே போலப் பெரிய தம்பிரான் பூசைதான். முதலியார் முகத்திலே ஏதோ ஒரு கவலைக்குறி புளிச்சிட்டது. ஆம்; 'ஆண் குழந்தை பிறக்கவில்லையே!' என்று ஒரு முறை நினைத்துக்கொண்ட முதலியார் நெஞ்சில் ஏக்கம் முகிழ்த்தது.

எப்படியும் இம்முறை ஆண் குழந்தை பிறந்து விடும் என்ற உறுதி ருக்குமணியம்மையாருக்கு



உண்டாயிற்று. திருஎவ்வுளூர் (திருவள்ளூர்) எம்பெருமானுடைய அருள் இருந்தால், பிறக்கின்ற குழந்தை நிச்சயம் ஆணகவே இருக்கும் என்னும் முழு நம்பிக்கை கொண்டது முதலியார் மனம்.

நாட்கள் மாதங்களாயின ...... திருஎவ்வுளூர் அப்பன் அருள் முதலியார் வீட்டுப் பக்கம் பாய்ந்தது.

ஆண் குழந்தை பிறந்திருப்பதாகக் கேள்வி யுற்ற வரதப்ப முதலியாருக்குண்டான இன்ப எக்களிப்பு – நிலைகொள்ள முடியாத மகிழ்ச்சி! அவர் ஓட்டமும் நடையுமாக வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

உவகையிலே ஊசலாடிய அவர் உள்ளம், ஆண் குழந்தை பிறந்ததென்ற மகிழ்ச்சி வெள்ளத் தில் நீந்திக்கொண்டே திருவள்ளூரையடைந்து அங்குக் கோயில் கொண்டுள்ள எம்பெருமானை வணங்கி நன்றி தெரிவித்து மீண்டது. ஒரு நல்ல நாளில் குழந்தையைப் பெரியோர்களும் அந்தணர் களும் வாழ்த்த குழந்தைக்கு முறைப்படி ஏவலப்பன் (ஏவலப்பன் – ஏ – வல் – அப்பன் = அம்பிலே வல்ல அப்பன் – இராமபிரான்) என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார் முதலியார்.

ஏவலப்பன் பிறந்த சில ஆண்டுகளுக்குள் புஷ்பம் – மல்லிகா என்ற இரண்டு பெண் குழந்தை களையும் **முத்துரங்கம்** என்ற ஓர் ஆண் குழந்தை யையும் அடுத்தடுத்துப் பெற்றெடுத்தார் ருக்கு மணியம்மையார்.

தலைக்குழந்தை பாயி அம்மாளின் இறப்பால் இன்பம் குலவிய அந்தக் குடும்பத்தில் துன்பம்

தலை காட்டத்தான் செய்தது. குழந்தைகள் வளர்ந்தன. ஏவலப்பரும், முத்துரங்கமும் பூவிருந்தவல்லியிலும் சென்னையிலுமாகப் படிக்க லானார்கள்.

**திருமண ஏற்பாடு:**

இந்நிலையில் முதலியாரின் சிந்தனை நின்றது; வண்டிகளும் நின்றன. புஷ்பம்மாள் மல்லிகா என்னும் உடன்பிறப்பாட்டியர்களுக்கு நடக்க இருக்கின்ற திருமணத்தை முன்னிட்டுப் பெரிய தம்பிரானை வேண்டி வழிபட முதலியாரின் குடும்பம் செம்பரம்பாக்கம் வருகின்ற காட்சிதான் முதலில் நாம் கண்டது.

புஷ்பத்திற்கும், மல்லிகாவுக்கும் நல்ல கணவர்கள் கிடைக்க வேண்டுமே என்று மிக முனைப்பாக மாப்பிள்ளை தேடும் படலத்தில் ஈடுபட்டார் வரதப்ப முதலியார்.

மீஞ்சூர் அப்பாராவ் முதலியாரைப்பற்றித் தெரியாதவர்கள் குறைவென்றுதான் சொல்ல வேண்டும். கொடைச்சிறப்புக்கும் அற வாழ்வுக்கும் தம்மை ஆட்படுத்திக்கொண்ட வள்ளல் என்று கூட அவரைச் சொல்லலாம்.

ஆண் குழந்தை இல்லாத குறை அப்பாராவ் முதலியாருக்கும் இருக்கத்தான் செய்தது. பலர் கூறிய கருத்துரைகளின்படி வல்லூர் வேலு முதலியாரைத் தத்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. வேலுவின் உற்றார் உறவினர் இசைவு பெற்று ஒரு நல்ல



நாளில் சிறுவன் வேலுவைத் தத்தெடுத்துக்கொண்டார் அப்பாராவ் முதலியார்.

மீஞ்சூரில் வளர்ந்த வேலு முதலியாருக்கும் அம்மாளு அம்மையாருக்கும் திருமணம் நடந்து அவர்களுக்கோர் ஆண் குழந்தையும் பிறந்தது. பெற்றோர் அக்குழந்தைக்குக் **கனகசபாபதி** என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

இளமையில் கனகசபாபதி கற்க வேண்டிய நூல்களைக் கசடறக் கற்றுத் தேர்ந்தார். 'மிலேச்ச மொழி' என்பதால் ஆங்கிலத்தைக் கற்க இவர் விரும்பவில்லை.

உழுதுண்டு வாழும் வாழ்வையே வாழ்வாக எண்ணிய கனகசபாபதி, தெய்வ பக்தியும் வைணவ மதத்தில் பற்றும் மிக்குடையவராய்த் திகழ்ந்தார். அமைதியான போக்கும் சாதுத் தன்மையும், தாமுண்டு தமது வேலையுண்டு என்ற கொள்கையும் கொண்டு, 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது', என்றெண்ணி வாழ்ந்து வரும் பழக்கத்தை இளமையிலேயே அவருக்கு ஏற்படுத்தினார்கள் பெற்றோர்கள்.

கனகசபாபதியின் தெய்வ பக்தியும் நல்ல பண்புகளும் வரதப்ப முதலியார் உள்ளத்தைக் கவர்ந்தன. 'நம் மகள் மல்லிகாவுக்கு ஏற்ற மாப்பிள்ளை இவரே,' என்று முடிவு செய்த முதலியார், பெருமகிழ்ச்சி கொண்டு, புஷ்பத்திற்கும் ஒரு மாப்பிள்ளையை தேடிவிட்டார்.

இரண்டு மாப்பிள்ளைகளும் இருப்பதை அறிந்துகொண்டு முறைப்படி நடக்க வேண்டிய

சடங்குகளை நடத்தினர். ஒரு நல்ல நாளில் இரண்டு நிச்சய தாம்பூல நிகழ்ச்சிகளும் நடந்தேறின.

பேட்டை முதலியார் வீட்டுத் திருமணம் என்றால், சிறப்புக்குச் சொல்லவா வேண்டும்! நசரத்துப்பேட்டையே விழாக்கோலம் பூண்டிருந்தது. வெள்ளையடித்துச் செம்மண் மெழுகி மாக்கோலமிட்டு முதலியார் வீட்டை மணக்கோலம் கொள்ளச்செய்துவிட்டார்கள் வேலைக்காரர்கள்.

திருமணத்திற்குப் பதினைந்து நாள்களுக்கு முன்பே சமையற்காரர்கள் திரண்டு வந்தார்கள். எதையெதை எப்படி எப்படி எங்கெங்குச் செய்ய வேண்டும் என்பவற்றையெல்லாம் முதலியார் மற்றவர்களுக்குத் தமது உரத்த குரலால் சொல்லிக் கொண்டிருந்தார்.

முதலியார் வீட்டு வண்டிகளுக்கும் மாடுகளுக்கும் சிறிதும் ஓய்வேயில்லை. பட்டினத்தையே பேட்டையில் கொண்டு வந்து சேர்க்கின்ற பெரும் பணியில் ஈடுபட்டிருந்தன வண்டிகள்.

தங்கைகளுக்குத் திருமணம் என்பதால் ஏவலப்பரும், தமக்கைகளுக்குத் திருமணம் என்பதால் முத்துரங்கமும் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை.

நாதசுர—பாண்டு வாத்தியக்காரர்கள் வெளியூர்களிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்தார்கள். நாதசுரக்காரர்களுக்கும் ஐயர் ஐயங்கார்களுக்கும் தனித்தனியே தங்குமிடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.



**மாப்பிள்ளை வந்தார் :**

மாப்பிள்ளை வீட்டாருக்கென்று தனியாக வீடுகள் அமைத்திருந்தனர். அன்று மாப்பிள்ளை அழைப்பு.........பேட்டையில் எள் விழுந்தால் எண்ணெயாகும் என்று சொல்லுமளவிற்கு மக்கள் கூட்டம் திகழ்ந்தது. நூற்றுக் கணக்கான விளக்குகளை ஏந்திய தலைகள் திரும்பிய திசையெல்லாம் காணப்பட்டன! ஆனந்த பைரவியையும் அடாணாவையும் ஆலாபனம் செய்து நாதசுர வெள்ளத்தில் மக்களை மூழ்கடித்துக்கொண்டிருந்தார்கள் நாதசுர வித்துவான்கள். கெட்டி மேளம் போலக் கொட்டி முழங்கிக்கொண்டிருந்தார்கள் தவில்காரர்கள். இந்நிலையில் மாப்பிள்ளைகள் அழைப்பு மெள்ள ஊர்ந்து வந்து திருமண இல்லத்தை அடைந்தது.

ஐந்து நாட்கள் திருமணம்! கனகசபாபதியின் கைகளில் மல்லிகாவையும், அண்ணு முதலியாரின் கரங்களில் புஷ்பம்மாளையும் ஒப்படைத்துப் பெருமகிழ்ச்சி கொண்டார் வரதப்ப முதலியார். 'நம்மை பெற்று வளர்த்த தந்தையார் இவற்றையெல்லாம் பார்த்து மகிழ நாம் கொடுத்து வைக்கவில்லையே!' என்று நினைத்துக்கொண்டே கனகசபாபதியின் கண்கள் குளங்களாயின. அதைத் தூரத்திலிருந்து கவனித்துக்கொண்டிருந்த அம்மாளு அம்மையாரும் தம் சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொள்ள மறக்கவே இல்லை.

தாயாருக்குப் பெருகுவது இன்பக் கண்ணீர் என்றுதான் எல்லாரும் நினைத்துக்கொண்டனர். ஒன்பது வேளை வேள்விச் சடங்குகளோடு (ஔபாசனம்) ஐந்து நாள்கள் திருமணம் நடந்தேறியது.

மணமக்கள் கனகசபாபதி முதலியாரும் மல்லிகாவும் மீஞ்சூருக்குச் சென்று நான்கு நாள்கள் இருந்தனர். மறுபடியும் வரதப்ப முதலியார் மணமக்களைப் பேட்டைக்கே அழைத்து வந்துவிட்டார். நிலபுலன்களைக் கவனித்துக்கொள்ள அடிக்கடி கனகசபாபதி முதலியார் மட்டும் மீஞ்சூருக்குப் போய் வருவார்.

வரதப்ப முதலியாருக்கு மகளாயும்—ஏவலப்பருக்குத் தங்கையாயும்—முத்துரங்கத்திற்குத் தமக்கையாயும்—கனகசபாபதிக்கு மனைவியாயும் மலர்ந்த மல்லிகா தம்மைக் காத்தலிலும் தம் கொண்டாரைப் பேணுதலிலும் சொற்காத்தலிலும் மேம்பட்டவராகவே திகழ்ந்தார்.

அறுவரோடு பிறந்த மல்லிகா அம்மையார் இருக்குமிடம் தெரியாமல் பெரியவர்களுக்குக் கீழ்ப்படிந்து—குறைந்த படிப்பால் நிறைந்த அறிவைப் பெற்று—தெய்வ பக்தியும் ஆசாரமும் நிரம்பக் கொண்டு, பிறரைத் தொட்டால் மட்டுமன்றிப் பார்த்தாலுந் தீட்டு என்ற காலத்தில் சீரோடு வாழ்ந்தார்.

**வைதிகம் வாழ்ந்தது :**

ஆசார அனுஷ்டானங்களுக்குக் கீழ்ப்படிந்தது வரதப்ப முதலியார் குடும்பம். ஆடவர்கள் வெளியிற்சென்றால், எவ்வளவு நேரமானாலும், வீட்டிற்கு வந்துவிடுவார்கள்; ஹோட்டலில் சாப்பிடும் பழக்கமே அவர்களுக்கு இல்லை.

'எவனோ' பிடிக்கின்ற தண்ணீர் என்பதால், 'சோடா', 'கலர்' கூடக் கடையில் வாங்கிக் குடிக்க அவர்கள் சம்மதிப்பதில்லை. குடும்பத்தில் யாருக்காவது காய்ச்சல் வந்தால் தவிர, 'காபி' போடும் பழக்கம் அப்போது வீட்டில் இல்லை. யாருக்கும் காபி குடிக்கும் பழக்கமும் இல்லை. வீட்டுப் பெண்டிர் வெளியில் போவதென்றாலுங்கூட மாட்டு வண்டியில்தான் போவார்கள். மோட்டார் போன்ற பொது வண்டியில் பிரயாணம் செய்ய அவர்கள் விரும்புவதில்லை. பொதுவாக அக்குடும்பப் பெண்கள் வெளியில் வரவே மாட்டார்கள். எல்லா வழிகளிலும்—ஆசார அனுஷ்டானங்களில் குறைவு ஏற்படக்கூடாது என்பதால், அந்தணர்களையே வீட்டில் குமாஸ்தாக்களாக அமைத்துக்கொண்டார் வரதப்ப முதலியார்.

அன்று வெள்ளிக்கிழமை......முழு நிலவின் தண்கதிர்கள் இவ்வையத்தையே ஆட்சி செய்யும் நேரம். பட்டாடையணிந்து, மஞ்சள் பூசி, குங்குமத் திலகத்தோடு அந்தப் பெரிய வீட்டிலே நடமாடுகின்ற மல்லிகா, பார்ப்பதற்கு முழு நிலவைப் போன்றே காட்சியளித்தார். அழகும் பூரிப்பும் அவரிடம் அடைக்கலம் புகுந்தன.

ருக்குமணியம்மையாருக்கு இனம் புரியாத மகிழ்ச்சி! வரதப்ப முதலியாருக்குத் தலைகால் தெரியவில்லை!

**பெருந்தமிழர் பிறந்தார் :**

'மல்லிகா அம்மாளுக்குச் சின்ன மொதலியாரு பொறக்கப் போறாரு!'—நிலத்தில் வேலை செய்யும் பெண்களின் வாய்களை மூட யாரால்தான் முடியும்?

'மல்லிகா மூன்று மாதம்' என்பதைக் கேட்டவுடனே கனகசபாபதி முதலியார் உவகைமலையின் உச்சியிலே ஒன்றும் புரியாமல் நின்றார்.

ஒரு குறையுமில்லாமல் பிரசவம் நிகழவேண்டுமென்று எல்லாக் கடவுளரையும் வரிசையாக வேண்டிக்கொண்டார் ருக்குமணியம்மையார்.

மல்லிகாவின் மனங்கோணுமல் விரும்பியதையெல்லாம் தந்து வீண் மனமாறுபாடுகள் ஏற்படாமல் பார்த்துக்கொண்டனர் முதலியார் குடும்பத்தினர்.

ஏழாவது மாதம் ஒரு நாள் மல்லிகாவுக்குப் பூச்சூட்டி அலங்கரித்து, வளைகாப்பு நடத்தி, நன்முறையில் பிரசவம் ஏற்படவேண்டுமென்று குல தெய்வமான பெரிய தம்பிரானுக்குப் பொங்கலிட்டுப் பூசைமுடித்தனர்.

புரட்டாசிச் சனிக்கிழமையை மற்றவர்கள் வழிபடுவதைவிட பேட்டை முதலியார் வீட்டில் மிகவும் கோலாகலமாக-மாவிளக்குப் போட்டுக் கொண்டாடுவார்கள்.

மீஞ்சூருக்குப் போயிருந்த கனகசபாபதி முதலியார் முந்தின நாளே பேட்டைக்கு வந்து விட்டார். மல்லிகாவின் 'பேறு' காலத்தை முன்னிட்டு எல்லா ஏற்பாடுகளையும் முன் கூட்டியே செய்து விட்டார் பெரிய முதலியார்.

அன்று சனிக்கிழமை......அதுவும் புரட்டாசிச் சனிக்கிழமை. வைணவர்களைக் காட்டிலும் முதலியார் குடும்பம் அத்தினத்தை மிகவும் புனிதமான நாளாகக் கருதும்.



வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த பெரிய முதலியாருக்கும், கனகசபாபதி முதலியாருக்கும் மனம் ஒரு நிலையில் இல்லை.

கதவு திறந்தால், 'என்ன?...எப்படி இருக்கு?' என்று கேட்பார்கள்.

'இன்னும் கொஞ்சம் நேரத்தில் ஆகிவிடும்', என்று மருத்துவச்சி சொன்னதும், ஒரு முறை திருமலையானை நோக்கி கும்பிட்டுவிட்டு உட்கார்ந்துவிடுவார், பெரிய முதலியார்.

ஏவிளம்பி வ்ருஷம், புரட்டாசி மாதம், 25-ஆம் நாள், சனிக்கிழமை, உதயாதி 33 நாழிகையில் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் ஓர் அழகான குழந்தையைப் பிரசவித்தார் மல்லிகா அம்மையார். ஆம், புரட்டாசிச் சனிக்கிழமை – பெருமாளுக்கு உகந்த நாள்–பெருந்தமிழர் பக்தவத்சலம் பிறந்த நாள். 'பேரன் பிறந்தான்!' என்பதைக் கேட்ட பெரிய முதலியாருக்கும், 'மகன் பிறந்தான்' என்றறிந்த கனகசபாபதி முதலியாருக்கும் மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. 'சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி!' என்பார்களே அந்தச் சூழ்நிலையில் அவர்கள் மனநிலை இருந்தது.

ஏவலப்பர் பிறந்த போதுகூடப் பெரிய முதலியாருக்கு இவ்வளவு களிப்பு ஏற்பட்டதோ என்னவோ! பெயரன் பிறந்த மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார். கிழவர்!

பேட்டை மக்கள் நெஞ்சிலே மகிழ்ச்சியும் கொண்டாட்டமும் குடி புகுந்தன. ஒவ்வொரு குடும்பத்திலும் வாழ்கின்ற சுமங்கலிப் பெண்கள்



பேட்டையில் பிறந்த மாளிகை

மல்லிகா பெற்ற பேரின்பத்தைப் பெற்றவர்களானார்கள்.

புரட்டாசிச் சனிக்கிழமையில் தோன்றியதாலும், ஆண் குழந்தையாய்ப் பிறந்துவிட்டதாலும், ஒரு நல்ல நாளில் சோதிடர்கள்—பெரியவர்கள் ஆசி கூற—பக்தவத்சலம்—என்று பெயர் சூட்டினார்கள்.

தெய்வப் பொலிவுடன் விளங்கிய அந்த அன்புக் குழந்தையைத் தூக்கி உச்சிமோந்து உள்ளம் பூரித்தனர் முதலியார் குடும்பத்தினர்.

பக்தவத்சலம் பிறந்த குடும்பம் சைவ வேளாளர் மரபைச் சார்ந்தது. ‘தொண்டைநாடு சான்றோர் உடைத்து’; சைவம் செய்த பாக்கியப் பயனாய் விளங்கிய சேக்கிழார் பெருமானைப் பெற்றெடுத்த பெருமை சான்றது. சங்க காலம்



தொட்டு இக்காலம் வரை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்து விளங்கும் வன்மை படைத்தது. இத்தகைய நாட்டிற்கே சிறப்பாக உரிய மரபே தொண்டைமண்டல சைவ வேளாளர் மரபு.

**வேளாளர் தாளாளர்;**
**விருந்தோம்பும் கோளாளர்;**
**சொன்ன சொல் தவறாத பேராளர்.**

இவ்வுண்மைக்குப் பழையனூர் வேளாளர் தீக்குளித்த திறமே சான்று. கொண்டைகட்டி முதலியார் என்று இந்த நாளில் மருவி வழங்கும் இந்தப் பெயரின் உண்மையான பழைய வடிவம் ‘கொண்டல் கட்டி’ என்பதாகத்தான் இருக்க வேண்டும். பழந்தமிழர், நான்கு திசைகளிலிருந்தும் அடிக்கும் பருவக் காற்றுக்கு நான்கு பெயர்களை வைத்தார்கள்.

வடக்கே இருந்து வந்ததை வாடை என்றார்கள். தெற்கே இருந்து வீசியதை தென்றல் என்றார்கள். மேற்கே இருந்து சாடியதைக் கோடை என்றார்கள். கிழக்கே இருந்து பொழிந்ததைக் கொண்டல் என்றார்கள்.

அன்றும் இன்றும் கிழக்குப் பருவக் காற்றே—கொண்டலே தமிழ் நாட்டின் பயிர் வளத்திற்கு உயிர் வளம் தரும் வானமுதம். அந்தக் கொண்டலை—கொண்டலின் பயனைக் கட்டிக் காத்த வேளாளரே கொண்டல் கட்டிகள். சமுதாயத்தின் உயிர்காக்கும் முதன்மைத் தொழிலாகிய பயிர்த் தொழிலில் அப்பெருமக்கள் ஈடுபட்டிருந்ததால் முதன்மையானவர்கள் என்ற பொருளில் ‘முதலி

கள்' என்று போற்றப்பட்டனர். எனவே கார் காத்த வேளாளர் என வழங்கும் கொண்டை கட்டி முதலிமார் தமிழ் நாட்டில் உயிர் வளமாம் பயிர் வளத்தைக் காத்த உத்தமர்கள்.

இத்தகைய பெருஞ் சிறப்புக் கொண்ட மரபில் தான் அறுபத்தாறு ஆண்டுகட்டு முன்னர், இன்றைய நம் முதலமைச்சர் உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தம் குடிப்பெயர் – குவலயமெலாம் ஓங்கத் தோன்றினர். இத்தகு பெருமை வாய்ந்த பெருங்குடியே நம் பக்தவத்சலம் பிறந்த அருங்குடி.

இக்குடியினர்க்கு இன்னொரு பெயர் 'கொண்டல் கட்டி வேளாளர்' என்பது. ஆம், கொண்டல் அல்லது மழையைக் கட்டியாளும் கைவளம் படைத்தவர் அல்லரோ வேளாளர்!......

மைந்தரைப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி நீராட்டி மல்லிகா வளர்க்கும் பாங்கைக் கண்டு வரதப்ப முதலியாரும் ஏனையோரும் மகிழ்ந்தனர்.

குழலையும் யாழையும் குழைய வைக்கும் மழலை மொழிக் குழந்தை வளர்ந்தது. குழந்தையின் வளர்ச்சி, தாயார் முகத்தைக்கண்டு சிரித்துப் பாய்ந்து தவழ்ந்து வருகின்ற அளவுக்கு வளர்ச்சியுற்றது.

வெறிச்சென்றிருந்த அந்த வீட்டில் இப்போதெல்லாம் அடிக்கடி குழந்தையின் அழுகையொலி கேட்டது. குழந்தை பக்தவத்சலத்தை யாருமே கீழே விடுவதில்லை.



இதற்கிடையில் மல்லிகா கூடவே திருமணமான சகோதரி புஷ்பம்மையாரும் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். அக்குழந்தைக்கு ராஜரத்தினம் என்று பெயர் சூட்டினார்கள். தனக்கொரு தம்பி கூடி விளையாடுவதற்குக் கிடைத்து விட்டான் என்பதால் பக்தவத்சலம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

துருதுருவென்று நடந்து ஓடியாடி விளையாடுகின்ற சிறுவர் இருவரும் எல்லாருடைய நெஞ்சங்களிலும் இனிமையைப் பொழிந்த வண்ணமிருந்தனர்.

**ஐந்து வயது :**

பக்தவத்சலத்தின் ஐந்தாவது பிறந்த நாளை மிகச் சிறப்பாக கனகசபாபதி முதலியாரும், பக்தவத்சலத்தின் அம்மான்மார்களும் கொண்டாடினார்கள். பெரியவர் வரதப்ப முதலியார் வாயெல்லாம் பல்லாகிவிட்டது! வீட்டிலே ஒரே ஆனந்தம். இந்த நேரத்தில் மல்லிகா அம்மையார் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

அழகுமிழும் கண்களையுடைய அக்குழந்தைக்குப் பெரியவர்கள் ஒரு நல்ல நேரத்தில் 'கண்ணம்மாள்' என்று பெயரிட்டார்கள். தங்கை கண்ணம்மாளைக்கண்ட பக்தவத்சலமும் ராஜரத்தினமும் அடைந்த மகிழ்ச்சி சொல்லி முடியாது.

**பேரிடி :**

கண்ணம்மாள் பிறந்து ஆறு மாதங்களாகி விட்டன. தம் மனைவி மல்லிகாவையும் குழந்

தையையும் அழைத்துக்கொண்டு மீஞ்சூருக்குப் போகலாம் என்று நினைத்தார் கனகசபாபதி முதலியார்.

அவர் நினைப்புச் செயலாகுமுன்பே திடுக்கிடும் நிகழ்ச்சி ஒன்று நேர்ந்தது: கனகசபாபதி முதலியாருக்குக் காய்ச்சல் கண்டது. சூளை ஒச்ச வைத்தியர் முத்துசாமி தேவரை வரவழைத்தார்கள். வைத்தியர் வந்து கவனித்து மருந்து கொடுத்தார்.

ஆறே நாள்கள் காய்ச்சலோடு படுக்கையிலிருந்த கனகசபாபதி முதலியார், ஏழாவது நாளில் பேட்டை முதலியார் குடும்பத்தைத் துக்கத்தில் ஆழ்த்திவிட்டு—அந்தோ!—மறைந்து விட்டார்! பக்தவத்சலம் ஐந்து வயது குழந்தை என்பதால் ஏவலப்ப முதலியார் பக்தவத்சலத்தைத் தூக்கிக் கொண்டு கொள்ளிச் சட்டியையும் எடுத்துக் கொண்டு சென்றார். கணவரை இழந்த மல்லிகாவை எதைச் சொல்லிச் சாந்தப்படுத்துவதென்பது புரியாமல் பெற்றோரும் மற்றோரும் தவித்தனர். மஞ்சளை இழந்த மல்லிகா அழுதார்—கதறினார். மல்லிகாவைப் பார்த்து உற்றாரும் உறவினரும் அழுதனர்—கதறினர்; ஆறுதல் கூறித் தேற்ற முயன்று தோற்றனர். ஆம்! பகலுக்குப் பின் இரவு. இன்பத்திற்குப் பின் துன்பம்! துயரக் கடலில் ஆழ்ந்த வரதப்ப முதலியார், தமக்குப் பிறகு மகள் மல்லிகாவைக் கண்கலங்காமல் கவனித்துக் கொள்ள ஏவலப்பரும் முத்துரங்கமும் இருக்கின்றனர் என்பதால் ஏதோ சிறிது ஆறுதல் அடைந்தார்.



**மற்றோர் இடி:**

மருமகனை இழந்ததாலுண்டான பேரதிர்ச்சி, மாமனார் வரதப்ப முதலியாருக்கு உடல் நலத்தைக் குறைத்து அவரைப் படுத்தபடுக்கையராக்கிவிட்டது. நெடுநாள் வரை படுக்கையில் கிடக்க விழையாத வரதப்ப முதலியாரை விண்ணுலகம் அழைத்துக் கொண்டது. மீண்டும் சோகப்புயல்.......கண்ணீர் வெள்ளம்! குடும்பப் பொறுப்பினையும் தங்கை மல்லிகாவையும் பக்தவத்சலத்தையும் பாதுகாக்கும் பொறுப்பினையும் ஏவலப்ப முதலியார் சகோதரர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

# 2

## வாணிநிலைய வாயிலிலே

**படிக நிறமும் பவளச்செவ் வாயும்**
**கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் துடியிடையும்**
**அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்**
**கல்லும்சொல் லாதோ கவி.**

**—கம்பர்**

பக்தவத்சலத்திற்கு ஆறு வயதாயிற்று. ஒரு நல்ல முகூர்த்தத்தில் எழுத்தறிவிக்கும் சடங்கினை நடத்தினார்கள். நல்ல ஆரம்பப் பள்ளிகள் அங்கு இல்லை. பூவிருந்தவல்லியில் மட்டும் ஒரு சிறு ஆரம்பப்பள்ளி இருந்தது. ஆதலால் வீட்டிலேயே நரசிம்மாசாரியார் என்ற அந்தண ஆசிரியர் ஒருவரைக் கொண்டு பக்தவத்சலத்திற்குப் பாடம்

கற்பிக்கப்பட்டது. கற்கவேண்டிய நூல்களைக் கசடறக் கற்று, கல்வி கேள்விகளில் சிறப்பு மிகுந்தவரான நரசிம்மாசாரியார் தனிமுறை (Private) ஆசிரியராய் அமைந்தது மிகவும் பொருத்தமாகவே இருந்தது. ஆசிரியர் ஆத்திரங் கொள்ளாமல், அமுதத் தமிழையும் ஆங்கிலக் கல்வியையும் பிழையறக் கற்பித்தார்.

**எறும்பு வரிசை :**

பக்தவத்சலம் ஏழாவது வயதிலே அடி எடுத்து வைத்தார்–ஆசிரியரிடம் பாடம் படித்துக்கொண்டிருக்கும்போது ஒரு நாள் சிறுநீர் கழிக்க ஆசிரியர் அனுமதி பெற்று குளிக்கும் அறைக்கு வந்தார். அங்கு வரிசை வரிசையாக அணிவகுத்துச் செல்கின்ற அந்தப் பட்டாளத்து எறும்புகளையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்த அவர் ‘இவை எதைப் பெறுவதற்காக இப்படி ‘கியூ’ வரிசையில் செல்கின்றனவோ!’ என்று ஒருமுறை தம்மையே கேட்டுக்கொண்டார்.

ஆசிரியரிடம் பாடம் படித்துக்கொண்டிருந்ததையும், சிறுநீர் கழிப்பதற்காக அவ்வறைக்கு வந்ததையுங்கூட அவர் மறந்துவிட்டார். எறும்புகளையே பார்த்துக்கொண்டிருந்த அவருடைய கூர்மையான கண்கள் பக்கத்து அடுப்பிலே எரிந்துகொண்டிருந்த கொள்ளி நெருப்பைப் பார்க்கத் தவறவில்லை.

**நெருப்பும் எறும்பும் :**

நெருப்பையும் எறும்புகளையும் மாறிமாறிப் பார்த்தார்! மிகத் தீவிரமாக அவரது மூளை வேலை



செய்தது. அதன் விளைவு, அவர் கையிலே நெருப்புக் கொள்ளி...ஒரு நிமிட நேரத்தில் இது நடந்துவிட்டது!

எறும்புகள் இங்குமங்கும் சிதறுண்டு ஓடின. அவற்றுள் சில பொசுங்கி மாண்டன. அந்தப் பயங்கரப் படுகொலையை அமைதியோடு கண்டு ரசித்துக் கொண்டிருந்தன அவருடைய விழிகள்.

செயற்கரிய செய்துவிட்ட பெருமை அக்கைகளுக்கு! ‘சாவதைத் தவிர வேறொன்றையும் அறியோம் பராபரமே’ என்று அந்த ஏழை எறும்புகள் செத்துக்கொண்டே யிருந்தன.

**இட்ட பலன் :**

எறும்புகளை அப்படியே விட்டுவிட்டு ஆசிரியரிடத்திற்குச் சென்ற போதுதான் ‘இட்டார்க்கு இட்ட பலன் எப்படி?’ என்பதை அச்சிறுவரால் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது.

என்றுமே இல்லாத அன்று வேடிக்கையாகக் கூடக் கடிந்து பேசாத அவ்வாசிரியர், காரணமில்லாமலே கோபித்துக் கொண்டார்.

‘ஆசிரியர் எதற்காகக் கடிந்துகொண்டார்? என்ன தவறு நாம் செய்தோம்?’ என்று பல முறை அச்சிறுவர் தம்மையே கேட்டுக் கொண்டார்!

**கொடுமை புரிந்த நன்மை :**

எதிர்ச்சுவரின் ஓரத்திலே ஓர் எறும்பு வரிசை... பழைய நினைவுகள் அவருக்கு வந்துவிட்டன. ஒன்றுமே செய்யாத அந்த எறும்புகளை நெருப்

பினால் பொசுக்கியதாலேதான், ஒன்றுமே செய்யாத நாமும் ஆசிரியரால் கடிந்து கொள்ளப் பட்டோம்!' என்பதைப் புரிந்துகொள்ள அவருக்கு அதிக நேரம் ஆகவில்லை.

தவறு செய்பவர்கள் அப்போதே தண்டிக்கப் படும் விந்தையை அந்த இளம் பருவத்திலேயே அச்சிறுவரால் அறிந்து கொள்ள முடிந்தது. 'எறும்புகள் என்ன தவறு செய்தன? ஏன் அதை நாம் கொன்றோம்?' என அவர் தம்மை கேட்டுக் கொண்டார்.

**வாழ்க்கையில் உறுதி :**

'நம் வாழ்நாளில் இனி யாருக்கும் எந்த விதத் தீங்கும் செய்வதில்லை,' என்று அன்று சபதம் பூண்டு, 'குற்றமற்ற சிற்றுயிர்க்குத் தீங்கு விளைத்த தாலேதான் நமக்கு இது நேர்ந்தது', என்று நினைத்துக் கொண்டு யாருக்கும் தீங்கு செய்யா மனத்தைப் பெற்றார் பக்தவத்சலம் – கலிங்கம் கண்ட அசோகரைப் போல.

**லுத்தரன் மிஷன் பள்ளி :**

வீட்டில் ஆரம்பப்படிப்பை முடித்துக்கொண்ட சிறுவர் பக்தவத்சலத்தைச் சென்னைப் புரசைப் பாக்கம் லுத்தரன் மிஷன் பள்ளியில் சேர்த்தார்கள். லுத்தரன் மிஷன் பள்ளியில் பரிட்சை வைத்து, பக்தவத்சலத்தை 6-ஆம் வகுப்பில் சேர்த்துக் கொண்டார்கள். அதே பள்ளியில் 5-ஆம் வகுப்பில் அவர் தம்பி ராஜரத்தினத்தையும் சேர்த்தார்கள்.



**தொத்தா-பாட்டியார் :**

இந்த இருவருக்காகப் பழம்பெரும்பேட்டை யான புரசைப்பாக்கத்தில் ஆதியப்ப முதலி தெருவில், ஏ. ராமசாமி முதலியார் வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு தனிவீடு எடுத்து, தொத்தா–பாட்டி அம்புஜம்மாள் சமையல் செய்து சாப்பாடு போட்டுக் கவனித்துக் கொண்டார். தொத்தா–பாட்டி எப்போதும் மிகுந்த கண்டிப்பானவர்; குழந்தை பக்தவத்சலத்திடத்தில் அதிக பாசங் காண்டவர். எந்த நேரத்திலும் வெந்நீரிலேதான் பக்தவத்சலத்தைக் குளிக்கச் செய்வார். காலைக் கடனைக் கழிக்கக்கூடத் தண்ணீரை உபயோகிக்கக் கூடாது; வெந்நீரைத்தான் உபயோகிக்க வேண்டும் என்பது தொத்தா-பாட்டியாரிட்ட கண்டிப்பான உத்தரவு.

அவ்வம்மையார் நீர் அதிகச் சூடாய் இருந்தால், அதற்கு முந்தின நாள் காய்ச்சி ஆறவைத்த நீரைக் கொண்டு விளாவித்தான் சிறுவரைக் குளிப் பாட்டுவார்; சளி பிடிக்கும், உடலுக்கு ஆகாது என்பதால், மோர்ச்சாதம் போடவே மாட்டார். மோருக்குச் சாதம் ஒதுக்கினால்கூட, அதற்கும் சேர்த்து ரசத்தை ஊற்றிவிடுவார்!

**படிப்பிலே கவனம் :**

ஒரு நிமிஷத்தையும் வீணாக்காமல் பக்தவத் சலம் படித்துக்கொண்டேயிருப்பார்; படிப்பதைக் காட்டிலும் அதிகமாக எழுதவே விரும்புவார். துணை யில்லாமல் பள்ளிக்குக்கூட தனியே போக வீட்டில் அனுமதிப்பதில்லை. பள்ளிக்குச் செல்ல வேண்டு

மானால், பாளையத்தான் தோளில் தூக்கிக்கொண்டு சென்று விட்டு வருவான்.

உடன்படிக்கும் மாணவர்களுக்குத் தீங்கு செய்யவே நினையாத மனத்திட்பத்தை அந்த இளம் பருவத்திலேயே பெற்றிருந்த பக்தவத்சலம் எந்த நேரத்திலும் கருமமே கண்ணாய் இருப்பார்.

**விளையாட்டில் வெறுப்பு :**

வேம்பு ஐயரின் மகனும், சந்திரசேகரனும், கேஷியர் வீட்டுப் பிள்ளையொருவனும் பக்தவத்சலத்தோடு விளையாடுவதற்கு வீட்டுக்குப் பின்னுள்ள வாழைத் தோட்டத்திற்கு வருவார்கள். விளையாட்டில் அதிக விருப்பம் பக்தவத்சலத்துக்கு இல்லை. எப்போதாவது ஒரு நாள் சில நிமிஷங்கள் மட்டும் விளையாடுவார். 'பிரைவேட்டு' சொல்லித் தரும் ஆசிரியர் ஒருவரும் பக்தவத்சலம் வீட்டு வாழைத்தோட்டத்தில் வேலை செய்ய உதவி புரிவார். எந்த நேரத்திலும் தோட்டத்தில் உட்கார்ந்துகொண்டு எதையாவது எழுதிக்கொண்டேயிருப்பார் பக்தவத்சலம்.

தமது படிப்புக்காகப் புரசைப்பாக்கத்தில் தனிக்குடித்தனம் வைத்திருக்கிறார்கள் என்பதை பக்தவத்சலம் மறக்கவேயில்லை. பக்தவத்சலமும் ராஜரத்தினமும் பள்ளியிலிருந்து வந்ததும் துணிகளை எல்லாம் நீக்கி 'மடி'த்துணிகளையே உடுத்த வேண்டும் என்பது அம்புஜம்மாளின் கண்டிப்பு.



**சிறுவர் 'ஊட்டி' :**

பள்ளியின் கோடை விடுமுறையில் பக்தவத்சலத்துக்கும், ராஜரத்தினத்திற்கும் திருநீர் மலை தான் 'ஊட்டி'. திருநீர் மலையிலுள்ள சொந்தச் சத்திரத்திற்குச் சென்று சிறுவர் இருவரும் தங்குவர்.

**துயரச் சம்பவம் :**

ஆறும் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்பிற்குப் பக்தவத்சலமும், ஐந்தாம் வகுப்பிலிருந்து ஆறும் வகுப்பிற்கு ராஜரத்தினமும் மாறினர். மேற்கொண்டு அவ்விருவரும் படிக்கும் போது ஒரு நாள் ராஜரத்தினத்திற்குக் காய்ச்சல் கண்டது. சாதாரணக் காய்ச்சல் நச்சுக் காய்ச்சலாகி, ராஜரத்தினத்தின் உயிரையே கொண்டுபோய்விட்டது.

**மீண்டும் பேட்டையில் :**

எதிர் பாராத இந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள இயலாமல் பக்தவத்சலமும் மற்றவர்களும் ஆருத் துயரில் மூழ்கினார்கள். தம்பியின் மறைவு பக்தவத்சலத்துக்கு ஒரு பேரிழப்பாகவே இருந்தது. ஒன்ருகவே இருந்து வளர்ந்தவர்களுள் ஒருவரை காய்ச்சல் கொண்டுபோய்விட்டதால் மனம் தாளாமல் மேலே தொடர்ந்து படிக்கவும் விரும்பாமல் – ஹோட்டலில் சாப்பிடாத காரணத்திலைும் – அன்னையாரின் அத்தையாருக்கு மேலும் புரசையில் படிக்க வைக்க விருப்பமின்மையிலைும் – ஹாஸ்டல் வசதிகள் அப்போது இல்லாததாலும், பக்தவத்சலம் பேட்டைக்கு வந்து சேர்ந்துவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

## மாமாவா ? அப்பப்பா !

பெரிய மாமா ஏவலப்ப முதலியாரைக் காட்டிலும் முத்துரங்கமுதலியாரிடத்தில் பக்த வத்சலத்துக்குச் சிறிது பயம் அதிகம். வீட்டு நிருவாகத்தை அப்போது பக்தவத்சலத்தின் பெரிய தாயார், தாயாரம்மையார் ஏற்றுக்கொண் டிருந்தார்.

## புதுப் பழக்கம் :

சுருட்டைக் கூந்தலும் குடுமியும் கொண் டிருந்த சிறுவர் பக்தவத்சலம் எப்போதும் நெற்றி யில் சாந்துப்பொட்டு வைக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். பேட்டையில் முதலியார் வீட்டில் காலையில் குழம்பு ரசத்தோடு பகல் உணவைப் போலவே எப்போதும் சாப்பிட்டுவிடுவார்கள். வீட்டிற்கு வந்திருக்கும் பக்தவத்சலமும் அந்தப் பழக்கத்தையே கடைப்பிடிக்கலானார்.

பருப்புத்தூள் - நெய்தடவிச் சுட்ட அப்பளம் இவற்றைச் சாதாரணமாகத் தினமும் உபயோகிப் பார்கள். பக்தவத்சலம் தம் தந்தையாருக்குச் செய்யவேண்டிய தர்ப்பணம் முதலிய காரியங்களை யும், அவர் சிறுவர் என்பதால், ஏவலப்ப முதலியாரே செய்யலானார். பக்தவத்சலத்திற்குத் தந்தையாரின் நினைவு எப்போதும் வரவே கூடாது என்பதால், ஏவலப்பரும் மற்றப் பெண்டிரும் அவரை மிகச் செல்லமாக வளர்த்தனர். ஆசார அனுஷ்டானங்கள் தூய்மையை இழக்கக்கூடாது என்பதால், பொதுச் சிற்றுண்டிச்சாலையில் யாருமே சாப்பிடுவதில்லை : பக்தவத்சலமும்



சாப்பிட விரும்புவதில்லை. என்ன சிற்றுண்டி தேவையானாலும் வீட்டிலேயே தயாரித்துக் கொடுப் பதால் வெளியில் சாப்பிட வேண்டும் என்ற எண்ணமே பக்தவத்சலம் முதலியவர்களுக்கு ஏற்பட்டதில்லை.

அந்நாளில் யாருமே தலையில் கிராப்புடன், சட்டை தரித்திருந்ததாகத் தெரியவில்லை. சட்டை போட்டுக்கொண்டு கிராப்போடு ஒருவன் சாப்பிடும் பந்தியில் உட்கார்ந்தால், உடனே அவனை எழுப்பி வெளியில் அனுப்பி விடுவார்கள்.

## வேடிக்கை :

வயது முதிர்ந்தவர்களைக் கண்டால் பக்த வத்சலத்திற்கு ஒரே வேடிக்கைதான்—பரிகாசமும் கிண்டலும் செய்வார்; யாராவது கேட்டால் பழியை எவர்மீதாவது சுமத்திவிடுவார்.

மிகப் பொறுமைசாலியாக—அதிகமாக யாரிட மும் பேசாமல்—தாமுண்டு தமது வேலையுண்டு என்றிருப்பதனால், பக்தவத்சலத்தை வீட்டிலுள்ள அனைவருக்கும் பிடிக்கும்.

## கண்டிப்பான வளர்ப்பு :

பன்னிரண்டு வயது வரையில் எவரிடமும் சேரக்கூடாதென்ற நினைப்போடு பக்தவத்சலத் தைக் கண்டிப்பாக வளர்த்தார்கள். இவர் இளமையிலிருந்தே பொய் பேசுவதே இல்லை. பொய் பேசும் நிலை ஏற்பட்டுவிட்டால், உடனே மௌனமாகிவிடுவார்.

**தேசிய வரலாறு :**

பேட்டைக்கு வந்த பக்தவத்சலம் கிராமச் சூழ்நிலையிலிருந்து இயற்கைப் பாடங்களையும்–இந்திய நாட்டு வரலாறுகளையும் படித்து–தேசிய உணர்வையும் சிறிது பெற்று–இரண்டு வருடங்களைக் கழித்தார்; பேட்டையில் இருக்கும் போது வெளியில் சென்று விளையாடவே மாட்டார். தம் தங்கையான கண்ணம்மாளோடு தாயம், பரமபதம் போன்ற விளையாட்டுகளையே விளையாடுவார்.

**தனிக்குடித்தனம் :**

பக்தவத்சலத்தின் படிப்பு நின்றிருப்பதை நினைத்து அதிகம் வருந்தியவர் அம்மான் முத்துரங்க முதலியார் ஆவர். மருமான் மேற்கொண்டு படிப்பதற்கு உடனே எதையாவது செய்யவேண்டிய நிர்ப்பந்தம் முத்துரங்க முதலியாருக்கு ஏற்பட்டுவிட்டது. அவர் தீவிரமாக முயற்சிசெய்தார். அதன் விளைவு, மயிலாப்பூரில் தனிக்குடித்தனம் அமைக்கப்பட்டது.

**பி. எஸ். பள்ளியிலே :**

1913–ஆம் ஆண்டு, ஜுலை மாதம், 1–ஆம் தேதி மயிலாப்பூர் - பின்னத்தூர் சுப்பிரமணியம் உயர்நிலைப்பள்ளியில்–நான்காவது படிவத்தில் (ஒன்பதாவது வகுப்பு)–பரிட்சை எழுதி, பக்தவத்சலம் சேர்த்துக்கொள்ளப்பட்டார். புரசைப்பாக்கத்தில் பக்தவத்சலம் பரிட்சைக்கு உட்காரவே இல்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.



சிந்தனைச் சேர்க்கை

## குடியிருப்பு :

பக்தவத்சலம் முதலில் தெற்கு மாடவீதியிலும், பின்பு கபாலி சன்னதித்தெரு 13-ஆம் எண்ணுள்ள வீட்டிலும், பின்னர் வடக்கு மாடவீதி 9-ஆம் எண்ணுள்ள வீட்டிலும் குடியிருந்து படிக்கலானார்.

## அமைதியின் உரு :

பக்தவத்சலம் படிக்கும் போது வகுப்பில் அமைதியாகவும், காரியத்திலே கண்ணாகவும், ஆசிரியர்களிடத்திலே பணிவுடனும் விளங்கி வந்தார்; எவரோடும் எளிதில் ஆத்திரத்துடன் பேசவே மாட்டார்; எந்த விஷயத்திலும் அதிக ஊக்கம் கொண்டு–எல்லாவற்றையும் கவனமாகக் கேட்பார்; கேட்டதை மனத்தில் அமைத்துக் கொள்வார். தமக்குத் தொடர்பில்லாததில் சற்று ஒதுங்கியே இருந்துவிடுவார்.

எவரிடத்திலும் புறங்கூறுதலோ, பொய் பேசுதலோ அவரிடமில்லாத பழக்கமாகும். அவர் வகுப்புக்கு வருவதும் வெளியில் போவதும் எவருக்குமே தெரியாது. பூமி நோகாமல் நடப்பது என்று சொல்வார்களே, அது பக்தவத்சலத்திற்குச் சாலப் பொருந்தும். அவர் பள்ளி வாழ்க்கையில் நிகழ்ச்சிகளே இல்லாததுதான் ஒரு பெரிய நிகழ்ச்சி என்று கூறுதல் வேண்டும்.

## கூர்மையான நோக்கு :

அவர் மற்ற மாணவர்கள் விளையாடும் போது தாம்மட்டும் விளையாடாமல் பள்ளிப் பாடங்களைக்

கவனிப்பார். அவருக்கு விளையாட்டில் அதிகப் பற்றில்லை என்பதுதான் உண்மை. ஆசிரியர்கள் கேட்கின்ற கேள்விகளுக்குச் சரியாகப் பதில் சொல்லிவிடுவதில் பக்தவத்சலத்துக்கு நிகர் பக்தவத்சலந்தான்.

**ஒதுங்கிய வாழ்க்கை :**

பக்தவத்சலத்தோடு மாணவர் பலர் படித்தாலும், அவர் அதிகமாக எவருடனும் பேச மாட்டார். எந்தப் பொருளையும் எவரிடமும் கேட்டு வாங்கிக் கொள்ளவுமாட்டார். அவர் நெருங்கிப் பழகியவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் பாலகோபாலன், சி. ஆர். ரங்கநாதன், அப்பு ராவ் என்பவர்களே. கலெக்டராயிருந்து சமீபத்தில் ஓய்வு பெற்ற ஜவ்வாதுசேன் சாயபுவும் அவருடன் படித்தவர். பக்தவத்சலம் படிக்கும் போது தலைமையாசிரியராய் இருந்தவர் திரு. ஏ. பஞ்சாபகேச ஐயராவர். திரு. ஏ. எஸ். கஸ்தூரிரங்க ஐயர் வகுப்பாசிரியராய் இருந்து பாடங்களைச் சிறப்புற நடத்தினர். கஸ்தூரிரங்க ஐயர் பக்தவத்சலத்தை தம்முடைய வீட்டின் மாடிக்குக் கூட்டிச் சென்று கணக்கையும்—வான சாஸ்திரத்தையும் (பி. ஏ.க்கு வேண்டியதெல்லாம்கூட வானத்தைக் காட்டி) விளக்கிச் சொல்லித் தருவார். சரித்திர ஆசிரியரான பி. என். சீனிவாசாசாரியார் மதச் சம்பந்தமான விஷயங்களையும் சொல்லித் தருவார். கஸ்தூரிரங்க ஐயர் தமிழில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்ததால் மாணவர்களைத் தன்னுடைய குழந்தைகளைப் போலவே எண்ணி பாடங்களைப் போதிப்பார். பக்தவத்சலம் ஆசிரியர்களிடத்தில் மிகவும்



பணிவுடன் இருப்பார். பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற எண்ணமே பக்தவத்சலத்திற்கு எழுந்ததில்லை.

1916-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதி வெற்றி வாகை சூடிய பக்தவத்சலம், தமது மூன்ருண்டு பள்ளி வாழ்க்கையில் வாயினல் பேசியதைக்காட்டிலும் மனத்தாலும் கண்களாலும் பேசியதுதான் அதிகம்.

# 3

## குமுறலின் குரல்

**இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறைப்பட் டாலும்**
**பதந்திரு இரண்டும் மாறிப் பழிமிகுந் திழிவுற் றாலும்**
**விதந்தரு கோடி இன்னல் விளைந்தெனை அழித்திட் டாலும்**
**சுதந்திர தேவி! நின்னைத் தொழுதிடல் மறக்கி லேனே!**

**—பாரதியார்**

பக்தவத்சலத்தின் வாழ்க்கைச் சிறப்புக்கும் புகழுக்கும் முழுமுதற்காரணர்களாய் இருந்தவர்கள், அம்மான்மார்களாகிய ஏவலப்ப முதலியாரும் முத்துரங்க முதலியாருமாவார்கள். சிறுவர் பக்தவத்சலத்திற்குத் தெய்வபக்தியை ஏவலப்ப முதலியாரும், தேச பக்தியை முத்துரங்க முதலியாரும் ஊட்டினர். பி. ஏ.வில் வெற்றி பெற்ற

முத்துரங்க முதலியார், தேச சேவைக்குத் தம்மை உரிமையாக்கிக்கொண்டார். பி. ஏ.வில் வெற்றி பெறும் வாய்ப்பினை இழந்த ஏவலப்ப முதலியார், வீட்டுச் சேவையிலும், நிலபுலன்களைப் பராமரித்தலிலும், கோயில் நிருவாகங்களிலும் இரண்டறக் கலந்துவிட்டார்.

அன்றாட நாளிதழ்களை ஓர் எழுத்து விடாமல் படித்து, நாட்டு நடப்புகளையும் அரசியல் விவகாரங்களையும் நன்கு புரிந்துகொள்வதில் இந்த இருவருக்கும் சமமாக வேறு எவரையுமே சொல்ல இயலாது. ஏவலப்பர்—முத்துரங்கம் காலத்திற்கு முன்னர் ஆங்கிலத்தை அனைவரும் ஒதுக்கினர்.

**நசரத்துப்பேட்டை :**

முஸ்லீம் மன்னனால் இவர்களின் முன்னோர்களுக்கு நசரத்துப்பேட்டை இனாமாக வழங்கப்பட்டது. நசரத்கான்பேட்டையே நசரத்துப் பேட்டையாகியது. ஏவ்லப்பர்—முத்துரங்கம் ஆகியோரின் முன்னோர்கள் பேட்டையிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டு வந்தால், சென்னைக் கோட்டையிலே மூன்று குண்டுகள் போட்டு மரியாதை தெரிவிப்பார்கள். பல்லக்கு, தீவர்த்தி முறைகளும் அவர்களுக்கு முஸ்லீம் மன்னனால் வழங்கப்பட்டிருந்தன.

முஸ்லீம் மன்னனால் தரப்பட்ட இந்த மரியாதைகள் எல்லாம் தனக்கு அவமரியாதையூட்டக் கூடியவை என்று நினைத்து, தாவச்சேரி, கொத்தம்பாக்கம், அரியப்பஞ்சேரி ஆகிய கிராமங்களை





**பேட்டை அம்மன் கோயில்**

இனாமாகத் தந்து அம்மரியாதைகளைப் பறித்துக் கொண்டது ஆங்கில அரசு.

இவர்கள் மேற்பார்வையில் திருநீர்மலை திருமழிசை—மேல் அகரம் முதலிய தேவஸ்தானங்கள் இருந்தன—இருக்கின்றன. திருவள்ளூரில் மாசி மகமும் அமாவாசைத் தெப்பல் உற்சவமும் இவர்களுடையனவே. வேளாண்மையில் அதிகத் தேர்ச்சியும் அக்கறையும் கொண்ட ஏவலப்ப முதலியார், முதல் இரண்டு மனைவியரை இழந்துவிட்டதால், மூன்றாமுறை பக்தவத்சலத்தின் தங்கையார் கண்ணம்மாளை திருப்பதி—திருச்சானூரென வழங்கும் திருச்சுகனூரில் மணந்தார்.

**வழி காட்டி :**

வரதப்பன்—கற்பகம் என்ற இரண்டு மக்களைப் பெற்றெடுத்தார் ஏவலப்ப முதலியார். முத்து ரங்கம், முப்பதாம் வயது நிரம்பியதும், திருமணம் செய்துகொண்டார். சிறந்த தேச பக்தரும் காந்திய வாதியுமான அவர், பக்தவத்சலத்திற்கு எல்லா வழிகளிலும் வழி காட்டியாய் நின்றார்.

**புஷ்பவல்லித் தாயார் :**

முத்துரங்க முதலியார், சிறுகளத்தூர் செல்லப் பெருமாள் முதலியாரின் ஐந்தாம் மகளான புஷ்பவல்லித் தாயாரை மிகச் சிறந்த முறையில் மணம் புரிந்து கொண்டார். புஷ்பவல்லித் தாயார் பேட்டைக்கு வந்த பிறகு எல்லாச் செல்வங்களும் கொழித்தன. ஆனால், மக்கட்செல்வந்தான் ஏற் படவே இல்லை. இவ்வருத்தம் கடைசி வரையில் எல்லோருக்கும் இருந்தது.

பேட்டை அம்மன் கோயிலுக்குக் கோபுர மின்மையால், தமது வீட்டிற்கும் (கோபுரம்) மாடி கூடாது என்று நினைத்த இவர்கள், வீட்டிற்கு மாடி கட்டவே இல்லை.

**அரிஜனங்களும் மக்களே :**

தமது திருமணத்தின்போது ஹரிஜனங்கள், எங்கேயோ சிறிய அளவில் வந்திருந்த குறையைப் போக்கவே, தமையனார் மைந்தர் வரதப்பரின் திருமணத்தின் போது ஹரிஜனங்கள் திரளாய் வந்து தாம்பூலம் பெற்றுக்கொள்வதோடு உணவை யும் உட்கொண்டு செல்கின்ற புதிய சூழ்நிலையை முத்துரங்க முதலியார் ஏற்படுத்தினார்.



**வெள்ளிக்குடம் :**

அதோடு அவர் சட்டசபை உறுப்பினராய் இருக்கும் போது தமக்குக் கிடைத்த படித் தொகையை எல்லாம் சேர்த்து வைத்துத் திருநீர் மலைக் கோயிலுக்கு வெள்ளிக்குடம் ஒன்றையும் வாங்கி வைத்துவிட்டார்.

**இந்தா நூறு ரூபாய் :**

ஏவலப்பரும் முத்துரங்கமும் இணை பிரியாத சகோதரராய் வாழ்ந்தனர். முத்துரங்கம் சென் னைக்குப் புறப்படும் போது 'இந்தா முத்து ! இந்த நூறு ரூபாயை வைத்துக்கொள்,' என்று ஏவலப்பர் கொடுப்பார். முத்துரங்கம் சென்னையிலிருந்து திரும்பியதும் 'இந்தா அப்பன் நூறு ரூபாய்,' என்று திருப்பிக் கொடுத்துவிடுவார்.

**வேளாண்மைப் புலி :**

ஏவலப்பர் வேளாண்மையில் புலி. அவர் பிராமணர்கள் தவறு செய்தாற்கூட மிகக் கண்டிப் பாகக் கோபித்துக்கொள்வார் ; எந்தக் காரணத்தை முன்னிட்டும் பொய் பேசவே மாட்டார் ; சிறந்த தரும குணம் படைத்தவர் ; தம்பியின் வார்த் தையை மீறமாட்டார். அவர் பக்தவத்சலத்தின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்.

**காங்கிரஸில் ஈடுபாடு :**

முத்துரங்கம் 'ஸ்வராஜ்யா'க் கட்சியில் மிக்க தீவிரவாதியாய்த் திகழ்ந்தார் ; முழு நேரமும் அரசியலில் பங்கு கொண்டார். 1920க்குப்

பின்னரே அவர் காங்கிரஸில் அதிக ஈடுபாடு கொண்டார். எந்த விதமான தீய பழக்கங்களும் அவரிடம் இல்லை. அவர் வைதாரும் வாழவேண்டும் என்று நினைக்கின்ற மனப்பண்பு மிக்கவர்.

இவ்வளவு உயர்ந்த பண்புகள் நிரம்பிய முத்துரங்கம் ஏவலப்பர் வாழ்க்கை, பக்தவத்சலத்தின் வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

**பிராமணரல்லாதார் இயக்கம் :**

அப்போது, பிராமணரல்லாதார் சங்கத்தின்கை ஓங்கியிருந்தது. முத்துரங்க முதலியார் போன்றவர்கள் அச்சங்கத்தில் அங்கம் வகித்தார்கள். நீதிக் கட்சிக்கு எதிராய் இருந்து தேசியத்தின் அடிப்படையில் பிராமணரல்லாதார் சங்கம் இயங்கி வந்தது. ஜாதி இனம் அடிப்படையில் சங்கம் அமைத்து, பிராமணரல்லாதாருக்கு நன்மைகள் புரிவதாகக் கூறிக்கொண்டு, சில சங்கங்கள் சுய நலம் நிரம்பிய தவருன காரியங்களைச் செய்துவந்ததால், காங்கிரஸிலிருந்த தேசிய உள்ளம் கொண்ட பிராமணரல்லாதவர்கள் மிக்க துயரமுற்ருர்கள்.

பிராமணரல்லாதார் பெயரால் தேசியத்திற்கு விரோதமான பாதகம் விளைவிக்கும் தீய முயற்சியைத் தவிர்க்கும் நோக்கத்தோடு சென்னை மாநில பிராமணரல்லாதார் சங்கம் (Madras Presidency Non-Brahmins Association) ஏற்படுத்தப்பட்டது. ஒரு சிலர் மட்டும் அடைந்துவந்த ஏகபோக உரிமைகளைப் பிராமணரல்லாதார் அனைவரும் அடையக்கூடிய நிலையில் வழி வகைகளை வகுத்துத்தந்தது இப்புதிய சங்கம். தேச பக்தியும் தெய்வ பக்தியும்கொண்டார் பலர் இக் கட்சியில் அங்கம் வகித்தனர்.



சென்னை மாநில பிராமணரல்லாதார் சங்கத்தின் சார்பில் அவ்வப்போது கூட்டங்கள் கூடி நாட்டின் நடப்புகளையும், பிராமணரல்லாதார் பாதிக்கப்பட்டிருந்தால் அப்பிரச்சினைகளையும் குறித்து விவாதித்துத் தீர்வு கண்டனர். மாதத்திற்கு இரண்டொருமுறை கூட்டங்களும் ஆண்டிற்கு ஒரு மாநாடும் இச்சங்கத்தின் சார்பில் நடத்தி வந்தார்கள். சங்கத்தின் வளர்ச்சியைக் கண்ட பிராமணரல்லாத பிரமுகர் பலர் சங்கத்தில் உறுப்பினராய்ச் சேர்ந்தனர்.

**கல்லூரி முற்றுகை :**

இந்த நேரத்தில், 1916-ல் பக்தவத்சலம் எஸ். எஸ். எல். சியில் வெற்றி பெற்றதும், கல்லூரியில்சேர முற்றுகையிடத் தொடங்கினுர். அந்தக் காலத்திற்கூட மாநிலக் கல்லூரியில் (Presidency College) இட நெருக்கடி அதிகம். எளிதில் இடம் கிட்டுவதேயில்லை. பக்தவத்சலத்திற்கு என்ன செய்வதென்று புரியாத நிலை ஏற்பட்டது. சிலர், பல கல்லூரிகளுக்கும் விண்ணப்பித்துக்கொண்டு பெரிய சிபாரிசின்பேரில் இடம் பெறுவதுண்டு. ஆனால், பக்தவத்சலம் வேறு எந்தக் கல்லூரிக்கும் விண்ணப்பித்துக்கொள்ளாமல், ஒரே கல்லூரிக்கு மட்டும் விண்ணப்பஞ்செய்து கொண்டார்.

பக்தவத்சலம் எந்த விதமான சிபாரிசும் வேண்டாமல், தகுதியிருந்தால் தானே கல்லூரியில்

இடம் கிட்டும் என்று வாளாவிருந்தார். பக்தவத்சலத்திற்குத் தகுதியிருக்கிறதென்று மாநிலக் கல்லூரி முடிவு செய்தது. எந்த விதச் சிபாரிசுமில்லாமல் இடமுங் கிடைத்தது.

**பேரதிர்ச்சி :**

பக்தவத்சலம் கல்லூரியில் சேர்ந்த சில நாள்களுள், பேட்டையில் வீட்டிலுள்ள அனைவரையும் பெரியம்மை தழுவிக்கொண்டது. பக்தவத்சலத்தின் அன்னையார் மல்லிகா அம்மையார் அதிகமாகப் பெரியம்மையால் பாதிக்கப்பட்டார். அதன் விளைவு, கணவரை இழந்த மல்லிகாவைப் பெரியம்மை, கனகசபாபதி முதலியாரிடம் கொண்டு போய்ச் சேர்த்தது. மல்லிகா அம்மையாரோ, தம் அன்புச் சகோதரியார் புஷ்பம்மாளையும் உடன் அழைத்துக்கொண்டு போய்விட்டார். அதனால், வீடு ஒரே வேதனை மயமாகிவிட்டது. பேட்டையிலே பெண்கள் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் இருந்த காட்சி, எல்லாரையும் சோகமுறச் செய்தது. பக்தவத்சலம் ஐந்து வயதில் தந்தையாரை இழந்தார்; பத்தொன்பது வயதில் தாயாரை இழந்தார். குடும்பத்தில் கவலை நிலவியது; கண்ணீர் நிரம்பியது. சோகத்திலே ஆழ்ந்த முதலியார் குடும்பம் பக்தவத்சலத்தை மயிலாப்பூரில் தங்க விடாமல், பேட்டையிலிருந்து குதிரை வண்டி மூலம் கல்லூரிக்குச் சென்று வர ஏற்பாடு செய்தது. ஒரு மாதம் வரையில் குதிரை வண்டியிலேதான் பக்தவத்சலம் கல்லூரிக்குச் சென்று படித்து வந்தார்.



கவலையும் கண்ணீரும் சூழ்ந்திருந்த வேதனை மிக்க நேரத்தில், பக்தவத்சலத்தின் நெஞ்சில் உண்மையான தேசபக்திக் கனலை மூட்டினர் முத்துரங்க முதலியார். அவரைப்பற்றி நாமும் சற்றுத் தெரிந்து கொள்ளலாமல்லவா?

**பண்பாளர் :**

முத்துரங்க முதலியார் பழுத்த வைணவர்; ஹரிஜனங்கள் ஆலயத்தில் நுழைவதைப் பெரிதும் வரவேற்ற சீரிய பண்பாளர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் மிகுந்த பற்றும் பாசமும் ஈடுபாடுங் கொண்டு, ஆழ்ந்த ஆராய்ச்சி செய்து, அந்நூலில் நல்ல அறிவு பெற்றவர். இந்திய விடுதலையை முன்னிட்டுச் சிறைச்சாலையில் அவர் தங்கியிருந்த போதும், நாலாயிரத்தை நாவினிக்கச் சொல்வதற்குச் சளைத்ததே இல்லை! உடன் இருப்பவர்கள் கேட்டு மகிழக் கூடிய நிலையில் அவருடைய பேச்சும் பிரபந்த விளக்கமும் இருந்தன.

**‘தமிழ் மாடு’:**

முத்துரங்க முதலியாரை அவருடன் இருந்தவர்கள், ‘தமிழ் மாடு’ என்றுதான் வழங்குவார்கள். அவர் தமிழில் பெற்றிருந்த புலமை மட்டும் அதற்குக் காரணமன்று! அவர் அமைதியானவர். பசுவைப்போன்றவர். பசு மிகவும் சாதுதான். ஆனால், வெகுண்டெழுந்தால் அதைப்போலக் கோபமுள்ளதும் உண்டோ? அவர் சாதுதான். ஆனால், அதே சமயம் மிகுந்த கோபமுடையவர். ‘சாது மிரண்டால் காடுகொள்ளாது’, என்பார்



பெருந்தமிழரை உருவாக்கிய
பெருமான்

கள்! முத்துரங்கம் மிரண்டுவிட்டால், நாடே கொள்ளாது என்ற நிலை அன்று இருந்துவந்தது.

**செயல் வன்மை :**

நினைத்ததைச் செய்து முடிக்கும் ஆற்றல் அவரிடம் இயற்கையாய் அமைந்திருந்தது. யார் எதைச் சொன்னலும் அதைக் கேட்டுக்கொண்டு தலையாட்டுகிற ‘பூமாடு’ போல அவர் வாழவில்லை! வாழவும் விரும்பவில்லை! மனச்சான்றுக்கு



மதிப்புத்தந்து அவர் வாழ விரும்பினர். இது வரை அப்படியே வாழ்ந்தார்.

**அறங்காவலர் :**

அவர் பல கோயில்களின் அறங்காவலராய் இருந்தார். கோயில் சொத்துகளைக் கண்காணிப்பதில் அவருக்கிருந்த பொறுப்பு அதிகம். என்ருலும், நல்ல முறையில் திறம்பட அவற்றைச் செய்து வந்தார். அவர் பேசும் போது வைணவ நூலாகிய நாலாயிரப் பிரபந்தத்தைப் பற்றிப் பேசுவார்! அதிலிருந்து மேற்கோள்களைக் காட்டுவார்! ஹரிஜன் ஆலயப் பிரவேசச் சட்டத்தின் போது அவர் ஆற்றிய சொற்பொழிவு பயனுள்ளதாய் இருந்தது. ‘அவர்களும் மனிதர்களே; அவர்களுக்கு ஏன் அந்த உரிமையைக் கொடுக்கக் கூடாது?’ என்று தகுந்த காரணங்களுடன் அவர் பேசிய பேச்சுகளைப் பலர் கேட்டுத் தெளிவு பெற்றனர். ஆலயப் பிரவேசத்தை ஒப்புக் கொண்டதே, அவருடைய பேச்சுக்குக் கிட்டிய பெரிய வெற்றியாகும்! திருவல்லிக்கேணி ஆலயத்தை ஹரிஜனங்களுக்காகத் திறக்கவேண்டுமென்று ராஜாஜியே முத்துரங்கத்தை வேண்டிக் கொண்டார்! ராஜாஜி வரவேற்புத் தலைவராய் இருந்தார்.

**சட்டசபை உறுப்பினர் :**

1920-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் அவர் சட்டசபை மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களிடையே அவருக்கிருந்த செல்வாக்கால் இந்தப் பதவிக்கு அவரால் மிகச் சுலபமாக வர முடிந்

தது. அவர் சர். ஏ. ராமசாமி முதலியாரை எதிர்த்து நின்று, அவரைத் தோற்கடித்தார். 1930-ஆம் ஆண்டு வரை அந்தப் பதவியில் அவர் தொடர்ந்து இருந்து வந்தார். அதற்குப் பின்னர்ச் சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ருர். அவர் 1935-ஆம் ஆண்டு மத்திய சட்ட சபைக்கு அனுப்பப்பட்டார். அவர் சென்னை மேல்சபை மெம்பராயும் இருந்தார். இரண்டு முறை தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராயும் பதவி ஏற்ருர்.

**ஓய்ந்திருக்க நேரமில்லை :**

'சுயராச்சியம் என் பிறப்புரிமை,' என்று சொல்லக்கூடிய அவர், வாழ்க்கையில் போதிய நேரமில்லாத குறையிருக்கத்தான் செய்தது. பத்திரிகை படிப்பதற்குக்கூட அவருக்கு நேரமிராது. அவர் மிகவும் சுறுசுறுப்பானவர். அவர் கையில் பத்திரிகை இருக்கும். ஆனல், அதன் தேதியைப் பார்த்தால்தான் தெரியும் அது பழைய பத்திரிகை என்பது! மேலெழுந்த வாரியாகப் படித்துவிட்டு, 'எல்லாவற்றையும் படித்துவிட்டேன்,' என்று தம்பட்டம் அடித்துக்கொள்கிற பழக்கம் அவரிடத்தில் இல்லை! ஓர் எழுத்தும் விடாமல் நுணுகி நுணுகி அவர் படிப்பார்; படித்ததை நன்ருக நினைவில் வைத்துக்கொள்வார்.

**ஊழியன் :**

அவர் பிறந்தது பெரிய குடும்பம்; அவருக்கிருந்தது தமிழிலும் மற்றும் சில மொழிகளிலும் ஆழ்ந்த புலமை–பெரிய படிப்பு! அவர் வகித்தவை



எல்லாம் பெரிய பதவிகள்! ஆயினும், தாம் ஒரு சாதாரண காங்கிரஸ் ஊழியன் என்ற எண்ணந்தான் அவர் நெஞ்சில் மேலோங்கி நின்றது. அப்படிச் சொல்லிக்கொள்வதில் அவர் மட்டிலாப் பெருமகிழ்ச்சி அடைந்தார்! அவர் மனத்தில் எந்த விதத் தவருன எண்ணமோ, மற்றவரைக் கெடுக்க வேண்டுமென்ற நினைவோ, சிறிதளவும் இருந்ததில்லை.

**ஜமீந்தாரா ?**

முத்துரங்கம் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சியின் தலைவராய் இருந்தபோது 'ஜில்லா போர்டு' தேர்தல்கள் வந்தன. தலைவர் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்தார். பக்தவத்சலம் ஜமீந்தார் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று தமது கருத்தைத் தெரிவித்தார். ஆனல், முத்துரங்கம் அந்த எண்ணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை! அதை விடத் தம் பதவியை ராஜிஞமா செய்துவிடத் தயாராய் இருப்பதாகத் தெரிவித்தார். தமது மனம் ஏற்றுக்கொள்ளாததை அவர் ஒப்புக்கொண்டதே இல்லை.

**"அவரிருக்க நமக்கேன்?"**

காமராஜ் சிறை சென்றபோது தஞ்சையில் நடந்த மாகாணக் காங்கிரஸ் மாநாட்டிற்கு முத்துரங்க முதலியாரைத் தலைவராக்க வேண்டுமென்று விரும்பினுர்கள்! ஆனல், அதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. உபயதுல்லா மாநாட்டிற்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று முத்துரங்க

முதலியார் விரும்பினுர்......அதையே வலுயுறுத்திச் சொன்னுர்.

**உலகத்திற்கு ஒரு தலை வலி :**

பாரதத்தில் சூழ்நிலை இப்படியிருக்கிறபோது 1914-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதத்தில் உலகப் போர் எழுந்தது. தேசிய உணர்ச்சி கொண்ட மாணவர்கள் அந்தப் போரில் ஈடுபடவில்லை. ஆங்கிலேயருக்கு உதவி செய்ய அவர்கள் மறுத்து விட்டார்கள். பட்டாளத்தில் சேர அழைத்த போது உணர்வு பெற்ற இளைஞர் கூட்டம் 'வேண்டா' என்று ஒதுங்கி வந்துவிட்டது.

**'ஹோம் ரூல் லீக்' :**

பூனுவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தீவிரமான ஒரு திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. பிரிந்து போயிருந்த திலகரும், பெசன்ட் அம்மையாரும் தங்களுக்குள் சமரசம் செய்துகொண்டார்கள். 1916-ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதத்தில் திலகர் 'ஹோம் ரூல் லீக்' என்ற 'சுய அரசு ஸ்தாபனம்' ஒன்றைத் தொடங்கினுர். இந்த 'ஹோம் ரூல் லீக்' தொடங்கப்பட்ட சில நாள்களுக்குள் சென்னை நகரில் அன்னி பெசன்ட் அம்மையார் புதிய 'ஹோம் ரூல் லீக்' ஒன்றைத் தொடங்கினுர். அதுவே 'அகில இந்திய ஹோம் ரூல் லீக்' என்று வழங்கப்பட்டது. பட்டி தொட்டிகளிலெல்லாம் அது தாரகமந்திரம் போலப் பாய்ந்து பரவியது. அந்நாளில் ஹோம் ரூல் லீகில் நேருஜியும் சேர்ந்து தம்முடைய ஒத்துழைப்பை யளித்துப் பணியாற்றினுர்! 'ஒவ்வொரு குடிசை



யிலும் மந்திரச்சொல் போல நுழைந்துவிட்டது ஹோம் ரூல்', என்று காந்திஜியே கூறிப் பெருமை கொண்டார்.

**தேசியப்பற்று :**

உலக மகா யுத்தத்தைப்பற்றிச் செய்திகள் வெளி வந்துகொண்டிருந்தன. போர் மிக மும்மர மாய் நடந்துகொண்டிருந்தது. அச்சமயம், ஹோம் ரூல் பற்றிய நிகழ்ச்சிகளும், செய்திகளும் அடிக்கடி வெளி வந்துகொண்டிருந்தன. வெள்ளை யர்களின் வெறிச் செயலைப் பத்திரிகைகள் வாயி லாகப் படித்து வந்த பக்தவத்சலம் மிகுந்த தேசியப்பற்றும் இந்திய விடுதலை பற்றிய நினைப் பும் தேச பக்தியும் கொண்டார்! எழுச்சிக்கனல் அவர் மனத்தில் மெதுவாக—ஆனுல் உறுதியாக—உருவாகிக்கொண்டு வந்தது!

**ரௌடிச் சட்டம் :**

போர்க்காலத்தில் ஆங்கிலேயருடன் ஒத் துழைக்க மறுத்த இந்திய மக்களுக்கு ஆதிக்க வெறி பிடித்த ஆங்கில அரசு அளித்த பரிசு, 'ரௌல்ட்' சட்டந்தான்! நீதியும், நியாயமும் இந்தச்சட்டத்தின்கீழ்ப் பொசுங்கிச் செத்தன! 'ரௌலட்' சட்டம், ரௌடிச் சட்டமாய்த்தான் இருந்தது! விசாரணை இன்றியே தேசிய வாதி களுக்குப் பெருந் தண்டனைகள் விதிக்கப்பட்டன. குற்றம் செய்தால் விசாரணை என்பது இன்றியமை யாதது. ஆனுல், இந்தக் கொடிய சட்டம், அதற்கு இடமே அளிக்காமல், அடக்குமுறையை மிகப் பயங்கரமாகக் கையாண்டது!

**முதல் வகுப்பு :**

தமிழ் நாட்டில் ஹோம் ரூல் தொண்டில் திரு. வி. க. மிகத் தீவிரமாகக் கலந்துகொண்டார். இவற்றையெல்லாம் அமைதியாய்க் கவனித்துக் கொண்டு பத்திரிகை மூலம் தேச பக்தியையும் தேசக் கனலையும் எழுப்பிக்கொண்டு வந்த இளைஞர் பக்தவத்சலம் 1918-ஆம் ஆண்டு இண்டர் மீடியட்டில் முதல் வகுப்பில் வெற்றி பெற்றார்!

**பிரச்சினையும் மோதலும் :**

அதே ஆண்டில் காஞ்சீபுரத்தில் சென்னை மாநிலக் காங்கிரஸ் மாநாடு நடந்தது! இந்த மாநாட்டில், பல முக்கியப் பிரச்சினைகளைக் குறித்து விவாதங்கள் நடந்தன. முதல் உலக மகாயுத்தத்தில் ஆங்கிலேயர்களுக்கு உதவி புரிய வேண்டுமென்று அன்னிபெசன்ட் அம்மையார் சொன்னார். டாக்டர் சி. பி. ராமசாமி ஐயரும் அவருக்கு ஆதரவாய் இருந்தார். சத்தியமூர்த்தி, ராஜாஜி, கஸ்தூரிரங்க ஐயங்கார் ஆகியோர் போருக்கு உதவி செய்யக் கூடாதென்றனர். இளைஞர்களுக்கிடையில் குறிப்பாகக் கல்லூரி மாணவர்களுக்கிடையில்—சத்தியமூர்த்தி பேராதரவும், பெரு மதிப்பும் அப்போது பெற்றிருந்தார்!

**கவர்ச்சி :**

காஞ்சி மாநாட்டிற்குக் கல்லூரி மாணவரான பக்தவத்சலம் பார்வையாளராய்ப் போயிருந்தார். சேலத்து ராஜாஜியைச் சென்னைக்கு அறிமுகம் செய்த மாநாடு காஞ்சியிலேதான் நடந்தது! ராஜாஜி பேசிய முறையும், அவர் சொன்ன கருத்து



களும், அவரது பேச்சு நடையும், வாதத் திறமையும் பக்தவத்சலத்தின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. அவருடைய பேச்சாற்றலில் இருந்த கவர்ச்சி பக்தவத்சலத்தை இழுத்தது! கவிக்குயில் சரோஜனிதேவியாரின் தலைமையில் நடந்த அந்த மாநாட்டில் கடைசியில் தீவிர வாதமே வெற்றி பெற்றது.

**'சிறையில் தள்ளு' :**

நன்றி கொன்ற ஆங்கிலேயர்கள், விசாரணையின்றி யாரையும் எவரையும் சிறைச்சாலையில் அடைப்பதற்கு 'ரௌலட்' சட்டத்தை அமலாக்கும் பணியை ஒரு கமிட்டி அமைத்து அதனிடம் ஒப்படைத்தார்கள். குறிப்பிட்ட சில இடங்களில் விசாரணை ஏதுமின்றித் தலைவர்களையும் தொண்டர்களையும் சிறையில் அடைக்க மாவட்ட அரசாங்கத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால், சிலவற்றில் விசாரணை நடத்த ஆங்கில அரசு ஒப்புக்கொண்டது! 'ரௌலட் கமிட்டி' மசோதாக்களை 1919-ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதத்தில் வெளியிட்டது!

**வெள்ளம் வருமுன் :**

அந்த மசோதாக்கள் வெளியான உடனே கஸ்தூரிரங்க ஐயங்கார், ராஜாஜி, முத்துரங்க முதலியார் உள்ளிட்ட தேசத் தலைவர்கள் கூடி 'என்ன செய்யலாம்?' என்று ஆலோசனை நடத்தினார்கள். 'ரௌலட்' மசோதா சட்டமாவதற்கு முன்பே, உருப்படியாக ஏதேனும் ஒரு செயல் செய்ய வேண்டுமென்று அவர்கள் மனத்தில் ஒரு

திட்டம் உருவாகியது. தீவிரமான அந்நேரத்தில் **காந்தி அடிகள்** ஓர் அறிக்கை வெளியிட்டார்; 'ரௌலட்' சட்டத்தை எதிர்த்தும் கண்டித்தும் அந்த அறிக்கையில் எழுதியிருந்தார். சென்னையிலிருந்து கஸ்தூரிரங்க ஐயங்காரின் கையெழுத்தோடு காந்தி அடிகட்கு ஓர் அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டது. அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட காந்தி அடிகள், சென்னைக்கு வர இசைவு தெரிவித்தார்.

**உண்ணா நோன்பு :**

கொடூரத்திட்டமான 'ரௌலட்' சட்டத்தை எதிர்த்து எல்லாக் காங்கிரஸ் தொண்டர்களும் தலைவர்களும் 21 நாள்கள் உண்ணா விரதம் இருக்க வேண்டுமென்று காந்திஜி ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

**முழு ஹர்த்தால் :**

முழு ஹர்த்தால் 1919-ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம், 6-ஆம் நாள் இந்தியா முழுவதும் கிராமந் தோறும்—தெருத்தோறும்—வீடுதோறும் ஆரம்பமாகிவிட்டது. தெருக்களில் மக்கள் நடமாட்டமில்லாத அந்த ஹர்த்தாலைக்கண்டு அரசாங்கம் அதிர்ந்தது! ஆங்காங்கு ஊர் வலங்கள் நிகழ்ந்தன. டில்லியில் ஊர் வலத்தை நோக்கிச் சுட்டார்கள்! அதே போல் லாகூரிலும், அமிர்தசரசிலும் அடக்குமுறைகளைக் கையாண்டார்கள் ஆங்கிலேயர்கள்! அதே ஆண்டு ஜாலியன்வாலாபாக் படுகொலையும் நடந்தது. சென்னை, மயிலைக் கபாலி கோயிலில் அந்தப் பயங்கரப் படுகொலையை



எதிர்த்து எல்லாத் தேசிய வாதிகளும் உண்ணா விரதமிருந்தார்கள். பக்தவத்சலமும் உண்ணா நோன்பை மேற்கொண்டார்.

**பாரதியார் வந்தார் :**

படுகொலையை எதிர்த்துத் திலகர் கட்டத்தில் மாபெருங் கண்டனக் கூட்டம் ஒன்று நடந்தது. அப்போதுதான் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரைச் சந்திக்கிற வாய்ப்பு பக்தவத்சலத்திற்கு ஏற்பட்டது. பாரதியின் வீரமிகுந்த தோற்றமும், பேச்சும், பாட்டும் இளைஞர் பக்தவத்சலம் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. அதே போல் அங்குக் குழுமியிருந்த அத்தனை பேருடைய நெஞ்சங்களையும் கவிஞரின் பேச்சுத் திறம் ஆட்சி செய்தது; புதிய ஆற்றலையும் உணர்வையும் உண்டுபண்ணியது.

**புதிய வேகம் :**

ஹர்த்தாலுக்கு நாடெங்கும் நல்ல வெற்றி கிட்டியது. தமிழர்களுக்கு இதில் தனிச்சிறப்புண்டு. ஏதோ ஒரு புதிய சக்தி—அயல் ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டுமென்ற உணர்வு—அதை அடி பணிய வைக்க வேண்டுமென்ற எண்ணம்—எல்லாருக்கும் ஏற்பட்டது. குனிந்த தலைகள் நிமிர்ந்தன! கிழவர்கள் குமரர்களானார்கள்! சோர்ந்த உள்ளங்கள் சுறுசுறுப்படைந்தன.

**கண்டனங்கள் :**

அதே ஆண்டின் இறுதியில் பண்டித மோத்திலால் தலைமையில் அமிர்தசரசில் 34-ஆம் காங்கிரஸ்

கூடி, அப்படுகொலையைக் குறித்துக் கண்டனங்கள் நிறைவேற்றியது. மக்கள் செய்த சிறு குழப்பங்களைக் கண்டித்தும் அது தீர்மானத்தை நிறைவேற்றியது! திலகர் கட்டத்தில் 'ரௌலட்' சட்டத்தையும் டயர் என்பவனது அதிகார வெறிச் செயலையும் எதிர்த்துப் பலமான கண்டனத் தீர்மானங்கள் நிறைவேறின. அக்கட்டத்தில் பங்கு கொண்டவர்களில் இளைஞர் பக்தவத்சலமும் ஒருவர். இயற்கையாகவே மிகுந்த தேச பக்தியும், தேசிய உணர்வும் பெற்றிருந்த பக்தவத்சலத்தின் சிந்தை அந்நிகழ்ச்சியைச் சுற்றி சுற்றி வந்தது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அனைவரும் தமது நினைவையெல்லாம் ஆங்கிலேயர் செய்த அக்கிரமங்களைப்பற்றி எண்ணியெண்ணிக் குமுறுவதிலேயே செலவழித்தனர். குமுறல் ஒரு நாளைக்கு வெடித்துத்தானே ஆகும்?



# 4

## அலைகடலின் நடுவிலே!

**எங்கும் போய்க் கரைகாணா தெறிகடல்வாய் மீண்டேயும்**
**வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே!**

—குலசேகரப் பெருமான்.

பக்தவத்சலம் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே திருமணப் பேச்சுத் தொடங்கியது. பெண் தேடும் படலமும் ஆரம்பமாகிவிட்டது.

**கோபாலசாமி முதலியார்:**

திருக்கோட்டாரம் கோபாலசாமி முதலியார் சென்னையில் பிரபல வழக்கறிஞர்; தீவிரமான

தேசிய வாதி ; சிறந்த காங்கிரஸ் பக்தர். சமீபத்தில் நூறுவது ஆண்டுவிழாக் கொண்டாடிச் சிறப்புச் செய்யப்பட்ட காலஞ்சென்ற திரு. வி. கிருஷ்ணசாமி ஐயரிடம் திரு. கோபாலசாமி முதலியார் ஜூனியராய் இருந்து, மயிலையில் வழக்கறிஞர் தொழிலை நடத்தினார். அக்காலத்தில் அவர் சென்னை மகாஜன சபையிலும், மாகாணக் காங்கிரஸ் கமிட்டியிலும் மிக்க பொறுப்பு வாய்ந்த பதவிகளைப் பெற்றுச் சிறப்புடன் தொண்டாற்றியிருக்கிறார். அந்நாளில், திருவாரூர் கோயிலின் பரம்பரை தருமகர்த்தாவாக விளங்கிய பாவா கிருஷ்ணசாமி முதலியாரின் ஒரே மகளான ராஜம்மாளை மணந்து நல்விருந்தோம்பி நற்செயல் பல புரிந்திருக்கின்றார்.

அந்தக் கோபாலசாமி முதலியாரின் மூத்த மகளே ஞானசுந்தரம் அம்மையார். ஞானசுந்தரத்துடன் பிறந்தவர் முறையே பாலசுப்பிரமணியம், கற்பகம், சீனிவாசன், பட்டம்மாள் என்னும் நால்வராவர். குழந்தைகளைக் கண்டிப்பாக வளர்ப்பதில் கோபாலசாமி முதலியாருக்கு நிகர் கோபாலசாமி முதலியாரே. சிறுவர் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டால், முதலில் வக்கீலாகவும், பிறகு நீதிபதியாகவும் ஆக அவர் தவறுவதேயில்லை. கோபாலசாமி – ராஜம்மாள் தம்பதிகள் குழந்தைகளைக் கண்டிப்பாக வளர்த்தார்கள். அதே சமயத்தில் செல்லமாக வளர்க்கவும் அவர்கள் தவறவில்லை. ஞானசுந்தரத்தைச் சாந்தோமிலுள்ள கான்வென்டில் படிக்க வைத்தார்கள். அந்த நாள்களில் ஆடவருடன் பெண்டிர் பத்து வயதிற்குமேல் சேர்ந்து படிக்க அனுமதிக்கப்படுவதில்லை.



ஞானசுந்தரமும் மற்றக் குழந்தைகளும் பள்ளியில் சேர்ந்து படிக்கலானார்கள். அச்சமயத்தில் ஒரு நாள் ஜோதிடர் ஒருவர் கோபாலசாமி முதலியாரிடம் வந்தார் ; பெண்களின் பிறந்த நாட்குறிப்புகளையெல்லாம் கணக்கிட்டு, எல்லாப் பெண்களும் அரசாளும் பொறுப்பிலிருப்பவர்களையே மணந்துகொள்வார்கள் என்று கூறினார். அதை அச்சமயத்தில் கோபாலசாமி முதலியார் நம்பவில்லை. அந்த ஜோதிடம் பலித்ததையும் அவர் பார்க்கவில்லை.

**இளமைப் பருவத்தில் :**

ஞானசுந்தரத்திற்கு இளமை முதற்கொண்டே பிடிவாத குணம் அதிகம். படிப்பு விஷயத்தில் தம்பி பாலசுப்பிரமணியத்திற்கும் ஞானசுந்தரத்திற்கும் அடிக்கடி பூசல்கள் ஏற்படுவதுண்டு; சில நேரங்களில் கைகலப்பும் ஏற்பட்டுவிடுவதுண்டு. ஆனால், அவர்கள் சீக்கிரமே சமாதானக் கொடி நாட்டி விடுவார்கள். ஞானசுந்தரம் அம்மையார் ஓடுவதிலும் விளையாடுவதிலும் ஆடவர்களை விட எந்த விதத்திலும் குறைந்தவரல்லர். அனைவரும் சரிநிகர் சமானந்தான். அவரும் அவருடைய தோழியரும் மரம் ஏறக்கூட அஞ்சுவதில்லை. பள்ளி செல்வதற்கென்று ஒரு சிறு குதிரை வண்டியும் அவர்கள் வீட்டில் இருந்தது. அது அந்த நாளில் இருந்த 'கவர்னஸ் கார்ட்' போன்றது. அவ்வண்டியின் உள்ளே உட்கார்ந்துகொண்டு அந்தக் குதிரையை ஓட்டுவதில் ஞானசுந்தரத்திற்கு மிக்க விருப்பமுண்டு. அந்த வண்டியில் புத்தகங்களையெல்லாம் போட்டுவிட்டுத் தம் தோழி

யர்களோடு கைகோத்துக்கொண்டு பேசிக் கொண்டே வருவதை ஞானசுந்தரம் பெரிதும் விரும்புவார்.

**பிடிவாதம் :**

ஒரு சமயம் விடுமுறைக்காகத் திருக்கோட் டாரத்திற்கு அனைவரும் வந்திருந்தனர். சகோதரி களும் சகோதரர்களும் ஒன்று சேர்ந்து பக்கத்துக் கிராமங்களில் வசிக்கும் நண்பர்கள் வீட்டிற்குச் செல்வதுண்டு. ஞானசுந்தரம் வயதில்பெரியவரா யிருந்ததால், மற்றவர்களுடன் செல்ல அனுமதிக் கப்படவில்லை. அதனால், அவர் அனைவரும் போன பிறகு ஓர் அறையினுள் சென்று கதவைச் சார்த் தித் தாழ்ப்பாள் போட்டு விட்டார். இதையறிந்த வீட்டிலுள்ளவர்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த் தார்கள். ஊஹூம்! கதவு திறக்கப்படவில்லை. சமையலுக்கு வேண்டிய பொருள்கள் அறையில் இருந்ததால் சமையல்காரர் வேறு துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தார். யார் வந்து என்ன சொல்லிய போதும் கதவைத் திறக்காமலே இருந் தார். கடைசியில் அந்தக் கதவைக் கடப்பாரை கொண்டு இடித்து உடைக்கின்றதொரு நிலைமை ஏற்பட்ட பிறகுதான் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். அந்த அளவுக்கு அவர் பிடி வாதம் நிரம்பியவராய்த் திகழ்ந்தார்; ஒரு முறை வேகமாய் ஓடி வந்து வீட்டு வாயில் நிலையில் தலையை மோதிக்கொண்டு பேரதிர்ச்சியை ஏற் படுத்திவிட்டார்; தலையில் கட்டுக்கட்டிக் கொண்டே தம் தோழிகளோடு ஓடியாடி விளை யாடிக்கொண்டுதானிருந்தார். விளையாடும் நேரம்



போக, இடையிடையே கல்வியும் இசையும் கற்று வரவும் அவர் தவறியதில்லை. தையல் வேலையும் படம் வரையவுங்கூட அவர் கற்றுத் தேர்ச்சி யடைந்தார். பொய் சொல்லும் வழக்கத்தை அறவே வெறுத்த ஞானசுந்தரம், குடி மூழ்கும் சூழ்நிலைகள் ஏற்பட்டாலுங்கூடக் குழம்பிவிடு வாரே தவிரப் பொய் சொல்லமாட்டார். பொய் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால், பேசாமல் மௌனியாகிவிடும் நிலையை அவர் இளமையி லேயே பெற்றிருந்தார்.

**திருமண ஏற்பாடு :**

அந்தச் சமயத்திலேதான் ஞானசுந்தரத்தின் திருமணம் சம்பந்தமான பேச்சு எழும்பியது. வேளாளர் மரபில் அன்று படித்த ஆண் பிள்ளைகள் அதிகம் இல்லை. தந்தையார் தமது குடும்பத்திற் கேற்ற பண்புள்ள ஒருவர் கிடைத்தால் நல்லது என்று எண்ணிக்கொண்டிருந்த பொழுதுதான் பக்தவத்சலத்தின் நினைவு அவருக்கு வந்தது. உடனே கோபாலசாமி முதலியார் தம் நண்பரான எஞ்சினீயர் மாணிக்க நாயக்கரை அழைத்துஆலோ சனை நடத்தினர். சோதிடத்திலும் வல்லவரான மாணிக்க நாயக்கர், ஞானசுந்தரத்தின் பிறந்த வேளைக் குறிப்பிலிருந்து கணக்குகள் போட்டு அவருக்கு வரக்கூடிய கணவர் மிக மேன்மையான அரச ஸ்தானங்களை அடையக்கூடியவராகவே இருப்பார் என்று கூறினர். ஆகையினால், அவ ரது ஆலோசனையின் பேரிலேயே ஞானசுந்தரத் தைப் பக்தவத்சலத்திற்கு மணம் செய்விக்க மிக வும் விரும்பினர் கோபாலசாமி முதலியார்.

இரண்டு குடும்பங்களுக்கிடையில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. இறுதியாக, திருமணத்தை மயிலாப்பூரிலேயே வைத்துக்கொள்வதென்று தீர்மானித்தனர்.

**நெஞ்சம் மறப்பதில்லை :**

மணக்கோலத்தில் இருந்த பக்தவத்சலம் இடையில் கச்சம் கட்டிய மஞ்சள் ஆடையும், சட்டையில்லாத உடலில் மஞ்சள் அங்கவஸ்திரமும், தலையில் மஞ்சள் தலைப்பாகையும் தரித்த தோற்றம், பார்ப்பவர் நெஞ்சைவிட்டு அகலாத காட்சியாகவே இருந்தது.

**திருமணம் :**

திருமணம் நடந்த போது பக்தவத்சலம் சட்டக் கல்லூரியில் மாணவராகவேயிருந்தார். மாணவப் பருவத்திலேயே அவருக்குத் திருமணம் நடந்தது. அவரது திருமணம் 1920-ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதம், 8-ஆம் நாள் நடந்தது. மயிலாப்பூரில் உள்ள கச்சேரி ரோடில் 61-ஆம் எண்ணுள்ள வீட்டிலேயே அந்தத் திருமணம் மிகச் சிறப்பாய் நடந்தது. திருமணத்தை அம்மான்மார்கள் ஏவலப்பரும் முத்துரங்கமும் முன்னின்று நடத்தினார்கள்.

திருமணம் முடிந்ததும் நசரத்துப் பேட்டைக்கு மணமக்களை அழைத்துப் போனார்கள். திருமணம் நடந்த போது, பக்தவத்சலத்திற்கு 23-ஆம் ஆண்டு நிறைந்திருந்தது! ஞானசுந்தரத்திற்கு 18-ஆம் ஆண்டு நிறைந்திருந்தது! அதே ஆண்டில் முத்துரங்க முதலியார் சட்டமன்ற



அரசியல் அரங்கில்......

உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இளைஞர் பக்தவத்சலம் அதற்காகக் கடுமையாய் உழைத்தார்.

**ஒத்துழையாமை :**

1920-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒத்துழையாமை இயக்கம் மிகு விரைவில் ஆரம்பமாகியது. அப்போது நடந்த காங்கிரஸ் மாநாட்டுக்குச் சேலம் சி. விஜயராகவாசாரியார் தலைமை வகித்தார். கல்கத்தாக் காங்கிரஸில் நிறைவேறிய ஒத்துழையாமைத் தீர்மானத்தை உறுதிபடுத்தியது அந்த மாநாடு. பொதுமக்களுக்கிடையில்—குறிப்பாக இளைஞர்களுக்கிடையில்—தேசபக்திக்கனல் எழும்பியது. தேச பக்தி தெய்வபக்தியாக மாறுவதற்கு ஒத்துழையாமை இயக்கம் உதவியாய் இருந்தது. கல்லூரி மாணவர்கள், கலைஞர்கள், தொழில் புரிவோர் ஆகிய அனைவரும் பாரததேவியின் அடிமை விலங்கையகற்றும் பணியில் தீவிரமாய் ஈடுபட்டனர்.

அதன் விளைவாக ஆயிரக்கணக்கானவர்களைச் சிறையில் அடைத்தது ஆங்கில அரசு. இனிச் சிறையிலே இடமில்லை என்று சொல்கிற அளவிற்குத் தேசியவாதிகள் சிரித்துக்கொண்டே சிறை புகுந்தார்கள். காங்கிரஸ் தொண்டர்களும் சிறை புகத் துடித்துக்கொண்ருந்த சமயத்தில் காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தைக் விட்டுவிட்டதாகக் கூறிவிட்டார். அதைக் கேட்ட தேசிய வாதிகள் சோர்வடைந்தார்கள்; என்ன செய்வதென்பது புரியாமல் திகைத்தார்கள்.

**மறியல் :**

அந்த நேரத்தில் அவர்களுக்கோர் எண்ணம் தோன்றியது. காங்கிரஸ் தொண்டர் அனைவரும் ஆங்காங்குச் சோர்வின்றிக் கள்ளுக்கடை மறியலில் பங்கு கொள்வதென்று தீர்மானித்துத் திட்டத்தை அமுலாக்கும் பணியில் இறங்கினர். தேசப்பற்றுடையவர்களை அலுவலகங்களிலேயே போலீசார் கைது செய்தனர். இம்முறையில் பலர் கைதாயினர்! மக்களிடையே ஆங்கில அரசின்மீது வெறுப்பும் கோபமும் ஏற்பட்டன.

**சட்டசபை பிரச்சினை :**

ஒத்துழையாமை இயக்கம் நின்ற உடனே சட்டசபைக்குப் போவதா வேண்டாவா என்ற பிரச்சினை காங்கிரஸ் வாதிகளிடையே எழும்பியது. அச்சமயத்தில் சித்தரஞ்சன் தாஸ், ஜவஹர்லால் நேரு தலைமையில் சுயராச்சியக் கட்சி உருவாகியது! சட்டசபை பகிஷ்காரக் கட்சியினர் சட்டசபைக்குச் செல்வது கூடாதென்று கூறினர். அக்கட்சிக்கு ராஜாஜி தலைவராய் இருந்தார். சட்டசபைக்குப்போக வேண்டுமென்ற இயக்கத்தில் சத்தியமூர்த்தி அதிகப் பங்கு கொண்டார். காங்கிரஸ் கொள்கையை அப்படியே ஆதரிக்கும் காமராஜ் சத்தியமூர்த்தியோடு சேர்ந்து வேலை செய்ய மறுத்துவிட்டார். சட்டசபை வேலைகளைச் சுயராச்சியக் கட்சி மிகக் கூர்மையாகக் கவனித்து வந்தது. காங்கிரஸ் கூட்டாட்சிக்குச் சத்தியமூர்த்தி–சீனிவாச ஐயங்கார், காமராஜ் உள்ளிட்டவர்கள் ஒத்துழைத்தார்கள். சட்டசபை ஒரு



வருடத்தில் பிறந்தது. அதற்கு முன் இன்னும் சில நிகழ்ச்சிகளும் நடந்தேறின.

**தலைமைப் பதவி :**

1920-ஆம் ஆண்டு தொடக்கத்தில் எஸ். சீனிவாச ஐயங்கார், வழக்கறிஞர் பதவியைத் துறந்து, காங்கிரஸில் சேர்ந்தார். திருநெல்வேலியில் நடைபெற்ற தமிழ் மாகாண மாநாட்டில் தலைமைப் பதவி அவருக்கு அளிக்கப்பட்டது. அம்மாநாட்டில் ஒத்துழையாமைத் திட்டத்தை ஏற்று நடத்த வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியது.

**காந்தி அடிகள் வரலாறு :**

காங்கிரஸின் வரலாறு, 1920-ஆம் ஆண்டுக்குப் பிறகு காந்தி அடிகளின் வரலாறாய் மாறியது! சிறையிலோ வெளியிலோ–எங்கிருந்தாலும்–எந்தத் திக்கில் திரும்பினாலும் - காந்திஜியின் பெயரே ஒலித்தது! காங்கிரஸே காந்திஜி என்ற அளவுக்கு வரலாறு உருவாகியது.

**எல்லாம் கதர் மயம் :**

வந்தேமாதரம் என்னும் இதய முழக்கம் நாடு முழுவதும் கேட்கத் தொடங்கியது. ‘மகாத்மா காந்திக்கு ஜே!’ என்னும் கோஷம் மூலை முடுக்குகளில் எல்லாம் கேட்கத் தொடங்கியது. மக்களின் தாரகமந்திரமாய் அவ்வார்த்தைகள் மாறி இந்திர ஜால வித்தைகள் செய்தன! மேற்கு நாடுகளின் மயக்கத்தில் மனத்தைப் பறிகொடுத்தவர்கள்–ஆடம்பர உடைகளிலே மோகம் கொண்டவர்கள்–

ஆரவாரங்களில் பித்துப் பிடித்தவர்கள்—அத்தனை பேரும்—ஒரே நாளில் திருந்திக் கதருடைகளை அணிந்தனர்.

**கல்வி இயக்கம் :**

தேசியக் கல்வி இயக்கம் தோற்றுவிக்கப் பட்டது. தமிழ் நாட்டில் முத்துரங்க முதலியாரும், பக்தவத்சலமும், மற்றவர்களும் அதில் பங்கு கொண்டார்கள் சட்டசபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றன. காந்தி அடிகள் கட்டளைக்கிணங்க, காங்கிரஸார் சட்டசபைகளுக்குப் போவதை எதிர்த்து நின்றனர்! எல்லாருக்கும் வாக்குரிமை இல்லாத காலம் அது! பணம் படைத்தவர் களுக்கே ஆங்கிலேயன் வாக்குரிமை அளித்தான்! 'தேர்தல் மறுப்பியக்கம்' முழு வெற்றி பெற்றது. மூன்றில் ஒரு விழுக்காட்டினரே வாக்குரிமையைப் பயன்படுத்தினர்.

**பொறுப்புள்ள பதவிகள் :**

சென்னையிலும், செங்கற்பட்டிலும் மறுப்புக் கமிட்டி உறுப்பினராய் இருந்த பக்தவத்சலம் மாகாணக் கமிட்டியிலும் பொறுப்புள்ள பதவிகளை ஏற்றிருந்தார்.

ஒத்துழையாமை இயக்கம் சூடு பிடித்திருந்த நேரத்தில் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார் காந்தி அடிகள். சட்டக் கல்லூரியிலும், பிராட்வேயிலும் காந்தி அடிகள் பேசினுர். அப்பேச்சு மாணவர் பக்தவத்சலத்தின் மனதைத் தொட்டது. சித்தரஞ்சன தாஸின் பேச்சு



"விடுதலைப் போருக்குப் புறப்படு" என்று உந்தியது.

**குழம்பிய மனம் :**

1929ல் காந்தி அடிகளை நேரில் பார்த்ததை ஒரு புனித நிகழ்ச்சியாகவே பக்தவத்சலம் கருதினுர். சட்டக் கல்லூரியில் சம்பந்தப்பட்ட ஓர் இடத்தில் ஒரு சிறிய அறையில் காந்தி அடிகள் பேசினுர். இட நெருக்கடியால் பக்தவத்சலம் காந்தி அடிகளின் அருகிலேயே அமர்ந்தார். காந்தி அடிகளின் பேச்சு, பக்தவத்சலத்தை நாட்டுப் பணியில் நாட்டங் கொள்ளச் செய்தது. எப்போதும் அவசரமின்றி நிதானமாகவே யோசிக்கின்ற இயல்பினரான பக்தவத்சலங்கூட காந்தியடிகளின் பேச்சில் மயங் கினுர். சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருந்த பக்தவத்சலம் மிகவும் குழப்பமடைந்தார்; சிந்தனை செய்துகொண்டே வீட்டிற்கு வந்தார். அவரது சிந்தனை மிகத் தீவிரம் பெற்றது... அதன் விளைவு, மனத்திலே ஓயாத குழப்பம். அவர் மனத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை, மயிலாப்பூருக்குச் செல்லும் டிராம் வண்டியை விட்டுச் சிந்தாதிரிப் பேட்டைக்குச் செல்லும் டிராமில் அவரை ஏற்றி விட்டது. காந்தியடிகள் பேச்சு, சில கல்லூரி மாணவர்களின் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

'கல்லூரியை விட்டுவிட்டு உருப்படியாக என்ன செய்துவிடஇயலும்? என்று தீவிரமாகச் சிந்தித்தார் பக்தவத்சலம்; கடைசியில் கல்லூரியை விடுவதில்லை என்ற முடிவுக்கு வந்தார்.

## வழக்கறிஞர் ஆனார் :

அவர் சட்டப்பரீட்சையில் தேறி, அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரிடம் சட்டமன்ற வழக்கறிஞ ராக வேண்டிய முறைப்படி 'அப்பரென்டீஸ்' ஆகி வழக்கறிஞராய் நீதி மன்றத்தில் சேர்ந்தார். ஆனால், கட்சிக்காரர்களின் வழக்கின் விவரங்களைப் படிக்கவும் நீதி மன்றத்திற்குப் போய்ச் சட்டத் தைத் துருவி ஆராய்ந்து பேசவும் பக்தவத்சலத் திற்கு ஓய்வு கிட்டவில்லை. அரசியலில் ஈடுபட்டவர் கள் அக்காலத்திய சூழ்நிலையில் வேறு அலுவல் களில் நாட்டம் செலுத்தியது இல்லை.

## தியாக வேள்வி :

அன்று கோபாலசாமி, முத்துரங்கம், பக்தவத் சலம் போன்ற தலைவர்கள் செய்த அரும்பெருந் தியாக வேள்வியிலே மலர்ந்ததுதான் இன்றைய சுதந்தரம். 1922–ஆம் ஆண்டு-பிராமணரல்லாதார் கட்சி ஓங்கியிருந்த சமயம்-அமைச்சரவையும் அவர் களிடமே ஒப்புவிக்கப் பட்டிருந்தது. அந்தச் சம யத்தில் கட்சியின் தலைவர் **பிட்டி தியாகராய செட்டியார்**, கவர்னரிடம் வாதித்து, படித்துப் பட்டம் பெற்ற பண்புள்ள பிராமணரல்லாதவர்கள் பரீட்சைப் போட்டியில் கலந்துகொள்ளாமலே அரசாங்க நிருவாகத் துறையில் மிக முக்கிய உத்தி யோகத்தைப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண் டார். அரசாங்கம் உடனே தக்கவர்களைத் தேர்ந் தெடுக்கும் பொறுப்பைத் தியாகராய செட்டியா ரிடமே விட்டது. அதனால், பண்பு மிகுந்தவரான பக்தவத்சலத்தை அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்க



வேண்டுமென்ற எண்ணம் தியாகராயருக்கு எழுந் ததில் வியப்பில்லை.

## ஐ. சி. எஸ். வேண்டா :

இந்தச் செய்தியைக் கோபாலசாமி முதலியா ரிடம் செட்டியார் சொன்னார். ஆங்கில அரசின் மீது வெறுப்புக் காரணமாகக் கோபாலசாமிக்கு உயர்பதவியின்மீது விருப்பமில்லை. ஆயினும், மாப் பிள்ளையின் எண்ணம் எப்படியோவென்று நினைத்து, அதற்குரிய நமூனாக்களை பக்தவத்சலத் திடம் அனுப்பினார்.

பண்பட்ட தேசியக் குடும்பத்தில் தோன்றிய பக்தவத்சலம் அதற்கு இசைவாரா? 'வேண்டா' என்று கூறிவிட்டார். மனைவி ஞானசுந்தரமும் அதை ஆதரித்தார்.

## தொண்டுள்ளம் :

சென்னையில் வக்கீல் தொழிலை ஏற்றுக்கொண் டார் பக்தவத்சலம். நான்கு ஆண்டுகள் வக்கீல் தொழிலை நடத்திய அவர், அந்தத் தொழில் பிடிக்காமையால் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து, முக்கிய பங்கு பெற்றார். தொண்டுள்ளமும் அவ ருடன் போட்டியிட்டுக்கொண்டு வளரத் தொடங் கியது. மதுவிலக்குக் கமிட்டிக்கு ராஜாஜி தலை வராயும், பக்தவத்சலம் அமைப்பாளராயும் இருந் தார்கள்.

இதற்கிடையில் இந்தியாவின் பல பாகங்களில் சிறுசிறு குழப்பங்கள் தலை காட்டின. 1921–ஆம் ஆண்டு கேரளத்தில் 'மாப்பிள்ளைமார் கலகம்'

என்று ஒன்று மத வெறியர்களால் தூண்டிவிடப் பட்டது. அதன் விளைவாக ஒத்துழையாமை இயக் கத்தின்மீதும் தேசியத் தொண்டர்கள்மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துப் பல்லா யிரக் கணக்கான மக்கள் கைது செய்யப்பட்டார் கள். கைதிகள் சரியாக நடத்தப்படவில்லை. 1921-ஆம் ஆண்டு காங்கிரஸ் மகாசபை ஆமதா பாதில் நடந்தது. தலைமை தாங்க வந்த சித்தரஞ் சன தாஸ் சிறையில் இருந்தார்.

காந்தி அடிகள் சொற்படி எல்லாரும் நடக்க வேண்டும் என்றும், ஒரு சமயம் அவரைக் கைது செய்துவிட்டால், அவருக்குப் பதிலாக அவரே ஒரு வரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ஞானக்குழந்தை :**

அரசியல் சூழ்நிலை இப்படி இருக்கையில் 1921-ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், 21-ஆம் தேதி ஞானசுந்தரம் அம்மையார் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். பேர்த்தியைக் கண்ட கோபாலசாமி முதலியார், எல்லையில்லாப் பெரு மகிழ்ச்சியடைந்தார். பெண் குழந்தைக் குரிய அத்தனை சிறப்பியல்புகளும் கொண்டு விளங்கியதால், 'கவியரசியார் சரோஜினியைப் போல இக்குழந்தையும் விளங்க வேண்டும்!' என்ற பேராவலினால் பாட்டனார் அக்குழவிக்குச் சரோஜினி என்று பெயர் வைத்தார். தமது பள்ளி வாழ்க்கையில் சரோஜினி மிகவும் அமைதியாய்த் திகழ்ந்தார். அடித்துத் திட்டி வளர்க்க வேண்டிய சூழ்நிலையைப் பெற்றோர்களுக்குக் குழந்தை



சரோஜினி உண்டாக்கவில்லை! 'இவளன்னை என்னோற்றாள் கொல்!' என்று கண்டார் சொல்லக் கூடிய முறையிலேதான் அவர் வளர்ந்தார். சரோஜினிக்குக் கல்வி பயிலும் ஆர்வம் நிரம்பி இருந்தும், பள்ளி சென்று பயிலும் சூழ்நிலையைச் சமூகப் பழக்கவழக்கங்கள் தடுத்து நிறுத்தின. உள்ளத்தில் கல்விமீதிருந்த பேராவல், வெள்ளையர் மீதிருந்த வெறுப்பு, நாட்டின்மேல் இருந்த பற்று, பாரதி பாக்களில் இருந்த ஆர்வம் ஆகிய இவை யாவும் சரோஜினியின் நெஞ்சில் வளர்ந்து கொண்டே வந்தன. அரசியல் சூழ்நிலை அதற்கு ஏற்ற வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொண்டே யிருந்தது.

**சௌரி சௌரா நிகழ்ச்சி :**

ஐக்கிய மாகாணத்தில் நடந்த சௌரி சௌரா சம்பவம், மக்களைப் பலாத்காரத்தில் ஈடுபடுத் தியது. சட்ட மறுப்பு இயக்கம் உடனே கைவிடப் பட்டதோடு சௌரி சௌரா நிகழ்ச்சிக்காக ஐந்து நாள்கள் உண்ணாவிரதத்தைக் கைக்கொண்டார் காந்தி அடிகள். அவரது ஆன்ம சக்தி இந்திய மக்களை உவகைக் கடலில் ஆழ்த்திக்கொண்டே வந்தது!

காந்தி அடிகள் 1922-ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், 10-ஆம் தேதி கைது செய்யப்பட்டார். அதே மாதம் 18-ஆம் தேதி விசாரணை ஆரம்ப மாகியது. காந்தி அடிகள் நீதி மன்றத்தில் நின்று தமது வாக்குமூலத்தைக் கொடுத்தார்: "என் மீது சுமத்திய குற்றங்களை நான் ஒப்புக்கொள் கிறேன். நான் நெருப்புடன் விளையாடுகின்றேன்

என்பது எனக்குத் தெரியும். ஆயினும், எவ்வித மான ஆபத்துக்கும் துணிந்துதான் செயலாற்று கிறேன். விடுதலை எனக்குக் கிட்டினாலும் மறு படியும் அதையேதான் செய்வேன்!'' என்று அஞ்சாமல் ஆணித்தரமாகத் தமது வாக்குமூலத் தில் காந்தி அடிகள் கூறினார். 'நீதிபதி தம் பதவியை ராஜிநாமா செய்ய வேண்டும்; அல்லது கடுமையான தண்டனையை எனக்குத் தர வேண்டும்,' என்றும் காந்தி அடிகள் குறிப்பிட்டார்.

**காக்கிநாடா மாநாடு :**

வருடாந்திர மாநாடு 1923-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், ஆந்திரப் பிரதேசத்திலுள்ள காக்கிநாடாவில் நடைபெற்றது. புகழ்பெற்ற அலி சகோதரர்களுள் ஒருவரான **மௌலானா முகம்மது அலி** தலைமை வகித்தார். பக்தவத்சலம் முதன் முதலில் கலந்துகொண்ட அகில இந்திய காங்கிரஸ் மாநாடு அதுதான். 'ஹிந்துஸ்தான் சேவாதளம்' என்ற அமைப்பு அங்குதான் உருவாகியது. நேருஜியின் ஒத்துழைப்பும் அதற்கு இருந்தது.

**ஆண் குழந்தை :**

இச்சமயத்தில் ஞானசுந்தரம் அம்மையார் அழகான ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத் தார். பாட்டனார் கோபாலசாமி முதலியார் அக் குழந்தைக்கும் சித்தரஞ்சன தாஸின் பெயராகிய 'சித்தரஞ்சன்' என்ற பெயரையே சூட்டி மகிழ்ந் தார். சித்தரஞ்சன் கல்வி கேள்விகளில் சிறந்து வளர்ந்தார்.



**விடுதலையும் அதிர்ச்சியும் :**

ஆறு ஆண்டுகள் தண்டனை பெற்ற காந்திஜி, 1924-ஆம் ஆண்டே பிப்பிரவரியில் விடுதலை பெற்றார். உடல் நலக் குறைவு காரணமாக நிபந்தனையற்ற விடுதலை செய்யப்பட்டார். காந்தி அடிகள் விடுதலை யால் உள்ளம் பூரித்த பக்தவத்சலத்திற்குப் பெரிய அதிர்ச்சியொன்று காத்துக்கொண்டிருந்தது. அதே ஆண்டு செப்டெம்பர் மாதம், 28-ஆம் நாள் தமிழ் நாட்டுக் காங்கிரஸின் செயலாளராய் இருந்த பக்த வத்சலத்தின் மாமனார் கோபாலசாமி முதலியார் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். இதையறிந்த காங்கிரஸ் இயக்கமும் சமுதாயப் பணியும் கண்ணீர் விட்டன!

மாமனாரின் மறைவால் மனம் நொந்த பக்த வத்சலம் ஞானசுந்தரம்மாளின் தம்பி சீனிவாசனை யும் தங்கை பட்டம்மாளையும் தம்மிடமே வைத்துக் கொண்டு படிக்க வைத்தார். மஞ்சளை இழந்த மாமியார் ராஜம்மாள் முகத்தைப் பார்க்கவே மிக வும் பரிதாபமாய் இருந்ததால், சில நாள்கள் அவரை நேரில் சந்தித்துப் பேசாமலே இருந்து விட்டார் பக்தவத்சலம்.

சாதி அடிப்படையில் உத்தியோகம் கேளாமல் தகுதியாலேயே உத்தியோகம் பெற வேண்டும் என்ற எண்ணம் மட்டும் பக்தவத்சலம் உள்ளத் தில் கொழுந்துவிட்ட வண்ணமிருந்தது. சென்னை யில் நடக்கும் கட்சிக் கூட்டங்களில் அவர் அதிகம் பேசுவதில்லை! ஆனால், வெளியூர்களில் நடக்கும் கூட்டங்களிலோ 'ஜமாய்த்து' விடுவார்!

**பெல்காமில் பக்தவத்சலம் :**

மாமனுர் மறைந்த சில மாதங்களுக்குப் பின் பெல்காமில் காங்கிரஸ் மகாசபை நடந்தது. அந்தக் காங்கிரஸிற்கு மகாத்மா காந்தியே தலைமை வகித்தார். அம்மாநாட்டில் கலந்து கொள்ளத் தமிழகத்திலிருந்து தலைவர் பலர் சென்றனர். பக்தவத்சலம் அவர்களும், அந்தத் தலைவர்களுள் ஒருவர்.

**காந்தியடிகள் பேச்சு :**

இந்து முஸ்லீம் ஒற்றுமையைப்பற்றிக் காந்திஜி பேசினர். தீண்டாமை என்பதைத் 'தீண்டாமல்' நாம் ஒழித்துவிட வேண்டுமென்று உறுதியுடன் கூறினர்; கைராட்டையால் உண்டாகிற சிறப்புப் பற்றியும் விளக்கிப் பேசினர்; அம் மாநாட்டிலே தான் காங்கிரஸைச் சுயராச்சியக் கட்சியிடம் ஒப்படைத்தார். தமிழ் நாட்டில் சீனிவாச ஐயங் கார் சுயராச்சியக் கட்சியின் தலைவராய் இருந்தார்.

**பொதுத்தேர்தல் :**

பொதுத்தேர்தல் 1926-ஆம் ஆண்டு நவம்பரில் நடந்தது. பழுத்த நீதிக் கட்சி உறுப்பினர்களை யெல்லாம் சாதாரணக் காங்கிரஸ் ஊழியர்களைக் கொண்டே தோற்கடித்தார் சீனிவாச ஐயங்கார்.

சுயராச்சியக் கட்சியின் சார்பில் பெருவாரி யானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அமைச் சரவை அமைக்கும் பொறுப்பு அவர்களுக்கு இருந்தும் அவர்கள் மறுத்துவிட்டார்கள்; எதிர்க் கட்சியாகவே இருந்து ஆங்கிலேயர்களை ஆட்டிப்



படைத்தார்கள். சத்தியமூர்த்தி அவர்களுள் முக்கியமானவராய் இருந்தார். சுயராச்சியக் கட்சியினர் மத்திய சட்டமன்றத்தில் அதிகமாய் இருந்தனர்; தேசியக் கட்சியை உருவாக்கினர். லஜபதிராய், மாளவியா, சீனிவாச ஐயங்கார் போன்றவர்கள் அங்குச் சிறந்த எதிர்க்கட்சித் தலைவரானுர்கள்.

**கட்சிப் பணி :**

கட்சிப் பணியிலும் ஸ்தல ஸ்தாபன அரசியலி லும் கலந்துகொண்டு அதிகமாக உழைத்தார் பக்தவத்சலம். இதைக்கண்ட சீனிவாச ஐயங் கார் அவரிடம் தனிப்பட்ட அன்பு கொண்டார். வெளியூர்களுக்குப் பிரயாணம் செய்யும்போது பக்தவத்சலமும் அவருடன் போவார். அந்த நேரத்தில் காந்தி மகான் கதர் பிரசாரத்திற்காக நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். காந்தி அடிகள் தமிழ் நாட்டிற்கு வந்த போது, அவருடன் செங்கற்பட்டு மாவட்டம் முழுவதும் பக்தவத்சலம் சுற்றுப்பயணம் செய்தார். கதர் இயக்கத்தில் மிகத் தீவிரமாய் இருந்த பக்தவத்சலத்திற்குக் காந்தி அடிகள் பேரூக்கமளித்தார்.

**நல்ல பலதொண்டு :**

காந்தி அடிகளின் ஆக்கத் திட்டப் பணிகளில் முத்துரங்க முதலியாரோடு பெரும் பங்கேற்றுக் கொண்டார் பக்தவத்சலம்; மாவட்டத் துணைத் தலைவராயும் மகாஜன சபையின் செயலாளராயும், பல ஆண்டுகள் பணி புரிந்தார்.

1927-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் சென்னையில் காங்கிரஸ் மகாசபை நடந்தது. வரவேற்புக் கமிட்டித் தலைவர் சி. என். முத்துரங்க முதலியார் தொடர்பாலும், செயலாளர் பக்தவத்சலத்தின் சிறப்பு மிகுந்த சேவையினாலும் மாநாடு மிகச் சிறப்புற்றிருந்தது. காங்கிரஸ் வரலாற்றில் அம்மாநாடு மிக முக்கியமான இடத்தைப் பெற்றது. அதற்கு முக்கியமான காரணம் பக்தவத்சலத்தின் தளராத உழைப்பும், சோர்விலாத சுறுசுறுப்புமே என்று சொல்லலாம். முத்துரங்க முதலியார் பக்தவத்சலத்திற்குப் பேருதவியாய் இருந்து வழி காட்டினார். இளைஞராய் இருந்த பக்தவத்சலம் நல்ல ஊக்கத்துடன் உழைத்தது அம்மாநாட்டிற்கு வந்திருந்த தலைவர்களின் உள்ளங்களையெல்லாம் கவர்ந்தது.

**பெரிய மாநாடு :**

மாநாட்டிற்கு டாக்டர் எம். ஏ. அன்சாரி தலைமை வகித்தார். ஏராளமான பெருந்தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டார்கள். வெளி நாடு சென்று வந்த நேருஜி, தேசியக் கொடியை உயர்த்தி, 'இக்கொடிக்காக நாம் நம் உயிரைத் தருவோம்!' என்றார்.

கதர்க் கண்காட்சியைக் காந்தி அடிகள் திறந்துவைத்தார். ராஜன் பாபு, ராஜாஜி, ஜம்னுலால் உள்ளிட்ட தலைவர்கள் கலந்துகொண்டார்கள். சுமார் மூவாயிரம் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்குகொண்டார்கள். டாக்டர் அன்சாரி தலைமையில் முத்துரங்க முதலியார் வரவேற்புரை படித்தார்.



முகம்மதலியின் ஹாஸ்யம் – ஜவஹரின் உணர்ச்சி – சரோஜினியின் ஆவேசம் – மாளவியாவின் இலக்கியம் – பட்டாபியின் கணக்கு – சியாமசுந்தர் அனுபவம் – சீனிவாச ஐயங்கார் தீர்மானங்கள் – இவை மாநாட்டின் சிறப்பை உயர்த்தின.

**ஆலோசனைகள் :**

சைமன் கமிஷன் பகிஷ்காரமும், பூரண சுதந்தரமும் பற்றிய தீர்மானங்கள் பலத்த விவாதப் புயல்களுக்கிடையே நிறைவேறின.

அரசியல், பொருளாதாரம், தொழில், கல்வி, கலை, இலக்கியம், சுகாதாரம், சமுதாயச் சீர்திருத்தம் ஆகிய பல துறைகளில் உலகம் எந்த நிலையில் இருக்கிறது – இருக்கவேண்டும் என்பதைச் சென்னைக் காங்கிரஸ் விளக்கியது. அக்காங்கிரஸின் வெற்றிக்காக வரவேற்புக் குழுச்செயலாளர் பக்தவத்சலம் தமிழ் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் நடத்திப் பணவசூல் செய்தார். சென்னையிலே மட்டற்ற சிறப்புடன் காங்கிரஸ் மகாசபை நடந்து முடிந்தது.

**'சனியன்' கமிஷன் :**

மிகப்பெரியதோர் ஆர்ப்பாட்டம் 1928-ஆம் ஆண்டு பிப்பிரவரியில் இந்தியா முழுவதிலும் ஏற்பட்டது. ஆம்! அந்த ஆண்டில் உள்ளேயே புகைந்துகொண்டிருந்த சுதந்தரக்கனல் சுடர் விட்டு எரியத் தொடங்கியது. அந்த ஆண்டில் 'சைமன் கமிஷன்' பம்பாயில் வந்திறங்கியது.

இந்தியர் ஒருவர்கூட அக்கமிஷனில் அங்கம் வகிக்கவில்லை! நம் நாட்டு அரசாங்கத்தைப்பற்றி விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்டது அந்தக் கமிஷன் என்று சொல்லப்பட்டது. ஆனல், இந்தப் பாரத நாட்டைச் சேர்ந்த ஒருவரும் அதில் சேர்க்கப்படவில்லை! அந்தச் செய்கை, இந்தியர் களை அவமதிப்பது போலத் தோன்றியது!

சைமன் கமிஷனைச் 'சனியன் கமிஷன்' என்றுதான் தேசியத் தலைவர்கள் கூறத் தொடங் கினர்கள். சனியன் கமிஷனை எதிர்த்துப் போரிட வலிமையான – உறுதியான – கட்டுப்பாடான எதிர்ப்பு ஒன்று பரவலாய் ஏற்பாடாயிற்று. 'சனியனே! திரும்பிப்போ!' என்ற முழக்கம் நாட்டின் எல்லாத் திக்குகளிலிருந்தும் கேட்கத் தொடங்கியது. சைமன் கமிஷன் போன இட மெல்லாம் அதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் பலத்த ஹர்த்தால் நடந்தேறியது!

**துப்பாக்கி முனை :**

நியாயம் கேட்டனர் இந்தியர்! நீட்டிவிட்டான் துப்பாக்கி முனையை வெள்ளையன்! வெகுண் டெழுந்த மக்கள் கூட்டத்தை – எதைப் பற்றியும் சிந்திக்காமல் – சுட்டு வீழ்த்தினன்! சென்னையி லும், பம்பாயிலும், இன்னும் சில இடங்களிலும் துப்பாக்கி முனை படபடத்தது! லாகூரில் காட்டு மிராண்டித்தனமாக அடக்குமுறை பயன்படுத்தப் பட்டது. பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய், படுமோசமாகத் தாக்கப்பட்டார்! தாக்கப்பட்ட ஒரு வாரத்திலேயே அவர் மாண்டார். எந்த



விதமான குற்றத்தையும் செய்யாமல் இருந்த லஜபதிராயை அடித்துக்கொன்ற பாதகச் செயலை இந்தியா முழுவதும் கண்டித்தது. லஜபதிராயின் சாவு, இந்திய மக்களின் நெஞ்சில் பெருநெருப் பைக் கொட்டியது. இந்தச் செந்தீ – நெருப்பின் ஒளி, சென்னை நகரத்தையும் எட்டிப் பிடித்தது. சென்னை மக்கள் மிகுந்த கொதிப்புடன் இருந் தார்கள்.

**அர்த்தால் :**

சென்னைக்குச் சைமன் கமிஷன் வந்தது! அதன் வருகையை இந்திய மக்கள் – குறிப்பாகத் தமிழ் மக்கள் – வெறுத்தார்கள். 1928-ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதம் ஹர்த்தால் நாள்! நகரில் மோட்டார், டிராம்கள் ஓடவில்லை! கடைகள் மூடப்பட்டன! சைமனுக்குக் கறுப்புக்கொடிகள் காட்டப்பட்டன! போலீஸ்மீது கல் மாரி பொழியப் பட்டது. கூட்டம் கட்டு மீறியது. கோர்ட்டும் சட்டக்கல்லூரியும் மூடப்பட்டன. ஒரு வெள்ளைய னின் மோட்டார் இருவர்மேல் மோதி ஒருவரைக் கொன்றது. ஆத்திரங்கொண்ட மக்கள், அந்த மோட்டாரைச் சுக்குநூருக்கினர்கள்! போலீஸ் பலமிழந்துவிட்டது! மக்களுணர்ச்சி கட்டுக்கடங் காமல் போய்விட்டது. இராணுவம் வந்தது. ஆகாயத்தைப் பார்த்துச் சுட்டது! கூட்டம் கலையவில்லை! "வந்தேமாதரம்! வெள்ளைக் கமிஷனே, வெளியேறு!" என்று முழங்கினர்கள் மக்கள். அந்த முழக்கங்கள் துப்பாக்கிக் குண்டு களுடன் போட்டியிட்டன!

**கண்டனக் கூட்டம் :**

'சைமனே, திரும்பிப்போ! என்று தலைவர் கூறியதும், தடதடவென்று கற்கள் மேடையை நோக்கிப் பறந்தன! கூலிக்குண்டர்களின் கும் மாளம் அடிதடிகள்-செருப்பு மழை-இவற்றுக்கிடை யில் விளக்குகள் நொறுங்கின. மேசை நாற்காலி கள் வங்கக் கடலில் சங்கமமாயின! சத்தியமூர்த்தி யும் மற்றத் தலைவர்களும் பிழைத்ததே அருமை என்ற அளவுக்குக் கலகம் வளர்ந்தது. கூட்டத்தில் இராணுவக் குதிரைகளை விரட்டினர்கள். குதிரைக் குளம்பால் நசுக்குண்டு நலிந்தோர் ஏராளம்!

**அடக்குமுறை :**

அந்த நேரத்தில் லட்சுமணபுரியில் ஆங்கிலே யர்களின் அடக்குமுறைக் கட்டுக் கடங்காமல்போய் விட்டது. அவர்கள் அவிழ்த்து விட்ட அடக்கு முறையால் கொடுங்கோல் கொடுங்கூத்து ஆடி யது! ஒரு பெரிய ஊர்வலம்! அவ்வூர்வலத்தில் கோவிந்த வல்லபபந்துவும் நேருஜியும் முன்னே வந்தார்கள். வெள்ளை இராணுவம் அவர் களைத் கடுமையாய்த் தாக்கியது. ஊர் வலத்தில் வந்தவர்களின் மண்டைகள் நொறுங்கின; இரத்தம் பெருகியது! நேருஜியின் உடலில் காயம் இல்லாத இடமில்லை என்று சொல்கிற அளவுக்கு அடிகள் விழுந்தன. கோவிந்த வல்லபபந்த் மிகக் கடுமை யாகத் தாக்கப்பட்டார். அந்தத் தாக்குதலால் தமது உணர்ச்சியையே அவர் இழந்துவிட வேண்டிய அளவுக்கு இரங்கத்தக்க நிலையை அடைந்துவிட்டார்.



**பக்தவத்சலத்தின் பங்கு :**

ஆத்திரமடைந்த மக்களுடைய எதிர்ப்புக் குரல் ஓங்கத் தொடங்கியது! 'சைமனே, திரும்பிப் போ! என்னும் ஓசையே எங்குப் பார்த்தாலும் எதி ரொலிக்கத் தொடங்கியது! இந்தப் போராட்டத்தில் சத்தியமூர்த்தியோடு பக்தவத்சலமும் பெரும் பங்கு பெற்றிருந்தார்.

1923-1924-ஆம் ஆண்டு ஈ. வே. ராமசாமி தமிழ் நாட்டுக் காங்கிரஸின் தலைவராய் இருந்த போது பக்தவத்சலம் முழுநேரப் பொறுப்பு வாய்ந்த ஊழியராய் இருந்து தேசத்தொண்டாற்றி வந்தார்!

**கல்கத்தாக் காங்கிரஸ் :**

1928-ஆம் ஆண்டு கல்கத்தாவில் காங்கிரஸ் நடந்தது. 1929க்குள் இந்தியாவுக்குச் சுயஆட்சி அளித்தாக வேண்டும் என்றும், இல்லையென்ருல் பிரிட்டிஷ் தளையிலிருந்து பூரண விடுதலை வேண்டு மென்றும் பிரகடனம் செய்வதை ஆதரிப்பதாகக் காந்திஜி எச்சரித்தார். நேருஜியும் சுபாஷ்சந்திர போசும் முழு விடுதலையை வற்புறுத்திப் பேசினர். 'முழு விடுதலையே இந்தியாவின் குறிக்கோள்!' என்ற பிரேரணை உருவாயிற்று! ஆங்கில அரசுக்கு அது ஓர் எச்சரிக்கையாகவே இருந்தது. அந்தக் காங்கிரஸிற்கு மோத்திலால் நேரு தலைமை தாங்கிஞர்.

**முழு விடுதலை :**

1929-ஆம் ஆண்டு லாகூர் காங்கிரஸ் கூடியது. மகாசபைக்கு நேரு தலைமை தாங்கிஞர்:

நேருவின் தலைமையில் நடந்த அந்தக் காங்கிரஸ் மிக்க முக்கியத்துவம் வாய்ந்தது. முழு விடுதலைத் தீர்மானத்தைக் காந்தி அடிகள் முன் மொழிந்து பேசினர்! விடுதலைத் தீர்மானத்தைப்பற்றிய விவாதங்கள் நடந்து முடிவுற்றன! இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு முழு விடுதலை வேண்டுமென்று வாக்களித்தவர்களுள் பக்தவத்சலமும் ஒருவர்.

**போர் முரசு :**

லாகூர் காங்கிரஸ் முடிந்த பிறகு அகில இந்திய காங்கிரஸ் குழுக்கூடி, ஒத்துழையாமை இயக்கம் நடத்துவதற்கான முடிவை நிர்ணயித்தது. மிக்க பலம் வாய்ந்த பிரிட்டிஷ் பேரரசை எதிர்த்துக் காந்தி அடிகள் காட்டிய பாதையில் நடக்கும் காங்கிரஸ் பேரியக்கம், தனது போர் முரசைக் கொட்டியது.

**கொள்கைப்பற்று :**

தேசிய வரலாற்றிலே போராட்டம் என்பது ஒரு பகுதி. அப்போராட்டத்திலே கலந்துகொண்டு செயல் புரிவதற்கேற்ற மனப் பண்பும், திண்மையும், கொள்கைப்பற்றும் கொண்டவர்களாய்த் திகழ்ந்தவர்களுள் பக்தவத்சலம் குறிப்பிடத் தகுந்தவர். வருங்காலத் தமிழ் நாட்டில் அரசியலில் சிறந்த பங்கேற்கும் அறங்காவலராய்த் திரு. பக்தவத்சலம் திகழ்ந்தார்.

**உப்புச் சட்ட மறுப்பு :**

உப்புச் சத்தியாக்கிரகம் 1930-ஆம் ஆண்டு தொடங்கியது. 1930-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே விடுதலைப் பிரகடனமும் கொண்டுவரப் பட்டது. ஜனவரி 26-ஆம் நாளை ஒவ்வோர் ஆண்டும் விடுதலை நாளாகக் கொண்டாட வேண்டுமென்பது முடிவு செய்யப்பட்டது. முதலாவது விடுதலை நாள், அவ்வாண்டு 26-ஆம் நாள் கொண்டாடப் பட்டது. எந்தத் துறையில் சட்ட மறுப்புப் போரைத் தொடங்கலாம் என்பதைச் சிந்தித்து ஆராய்ந்து பார்த்து, காந்தி அடிகள் உப்புச் சட்டத்தை மீறுவதாக முடிவு செய்தார்.

**தண்டி யாத்திரை :**

1930-ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், 12-ஆம் நாள், காந்தியடிகள் எழுபத்திருவர் தொண்டர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து புறப்பட்டு, எழுபத்தெண்மர் தொண்டர்களுடன் இருநூறு மைல்களுக்கு அப்பால் கடற்கரையில் உள்ள தண்டி என்னும் இடத்தை நோக்கிப் புறப்பட்டார். தண்டி யாத்திரையைக் காந்தி அடிகள் கால் நடையாகவே செய்தார். 61-ஆம் வயது நிரம்பிய காந்தி அடிகள் ஒரு நாளைக்குப் பத்து மைல்கள் வீதம் நடந்து, பல வகையான இன்னல்களுக்குப் பிறகு கோலூன்றிய வண்ணம் நடந்துகொண்டே வந்தார். இந்த யாத்திரை 24 நாள்கள் நடந்தன. தண்டியை அடைந்ததும் கடற்கரையில் பிராத்தனை நடந்தது. மகாத்மா காந்தி கடல் நீராடி உப்பைத் தரையிலிருந்து அள்ளி எடுத்தார். ஒரு பிடி உப்பைக் காந்தி அடிகள் அள்ளி எடுத்து ஒரு நொடியில் ஆங்கில அரசைத் திக்குமுக்காட வைத்துவிட்டார். கத்தியின்றி, ரத்தமின்றி, அகிம்சை அறப்போர் இவற்றின் மூலமே நாட்டிற்குச் சுதந்தரம்

வாங்கித் தந்துவிட இயலும் என்பது காந்தி அடிகள் கொள்கை; அதனாலேதான் உப்பெடுத்தல் என்ற அறப்போரின் மூலம் ஊரிலுள்ளோரைச் சிந்திக்க வைத்துவிட்டார்.

**வெள்ளையர் திணறல் :**

ஆங்கில அரசு அந்த அறப்போரைப் பொருட் படுத்தாது புறக்கணித்தது. ஆனால், சில நாள் களுக்குள் அதற்குக் குலை நடுக்கம் கண்டுவிட்டது. 'என்ன செய்வது? எப்படிச் செய்வது? யாரை அடக்குவது? காந்தி அடிகள் என்றதும் இந்த மக்கள் ஏன் இப்படி அடங்குகிறார்கள்?' என்ற கேள்விகளுக்கு விடை தெரியாமல் திணறினார்கள் அந்த வெள்ளையர்கள்.

**தலைவர்கள் :**

நேரு—காந்தி—மோத்திலால் அடுத்தடுத்துக் கைது செய்யப்பட்டார்கள். நாடு முழுவதும் உப்புக் காய்ச்சினார்கள்! தடியடிகள்—கண்ணீர்ப் புகை – கண்டனக் கூட்டங்கள் – இப்படிப் பல நிகழ்ச்சிகள் பாரதமெங்கும் நடந்தன.

**உதயவனம் 'கேம்ப்' :**

இந்த நிலையில் தமிழ் நாட்டின் நிலைமை என்ன? உதயவனத்தில் அச்சமயம் இருபத்தி ரெண்டே வயது நிரம்பிய துர்க்கா பாய் தலைமை யில் உதயவனம் 'கேம்ப்' நடந்தது. அப்பொழுது சென்னையில் கடுநெஞ்சனான கன்னிங்காம் துரை போலீஸ் தலைவனாய் இருந்தான். அந்த நேரத்தில் சட்ட மறுப்பாளர்களில் யாரை அடித்தான் என்று



கூறுவதைவிட யாரை அடிக்காமல் விட்டான் என்று கூறுவதே மிகவும் பொருத்தமானதாகும்!

**ராஜாஜி கைது :**

வேதாரணியத்தில் மக்கள் உப்புச் சட்டத்தை மீறினார்கள். ராஜாஜி உப்பை அள்ளியதும் கைது செய்யப்பட்டார். ஆறு மாதச் சிறைத் தண்டனை அவருக்குக் கிட்டியது. உப்புச் சட்ட மறுப்பில் மிகத் தீவிரமாகப் பங்கு கொண்ட **காமராஜ்** கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் தண்டிக்கப் பட்டார். க. சந்தானம், சர்தார் வேதரத்தினம் முதலியவர்களும் தண்டிக்கப்பட்டார்கள்.

**குண்டு பாய்ந்தது :**

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த சோளிங்க நல்லூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. குண்டுகள் பாய்ந்தன. உப்புச் சட்ட மறுப்பு வெவ்வேறு உருவங்களை எடுத்து, ஆங்கில அரசுக்குத் தீராத் தலை வலியை உண்டாக்கியது. அச்சத்தியாக்கிரகம் வெற்றி பெறத் தம்மால் ஆன எல்லாத் தொண்டுகளையும் செய்து வந்தார் பக்த வத்சலம்!

**சூடுபிடித்தது :**

1930-ஆம் ஆண்டு, மே மாதம், உப்புச் சட்ட மறுப்புச் சூடுபிடித்திருந்த நேரம். துர்க்கா பாயும் மற்றவர்களும் கைதானார்கள். கைதாகிவிட்டால் மற்றக்காரியங்களைக் கவனிக்க முடியாதென்று பக்தவத்சலமும் முத்துரங்கமும் பாஷ்யமும் ஒதுங்கியிருந்ததோடு தேவைப்பட்ட போதெல்லாம்

பணத்தைத் திரட்டிக்கொடுத்து வந்தார்கள். இதில் பெரும்பங்கு பக்தவத்சலத்தினுடையதுதான் என்றே கூறவேண்டும்.

**தொண்டர்கள் :**

அச்சமயம் ஈ. கிருஷ்ண ஐயர் தலைமையில் நூற்றைம்பதின்மருக்கு மேற்பட்ட தொண்டர்கள் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார்கள். தொண்டர்கள், அந்நிய நாட்டுத் துணிகள் புறக்கணிப்பு, கள்ளுக்கடை மறியல், உப்புச் சட்ட மறுப்பு—இப்படித் தொடர்ந்து நடத்திக்கொண்டு வந்தார்கள். உப்புச் சட்ட மறுப்பு இயக்கத்தில் பக்தவத்சலமும், முத்துரங்க முதலியாரும், ரத்தினசாமி முதலியாரும், பாஷ்யமும் தமிழ்நாடு முழுவதும் பல தொண்டர்கள் பின் தொடரச் சுற்றுப்பயணம் செய்தார்கள்.

**மகளிர் பங்கு :**

அச்சமயத்திலேதான் அம்புஜம்மாள், கிருஷ்ணுபாய், நின்கார் போன்றவர்கள் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டார்கள். கள்ளக்குறிச்சி லட்சுமி அம்மாளும் கிருஷ்ண ஐயரும் அமைப்பாளராய் இருந்து மகளிர் சட்ட மறுப்பியக்கத்தை வெற்றியோடு நடத்தினுர்கள். அச்சட்ட மறுப்பில் வெற்றியடைய அரும்பாடு பட்டவர்களுள் திரு. பக்தவத்சலமும் ஒருவர்.

சத்தியமூர்த்தி 1931-ஆம் ஆண்டு சிறைப் பட்டார். கைதுசெய்த பிறகு என்ன நினைத்தார்களோ ஆங்கிலேயர்கள்? உடனே விடுதலையும் செய்துவிட்டார்கள்.



**தடியடி :**

இந்தச் சூழ்நிலையில் சைனு பஜாரில் (இப்போதிருக்கும் ஏஞ்சில் கம்பெனிக்கருகில்) தடியடிப் பிரயோகம் நடந்தது! பேட்டர்ன் என்பவர் பிரபல வக்கீலாய் இருந்த வேங்கடராம சாஸ்திரியைக் காணப் போகும் போது அவர்மீதும் தண்ணீர் அடித்தார்கள். அவரையும் போலீசார் கைது செய்து மறுபடியும் விடுதலை செய்தார்கள். அதில் கலந்துகொண்ட பக்தவத்சலத்திற்கும் முத்துரங்கத்திற்கும் சரியான அடி!

பக்தவத்சலம் அடிபட்ட விவரத்தைக் கேள்வியுற்று ஞானசுந்தரம் அம்மையார் துடித்தார். அந்த நேரத்தில் கோபாலசாமி முதலியாரின் நண்பர் வேங்கடராம சாஸ்திரியாரும் மற்றும் சிலரும் சென்று அம்மையாருக்கு ஆறுதல் கூறியதோடு பொறுமை கொள்ளும்படியும் வேண்டினர். 'இன்று உம் கணவர் உலகத்திற்காகத்தான் சேவை செய்கிருர். நாளை அந்த உலகம் அவர் செய்த சேவைக்கு ஒரு நல்ல பரிசை அளிக்கும். கவலைப்படாதீர்கள்!' என்று வேங்கடராம சாஸ்திரியார் கூறியபோது ஞானசுந்தரத்திற்குப் பெருமை பொங்கியது; பெருமூச்சு அடங்கியது; இன்பக் கண்ணீர் சுரந்தது.

**சிறையிலே நடந்ததென்ன?**

வேலூர்ச் சிறைக்கு பக்தவத்சலத்தோடு முத்துரங்க முதலியாரும், டாக்டர் ராஜன், நாகேஸ்வர ராவ், ராஜாஜி, ஈ. கிருஷ்ணையர் சி. சுப்பிரமணியம் முதலியவர்களும் கைதாக்கப்

பட்டுக் கொண்டுவரப் பட்டார்கள். சிறையில் மாலை வேளைகளில் பாரதி பாடல் வகுப்புகள் நடப்பதுண்டு! அவ்வகுப்புகளில் முத்துரங்கமும், பக்தவத்சலமும் கலந்துகொண்டு பாரதி பாடல் களைப் பாடுவதுண்டு! சிறையில் கவலையின்றி களிப்போடு காலங் கழித்தார்கள். அங்கிருந்த சி. சுப்பிரமணியத்திற்குப் பாட்டென்றால் சிறிதும் பிடிக்காது. உணவு ஏற்பாடுகளை யெல்லாம் பக்தவத்சலமும் கிருஷ்ணையரும் கவனித்துக் கொண்டார்கள். யார் யாருக்கு என்னென்ன வேண்டுமென்று அறிந்து செய்வதில் அவர்களுக் குத் தனித்திறமை இருந்தது. கோபால ரெட்டியும் கிருஷ்ணையரும் சாப்பிடுவதற்கு முன்னர்ப் பிரார்த் தனைக் கீதம் பாடுவார்கள். பாட்டு முடிந்தவுடன் எல்லாரும் கை தட்டுவார்கள். கை தட்டல் சத்தம் கேட்டு மரங்களில் உட்கார்ந்திருக்கும் காக்கை குருவிகள் எழுந்து பறந்து ஓடிவிடும். பிறகு எல்லாரும் சாப்பிடுவர். ராஜாஜி போன்ற தலைவர் கள் அன்று வரிசையில் அமைதியோடு உட்கார்ந்து சாப்பிடுவார்கள்! தம்முடைய வேலைகளை எல்லாம் பக்தவத்சலமும் முத்துரங்கமும் தாமே செய்து கொள்வார்கள். முத்துரங்கத்தின் நாலாயிரப் பிரபந்த ஆராய்ச்சியும், பிரார்த்தனையும் நடவாத நாள் இல்லையென்றுதான் கூறவேண்டும்.

### மகள் பிறந்தாள் :

பக்தவத்சலம் சிறையில் இருக்கும் போது தமக்கொரு மகள் பிறந்திருக்கிறாள் என்று கேள்வி யுற்றார். அவர் உள்ளம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! ஆனாலும், 'பிறந்த குழந்தையைப்



பார்த்து மகிழ இயலவில்லையே!' என்று கவலையும் இருக்கத்தான் செய்தது.

### ருக்குமணி பாட்டி :

அன்று மாலையே ஒரு செய்தி! ஆம்! அந்தத் திடுக்கிடும் செய்தி, வேலூர்ச் சிறையை நோக்கிப் பறந்தது. பேட்டையில் பக்தவத்சலத்தின் பாட்டி ருக்குமணியம்மாள் இறந்து விட்டார். பல நாள் வரை அவருக்கு உடல் நலமில்லை. அந்தச் சமயத்தில் அவர் மைந்தர் முத்துரங்கமும், பேரர் பக்தவத்சலமும் அருகில் இல்லையே என்ற கவலை ருக்குமணியம்மாளுக்குண்டு. இருவரும் சிறைக் குச் சென்றுவிட்ட அதிர்ச்சி வேறு! முதலில் மைந்தரும் பேரரும் காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்றிருப்பதாகத்தான் ருக்குமணியம்மாள் கேட் கின்றபோதெல்லாம் சொல்லி வந்தார்கள். தம் தாயாரை நேரில் பார்த்தால் முத்துரங்கமும் பக்த வத்சலமும் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள் என்ற உண்மையைச் சொல்லவேண்டி வருமே என்று அஞ்சிய மூத்த மைந்தர் ஏவலப்பர் தாயாரின் முன் வருவதற்கு அஞ்சி வாராமலே இருந்து வந்தார். இந்த அதிர்ச்சி வேறு ருக்குமணியம்மாளுக்கு! கடைசியில் இவை யாவும் அந்த அம்மையாரைக் கொண்டு சென்று விட்டன.

### 'பரோல்' :

துயரத்தில் ஆழ்ந்துவிட்ட பக்தவத்சலத்தை யும் முத்துரங்கத்தையும் சிறையிலுள்ள மற்ற நண்பர் அனைவரும் தேற்றியதோடு 'பரோலில்' வீட்டிற்குப் போய் வரும்படியும் ஆலோசனை

கூறினார்கள். தமது இலட்சியத்தைச் சிறிதும் விட்டுக்கொடுக்க விரும்பாத பக்தவத்சலமும் முத்துரங்கமும் வீட்டிற்குச் செல்ல மறுத்து விட்டார்கள். ஆம்! அது அந்நாளைய தேசபக்தர்கள் காட்டிய தியாகம்! ஆனால், முத்துரங்க முதலியாரின் கண்களில் மட்டும் நீர் துளித்தது. தந்தையார் இறந்தபோதும் அவர் அருகில் இல்லை; தாயார் இறந்தபோதும் அருகில் இல்லையே என்பதை எண்ணிய போதுதான் அவருக்கு வேதனை கட்டுக்கடங்காதாயிற்று. இதயம் வெடித்து விடும் போல விம்மியது.

**உயிர் மூச்சு :**

குழந்தை பிறந்தது என்ற போது ஏற்பட்ட மகிழ்ச்சியையும், பாட்டியார் இறந்தார் என்ற போது அடைந்த வேதனையையும் சமமாகவே நினைத்தார் பக்தவத்சலம். அது விதியின் விதி. அன்று! அந்நாளில் தேசபக்தியையும் தியாக உணர்ச்சியையும் காலகம்மியன் பயன்படுத்திய உரைகல்!

**ருக்குமணி :**

பிறந்த குழந்தை பெண்ணாய் இருந்ததாலும், பிறந்தவுடனே பாட்டியார் இறந்துவிட்டதாலும், பாட்டியாரின் பெயரையே அக்குழந்தைக்குச் சூட்ட வேண்டுமென்று சிறையிலேயே பக்தவத்சலம் தீர்மானித்துக் கொண்டார். அவரது முடிவு உடனே உருக் கொண்டது. பேட்டையிலே பக்தவத்சலத்தின் மூன்றும் குழந்தைக்கு ருக்குமணி என்று பெயர் வைத்தார்கள். பக்தவத்சலம் சிறையிலே



இருக்கும் போதே செங்கற்பட்டு மாவட்டக் கழக உறுப்பினராகவும், அடுத்து துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**கூச்சம் :**

பக்தவத்சலமும் முத்துரங்கமும் சிறையில் இருந்து விடுதலையாகி வந்தார்கள். ருக்குமணி வளரத் தொடங்கினாள். தம் குழந்தைகளைப் பெயரிட்டு அழைக்கக்கூட, பக்தவத்சலம் அதிகமாகக் கூசுவார்! தம் மகள் எந்த வகுப்பில் படிக்கிறாள் என்பதைக் கேட்டறியக்கூட அவருக்கு நேரமிருப்பதில்லை! தம் மகள் நன்றாகப் படிக்க வேண்டுமென்ற எண்ணம் மட்டும் அவருக்கு இருந்தது.

**அரசு அடிபணிந்தது :**

இந்த நேரத்தில் அரசியல் நிலைமை என்ன?– நோய்வாய்ப்பட்டிருந்த மோத்திலால் நேரு, செப்டெம்பர், 8–ஆம் தேதி விடுதலை செய்யப்பட்டார். இறுதியில் விட்டுக்கொடுக்கும் நிலைக்கு அரசு வந்தது. 1931–ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 26–ஆம் தேதி காந்தி அடிகளும் மற்றத் தலைவர்களும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார்கள். அதே ஆண்டில் 'காந்தி–இர்வின் உடன்பாடு' ஏற்பட்டது.

**வட்டமேசை :**

இங்கிலாந்து நாட்டில் வட்டமேசை மாநாடு கூடியது. அதில் கலந்துகொள்ளக் காந்தி அடிகளை வருமாறு **இர்வின் பிரபு** அழைப்பொன்று விடுத்தார்! அதையேற்றுக் காந்தி அடிகள்

இங்கிலாந்துக்குச் சென்ருர்! கராச்சிக் காங்கிரஸ் அவரைத் தனிப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தது. காந்தி–இர்வின் ஒப்பந்தத்திற்குப் பிறகு கள்ளுக்கடை மறியல் அனுமதிக்கப்பட்டது. அந்நியநாட்டுத் துணிகளின் பகிஷ்காரம் நல்ல முறையில் நடந்தது. அதில் முக்கியப் பங்கேற்ருர் பக்தவத்சலம்.

**பேரிழப்பு :**

ஒரு பேரிழப்பை இந்திய நாடு 1931–ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதம், ஆறும் நாள் தாங்கிக் கொள்ள வேண்டிய சங்கடமான நிலையை அடைந்தது. இந்திய மக்கள் கண்ணீர் விட்டுக் கதறும் ஒரு சோக நிகழ்ச்சி நடந்துவிட்டது. ஆம்! நோய்வாய்ப்பட்டிருந்த மோத்திலால் நேரு விடுதலை இந்தியாவைக் காணுமலே விழிகளை மூடிவிட்டார்.

**‘ பண்டிதமோ திலால்நேரைப்**
**பறிகொ டுத்தோமே !**
**பறிகொ டுத்தோமே ! - உள்ளம்**
**பரித வித்தோமே !’**

என்று பார்க்குமிடமெங்கும் மக்கள் பாடிக் கண்ணீர் விட்டழுதார்கள். புலம்பியது பாரதம்! தேசியப் பாடகி சுந்தராம்பாள்; தமது இனிய குரலிலே பாடி மக்களைத் தேம்பச் செய்தார்.

**கராச்சிக் காங்கிரஸ் :**

இதற்கிடையில் சென்னையில் சத்தியமூர்த்திக்கும் ராஜாஜிக்கும் பெரிய தகராறு இருந்து வந்தது. கொள்கைகளில் குழப்பங்கள் இருந்தன. அதனுல், மனதில் சிறு சலசலப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அவ்வப்போது அது வெளிப்படவும் செய்தது! இத்தகைய ஒரு குழப்பம் மிகுந்த சூழ்நிலையிலேதான் கராச்சிக் காங்கிரஸ் கூடியது! இந்தக் காங்கிரஸ் இரண்டாவது சுதந்தர தினமாகக் கொண்டாடப்பட்டது.



**இரண்டு பிரிவுகள் :**

கதர் சங்கத்தில் இருந்தவர்களும் கதர் விற்பனை செய்தவர்களும் ‘மாறுதல் விரும்பாத கட்சி’ என்ற பெயரோடு ராஜாஜி பிரிவில் அங்கம் வகித்தார்கள். பணமும் செல்வாக்குமில்லாத ஒரு கூட்டத்திற்குச் ‘சத்தியமூர்த்தி பிரிவு’ என்பது பெயர். ‘பணமில்லாத காரணத்திற்காக சத்திய மூர்த்தி போன்றவர்களைப் புறக்கணித்து விட்டது தவறு’ என்பது தலைவர் சிலர் கருத்து!

**ஆங்கிலேயரின் ஆணவம் :**

காந்தி அடிகள் லண்டனில் இருக்கும் போதே காங்கிரஸ் கட்சியை அழித்துவிடுவதற்கான வழி வகைகளை ஆங்கிலேயர் செய்தனர். 1931–ஆம் ஆண்டு காந்தி அடிகள் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்ள இலண்டனுக்குச் சென்ருர். ஆனுல், பிரிட்டிஷ் அரசுக்கும் இந்திய மக்களுக்கு மிடையே எவ்வித உடன்பாடும் ஏற்படுத்த இயலாமல் காந்தி அடிகள் திரும்பிவிட்டார்.

**மனக்கொதிப்பு :**

சட்ட மறுப்பை ஒழித்துவிட 1932–ஆம் ஆண்டு லார்டு வெலிங்டன் கங்கணம் கட்டிக்

கெண்டான். அவன் கொண்டு வந்த அடக்கு முறைகளால் மக்கள் மனக் கொதிப்படைந் திருந்தார்கள்.

**அரசியல் மாநாடு :**

1932-ஆம் ஆண்டு இயக்கத்திற்கு முன்னர்த் தமிழ் நாட்டு அரசியல் மாநாடு 1931-ல் மதுரையில் நடந்தது. சத்தியமூர்த்திக்கும் ராஜாஜிக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. அச்சமயத்தில் காமராஜும் பக்தவத்சலமும் சத்திய மூர்த்தியை ஆதரித்தனர். சத்தியமூர்த்தி தலைவராக வர வேண்டுமென்று முத்துரங்க முதலியாரும் ஏனையோரும் விரும்பி ஆதரித்தனர். ராஜாஜி அந்நேரத்தில் ருக்குமணி லட்சுமிபதியையே ஆதரித்தார். கடைசியில் சத்தியமூர்த்தியே வெற்றியடைந்து தலைவரானார்.

**காரியதரிசி :**

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் ராஜாஜி சத்திய மூர்த்தி ஆகியோருக்கிடையில் போட்டியும் கருத்து வேற்றுமைகளும் ஏற்படக்கூடாதென்று சிலர் சமரசம் செய்து வைத்தனர். அப்போது டாக்டர் ராஜனும், பக்தவத்சலமும் காரியதரிசிகளாய் இருந்து பணியாற்றினர். 1931 முதல் 1936 வரை தொடர்ந்து பக்தவத்சலம் காரியதரிசியாகவே இருந்தார் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. அச்சமயம் ஒரு முறை மட்டும் உதவித் தலைவராய் இருந்திருக்கிறார். அவர் பதவிகளை விட்டுவிட எவ்வளவோ முயன்றும், பதவிகள் அவரை விட்டு விட மறுத்தன. காங்கிரஸ் செயற்பட இயலாத



நிலையிலும் பக்தவத்சலம் காரியதரிசியாகவே இருந்தார்.

1931-ல் ராஜாஜி தலைவராயும் சத்திய மூர்த்தி துணைத்தலைவராயும் டாக்டர் ராஜனும், பக்தவத்சலமும் காரியதரிசிகளாயும் இருந்தார்கள். ஒரு சமயம் கோவையில் நடந்த தமிழ் நாட்டுக் காங்கிரஸில் பக்தவத்சலத்தைக் காரியதரிசியாக இருக்கும்படி ராஜாஜி சொன்னார். அந்நேரத்தில் பக்தவத்சலத்தை ஈ. கிருஷ்ணையர் எதிர்த்தார். அதையறிந்த பக்தவத்சலம் போட்டியிட மறுத்தார். பக்தவத்சலத்தின் மறுப்பை ராஜாஜி விரும்பாது தேர்தலில் போட்டியிடும்படி வற்புறுத்தினார். தேர்தல் நடந்தது; பக்தவத்சலம் காரியதரிசியானார்.

**1934-திருப்பம் :**

சட்ட மறுப்பு இயக்கத்தைக் காங்கிரஸ் 1934-ஆம் ஆண்டு திரும்பப்பெற்றது. அதனுடைய நோக்கங்கள் வெளி வட்டாரங்களில் பிரதிபலிக்கத் தொடங்கின. பழைய எண்ணம் தளிர் விடத் தொடங்கியது. எல்லாச் சட்ட சபைகளையும் கைப்பற்றக் காங்கிரஸ் விழைந்தது. அந்நேரத்தில் புதிய அரசியல் சட்டம் பாராளுமன்றத்தில் தயாராகிக்கொண்டிருந்தது. அச்சமயத்தில் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரை தலைவராகக் கொண்ட தமிழ் நாட்டு 'சிவிக் போர்ட்டு' தொடங்கப்பட்டது. பக்தவத்சலமும் குமாரசாமி ராஜாவும் அதன் காரியதரிசிகளாய் இருந்து பணி புரிந்தனர். ஜில்லா போர்டுகளைக் கண்காணிக்க ஒரு துணைக்குழுவைக் காங்கிரஸ் கமிட்டி நியமித்

தது. அக்குழுவில் பக்தவத்சலத்தோடு குமார சாமி ராஜாவும் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரும் இருந்தனர்.

**கட்சித் தேர்தல் :**

1935-ஆம் ஆண்டு சத்தியமூர்த்தி தலைவராயும் பக்தவத்சலம் துணைத் தலைவராயும் நியமிக்கப்பட வேண்டும் என்பது முடிவு செய்யப்பட்டது. அச்சமயம் ராஜேந்திரப்பிரசாத் தமிழ் நாட்டுக்கு வருகை புரிந்து தமிழ் நாடு முழுவதும் 21 நாள்கள் சுற்றுப்பயணம் செய்தார். பக்த வத்சலம் அவருடன் சென்று அவர் பேசிய பேச்சு களையெல்லாம் தமிழில் மொழி பெயர்த்தார். 1936-ல் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் குழுவின் தேர்தல் மீண்டும் காரைக்குடியில் நடந்தது. சத்தியமூர்த்தியின் நிருவாகத்தில் வெறுப்பிருந் ததனால் அவர் தலைவராக வரக்கூடும் என்ற நம்பிக்கையை அனைவரும் இழந்திருந்தனர். ஆயினும், மறுபடியும் சத்தியமூர்த்தி தேர்தலில் நின்றார். அவரை எதிர்த்து முத்துரங்க முதலியார் போட்டியிட்டார். ராஜாஜிக்கு முத்துரங்க முதலி யார் மிகவும் வேண்டியவராய் இருந்தாலும், ராஜாஜி அவரை ஆதரியாமல் சத்தியமூர்த்தி யையே ஆதரித்தார். முத்துரங்க முதலியார் வெற்றி பெறும் வாய்ப்பை இழந்துவிட்டதால், சத்தியமூர்த்தி தலைவர் தேர்தலில் வெற்றிபெற்றுத் தலைவரானார். பக்தவத்சலமும் காமராஜும் காரியதரிசிகளானார்கள்.



**நகரசபைத் தேர்தல் :**

நகரசபைத் தேர்தல் 1936-ஆம் ஆண்டு நடை பெற்றது. பக்தவத்சலம் மயிலாப்பூர்த் தொகுதி யில் நகரசபைக்குப் போட்டியிட்டார். பிராமணர் கள் நிரம்பிய அப்பகுதியில் பிராமணரல்லாத ஒரு வர் வெற்றி பெறுவது இயலாத செயல் என்று எல் லாரும் நினைத்தனர். அதோடு அத்தொகுதியில் ஒரு பிராமணர் நின்றால், பெருவாரியான வாக்கு கள் பெற்று வெற்றி பெறலாம் என்று நினைத்த சிலர், பிராமணரான சங்கு கணேசன் என்ப வரைப் பக்தவத்சலத்திற்கு எதிராக நிற்க வைத் தார்கள். தேர்தல் நடந்தது. எல்லாரும் வியக் கும் வகையில் மிகுதியான வாக்குகள் பெற்று, பக்தவத்சலம் வாகை சூடினார். வெற்றி பெற்ற அவர், உதவி மேயர் பதவியேற்றார். உதவி மேயரை நியமிக்கலாம் என்ற புதியதொரு சட்டம் வந்து, முதன்முதலில் நியமிக்கப்பட்டவர் பக்தவத்சலம் அவர்கள் ஆவர். அப்பதவியில் அவர் ஒரு வருடத் திற்குமேல் இருக்கவில்லை. அச்சமயத்தில் ஸ்ரீராமுலு என்பவர் மேயராய் இருந்தார்.

**பதவி வேண்டா :**

காங்கிரஸ் கவுன்சிலர்களுள் சிலர்மீது லஞ்சப் புகார் எழும்பியது. அந்தச் செய்தியைக் கேட்டு வருந்திய பக்தவத்சலம்—நேர்மையும் நீதியும் வேண்டுமென்ற நினைவின் அடிப்படையில்— தகுந்த நடவடிக்கைகள் எடாமல் தாம் தொடர்ந்து பதவியிலிருக்கக்கூடாதென்று நினைத்துத் தமது உதவி மேயர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட் டார். பதவி ஆசை பிடித்தவரல்லர் பக்தவத்சலம்

என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டல்லவா ?

1936-ல் ஜவஹர்லால் தலைமையில் லக்னோவில் காங்கிரஸ் கூட்டம் நடந்தது. ‘சட்டசபைப் பிரவேசம் வேண்டுமா, வேண்டாவா ?’ என்பதைக் குறித்துத் தீவிரமாக விவாதித்தனர். அதே ஆண்டில் நேருஜி தமிழ் நாட்டுக்கு வருகை புரிந்தார். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தேர்தல் அம்முறை வேலூரில் நடந்தது. மீண்டும் சத்தியமூர்த்தியும் முத்துரங்க முதலியாரும் போட்டியிட்டனர். முத்துரங்க முதலியார் தலைவராக்கப்பட்டார். அவர் சத்தியமூர்த்தியைப் பார்லிமென்டு கட்சித் தலைவராக்கினார். இருவரும் சேர்ந்து கட்சிக்காக வேலை செய்தனர்.

**சட்டமன்றத் தேர்தல் :**

சட்டமன்றத் தேர்தல் 1937-ல் நடந்தது. காங்கிரசை எதிர்த்தவர்கள் தேர்தலில் நின்று படுதோல்வியடைந்தார்கள். காங்கிரஸிற்குப் பெருவாரியான வெற்றி கிட்டியது. இத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றி அடைவதற்கு பக்தவத்சலமும் சத்தியமூர்த்தியும் மிகப் பாடுபட்டு உழைத்தார்கள். பக்தவத்சலம் திருவள்ளூர்த் தொகுதியில் தேர்தலில் நின்று பெருவெற்றி பெற்றார்.

**ராஜாஜி அமைச்சர் குழு :**

சட்டசபைக்குத் தலைவராக யார் வருவதென்பதில் காங்கிரஸுக்குள்ளே ஒரு குழப்பம் உண்டாயிற்று. ராஜாஜி தேர்தலில் முதலில் நிற்பதாகவே இல்லை. ஆனால், சத்தியமூர்த்தி தமது பல்கலைக்



கழகத்தொகுதியில் நிற்க விரும்பினார் ; அதை முன்னிட்டு, பக்தவத்சலம் உட்பட நூறு பேரிடத்தில் நியமனப்பத்திரத்தில் கையெழுத்தும் வாங்கினார். கையெழுத்து வாங்கிய சத்தியமூர்த்தி, அபேட்சை மனுவை மட்டும் தாக்கல் செய்யாமல் இருந்தார். அந்தச் சமயத்தில் தேர்தலில் நிற்காத ராஜாஜி, தேர்தலில் நிற்பதாக அறிவித்தார். அதைக் கேள்வியுற்ற சத்தியமூர்த்தி ஒன்றும் பேசாமல் தமது தொகுதியை ராஜாஜிக்காக விட்டுக் கொடுத்தார்.

ராஜாஜி சுலபமாக வெற்றி பெற்று முதல் மந்திரியானார். ராஜாஜி மந்திரி சபை அமைக்கப்பட்டது. தமக்கு நிதி மந்திரி பதவி கிட்டுமென்று எதிர் பார்த்த சத்தியமூர்த்தி, ஏமாற்றமடைந்தார். காங்கிரஸ் உறுப்பினர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு ஒதுங்கியிருந்த டி. எஸ். எஸ். ராஜனை அழைத்து அவருக்குச் சுகாதார மந்திரி பதவியைக் கொடுத்தார் ராஜாஜி.

**பார்லிமெண்டு செகரிட்டரி :**

பக்தவத்சலம் அனுபவமும் வயதும் நிரம்பிய பழுத்த காங்கிரஸ் உறுப்பினராய் இருந்தும், அவரை இளைஞரும் கட்சிக்குப் புதியவருமான கோபால ரெட்டியாருக்குப் பார்லிமென்டு செகரிட்டரியாக ராஜாஜி நியமித்தார். இருபத்தேழு வயது நிரம்பிய இளைஞருக்குத் தம்மை செகரிட்டரியாக நியமித்தார்களே என்று நினைத்து பக்தவத்சலம் பொறுமைப்படவில்லை. அவர் முதலிலே அப் பதவியை விரும்பவில்லை. ராஜாஜியிடம் தமக்குக் கட்சிப் பதவி மட்டும் போதும் என்று பக்தவத்



V2,11,2'57 m67 08314
N64

சலம் கூறிய போது ராஜாஜி ஒப்புக்கொள்ள வில்லை—வற்புறுத்தினர். ஆதலால், பக்தவத்சலம் பார்லிமென்டு செகரிட்டரி பதவியை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

**கட்சிக் கட்டுப்பாடு :**

இவ்வளவு இளமையில் மந்திரியான கோபால ரெட்டியாரிடம் பழுத்த அனுபவசாலி யான பக்தவத்சலம் செகரிட்டரியாய் அமைந்தது குறித்து அவர்கள் நண்பர்கள் கேட்ட போது, 'கட்சிக் கட்டுப்பாட்டிற்குச் சம்மதிக்க வேண்டும்; அடுத்து எந்த வேலை கொடுத்தாலும் செய்கின்ற திறன் நம்மிடமிருக்கிறது என்பதை மற்றவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்'என்பதற்காகவே அதை நான் ஏற்றுக்கொண்டேன்,' என்று அவர் சிரித் துக்கொண்டே பதில் சொன்னர்.

**சரோஜினியின் திருமணம் :**

இந்நிலையில் தம் மகள் சரோஜினியின் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்று பக்தவத்சலம் எண்ணினர். அம்மான்மார்களா கிய ஏவலப்ப முதலியரும், முத்துரங்க முதலியா ரும், உறவினர்களுங்கூட அதை விரும்பினர்கள். ஆதலால், பக்தவத்சலம் 1938-ஆம் ஆண்டு, தம் மகள் சரோஜினியைத் தம் தங்கையின் மைந் தன் வரதப்பனுக்குத் தந்து பெருஞ்சிறப்பாகத் திருமணத்தைப் பேட்டையில் நடத்தினர். திருமண வீட்டில் ஏராளமான ஹரிஜனங்களும் கலந்து கொண்டார்கள் என்பது இங்குக் குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சியாகும். வள்ளல் குடும்பத்தில்



பிறந்த வரதப்பன், விவசாயத்திலே தமது நேரத் தைச் செலவிட்டார். திருமணத்திற்குப் பின்னர் சரோஜினியின் அறிவும் திறனும் ஆற்றலும் புகழேணியில் உயர்ந்துகொண்டே சென்றன. சரோஜினி—வரதப்பன் புகழின் உச்சிக்கு விரைவில் செல்லுவார் என்பதன் குறிப்புகள் தென்படத் தொடங்கின.

அச்சமயத்தில் 1939-ஆம் ஆண்டு இரண்டா வது உலகப்போர் தொடங்கியது. அமைச்சரவை, பதவி துறந்தது. ஊர்தோறும் ஊர் காப்புச் சங் கங்கள் ஏற்படுத்தப்பட்டன. சென்னையில் ஊர் காப்புச் சங்கத்தின் தலைவராக பக்தவத்சலம் இருந்து பணியாற்றினர். ஆங்கில அரசப் பிரதி நிதி இந்திய விடுதலை வேண்டுதலுக்குச் செவி சாய்க்காத காரணத்தால், தனிச்சட்ட மறுப்புச் செய்வதென்று வார்தாவில் கூடிய காங்கிரஸ் செயற்குழு முடிவு செய்தது. முதல் அறப்போர் வீரராய் விநோபா பாவேயைத் தேர்ந்தெடுத் தார்கள்.

**கட்சித் தேர்தல் :**

1940-ஆம் ஆண்டிலேயே தமிழ் நாட்டுக் காங் கிரஸ் குழுவின் தலைவர் தேர்தலும் நடந்தது. ராஜாஜி தமக்கு வேண்டிய ஒருவரைத் தேர்ந் தெடுக்க விரும்பினர். சத்தியமூர்த்தி கோஷ்டி யைச் சேர்ந்த காமராஜ் திரு. சி. பி. சுப்பையாவை விரும்பவில்லை. காமராஜ் கருத்தைப் பக்தவத்சலம் ராஜாஜியிடம் கூறினர். அவர் பேச்சுப் பலிக்க வில்லை. அதையறிந்த சத்தியமூர்த்தி, 'காமராஜ் தேர்தலில் நிற்கட்டும்' என்றார். அதன் விளை

வாகக் காமராஜைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்த னர். முத்துரங்க முதலியார், அவினுசிலிங்கம், ராமசாமி ரெட்டியார் ஆகியோர் தம்முள் ஒருவரை ராஜாஜி ஆதரிப்பார் என்று எதிர்பார்த்தனர். ஆனால், எவரையும் ஆதரிக்க ராஜாஜிக்கு விருப்ப மில்லை. பின்னர் எண்ணிப்பார்த்து முடிவு செய்வ தாகச் சொன்ன ராஜாஜி, உள்ளூறத் தமக்கு நம்பிக்கையான ஒருவர் வருதல் நல்லது என்று நினைத்தார்.

எதிர் பாராத முறையில் சத்தியமூர்த்தியின் வீட்டிற்கு ராஜாஜி வந்தார். சத்தியமூர்த்தி திரு. சி. பி. சுப்பையாவைத் தலைவராக்குவது நல்லது என்று கூறினர். அவினுசிலிங்கம் வந்து விடக்கூடாதென்பது திரு. சத்தியமூர்த்தியின் எண்ணம். திரு. முத்துரங்க முதலியாரோ, திரு. ராமசாமி ரெட்டியாரோ வரக்கூடாதென் பது ராஜாஜியின் எண்ணம். இந்தச் சிக்கலான சூழ்நிலையில் சத்தியமூர்த்தி சுப்பையாவை ஆதரிக்க இசைந்தார். சத்தியமூர்த்தி இசைந் தது காமராஜுக்குத் தெரியாது. காமராஜ் தமது ஆதரவுக்காகவே முனைந்து வேலை செய்து வந்தார். ராஜாஜியின் யோசனையைக் காமராஜுக்குச் சொல்வதற்காக அழைப்பொன்றை அனுப்பினர் சத்தியமூர்த்தி. அப்போது சத்தியமூர்த்தி சென்னை மாநகர் மன்றத் தலைவராய் இருந்தார். காமராஜையும் மற்றவர்களையும் கூட்டி வைத்து அவர் முனைப்பாக ஆலோசனை நடத்தினர். அமைதியாகக் கடைசி வரையில் கேட்டுக்கொண் டிருந்த காமராஜ், இறுதியில் தமது கருத்தைச் சொல்லும்போது எனக்குச் சம்மதமில்லை, என்று



தெரிவித்தார். சுப்பையாவின்மீது தனிப்பட்ட முறையில் தமக்கு வெறுப்பில்லை என்றும், காங் கிரஸ் உறுப்பினர் அல்லாத ஒருவர் திடீரெனத் தலைவராவதைத் தாம் விரும்பவில்லையென்றும் திரு வாளர்கள் குமாரசாமி ராஜா, முனிசாமிப் பிள்ளை, ருக்குமணி லட்சுமிபதி ஆகியவர்களுள் எவரை யேனும் ராஜாஜி ஒப்புக்கொண்டால் அவரைத்தாம் ஆதரிப்பதாகவும் தேர்தலிலிருந்துகூடத் தாம் வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும் காமராஜ் கூறி னர்.

சத்தியமூர்த்தியின் நிலைமை தர்மசங்கடமாகி விட்டது. ஒரு பக்கம் ராஜாஜியின் குத்தல்-இன் னொரு பக்கம் காமராஜின் நியாயங் கலந்த ஆணித் தரமான பேச்சு-ராஜாஜியும் சத்தியமூர்த்தியும் ஆழ்ந்து சிந்தித்தார்கள். குழப்பமான இந்த நிலை யில் தலைவர் தேர்தல் நடந்தது. காமராஜ் பெய ரைத் திருவண்ணுமலை அண்ணுமலைப்பிள்ளை முன் மொழிந்தார். சுப்பையாவின் பெயரை முத்துரங்க முதலியார் முன் மொழிந்தார். வெற்றி தோல்வி குறித்து ஒன்றுமே சொல்ல இயலாத நிலை ஏற்பட்டு விட்டது. கடைசியில் காமராஜுக்கு 103 வாக்கு களும், சுப்பையாவுக்கு 100 வாக்குகளும் கிடைத் தன. அந்த மிகுதியான மூன்று வாக்குகளே இன்றைய தமிழகத்தின் பெருமையை உயர்த்தி யிருக்கின்றன! அவைகளே தமிழகத்தைச் சுபிட்சப் பாதையில் அழைத்துச்செல்ல வழி வகை செய்தன! அரசியலில் நீதிக்கும் நேர்மைக்கும் இடம் கிடைக்கச் செய்தன! மொத்தத்தில் அறம் வெற்றி பெற்றது. 1940-ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதம், 15-ஆம் நாள் கிட்டிய இந்த வெற்றி,

தொடர்ந்து காமராஜுக்குப் பக்க பலமாய்த் திகழ்ந்தது. இந்தச் சமயத்தில் பக்தவத்சலம் சட்டமன்றக் கட்சிக்கு அமைப்பாளராய் இருந்து பணியாற்றி வந்தார்.

**திருச்சிச் சிறையில் :**

தமிழ் நாட்டில் திருவள்ளூரில் பக்தவத்சலம் தனி நபர் சட்ட மறுப்புச் செய்து சிறைப்பட்டார். அதே சமயம் நேருஜி வினோபாஜி போன்ற தலைவர் அனைவரும் ஒருங்கு திரண்டு ஒரே நோக்கத்துடன் சிறைக்குப் போயினர். பக்தவத்சலத்திற்கு ரூ. 250 அபராதமும் 9 மாதச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டன. தியாக நெஞ்சமும், குலையாத உறுதியும் படைத்த பக்தவத்சலம் அபராதம் கட்ட மறுத்ததோடு சிறைத்தண்டனையையும் ஏற்றுக் கொண்டார். ஆணவச்சர்க்கார் பக்தவத்சலத்தின் காரை ஏலம் போட்டுப்பணத்தை எடுத்துக்கொண்டது. சிறைசெய்யப்பட்ட பக்தவத்சலம் முதலில் வேலூரிலும் அடுத்துத் திருச்சிச் சிறையிலும் இருந்தார்; திருச்சிச் சிறையில் கொடுமை மிகுந்த 'ஜலமண்டலி பிளாக்கிலிருந்து வருந்தினார். 'ஜலமண்டலி' என்னும் ஒரு வித நச்சுப் பூச்சி அங்கு அதிகமாய் இருந்ததால், அப்பகுதிக்கு 'ஜலமண்டலி பிளாக்' என்று பெயர் சூட்டியிருந்தனர். ராஜாஜி, அனந்தசயனம், வி. வி. கிரி. அவினாசிலிங்கம், டாக்டர் சுப்பராயன், கல்கி கிருஷ்ணமூர்த்தி, வரதாசாரி போன்றவரும் அங்கு இருந்தனர். சிறையில் பொழுது போக்குக்காக வரதாசாரியிடம் அனைவரும் சங்கீதம் கற்றனர். முதலில் 'குவாரன்டைன்' என்னும் பயங்கர அறையில்



தேசியக் கைதிகளை அடைத்து வைத்தார்கள். சிறையில் ராஜாஜி இருந்த பிளாக்கை, 'சி. ஆர். பிளாக்' என்று எல்லாரும் வழங்கினர். அங்கு மாலை வேளைகளில் நடக்கும் தமிழ் வகுப்புக்குப் பக்தவத்சலம் தவறாமல் போவார். அங்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தோடு வால்மீகி ராமாயணத்தையும் படித்தார். அந்நேரத்தில் முத்துரங்க முதலியார் பெல்லாரிச் சிறையில் இருந்தார். திருச்சிச் சிறையில் பொருந்தலைவர்களெனக் கருதப்பட்டவர்களெல்லாம் மிக எளியவர்களாகக் காட்சியளித்தார்கள்; இன்னல்களையெல்லாம் கன்னல்களாக்கி மகிழ்ந்தார்கள்.

**ராஜாஜியின் பிரிவினை :**

ராஜாஜி பாக்கிஸ்தான் பிரிவினைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். ராஜாஜி பழுத்த அனுபவசாலி—நல்ல அரசியல் ஞானி—ஆயினும், அவர் கொண்டு வந்ததாயிற்றே என்ற எண்ணமில்லாமல், 'அது தவறு' என்று துணிவுடன் எதிர்த்தார் பக்தவத்சலம். சிறந்த வைணவர் என்ற ஒரே காரணத்திற்காக ராஜாஜியைக் காண்கின்ற போதெல்லாம் முத்துரங்க முதலியார் தலை வணங்குவது உண்டு. அத்தகைய மதிப்பு ராஜாஜியினிடத்தில் முத்துரங்க முதலியாருக்கு இருந்துங்கூட, ராஜாஜி பாக்கிஸ்தான் பிரிவினையை ஆதரித்துப் பேசிய போது மிகக்கடுமையாக எதிர்த்தார். ஓ. பி. ராமசாமி ரெட்டியாரும் அவினாசிலிங்கமும் ராஜாஜியின் கருத்தை மறுத்தார்கள். பக்தவத்சலமும் அத்தீர்மானத்தைத் தீவிரமாகக் கண்டித்துப் பேசினார். ராஜாஜியின்

தீர்மானம் தோல்வியடைந்தது. ஆத்திரங்கொண்ட ராஜாஜி, காரியக் கமிட்டியிலிருந்தும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலிருந்தும் ராஜிநாமாச் செய்தார்; தென்னாட்டைப் பிரிக்கப்போவதாயும் பயமுறுத்தினார்.

**கல்லுப்பட்டியில் :**

காங்கிரஸ் இயக்கம் சட்ட விரோதமானது என்று சொல்லப்பட்ட போது முத்துரங்க முதலியார் தலைமையில் காங்கிரஸ்காரர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அந்தச் சங்கத்தின் சார்பில் கல்லுப்பட்டியில் காந்தி நிகேதனில் ஒரு மாதம் நிர்மாண ஊழியர் முகாம் நடந்தது. அது சிறப்பாக நடக்கக் காரணமாயிருந்தவர் பக்தவத்சலம் ஆவர். அவருடன் இருந்தவர்கள் கோ. வேங்கடாசலபதி, கல்லுப்பட்டிக் குருசாமி நாடார் என்பவர்கள். முகாமிற்குப் பிறகு காந்தியடிகளைச் சந்தித்து நிர்மாண வேலைகளைப்பற்றிப் பேச ஒரு தூதுக்குழு சென்றது. அத்தூதுக் குழுவுக்குத் தலைமை வகித்தார் பக்தவத்சலம்.

**பட்டேலும் பக்தவத்சலமும் :**

பக்தவத்சலம் மயிலாப்பூர் வடக்கு மாட வீதியில் இருந்த போது சர்தார்பட்டேல் அவரோடு தங்கி 3 நாள்கள் அவருடைய விருந்தினராய் இருந்தார். அப்போது சத்தியமூர்த்திக்கு அடுத்தபடியாகப் பக்தவத்சலமே நன்கு மொழி பெயர்த்துப் பேசக்கூடிய ஆற்றல் பெற்றவர் என்ற நற்பெயரையும் பெற்றார். ராஜாஜி ஆகஸ்டுப்



போராட்டத்தை எதிர்த்தார். அதற்காகப் பெரியதோர் எதிர்ப்பு அவருக்கு இருந்தது. யாரும் எதிர்பாராத வகையில் ராஜாஜி திருச்செங்கோட்டிலிருந்து தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக ஒரு செய்தி வந்தது. ‘தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்குத் தெரியாமல் திருச்செங்கோட்டுத் தேர்தல் எப்போது நடந்தது? எப்படி நடந்தது?’ என்பதே வியப்புக்குரியதாய் இருந்தது. அந்தத் தேர்தல் செல்லாது என்பதை ஓர் அறிக்கை மூலம் தெரிவித்தார் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவராய் இருந்த காமராஜ். திருச்செங்கோட்டுத் தேர்தல் புகைந்து கொண்டிருந்த நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போன்றிருந்தது!

**புதிய முடிவு :**

ராஜாஜியைக் காங்கிரஸில் சேர்க்கக்கூடாதென்று காங்கிரஸ்காரர்களே கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். அங்கங்குக் கிளர்ச்சிகளுக்குப் பின் மறுபடியும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் குழுக் கூட்டம் கூட்டப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அக்குழுக் கூட்டத்தில் சட்ட மன்றத்திற்கு வேண்டிய அங்கத்தினர் எண்பதின்மரையும் தேர்ந்தெடுக்கும் சட்டமன்றக் குழு ஒன்றும் நிறுவப்பட்டது. அச்சமயம் மீண்டும் காமராஜரே தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளப் பட்டார். ராஜாஜியின் எதிர்ப்புக் கோஷ்டி தீவிரமாக இதை எதிர்த்து வேலை செய்யத் தொடங்கியது!

**'வெள்ளேயனே வெளியேறு' :**

இந்த இரண்டு கோஷ்டிகள் உருவாவதற்கு முன் 1942-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 8-ஆம் தேதி, காங்கிரஸ் மகாசபை பம்பாயில் நடந்தது. **அபுல் கலாம் ஆசாத்** தலைமை வகித்தார். 'குவிட் இந்தியா'ப் போராட்டம் உருவெடுத்தது. பொங்கிக் கொண்டிருந்த மக்கள் உள்ளங்கள் எத்தனை நாள் களுக்கு அடங்கி இருக்கும். குமுறும் எரிமலை ஒரு நாள் வெடித்துக் கிளம்பத்தானே செய்யும்! நாடு முழுவதும் கிளர்ச்சிகளின் வேகம், காந்திஜியின் 'செய்; அல்லது செத்து மடி!' என்ற நிலைக்குப் பரிணமித்தது. 'வெள்ளையனே, வெளியேறு!' என்ற முழக்கத்தின் பேரொலியின் முன் கத்தும் கடலும் அமைதியுற்று அடங்கியது. அஞ்சிய வர்கள்—அடங்கியவர்கள்—வணங்கியவர்கள்—கோழைகள்—கூலிகள் அவ்வளவு பேருங்கூடப் போராட்டத் தீயில் ஓடோடி வந்து குதித்தார்கள்.

**ஆகஸ்டு—9 :**

ஆகஸ்டு மாதம் 9-ஆம் தேதிக் காலையில் காந்தி அடிகளைக் கைது செய்தார்கள். நேருஜி உட்படத் தலைவர் பலர் கைதாயினர். அந்த நேரத்தில் காமராஜ், முத்துரங்க முதலியார், பக்தவத்சலம் ஆகியோரும் எந்த நேரத்திலும் கைது செய்யப் படலாம் என்ற முடிவுக்கு வந்தனர். 10-ஆம் தேதிக் காலையில் காந்திஜி ஊழியர்கள் கூட்டத்தில் பேசுவதாய் இருந்தது. அதற்குள் அவரைக் கைது செய்து, எங்கேயோ கொண்டு சென்றுர்கள். விரையில் கைது செய்யப்படுவோம் என்ற எண்ணத்துடன் பம்பாயிலிருந்து தகுந்த ஏற்பாட் டுடன் சென்னைக்குத் திரும்பிய பக்தவத்சலம், முத்துரங்கம் ஆகியோரைச் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் போலீசார் கைது செய்தனர்.

இரயிலில் வரும்போதே, 'நாம் சிறைக்குச் சென்ருல், வெளியில் இயக்கம் வெற்றிகரமாக நடக்கவேண்டுமே!' என்று எண்ணிக்கொண்டே வந்தார் பக்தவத்சலம். அரக்கோணத்திலேயே காமராஜ் இறங்கிவிட்டதால், அவர் கைது செய்யப் படவில்லை. மற்றக் காரியங்களும் ஏற்பாடுகளும் இருந்தமையினுல் சீக்கிரத்தில் காமராஜ் சிறைக் குச் செல்ல விரும்பவில்லை.

பக்தவத்சலம், முத்துரங்கம் உள்ளிட்ட 30 பேரைக் கைது செய்து அன்றிரவு முழுவதும் நுங்கம்பாக்கத்தில் 'லாக்கப்'பில் வைத்திருந்தார் கள். அந்நேரத்தில்கூட ராஜாஜி கைது செய்யப் படவில்லை.

சென்னையிலிருந்து வேலூர்ச் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டவர்களை அங்கிருந்து சில நாள்களில் சென்னை மத்திய சிறைக்கே கொண்டு வந்தார்கள். மத்திய சிறையில் ஓர் இரவு மட்டும் வைத்திருந்து, மறுநாட் காலையில் அனைவரையும் இரயில் மூலம் நாகபுரிக்குக் கொண்டுசென்றுர்கள். நாகபுரியிலும் சிறை வைக்காமல், அங்கிருந்து படுமோசமான இரண்டு போலீஸ் வண்டிகளில் அனைவரையும் ஏற்றி அமராவதிக்குக் கொண்டு வந்தார்கள்.

**அமராவதிச் சிறை :**

வழியில் வரும்போது எல்லாருக்கும் பசி வேறு காதுகளை அடைத்தது. பேச முடியாத நிலையும்

தண்ணீர் வேட்கையும் துணை நின்றன. கடைசி யாக அமராவதிக்கு வந்ததும் கைதிகள் சிறிது நிம்மதி பெற்ருர்கள். அந்த நிம்மதி நெடுநேரம் நிலைக்கவில்லை. தலைவர் அனைவரையும் பயங்கர மான ஒரு மாட்டுக்கொட்டகையில் இறக்கி அங்கேயே தங்க வேண்டும் என்று கூறினுர்கள். வெளியிலே தலை காட்ட இயலாத அளவுக்கு மழை யும், கொடூரமான பசியும் தீராத தலை வலியும் ஏற்பட்டன. ஒன்றும் புரியாமல் தேசபக்தர் அனைவரும் திணறினர். பசி எடுக்கும்போ தெல்லாம் ‘வந்தே மாதரம்! மகாத்மா காந்திக்கு ஜே! பாரத மாதாவுக்கு ஜே!’ என்று முழக்க மிடுவதன் மூலம் அவர்கள் பசியைப் போக்கிக் கொண்டார்கள்.

**இரண்டரை ஆண்டுகள் :**

இரண்டரை ஆண்டுகள் கடுமையான குளிர்— மிகக் கடுமையான வெயில்! அங்குள்ளவர்களுக் குத் தமிழ் தெரியாது; இவர்களுக்கு மராத்தி புரியாது. ஆனுல், எல்லாருக்கும் புரிந்தது ‘வந்தே மாதரம்! காந்திஜிக்கு ஜே!’ என்ற வார்த்தைகள். ஸ்காட்டு என்ற ஆங்கிலேயன் கைதிகளை நல்ல முறையில் நடத்தவில்லை. சுகாதாரம் மிகவும் சீர் கெட்டு இருந்தது. வீட்டிற் குத் தமிழில் கடிதங்கள் வரையத் தடை – ஆங்கிலத் திலேதான் கடிதங்கள் வரையவேண்டும். அக்கடி தங்களும் தணிக்கை செய்யப்படும், இரண்டரை ஆண்டுகளும் பக்தவத்சலமும் மற்றத் தலைவர் களும் விசாரணையின்றிப் பாதுகாப்புக் கைதி களாகவே இருந்தார்கள். சிறையில் வால்மீகி



ராமாயணம், பாகவதம், பகவத் கீதை போன்ற வற்றையும் எதையும் பொறுத்துக்கொள்ளும் மனப் பக்குவத்தையும் பக்தவத்சலம் கற்றுணர்ந்தடங்கி ஞர். அதிகமான வெப்பத்தைத் தாங்கிக்கொள்ள இயலாத பக்தவத்சலம், வெப்பத்திலும் குளிரிலும் மிக அதிகமாய் வருந்திஞர். அந்த வருத்தம் தேச் விடுதலையை நினைக்கும் போது பறந்து விட்டது. 1944-ஆம் ஆண்டு, மே மாதம், 5-ஆம் தேதி காந்திஜி விடுதலை செய்யப்பட்டார். அதே ஆண்டில் பக்தவத்சலமும் விடுதலை செய்யப் பட்டார்.

# 5

## கரையிலே கண்ட காட்சிகள்

'கொள்ளை எரி அரசியலில் குதித்து நின்றேன் ஐயா!'

—திரு. வி. க.

தமிழக அரசியல் வரலாற்றில், ஆகஸ்டுப் புரட்சிக்குப் பின்பு, கோஷ்டிகள் ஏற்படத் தொடங்கின! நெடு நாளைக்கு முன்பே புகைந்து கொண்டிருந்த இந்த உணர்ச்சி, புரட்சிக்குப் பின்பு, முழு உருப்பெற்று வெளிப்படத் தொடங்கியது! 1945-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், 31-ஆந் தேதி கூடிய கூட்டத்தில் இந்த இரு கோஷ்டிகளின் மோதல் பலமாய் இருந்தது! காமராஜ் வரக்கூடாதென்று ராஜாஜி கோஷ்டி வேலை செய்யத் தொடங்கியது! அதே போல, மிகத் தீவிரமாக ராஜாஜி

எதிர்ப்புக் கோஷ்டி தன் வேலைகளைத் தொடங்கியது! ராஜாஜிக்கு எதிராக உள்ள நிலைமைகளை ஆராயத் தமிழ்நாட்டு ஊழியர்களைக் கொண்ட மாநாடு ஒன்றைத் திருப்பரங்குன்றத்தில் கூட்ட முடிவு செய்யப்பட்டது—முடிவு வெற்றி பெற்றது! ராஜாஜியை மீண்டும் கட்சியில் சேர்ப்பதில்லை என்ற புதிய முடிவு அங்கு உருவாகியது! சிதம்பர பாரதி என்பவர் அந்த மாநாடு நல்ல முறையில் நடக்க, அரும்பாடு பட்டார். மதுரைக்கு வந்த ராஜாஜி, தமக்கு எந்தவிதத்திலும் சூழ்நிலை நன்றாக அமையவில்லை என்பதை மிகு விரைவில் புரிந்துகொண்டார்.

### மக்கள் ஆதரவு :

திருப்பரங்குன்றத்தில் மாநாடு தொடங்கியது. மாநாட்டை, முத்துரங்க முதலியார் பேராரவாரத்துக்கிடையில் தொடங்கி வைத்தார். கல்லிடைக் குறிச்சியைச் சேர்ந்த யக்னேஸ்வர சர்மா, மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். தமிழ் நாட்டில் ராஜாஜிக்கு எந்த விதமான தலைமைப் பதவியும் கொடுக்கக் கூடாதென்று, மாநாடு முடிவு செய்தது! இந்த முடிவைக் கூடியிருந்த மக்கள் பேராரவாரத்துடன் வரவேற்றார்கள். ராஜாஜியை ஆதரித்த எண்பது பேரும், வாபஸ் வாங்கிக்கொண்டனர். 'திருச்செங்கோட்டில் நடந்த தேர்தல் செல்லாது,' என்று வற்புறுத்திப் பலர் பேசினர்! அதை ராஜாஜி ஆள்கள் எதிர்த்தார்கள்.

இதனால் மனமுடைந்த ராஜாஜி, ஒன்றும் செய்ய இயலாத நிலையில் தமது சாதாரண உறுப்பினர் பதவியையும் ராஜிநாமாச் செய்துவிட்டதால், அவருக்குத் திருச்செங்கோட்டுத் தேர்தலில் கலந்துகொள்ள உரிமை இல்லை என்று கூறி அதைத் தள்ளிவிட்டனர்!



### பக்தவத்சலத்தின் பதில் :

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அமைதியோடு கவனித்துக்கொண்டிருந்த பக்தவத்சலம் கடைசியில் தமது கருத்தைக் கீழ்க்காணுமாறு வெளியிட்டார் :

> **"ராஜாஜி காங்கிரஸில் சேர்ந்தாலும், அதைக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டாலும், தொடர்ந்தாற்போல மூன்று ஆண்டுகள் 'காங்கிரஸில் இருந்தவர்களே தேர்தலுக்கு நிற்க இயலும்."**

என்று ஆணித்தரமாகச் சொன்னார்; அதற்கான விதி முறைகளையும் எடுத்துக் காட்டினார்! அவ் விதிகளின் அடிப்படையில் பார்த்தால், திருச்செங்கோட்டுத் திடீர்த் தேர்தல், செல்லாது. அது தவறுமாகும் என்று மறைமுகமாகச் சுட்டிக் காட்டினார்! "37 இடங்கள் காலியாய் இருக்கும் போது, திருச்செங்கோட்டுத் தேர்தல் மட்டும் தலைவருக்குத் தெரியாமல் எப்படி நடந்தது என்பதே ஒரு வியப்பு. இதை முத்துரங்க முதலியார் கேட்டார். இறுதியில் அத்தேர்தல் செல்லாது என்றே அங்கு முடிவு செய்யப்பட்டது.

### புதுத் திட்டமா

தமிழ் நாட்டில் ஆதரவே இல்லாத ராஜாஜி, தமிழ் நாட்டின் முதன்மந்திரியாவதற்கு அகில

இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டியிடம் ஆலோசனை செய்தார். ராஜாஜி–காமராஜ் பிரிவுகளுக்கு இடையில் கருத்து வேற்றுமைகள் வளரத் தொடங்கின! பாராளுமன்ற போர்டு அமைக்கும் உரிமையைத் தமிழ் நாட்டுக் காங்கிரஸிற்குக் கொடுக்கக் கூடாதென்றும், அப்படிக் கொடுத்தால், எப்படியும் காங்கிரஸ் பெரும்பான்மையாக வரும் வாய்ப்பை இழக்குமென்றும் அச்சுறுத்தியதோடு நில்லாமல், செயற்குழுவிலேயே பாராளுமன்றக் குழுவை அமைத்துவிடுதல் நல்லது என்றும் கூறினார்.

**அசப் அலி :**

இதை ஆராய்ந்த மேலிடம், விசாரணை செய்வதற்காக, அசப் அலியைத் தமிழ் நாட்டிற்கு அனுப்பியது. 1945–ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், 18–ஆந் தேதிக் காலையில் அசப் அலி சென்னைக்கு வந்தார். காமராஜ் கோஷ்டியினர் அசப் அலிக்குப் பலத்த வரவேற்பளித்தனர்! சென்னையில் ஒரு வாரம் தங்கிய அசப் அலியிடம் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் வந்திருந்த காங்கிரஸ்காரர்கள் ராஜாஜியைப் பற்றிய எல்லா விஷயங்களையும் கூறினார்கள்!

**சமரசம் :**

எல்லாவற்றையும் தீவிரமாக ஆலோசித்த அசப் அலி, தேர்தல் 'டிரிபுனல்' தீர்மானம் செய்யுமென்றும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டிக்குத் தீர்மானம் செய்யும் உரிமை இல்லை என்றும்–'டிரிபுனல்' தீர்ப்புச் செய்யும் வரை ராஜாஜி அங்கத்தினராய் இருக்கலாம் என்றும் தீர்ப்புக் கூறினார்! ராஜாஜியைச் சந்தித்துச் சமரசம் செய்துகொள்ளும்படி காமராஜுக்கு அசப் அலி தந்தி மூலம் தெரிவித்தார். சர்தார் பட்டேல், ராஜாஜியிடமும் காமராஜிடமும் தனித்தனியாக விவாதித்தார். டிசம்பர் 29–ஆந் தேதி காமராஜை அழைத்து ராஜாஜி நீண்ட நேரம் பேசினார். அதன் விளைவாக ராஜாஜி கோஷ்டியில் மூவரையும், காமராஜ் கோஷ்டியில் ஐவரையும் பார்லிமென்டு போர்டில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்வதென்பது தீர்மானிக்கப்பட்டது. காமராஜ் கோஷ்டியில், ருக்குமணி லட்சுமிபதி, முத்துரங்க முதலியார், ராமசாமி ரெட்டியார், அவினாசி லிங்கம் செட்டியார் முதலானோர் இருந்தனர். ராஜாஜி கோஷ்டியில், பி. சுப்பையா, முனிசாமி பிள்ளை, அண்ணாமலைப் பிள்ளை முதலானோர் இருந்தனர்.

**பக்தவத்சலம் பம்பாய் விஜயம் :**

தேர்தலில் நிற்க வைக்க, வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். காமராஜ் அப்போது அங்கே இல்லை. வேட்பாளர்கள் பட்டியலை, பக்தவத்சலமும் ருக்குமணி லட்சுமிபதியும், தேர்தல் கமிட்டியின் சார்பில் சர்தார் பட்டேலிடம் எடுத்துக் கொண்டு போனார்கள். பட்டேல் பம்பாயில் தங்கியிருந்தார். தனிப்பட்ட முறையில் பட்டேலின் அழைப்பைப் பெற்றுக் காமராஜ் பம்பாய்க்குப் போனார்.

**காமராஜ் வெற்றி :**

1946–ல் சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ்

பெருவாரியான இடங்களைப் பெற்று அமைச்சரவையை அமைக்கும் தகுதியைப் பெற்றது. தேர்தலுக்கு முன்பே ராஜாஜி விலகிவிட்டார். ஆயினும், ராஜாஜியை முதல் மந்திரியாக்க வேண்டுமென்று மேலிடம் விரும்பியது. காமராஜ், பிரகாசம் ஆகியோர் டில்லிக்குச் சென்று பட்டேலையும் காந்தியையும் சந்தித்தனர். அந்தச் சந்திப்பின் போது ராஜாஜியும் பட்டாபி சீதாராமையா போன்ற தலைவர்களும் அங்கு இருந்தார்கள். பிரகாசம் முதல் மந்திரியாவதை காந்திஜி விரும்பவில்லை.

பட்டாபி, ராஜாஜி, பிரகாசம் ஆகிய இவர்களுள் பிரகாசம் தவிர, வேறு எவர் வரினும் சரி என்பதைக் காந்திஜி விரும்பினார். சில பல குழப்பங்களுக்குப் பிறகு காமராஜை அழைத்துக் காந்திஜி பேசினார். அதன் முடிபு பட்டாபி சீதாராமையாவைத் தலைவராக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. ராஜாஜியோடு காமராஜ் ஆலோசித்தார். ராஜாஜி ஆத்திரங்கொண்டு எதிர்த்தார். ராஜாஜி கோஷ்டிக்குள்ளேயே பிளவு ஏற்பட்டது.

ஆதலால், பிரகாசம் தம் கருத்தை மாற்றிக் கொண்டு தேர்தலில் நிற்பதென்ற தீவிர முடிவுக்கு வந்து வேலை செய்யலானார். இந்நிலையில் காமராஜ் முத்துரங்க முதலியாரைத் தலைவராக நிறுத்துவதென்று முடிவு செய்தார். வாக்கெடுப்பு நடந்தது. முத்துரங்க முதலியாரை நிச்சயம் ராஜாஜி கோஷ்டி ஆதரிக்கும் என்று எல்லாரும் எதிர்பார்த்தனர். ஆனல், நடந்தது வேறு......!



ராஜாஜி கோஷ்டி வாக்களியாமல் நடுவு நிலைமை வகித்தது. ஆதலால், வாக்குகள் சிதறிவிட்டன. அதிக வாக்குகள் வாங்கிப் பிரகாசம் வெற்றி பெற்ருர். ராஜாஜி கோஷ்டியினர் 33 பேர் நடுவுநிலைமை வகித்ததால், பிரகாசம் முதல் மந்திரியானார். இச்செயலின் மூலம் ராஜாஜி மக்கள் மனத்தில் ஒருவித வெறுப்பை உண்டாக்கிவிட்டார். வெற்றி பெற்ற பிரகாசத்தையும் மந்திரி சபையையும் காமராஜ் ஆதரித்தார். அந்த ஆதரிப்பின் மூலம் தமது பண்பாட்டை மக்களிடையிலே புலப்படுத்தி மதிப்புப் பெற்ருர் காமராஜ்.

**கருத்து வேற்றுமை :**

காமராஜுக்கும் ராஜாஜிக்கும் இடையில் பலத்த கருத்து வேற்றுமை வளர்ந்தது! தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் பதவிக்குக் காமராஜை எதிர்த்து நிற்கும்படி முத்துராமலிங்கத் தேவரைக் கேட்ட போது, அவர் மறுத்துவிட்டார். கடைசியில் சா. கணேசனை நிற்க வைத்தனர், ராஜாஜி கோஷ்டியினர். சா. கணேசன் நிற்கமாட்டார் என்றுதான் முதலில் எல்லாரும் நினைத்தனர். ஆனல், சா. கணேசன் காமராஜை எதிர்த்து நின்ருர். இது 1946-ஆம் ஆண்டு நடந்தது. ‘போட்டி காமராஜுக்கும் சா. கணேசனுக்குமன்று! காமராஜுக்கும் ராஜாஜிக்குமே,’ என்ற நிலை ஏற்பட்டது. எல்லாரும் அப்படியே எண்ணினர். அச்சமயங்களில் எல்லாம் ஒரு வருஷத்திற்கு மேல் ஒரு மந்திரி சபைகூட இருந்ததில்லை.

**சுதந்தர ஒளி :**

1947-ஆம் ஆண்டு பிறந்தது! சுதந்தர ஒளி நம் நாட்டின் மேல் சுடர்விட்டுப் பிரகாசித்தது. காந்தி, நேரு, காமராஜ், பக்தவத்சலம் போன்ற பெருந் தலைவர்கள் செய்த தியாகங்கள் பலனளித்தன. அவர்கள் சிந்திய கண்ணீரும் செந்நீரும், சுதந்தரப் பயிர் முளைக்கப் பயன் பட்டன. அப்பயிர் வளர, தலைவர்கள் செய்த தியாகங்கள் எருவாகப் பயன்பட்டன. அயராத உழைப்பும், சோர்வில்லாத சிந்தனைகளின் கூட்டும், இந்த நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்தன.

**பிரகாசம் மந்திரி சபை :**

பிரகாசம் மந்திரி சபையை விலக்கும் விஷயமாக ராஜாஜி வீட்டில் தலைவர்கள் கூடினார்கள். பிரகாசத்தின் காரியங்கள் சரியானவையாக இல்லாமையினாலும், மாதவமேனனுக்குப் பதில் ராகவமேனனுக்கு மந்திரி சபையில் இடம் கொடுத்தமையினாலும், மந்திரி சபையே மாறக் கூடிய சூழ்நிலை உருவாகியது.

பிரகாசத்திற்குப் பிறகு யாரைத் தலைவராக்குவது என்று தீவிரமாக ஆலோசித்தனர். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பெயரை ராஜாஜி சிபாரிசு செய்தார். இதையறிந்த பிரகாசம் மன்றாடினார். முடிவில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியது. பிரகாசம் வெளியேறினார்.

**காமராஜ் உயர்ந்தார் :**

1946-ல் ராஜாஜி முதல் மந்திரியாக வர இயலாமற்போவதும், அதே வருஷம் காரியக்



கமிட்டித் தலைவராக காமராஜ் வர இயலாமல் ராஜாஜி தடை செய்து தோற்றதும், பிரகாசம் மந்திரி சபை மாறியதும் காமராஜின் புகழை மேலும் ஒருபடி உச்ச நிலையில் உயர்த்திவிட்டன. காமராஜைக் கட்சியிலிருந்தே விலக்கிவிட வேண்டுமென்று நினைத்தவர்கள், மக்கள் நெஞ்சங்களிலே இருந்து விலக்கப்பட்டார்கள்.

பிரகாசம் மந்திரி சபையிலிருந்து ஆண்டுக்கொரு முறை தலைவர் தேர்தல் நடக்க ஆரம்பித்தது. பிரகாசம் மந்திரி சபையில் பக்தவத்சலத்திற்கு 'மேஜர் இரிகேஷனை'க் கொடுத்ததால், உடனே அவர் ராஜிநாமாச் செய்துவிட்டார். பிரகாசம் பிறகு ஓ. பி. ஆர். தமக்கு வேண்டிய சகாக்கள் பேச்சைக் கேட்டு நடப்பதாக அறிந்தார். பக்தவத்சலத்தின், 'நீர்ப்பாசனத்தை எடுத்து மற்றவருக்குக் கொடுத்ததால், வெற்று உத்தியோகத்திற்காக தாம் இல்லை', என்று கூறி பக்தவத்சலம் ராஜிநாமாக் கொடுத்தார்.

**தேடிவரவில்லை—தானே வந்தது :**

1947-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஓமந்தூரார் மந்திரி சபை அமைத்தார். 1948-ல் மறுபடியும் தலைவர் தேர்தல் நடந்தது. பிரகாசம் போட்டியிட்டார். ஆனால், வெற்றி பெறவில்லை. ஓமந்தூர் ரெட்டியார் மீண்டும் மந்திரி சபை அமைத்தார்.

அச்சமயம் ராஜாஜி கோஷ்டியும் பிரகாசம் கோஷ்டியும் ஒன்று சேர்ந்து, டாக்டர் சுப்பராயனைத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்தி வைத்தன.

அது ரெட்டியாருக்கும் காமராஜுக்கும் சுமுகமான உறவு இல்லாத நேரம்! காமராஜ் கோஷ்டியினரில் சிலருக்கு ரெட்டியார் மீது விருப்பம் குறைய ஆரம்பித்தது. ரெட்டியார் தேர்தலில் நின்றால் நிச்சயம் வெற்றி பெற இயலாது என்கிற சூழ்நிலை ஏற்பட்டது.

அடுத்து யாரைத் தலைவராகக் கொண்டு வரலாம் என்று காமராஜும் மற்றத் தலைவர்களும் சிந்தித்தார்கள். முடிவாகத் தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் 1949-ல் காமராஜ் பக்தவத்சலத்தை அழைத்து முதன் மந்திரியாய் இருக்கும்படி கேட்டார். பக்தவத்சலம் உடனே 'சரி' என்று கூறவில்லை; நன்றாக எண்ணிப் பார்த்துவிட்டு, 'குமாரசாமி ராஜாவைத் தலைவராக்கினால் சரியாக இருக்குமே!' என்று கருத்துரை கூறினார். அதே சமயத்தில் சர்தார் பட்டேல் பக்தவத்சலத்தை அழைத்து, 'யாரைத் தலைவராக நியமிக்கலாம்?' என்று கேட்டார். அடக்கமே உருவான பக்தவத்சலம், 'தகுந்தவர்களைப் பார்த்து யோசித்து நியமிக்கின்றோம்', என்றார். 'நீங்களே தலைவராய் இருக்கவேண்டும். அதை நான் விரும்புகிறேன். நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்', என்று நேரடியாகவே பட்டேல் கேட்டுவிட்டார். பக்தவத்சலம், யாராவது விரும்பினால் போட்டியிடும் மனம் எனக்கில்லை', என்று குறிப்பிட்டார். 'போட்டியில்லாமலிருந்தால், நீங்கள் சம்மதிக்கவேண்டும்', என்று மறுபடியும் பட்டேல் சொன்னார். பக்தவத்சலம், 'அப்படியானால் சரி', என்று ஏற்றுக் கொண்டார். ஆனால், மறுபடியும் தாமே பதவிக்கு வரவேண்டுமென்று



ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் கேட்டார். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் விஷயத்தில் காமராஜே சொன்னால்கூட மக்கள் விரும்ப மாட்டார்கள் என்ற நிலை அப்போது உருவாகியிருந்தது. இந்த நிலையில் பக்தவத்சலத்தைத் தலைவராக்கக் காமராஜ் கோஷ்டியிலிருந்த சிலருக்கு விருப்பம் இருந்தது. இதை ரெட்டியாருக்குத் தெரிவித்தார்கள்.

பக்தவத்சலம் தலைவராவதை ரெட்டியார் விரும்பவில்லை. அவர் மறுத்தார். குமாரசாமி ராஜா தலைவரானால், அடுத்த நாளே தாம் விலகி விடுவதாக ரெட்டியார் கூறினார். அந்த ஏற்பாட்டைக் காமராஜ் வரவேற்றார். பக்தவத்சலம் அதை ஏற்றுக்கொண்டு மகிழ்ந்தார். காமராஜ் கருத்து ரெட்டியாருக்கு அறிவிக்கப்பட்டது. கட்சிக் கட்டுப்பாட்டிற்கு இணங்கிய பக்தவத்சலம் தகராறு நிகழாதபடி பார்த்துக்கொண்டார். அவர் விருப்பம் தெரிந்துகொண்டு ஆஸ்பத்திரியில் இருந்த குமாரசாமி ராஜாவிடம் இந்த விஷயத்தைச் சொன்னார்கள். குமாரசாமி ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் வியப்பில் ஆழ்ந்து விட்டார். இப்படிச் செய்வதன் மூலம் காமராஜின் ராஜதந்திரம் வெற்றி பெற்றது. ரெட்டியார் காமராஜ் கோஷ்டிகள் சேர்ந்து நிற்காதிருந்தால், ராஜாஜி பிரகாசம் கோஷ்டிகள் அன்று வெற்றி பெற்றிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும். பக்தவத்சலம் தலைவராய் வருவதற்கு வாய்ப்பு இருந்தும், கடைசி நிமிஷத்தில் நிலைமை வேறாகியது. ஆனால், பெரும்பாலான ஆந்திர அங்கத்தினர்கூட பக்தவத்சலம் கட்சித் தலைவராக

வராதது குறித்து வருந்தினர். குமாரசாமி ராஜா மந்திரி சபை அமைத்தார். எதிர்க்கட்சித் தலைவ ராய்ப் பிரகாசம் இருந்தார். இந்நிகழ்ச்சியைப் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் சூட்டுடன் வெளி வந்தன. திருவள்ளூர்த் தொகுதியை இரண் டாகப் பிரித்தனர். அவை திருவள்ளூர்–பொன் னேரித் தொகுதிகளாயின.

**முத்துரங்கம் உடல்நிலை :**

1949-ஆம் ஆண்டு பக்தவத்சலமும், பட்டாபி சீதாராமையாவும் பர்மாவுக்கு நல்லெண்ணத் தூது கோஷ்டியாக அரசாங்கத்தின் சார்பில் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பக்தவத்சலம் டில்லிக்குக் கிளம்பு முன்னர் மாமா முத்துரங்க முதலியாரிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்பி ஞர். அவர் போன பிறகு முத்துரங்க முதலி யாருக்கு உடல் நலம் குறைந்தது. அப்படியும், பர்மாவுக்கு கலக நேரத்தில் பக்தவத்சலம் போகின்ருரே என்று நிறைய வருந்திஞர் முத்து ரங்க முதலியார். இரண்டு நாட்களில் முத்துரங்க முதலியாருக்கு. உடல் அதிகமாக பாதித்தது. டாக்டர்கள் நம்பிக்கை இழந்தனர். பக்தவத்சலம் வரும் வரையில் முத்துரங்க முதலியார் இருக்க மாட்டார் என்றுதான் டாக்டர்கள் கூறினர். அந்தநேரம் டில்லியில் பக்தவத்சலத்தின் சாமான் கள் ஆகாய விமானத்தில் ஏற்றிக் கொண் டிருந்த நேரம். ஆகாயவிமானம் புறப்படவில்லை. திடீரென ஒரு செய்தி வந்தது. பர்மாவில் கலகம் அதிகமாக இருப்பதால் அவர்கள் புறப்படக் கூடாது என்று. ‘பர்மா பயணம் நின்றது நாளை



சென்னைக்கு வருகிறேன்’ என்று பக்தவத்சல மிடமிருந்து தந்தி வந்தது. எல்லோரும் திருப்தி யடைந்தனர். பக்தவத்சலம் வந்தவுடனே நேராக பேட்டைக்குச் சென்று முத்துரங்க முதலியாரைப் பார்த்தார். ‘நல்ல வேளையாக வந்து சேர்ந்தாயா? பர்மாவில் கலகமாமே!’ என்று முத்துரங்க முதலியார் உடல் நலிவையும் கவனியாது பக்த வத்சலத்தைக் கேட்டார்.

**பரமபதம் :**

பக்தவத்சலம் வந்த அடுத்த நாளே 1949 பிப்ரவரி 5-ம் தேதியன்று முத்துரங்க முதலியார் பரமபதம் அடைந்தார். பேட்டைக் குடும்பம் அடைந்த துயரத்தைச் சொல்லி முடியாது.

1952 மே மாதத்தில், தம்பி இறந்ததிலிருந்து பெருங் கவலையுடனிருந்த ஏவலப்ப முதலியார் படுக்கையிலேயே இருந்து சில நாள்களில் அவரும் பரமபதம் சேர்ந்தார்.

**ஜாதிவெறி :**

1952-ல் பொதுத் தேர்தல் நடந்தது. அப் போது காங்கிரஸில் ‘மெஜாரிட்டி’ இன்மையால் யாரைத் தலைவராக்குவது என்றதொரு குழப்ப நிலை ஏற்பட்டது. மீண்டும் குமாரசாமி ராஜாவே தலைவ ராக ஏனோ அவரே விரும்பவில்லை. அந்நேரத்தில் ராஜாஜியைத் தலைவராகக் கொண்டுவரலாம் என்று பலர் ஆலோசனைக் கூறினர். காமராஜும் சஞ்சீவி ரெட்டியும் ராஜாஜியோடு தீவிரமாக ஆலோசனை நடத்தினர். இறுதியில் நேருஜியின் சம்மதம் பெற்று, ராஜாஜியை மேல்சபை உறுப்பினராக்கிய

பின்னர் சட்டசபைக் கட்சித் தலைவராகவும் ஆக்கினார்கள். ராஜாஜி மந்திரி சபை அமைக்கலானார். அத்தேர்தலில்தான் பொன்னேரித் தொகுதியில் பக்தவத்சலம் நின்றார். அவரை எதிர்த்துக் கஜபதி நாயக்கர் என்பவர் போட்டியிட்டார். பொன்னேரித் தொகுதியில் தெலுங்கர்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கெல்லாம் பிரகாசம் சென்று பேசிக்கெடுத்து வைத்திருந்தார். இறுதியில் சூழ்ச்சியும் சுயநலமும் அநீதியும் வென்றன. கஜபதி நாயக்கர் தோல்வியடையவில்லை! பக்தவத்சலம் வெற்றி பெறும் வாய்ப்பினை இழந்துவிட்டார்! தேர்தல் நேரத்தில் தவறான கருத்துகளைக் கூறிப் பிரசாரம் செய்தவர்களெல்லாம் பின்னர் உணர்ந்து அவருடைய திறமையைப் பாராட்டியதோடு, தம்முடைய தவறான பிரசாரத்திற்காகவும் மிக வருந்தினார்கள். பக்தவத்சலத்தை எதிர்த்து வேலை செய்தவர்களுள் ஒரக்காடு ஜமீந்தாராகிய கோவிந்த ராஜுலு நாயுடுவும் ஒருவர். அவரும் முதலில் தேர்தலில் நிற்க வேட்பாளர் விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தார். அவர் ஒரு கண்ட்ராக்டரானதால், அவரது அபேட்சை மனு நிராகரிக்கப்பட்டது. அதனால் கோபங்கொண்ட நாயுடு, பக்தவத்சலத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்தார்.

தேர்தலில் வெற்றி பெறவில்லை என்றாலும், தம்முடைய பொதுச் சேவைகளைப் பக்தவத்சலம் நிறுத்தவில்லை. தம்முடைய தேசியக் கருத்துகளை மக்களிடையில் எளிதில் சொல்வதற்கு நாளிதழ் ஒன்றுதான் சிறந்த சாதனமென்று தீர்மானித்த பக்தவத்சலம் '**பாரத தேவி**' என்ற நாளிதழுக்கு



ஆசிரியரானார். அதற்கு முன்னர் 'இந்தியா' என்ற பத்திரிகையிலும் தொடர்பு கொண்டிருந்தார். சட்டசபையில் பக்தவத்சலம் இல்லாத குறையைப் போக்க நினைத்த தலைவர்கள் அவரை மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்க வழி செய்தார்கள். அவர் மேல்சபை உறுப்பினரானார். அப்போது முதல் மந்திரியாக இருந்த ராஜாஜி தம்முடைய அமைச்சரவையில் பக்தவத்சலத்திற்கு இடம் கொடாமல் இல்லை. அவரைத் தம்முடைய அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ள ராஜாஜி நினைத்தார்; நினைத்ததைச் செயலாக்க முனைந்தார். அதைக் கேள்வியுற்றதும் பக்தவத்சலம் நேராகக் காமராஜிடம் சென்று கலந்து பேசி நன்கு ஆலோசித்த பிறகுதான் ராஜாஜி மந்திரி சபையில் சேர இசைவு கொடுத்தார்.

1952-ல் அமைக்கப்பட்ட ராஜாஜி மந்திரி சபை தொடர்ந்து நெடுநாள் நீடிக்கவில்லை. அவரிழைத்த சில தவறுகள் கடைசியில் அவருடைய மந்திரி சபையையே ஆட்டிக் கவிழ்த்துவிட்டன.

**ராஜாஜி பணிதல் :**

1954-ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 6-ஆம் தேதி நடந்த கட்சிக் கூட்டத்தில் ராஜாஜி பணிந்தார். கல்வித் திட்டத்தின்மீது வாக்கெடுக்க வேண்டாவென்று கெஞ்சினார்; தாம் விலகிக் கொள்வதாகவும் கூறினார். அதோடு 'உடல் நலமின்மையால் விலகிக் கொள்கிறேன்,' என்ற ஓர் அறிக்கையும் வெளியிட்டார். ராஜாஜி

ராஜிநாமாச் செய்வதற்கு முன்பே, பக்தவத்சலத்தை அழைத்து அவருடன் பேசினார். பக்தவத்சலம் அப்பொழுது அருமையான யோசனை ஒன்றைச் சொன்னார். '**இந்தத் தகராற்றைத் தீர்க்க வேண்டுமென்றால், நீங்கள் காமராஜை அழைத்துப் பேசவேண்டுமே தவிர, வேறு வழியில்லை. அவர் சிபாரிசுகளைக் கவனிப்பவரல்லர். மந்திரிகளிடம் வந்து இதைச் செய்ய வேண்டும் அதைச் செய்யவேண்டும் என்று எக்காலத்திலும் அவர் சொல்லியதில்லை. மந்திரி சபைமீது சொந்தமாக அவருக்கு வெறுப்பும் பகைமையும் இல்லை. இருக்கிற கருத்தை அவர் சொல்கிறார். அவர் நண்பர்கள் அவர் சொல்லை மீறிப் போகக் கூடியவர்கள் அல்லர். அவரைச் சந்தித்து அவருக்கிருக்கிற ஐயப்பாட்டைப் போக்குவதுதான் ஒரே வழி!**' என்று அவர் கூறியதை ராஜாஜி உற்றுக் கேட்டார்! இதன் மூலம் பக்தவத்சலம் காமராஜைச் சரியாக அளந்து காட்டியிருக்கின்றார். அதனாலேதான் அவருக்கு நிலையான எதிரிகள் என்போர் யாருமில்லை.

பக்தவத்சலத்தின் அரசியல் வாழ்க்கையின் ஏடுகளுள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் உண்மையைத் தெரிவிக்கின்ற கற்பூரப் பெட்டகம் போன்றது. அறிவும், ஆற்றலும், அஞ்சாமையும், ஆண்மையும், வன்மையும், மென்மையும், வாய்மையும், தூய்மையும் அவருடைய அரசியல் வாழ்க்கையின் அழியாத முத்திரைகள். அவற்றுள் ஒவ்வொன்றும் நின்று நிலைத்து இன்னும் நெடுநாள் வாழக்கூடிய வைரம் எனலாம். அவை எதிர்கால இளைஞர் சமுதாயத்திற்கான ஒளி விளக்குகள்!





'மல்லிகா'

## அடுத்த தலைவர்:

ராஜாஜி மந்திரி சபை அஸ்தமனமானவுடன் அடுத்தபடி தலைவராக யாரை நியமிப்பது என்ற கேள்வி தமிழ் நாட்டு அரசியலில் எழும்பியது. காமராஜ் தீவிரமாகச் சிந்தித்தார். இந்த நேரத்தில் ராஜாஜி தம்முடைய அமைச்சரவையில் இருந்த சி. சுப்பிரமணியத்தைத் தலைவராக்க வேண்டும் என்று முடிவு செய்து அதற்கான அடிப்படை வேலைகளையும் செய்யத் தொடங்கினார். இதையறிந்த காமராஜ் என்ன செய்வதென்று புரியாது இருந்தார். நண்பர் பலருடைய வற்புறுத்தலுக்கு இணங்கித் தாமே தலைவர் தேர்தலுக்கு நிற்பதென்று முடிவு செய்தார். காமராஜை,

சி. சுப்பிரமணியம் எதிர்த்து நின்ருர். காமராஜை எதிர்த்து நின்ற சி. சுப்பிரமணியத்தின் பெயரை ராஜாஜி சொன்னுர் என்பதற்காக, அதை மறுப்பது சரியன்று என்று நினைத்து, பக்தவத்சலம் முன் மொழிந்தார். ஆனல், சி. சுப்பிரமணியம் வெற்றி பெற்று அமைச்சரவை அமைத்திருந்தால் கூட, அவருடைய அமைச்சரவையில் பக்தவத்சலம் இருக்க உறுதியாக விரும்பவில்லை என்பதை அவருடைய நண்பர்களிடத்தில் பக்தவத்சலமே கூறியுள்ளார். தலைவர் தேர்தலில் பெரு வெற்றியினைக் காமராஜ் அடைந்தார். காமராஜ் வெற்றியில் மிக அதிகப் பங்கு திரு. வி. கே. ராமசாமி முதலியாருக்குண்டு. காமராஜ் தலைவரானதிலிருந்து தமிழக அரசியலில் புதியதொரு திருப்பமும், சிறப்பும், மலர்ச்சியும் ஏற்படத் தொடங்கின.

காமராஜ் தம்முடைய மந்திரி சபையில் பக்தவத்சலத்தைச் சேர்த்துக்கொள்ள மாட்டார் என்றுதான் பலர் நினைத்தனர். பக்தவத்சலத்தின் திறமை, ஆற்றல் இத்தனையும் பயன்படுத்திக் கொள்ளாமல் காமராஜரால் எப்படி இருக்க இயலும்? ஆதலால், காமராஜ், பக்தவத்சலத்தை அழைத்தார். அவரும் இசைந்தார்.



மணி விழா

# 6

## குடும்ப விளக்கு

மண்ணினல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே!

—திருஞான சம்பந்தர்

**மணி விழா :**

1957-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 9-ஆந் தேதியன்று பக்தவத்சலத்திற்கு 60ஆண்டுகள் முடிந்து அறுபத்தோராவது ஆண்டு பிறந்தது. மிகச் சிறப்பான முறையில் மணி விழாவைக் கொண்டாடினார்கள். ஆடவர்களுக்கும் பெண்

டிருக்கும் தனித்தனியே பள்ளிகள் வேண்டும் என்ற கருத்தினையுடையவர் பக்தவத்சலம். கல்வித் துறையிலும் அரசியல் துறையிலும் அவருக்குள்ள முதிர்ந்த பட்டறிவு காரணமாக, மணி விழாவை முன்னிட்டுப் 'பக்தவத்சலம் கல்வி சார் பொறுப்பு' (எஜுகேஷனல் டிரஸ்ட்) தோன்றிற்று. பூவிருந்தவல்லியில் பெண்களுக்காக ஓர் உயர்நிலைப்பள்ளி இல்லாத குறையைப் போக்க, 1960-ல் பக்தவத்சலம் கல்விக் கழகம், பெண்களுக்கான தனி உயர்நிலைப் பள்ளியொன்றைத் தொடங்க ஏற்பாடு செய்தது.

மகளிர் முன்னேற்றப் பணிக்கெனத் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட மூத்த மகள் சரோஜினி—வரதப்பனின் பெயரிலேயே அப்பெண்கள் உயர்நிலைப்பள்ளி இயங்கி வருகின்றது. சரோஜினி வரதப்பன், பெண்கள் உயர்நிலைப்பள்ளியின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டு, 6-ஆம் வகுப்பிலிருந்து பதினோராம் வகுப்பு வரையில் மாணவிகள் கவலையின்றிக் கல்வி பயிலத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொண்டு வருகின்றார்.

1944-ல் காந்தி அடிகள் சென்னைக்கு வருகை புரிந்த அன்றுதான் சரோஜினி முதன் முதலாகத் தொண்டுலகில் நுழைந்தார். ஹிந்தி பிரசார சபாவில் 'வாலண்டியர்' எனும், வலிய வந்து உதவும் சேவகியாகப் பயிற்சி பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட இருவருள் இவர் ஒருவர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. 1946-ஆம் ஆண்டு அன்னையின் உடல் நலம் குறைவுற்றிருந்த போது தான் அகில இந்திய மாதர் நலக் குழுவில் அங்கத்





ஜெனிவாவில் தம் தந்தையாருடன்

தினரானார்; பின்னர் அக்குழுவின் செயலாளராய், உதவித் தலைவியாய் உயர்ந்தார்; ராஜ்ய மத்திய மாதர் நலக் குழுவிலும், வேறு பெண்களுக்கான சங்கங்களிலும் பெரும்பொறுப்புகளை ஏற்றார்.

## சரோஜினியின் வெளி நாட்டுப் பயணம் :

வீட்டுப் பொறுப்புகளைத் தனித்து ஏற்றுத் திறம்பட நடத்தும் சரோஜினி அம்மையார் தம் தந்தையாருடன் 1957-ஆம் ஆண்டு ஐரோப்பாவிற்குப் பயணமானார். வேற்று நாடுகளைக் கண்டு திரும்பிய அவர் உள்ளத்தில், நம் நாட்டின் ஆற்றலின்மையையும் உலக நாடுகளுடன் இதனுடைய ஏற்றத் தாழ்வினையும் ஒப்பிட்டு உணர்ந்தார்; அடிப்படைக் காரணங்களைக் கிள்ளி எறிய

விரும்பினார்; பெண்களின் பிற்போக்கான நிலை அவரது உள்ளத்தைத் தொட்டது 'பெண்களை முன்னணியில் நிறுத்த வேண்டும்; பட்டப் பரீட்சைகளுக்கு அனுப்ப வேண்டும்,' என்ற கொள்கைகளைப் பரப்பிச் செயலாற்றினார்.

**வீட்டுக் கல்வி :**

சரோஜினியின் ஆரம்பக் கல்வியும், உயர் நிலைப் பள்ளிப் படிப்பும் லேடி சிவசாமி ஐயர் பெண்கள் பள்ளியிலேயே நிகழ்ந்தன. வீட்டிலிருந்தபடியே ஹிந்தி பயின்று 'விசாரத்' பட்டம் பெற்ற தன்மையைக் கொண்டே அவரது கல்வி ஆர்வத்தை உணரலாம். வீட்டில் எவரேனும் உடல் நலக் குறைவு பட்டாலும், வைத்திய இல்லங்களில் சேர்க்கப்பட்டிருந்தாலும் இவர் அயர்வின்றி அவர்களுக்காக உழைப்பார். பகலிலே நாட்டுக்காக உழைத்து இரவிலே வீட்டிற்காக உழைக்கும் இவ்வுத்தமி அவ்வள்ளல் குடும்பத்திற்கே ஒரு தனி விளக்கு எனக் கூறலாம். அத்தையென்றும், மாமா என்றும், சித்தி என்றும் பாட்டி என்றும் அன்பு காட்டி அறச்சொல் கூறும் இனிய பண்புடைய இவர், உலகிற்கு ஓர் உயர்ந்த வழி காட்டி எனலாம்.

கலையுள்ளமும், காவிய எண்ணம், ஆழ்ந்த கருத்துக்கொண்ட அறிவுச் சிந்தனையும், குழந்தை உள்ளங்களைப் புரிந்து பாராட்டும் கொள்கை உயர்வும், எவர்க்கும் உதவும் இரக்கக் குணமும், நல்லதை உணரும் நல்லறிவும், எதையும் முடிக்கும் ஆற்றலும், தீவிரமும் கொண்ட இவர், தந்தை



யாரின் நற்றிறமையும் தாயாரின் உயர் பண்பும் ஒருங்கே அமையப் பெற்றவராய்த் திகழ்கின்றார்.

**சித்தரஞ்சன் :**

பக்தவத்சலத்தின் ஒரே மகனான சித்தரஞ்சனின் இளைய வயதில் குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சி ஒன்றும் இல்லையென்றுதான் கூறுதல் வேண்டும். சித்தரஞ்சன் முதலில் தம் தந்தையாரைப் போலவே பி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் படித்தார். பக்தவத்சலத்துக்கு மைந்தன்மீது உள்ளூரப் பேரன்பு இருந்தாலும் அவர் அதை வெளியில் காட்டிக்கொள்ளவே மாட்டார். தாமுண்டு – தம் படிப்புண்டு—தம் நண்பர்களுண்டு என்று தான் சித்தரஞ்சனின் பள்ளிப் பருவம் கழிந்தது.

**ராஜாஜி சொன்னார் :**


சி. ஆர். தாசின் கொள்கைகளை அப்படியே பின் பற்றி வந்த கோபாலசாமி முதலியார் (சித்தரஞ்சனின் பாட்டனார்) அவருடைய நினைவாகப் பேரனுக்குச் சித்தரஞ்சன் என்று பெயர் வைத்தார். டில்லியில் ஒரு முறை, அப்போது கவர்னராய் இருந்த ராஜாஜி தேநீர் விருந்துக்குச் சித்தரஞ்சனையும் சரோஜினியையும் அழைத்திருந்தார். அப்போது பேசிக்கொண்டிருக்கும் போது தான் இந்த உண்மையை ராஜாஜி நினைவுபடுத்திச் சொன்னார்.

சித்தரஞ்சன் தமது 22-ஆம் வயதில் மேலே படிப்பதற்காக அமெரிக்காவிற்குச் சென்றார். அமெரிக்காவில் இரண்டரை வருடங்கள் சொந்தச்



மணக்கோலத்தில்
மகனும் மருமகளும்

செலவிலேதான் படித்தார். ஒரே மகன் என்பதால் ஞானசுந்தரம் அம்மையாருக்குச் சித்தரஞ்சனை அமெரிக்காவுக்கு அனுப்ப முதலில் விருப்பமில்லை; பின்னர், பக்தவத்சலம் முதலிய அனைவரும் சொல்லிய பிறகுதான் ஒருவாறு சம்மதித்தார். தம் மைந்தனின் படிப்புக் கெடும் என்பதால், சித்தரஞ்சன் அமெரிக்காவில் எம். எஸ். படித்துக்கொண்டிருக்கும்போது, மிகமிக மோச



மருமகள் சித்தரஞ்சனுடன் மாமனுர் மேஜர் அழகப்பர்

மான நிலையில் தம் உடல் நிலை இருந்தும், 'தெரிவிக்க வேண்டா' என்றுதான் ஞானசுந்தரம் அம்மையார் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

சித்தரஞ்சன் படித்து முடித்து, பின்னர்த் தாமே முயன்றுதான் ஒரு மருந்து கம்பெனியில் வேலைக்கமர்ந்தார்; முதலில் பி. எஸ்ஸி., (பார்மசி) படித்து, பரோடா கெமிக்கல்ஸ் கம்பெனியில் நான்கு வருடங்கள் வேலை செய்தார்; தற்போது டில்லியில் சுவிஸ் ஸ்தாபனத்தின் சேண்டாஸ் மருந்து கம்பெனியில் வடக்குப் பிராந்தியத்தின் நிருவாகியாய் இருந்து வருகின்ருர்.

சித்தரஞ்சன் வெளி நாட்டில் படித்துவிட்டுத் திரும்பியவுடனே திருமணத்திற்காக ஏற்பாடு செய்தார் பக்தவத்சலம். இந்திய நாட்டின் விடுதலைக்காக அயராது போர் புரிந்து சுபாஷ் சந்திரபோஸின் போர்ப் படையில் பிரதம படைத் தளபதியாய் இருந்தவரும், கடைசியில் நேதாஜி போகும்போது எல்லாப்பொறுப்புகளையும் ஒப்படைத்துச் செல்லக்கூடிய அளவுக்குத் தகுதியும் திறமையும் பெற்றவருமான மேஜர் ஜெனரல் அழகப்பாவின் மகள் சந்திராவைச் சித்தரஞ்சனுக்குத் திருமணம் செய்யவேண்டுமென்று பெரியோர்கள் நினைத்தார்கள்.

**வெளி நாட்டில் :**

இந்தோனேஷியாவில் பாரதத்தின் தூதுவராய்ப் பணியாற்றிவிட்டு, கடைசியில் அந்நாடு விடுதலையடையப் பெருமுயற்சி செய்த அழகப்பரின் மகளைத் தம் மைந்தனுக்குத் திருமணஞ் செய்துவைக்க பக்தவத்சலமும் குடும்பத்தினர்

பிறரும் இசைந்தனர். தம் தந்தையாரோடு இந்தோனேஷியாவிலிருந்து அப்போதுதான் திரும்பிய சந்திரா, பி. ஏ., வரையில் பச்சையப்பன் கல்லூரியிலும், ஆரம்பத்தில் ஈவாட்ஸ் பள்ளியிலும் படித்தார். சந்திராவுக்கு அழகப்பன் என்ற ஒரே தமையனுர் இருக்கின்றார். அவர் திரு. வி. கே. ராமசாமி முதலியாரின் மருமகனுர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய இசையை நன்கு கற்றுச் சிறந்த பட்டங்களையெல்லாங்கூடச் சந்திரா பெற்றிருக்கின்றார். இவ்வளவு சிறப்புகள் கொண்ட சந்திராவுக்கும் சித்தரஞ்சனுக்கும் 1950-ல் சென்னைப் புரசைப்பாக்கத்தில் கோலாகலமாய்த் திருமணம் நடந்தேறியது.

**அன்னையார் வரவில்லை :**

தம் ஒரே மைந்தன் சித்தரஞ்சனின் திருமணத்திற்கு ஞானசுந்தரம் அம்மையாரால் வரவே இயலவில்லை. காரணம், உடல் நலமின்றிப் படுத்த படுக்கையில் இருந்தமைதான்.

வருவிருந்தோம்பி வாய்மையைக் காத்து மன நலிவின்றி வாழ்கின்ற சித்தரஞ்சன் – சந்திரா தம்பதிகளுக்கு ஒரு பெண் குழந்தையும் ஓர் ஆண் குழந்தையும் உண்டு. முதலில் பிறந்த பெண் குழந்தைக்குத் தம் பாட்டியாரின் பெயராகிய 'மல்லிகா' என்ற பெயரையே வைத்தார் சித்தரஞ்சன். இரண்டாவது ஆண் குழந்தைக்கு 'அருண்' என்று பெயர் சூட்டினர். இப்போது மல்லிகா ஒன்பதாவது வகுப்பிலும், அருண் ஏழாவது வகுப்பிலும் டில்லியில் படித்துக்கொண்டு வருகின்றனர்.



பேரன் பேர்த்தியைக் கண்டால் பக்தவத்சலத்திற்குச் சொல்ல முடியாத மகிழ்ச்சி. டில்லிக்குப் போனவுடனே பேரன் பேர்த்தியைக் காரில் ஏற்றிக்கொண்டு, அவர்கள் சொல்கின்ற இடங்களுக்கெல்லாம் சென்று, கேட்கின்ற பொருள்களை எல்லாம் வாங்கிக் கொடுத்து, அவர்கள் ஆட்டி வைக்கின்றபடியெல்லாம் ஆடினால்தான் தாத்தா பக்தவத்சலத்திற்குச் சரிப்படும். பேரன் பேர்த்திக்கும் மகிழ்ச்சி!

**ருக்குமணி :**

ருக்குமணிக்கு அப்போது வயது ஐந்து. பெற்றோர்களுடன் வெளியூருக்குச் சென்று விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தபோது, இரவு படுக்கச் செல்கையில் தானும் கட்டிலிலேயே படுக்க வேண்டும் என்று அடம் பிடித்த காரணத்தால், எவ்வளவோ சொல்லியும் கேளாததால், கோபமே வாராத பக்தவத்சலங்கூட ஆத்திரத்தோடு கோபங்கொண்டு பேசினாராம்.

**கூச்சம் தெரியாது :**

தம் மகள் ருக்குமணியைப் பெயரிட்டு அழைக்கக்கூட அவருக்குக் கூச்சம். எந்த வகுப்பில் மகள் படிக்கிருள் என்பதுகூட அவருக்குத் தெரியாது. காரணம், எல்லாவற்றையும் ஞானசுந்தரம் அம்மையார் கவனித்துக்கொண்டதால் அதைக் குறித்தெல்லாம் கவலையேயின்றி அவரால் இருக்க முடிந்தது.

1950-ல் ருக்குமணி பி. எஸ். ஸி., மனையியல் (ஹோம் சைன்ஸ்) படிப்புக்காக மேரி அரசியார்

கல்லூரிக்கு விண்ணப்பித்திருந்தார். கல்லூரிக்குத் தேர்ந்தெடுப்பதற்கான தேதி நெருங்கிக்கொண்டிருந்தது. அச்சமயத்தில் ஒரு நாள் அப்போது கல்வி மந்திரியாய் இருந்த மாதவமேனன், எதிர்பாராமல் ருக்குமணியைப் பார்த்து, 'எந்தக் கல்லூரிக்கு விண்ணப்பம் போட்டிருக்கிறாய்' என்று கேட்டதோடு, உண்மை அறிந்து, 'நான் ஏற்பாடு செய்கிறேன்,' என்றும் கூறினார்.

**மேரி அரசியார் கல்லூரி இல்லை :**

அதையறிந்து, அப்போது பொதுப்பணித் துறை அமைச்சராய் இருந்த பக்தவத்சலம் மிகவும் சினங் கொண்டதோடு, எக்காரணங் கொண்டும் கண்டிப்பாக மேரி அரசியார் கல்லூரியில் சேரக்கூடாதென்று கூறிவிட்டார்.

'சிபாரிசு பிடித்து வந்துவிட்டாள்' என்ற பெயர் ஏற்படக்கூடாதென்று மிகவும் விழிப்புடன் இருந்தார் பக்தவத்சலம். தம் தோழிகளை விட்டுப் பிரிய வேண்டுமே என்று வருந்திய ருக்குமணி தந்தையாரிடம் மிக மன்றாடிக் கேட்டார். மேரி அரசியார் கல்லூரியை விரும்புவதற்கான காரணங்களைத் தந்தையாரிடம் கூறினார். பொறுமையோடு எல்லாவற்றையும் கேட்டுக்கொண்ட தந்தையார், "நண்பர்கள் முக்கியமா, நற்பெயர் முக்கியமா?" என்று கேட்டு மகளைப் பேசாமல் வாயடைக்கச் செய்துவிட்டார். தந்தையாரின் வார்த்தையை மறுத்துப் பேச விரும்பாத ருக்குமணி, மேரி அரசியார் கல்லூரியை விட்டு, ராஜதானிக் கல்லூரியில் பூகோளபாடம் எடுத்துக்கொண்டு பி. ஏ., படித்து முடித்தார்.





மகள் திருமணத்தில் மலரடி வணக்கம்

**திருமணம் :**

ருக்குமணி பிறக்கும் போது தாம் சிறையில் இருந்துவிட்டதால், எந்த விதமான சுகத்தையும் அக்குழந்தை அனுபவிக்கவில்லை என்பது பக்தவத்சலத்தின் எண்ணம். ஆதலால், எப்படியாவது மகளின் திருமணத்தைச் சிறப்பாக நடத்திவிட வேண்டும் என்று அவர் நினைத்ததில் தவறில்லை. அதே போல் மகள் ருக்குமணியை பி. ஏ.,

வரையில் படிக்க வைத்துச் செய்யூர்ச் செம்மல் – பெருநிலக் கிழார் திரு. வி. கே. ராமசாமி முதலியாரின் மூன்றும் மகனை டாக்டர் திரு. சுந்தரராஜனுக்குக் கன்னிகாதானமாகத் தந்து திருமணம் செய்து வைத்தார். சுந்தரராஜன் – ருக்குமணி தம்பதிகளுக்கு 'ஜெயந்தி' என்னும் ஒரு பெண் குழந்தையும் 'ஸ்ரீதர்' என்னும் ஓர் ஆண் குழந்தையும் உண்டு. ஸ்ரீதரிடத்தில் பத்தவத்சலத்திற்கு உயிர். மந்திரி தாத்தா காரில் போவதென்றால் ஸ்ரீதருக்கு ஒரே 'குஷி'தான்!

**விசித்திரமானது:**

பக்தவத்சலம் குடும்பம் விசித்திரமானது. தந்தையார் நாடு பெரிதென்று நினைப்பார்; நாட்டு மக்கள் நலனுக்கு உழைப்பார். தாயார், வீடு பெரிதென்று, வீட்டு மக்கள் நல்வாழ்வுக்காக உழைப்பார். மூத்த மகளோ, பெண்கள் சமுதாயம் பெருமையோடு வாழவேண்டும் என்று நினைத்து, சொல்லாலும் செயலாலும் தொண்டு செய்து வருவார். மூத்த மருமகனர் நிலபுலங்களைக் கவனிப்பதில் தமது நேரத்தைக் கழிப்பார். பக்தவத்சலத்தின் குடும்ப வாழ்க்கை, செம்மையுடன் சீரும் சிறப்பும் பூத்துக் குலுங்குவதற்குக் காரணம், ஞானசுந்தரம் அம்மையாரின் செல்விருந்தோம்பி வருவிருந்துக்காகக் காத்திருக்கும் பான்மைதான் என்று கூறினல், அஃது மிகையாகாது.

ஞானசுந்தரம் அம்மையார் ஒரு குடும்ப விளக்கு! அவர் நடமாடும் ஒரு பல்கலைக் கழகம்! குடும்பப் பொறுப்புகள் அனைத்தையும் ஞான





மகளின் திருமணத்தில் அந்நாள் முதலமைச்சர்

சுந்தரம் அம்மையார் ஏற்றுக்கொண்டதால், பக்தவத்சலத்திற்குக் குடும்பக் கவலையில்லை. தமது மனத்தில்பட்டதை யார் என்ன நினைத்துக்கொண்டாலும் கவலைப்படாமல் சொல்லிவிடும் இயல்பு இளமை முதற்கொண்டே கைவரப் பெற்றிருந்தார் ஞானசுந்தரம் அம்மையார்; எதிலும், வழவழ என்று இராமல் கண்டிப்பாய் இருப்பார்.

தாமொரு மந்திரியின் மனைவியார் என்னும் எண்ணமோ வேறுவிதமான புறக்கணிப்பு மனப்போக்கோ எப்போதும் அந்த அம்மையாருக்கு இருந்ததேயில்லை. தமக்கு வேண்டியவர்களைப் பார்க்க வேண்டுமானல், அவர்கள் தம்மிடம் வரா

விட்டாலும், கவலைப்படாமல் தாமே புறப்பட்டுச் சென்று அவர்களைப் பார்த்து விட்டு வரும் மனத் தூய்மை கொண்டவராய் - மாதர் குல மாணிக்க மாய் அவ்வம்மையார் திகழ்கின்றார்.

அந்தக் காலத்தில் பெரும்புகழுடனிருந்த வேங்கடராம சாஸ்திரியார் குடும்பத்திலிருந்த பெண்களும், சி. ஆர். திருவேங்கடா சாரியாரின் குழந்தைகளும் ஞானசுந்தரம் அம்மையாரோடு படித்த பள்ளித் தோழியராவர்.


**எளிய இயல்பு :**

தம்மோடு படித்த பள்ளித்தோழிகளையும் வேண்டியவர்களையும் தொடர்ந்தாற்போலச் சில நாள்கள் பார்க்கவில்லையென்றால், உடனே அவர்களுடைய வீட்டிற்குச் சென்று பார்த்துவிட்டு வந்தால்தான் அம்மையாருக்கு மனநிறைவு ஏற்படும். இயல்பிலே கண்டிப்பு மிகுந்த அவரைச் சிறந்த நீதிபதியென்றுகூடக் கூறலாம். தமக்கு வேண்டியவர்கள் - உறவினர்கள் என்பதற்காக எதையும் அநீதியாகச் சொல்லும் வழக்கம் அவரிடம் முற்றும் இல்லை.

ஒரு சமயம் தம்மோடு படித்த அம்மையார் ஒருவரின் மகளுக்குத் திருமணம் உறுதியாகி விட்டது என்பதை ஒருவர் மூலம் கேள்வியுற்ற போது மிகுந்த ஆத்திரங்கொண்டதோடு தமக்கு முதலில் சொல்லாதது பெரிய தவறு என்றும் அவர் கருதினர் என்றால் அவரது உரிமை கொண்ட மன நிலையை என்ன என்பது!



சம்மந்தி வி. கே. ஆர். தம்பதிகளுடன் மகளும் மருமகனும்



தமது 'மல்லிகா' மாளிகையில் கவர்னர் பிரகாசாவுடன்

## புதிய வீடு :

ஞானசுந்தரம் அம்மையார் வந்த பிறகுதான் மீஞ்சூரிலிருந்த கொஞ்ச நஞ்சம் சொத்துகளை விற்று மயிலையில் வாரன் சாலையில் 'மல்லிகா' என்ற வீடு கட்டி முடிக்கப்பட்டது. 1938-ல் வயிற்றுக் கோளாறு போன்ற தொல்லைகளினால் உடல் நலமற்றிருந்த திருமதி பக்தவத்சலம், மருத்துவ நிலையத்தில் மூன்று மாதங்களுக்குக் குறையாமல் படுக்கையிலேயே இருந்தார். அவர் தங்கையான கற்பகம் அம்மையார் உடன் இருந்து கவனித்துக்கொண்டார். அந்தச் சமயத்தில்கூட அரசியலில் முழு நாட்டம் செலுத்தி இருந்த காரணத்தால், திரு. பக்தவத்சலம் ஞானசுந்தரம் அம்மையாரை வந்து பார்க்க இயலவில்லை.

**உடல் நலமில்லை :**

பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் - அதாவது 1948-ல் ஞானசுந்தரம் அம்மையார் உடல் நல மின்றிப் படுத்த படுக்கையாய் இரண்டரை வருடங்கள் இருந்தார். முதுகில் சொல்லி முடியாத வலி காரணமாகப் படுக்கையில் இருந்த அம்மையாரை, குடும்ப டாக்டர் குருசாமி முதலியாரும், டாக்டர் செரியன், டாக்டர் ராய் போன்றவர்களும் கவனித்துக்கொண்டார்கள். அந்த நேரத்திலும் பக்தவத்சலம் வந்து பார்த்ததே மிகவும் குறைவு என்று தான் சொல்லுதல் வேண்டும். காரணம், அந்த அளவுக்கு அவருக்குள்ள நாட்டு வேலையே.

இளமையிலேயே கள்ளம் கபடமற்ற உள்ளம் கொண்டவராய், சுற்றத்தாரயினும் வேறு எவராயினும் துன்பமுறச் சகியாதவராய், எல்லாரும் சமம் என்ற உயர்ந்த நோக்குடைவராய், காந்தியடிகளின் வாய்மை நெறியிலிருந்து பிறழாதவராய், வீண் ஜம்பமோ பகட்டோ பிடிக்காதவராய், தாய்க்குலத்தின் திருவிளக்காய்த் திகழ்கிறார் ஞானசுந்தரம் அம்மையார். அவர் தம் தங்கை பட்டம்மாளை தாயினும் மேன்மையுற வளர்த்து தற்போது மத்திய அமைச்சராய்த் திகழும் திரு ஓ. வி. அளகேசன் அவர்களுக்கு திருமனம் செய்துவைத்தார்.

**ஒருமைப்பாட்டின் உருவம் :**

பற்பல சூழ்நிலைகளுக்கு இடையில் பல இன்ப துன்பங்களைத் தாண்டி, பிள்ளைகளுக்கு உயர்ந்த பண்புகளையும் அறிவையும் வளர்த்து வருவதோடு மற்றவர்களுக்காக இரக்கப்படுவது, சகிப்புத் தன்மை, உண்மை பேசுவது, விட்டுக் கொடுக்கும்



மனை விளக்கும் மலை விளக்கும்

இயல்பு, எளிய வாழ்க்கை, சிக்கனம் இவை போன்ற நல்ல பல பண்புகளையும் ஞானசுந்தரம் அம்மையார் கற்றுக்கொடுத்தார். நாம் தேசிய ஒருமைப்பாட்டைக் குறித்துப் பேசுகிறோம்—எழுது கிறோம். அந்த ஒருமைப்பாட்டின் சின்னமாய் திருமதி ஞானசுந்தரம் திகழ்கின்றார் என்றால், அது மிகையாகாது.

முதல்சட்ட மறுப்பிலிருந்து தூய கதராடை யையே உடுக்கத் தொடங்கிய திருமதி பக்தவத் சலம், சுதந்தரப் போராட்டக் காலங்களில் பல இன்னல்களையும் கொடுமைகளையும் அனுபவித் துள்ளார். உடல் நலம் சரியில்லையானாலும், ஆன் மிகக் கூட்டங்களுக்குச் செல்லுதலில் மிகுந்த பற்று அம்மையாருக்கு உண்டு. மைந்தன் சித்த ரஞ்சனிடத்தில் அதிகப் பற்றும் அன்பும் கொண்ட அம்மையார், 'என் மகன் தர்மபுத்திரன்; தாம் செய்த தவப்பயனாலேதான் பிறந்தான்,' என்றெல் லாம் நினைக்கின்ற இயல்பு கொண்டு வாழ்கிறார்; சித்தரஞ்சன் வெளி நாட்டிலிருந்து திரும்பிவந்த பிறகும் ஓராண்டு படுக்கையிலேயே இருந்தார்.

**மாமியார் மெச்சிய மருமகள் :**

மருமகளைத் தம் மகளுக்கு மேலாகவே நினைக் கக்கூடிய உயர்ந்த மாமியாராய்த் திகழும் அம்மை யார், வீட்டில் சாதாரணமாக மருமகள் பக்கந் தான் பேசுவார், இருப்பார். தாம் பெற்ற ஒரே மைந்தன் தம்மிடம் இல்லாமல் இருபது வயது முதற்கொண்டே வெளியூரில் இருப்பது ஒன்று தான் அந்த அம்மையாரின் பெருங்குறையாய் இருக்கின்றது. ஆனாலும், எங்கோ மகிழ்ச்சியுடன்

இருக்கட்டும் என்றுதான் அத்தாயுள்ளம் அவ்வப்போது நினைக்கும்.

கடந்த தேர்தல் முடிவன்று, ஞானசுந்தரம் அம்மையார் குடும்பத்தினரும் மற்ற உண்மையான தேசிய நண்பர்களின் குடும்பத்தினரும் பக்தவத்சலத்தின் தேர்தல் முடிவினைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற பேராவலுடன் காத்திருந்தார்கள். ஆனால், திருமதி ஞானசுந்தரம் அம்மையாரோ, வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, தம் பேர்த்திக்குச் செய்யவேண்டிய கடமைகளையெல்லாம் செய்துவிட்டு, நிம்மதியாய்ப் படுத்து உறங்கிவிட்டார். முடிவு தெரிந்தவுடனே சிலர் ஓடோடி வந்து அந்த நற்செய்தியைச் சொன்னார்கள். அந்த நேரத்திலும் அமைதியாக 'அப்படியா? சரி!' என்று ஒரே வார்த்தை கூறிவிட்டுப் படுத்துவிட்டார் திருமதி ஞானசுந்தரம். விருப்பு வெறுப்பு அதிகம் வைத்துக்கொள்ளாத இத்தகைய வாழ்விற்கு ஓர் உயர்ந்த எடுத்துக்காட்டாய் அவ்வம்மையார் திகழ்கின்றார்.

எல்லாரிடமும் இனிமையாகவும் கனிவோடும் திருமதி ஞானசுந்தரம் பேசிக்கொண்டே இருப்பார். ஆனால், பக்தவத்சலம் அதிகமாகப் பேசவே மாட்டார். எதையும் ஆழ்ந்து சிந்திப்பார். ஞானசுந்தரத்தின் தங்கையார் கற்பகம்மாள் எவரிடமும் கலகலப்பாகப் பேசாமல் மௌனமாய் இருப்பார். ஆனால், கற்பகம்மாளின் கணவர் சர். பி. டி. ராஜனோ, கலகலவென்று பேசிக்கொண்டே போவார். இப்படித்தான் இயற்கையின் ஏற்பாடும் அமைப்பும் அமைந்திருப்பதை நம்மால் கண்டு வியக்க நேர்கின்றது.





உதகையில் குடும்பத்துடன்

# 7

## குன்றின் மேல் இட்ட விளக்கு

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

— திருநாவுக்கரசர்.

பக்தவத்சலம் 1946–ஆம் ஆண்டுமுதல் 1963–ஆம் ஆண்டு வரை அமைச்சரவையில் பல வகையான பதவிகளை ஏற்றிருந்தார்.

**1946 :**

மக்களால். தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய மாநிலச்சர்க்கார் திரு. டி. பிரகாசம் தலைமையில் 1946–ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம் 30–ஆம் தேதி பதவி ஏற்றது. அச்சமயம் திரு. பக்தவத்சலம் மராமத்து (பொது), பாசனம், நெடுஞ்சாலை

இலாக்காக்களின் மந்திரியாய் நியமிக்கப் பட்டார்.

**1947 :**

பிரகாசம் மந்திரிசபை 1947-ஆம் ஆண்டு மார்ச்சு 23-ஆம் தேதி ராஜிநாமாச் செய்தது. அதன் பின் திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியாரை முதன் மந்திரியாகக் கொண்ட ஒரு புதிய மந்திரி சபை அமைக்கப்பட்டது. அப்பொழுது சட்ட சபைக் கட்சியின் தலைவரைப் 'பிரதமர்' என்று குறிப்பிடுவது வழக்கம். புதிய மந்திரி சபை, மார்ச்சு 23-ஆம் நாள் பிற்பகலில் பிரமாணம் செய்து பதவி ஏற்றது. திரு. பக்தவத்சலம் திட்ட மியற்றல்—மராமத்து இலாக்கா அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

**1949 :**

ராமசாமி ரெட்டியார் அமைச்சரவை இரண்டு ஆண்டுகள் பதவி வகித்த பின் 1949, ஏப்பிரல் 6-ஆம் தேதி ராஜிநாமாவைக் கொடுத்தது. அதற்குப்பிறகு, காலம் சென்ற பி. எஸ். குமார சாமிராஜா ஒரு புதிய மந்திரி சபையை அமைக் கும்படி அழைக்கப்பட்டார். அந்த மந்திரி சபை 1949, ஏப்பிரல் 9-ஆம் தேதி பதவி ஏற்றது! அச் சமயம் பக்தவத்சலம் செய்தித்துறைப் பொருப் புடன் மராமத்து இலாக்கா மந்திரியாக நிய மிக்கப்பட்டார்.

**1952 :**

முதலாவது பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு ராஜாஜி 1952-ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம் புதிய



மந்திரி சபையை அமைத்தார். பதினைந்து அங்கத் தினரைக்கொண்ட அந்த மந்திரி சபையில் பக்த வத்சலம் சேர்க்கப்படவில்லை.

**1953 :**

ஆனால், 1953-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி புதிய ஆந்திர மாநிலம் அமைக்கப் பட்டதன் விளைவாக, சென்னை மாநில மந்திரி சபையில் அறுவர் ராஜிநாமாச் செய்தனர். இதன் விளைவாக, 1953-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 10-ஆம் தேதி பக்தவத்சலம் காடுகள், மீன் பிடித் தல், கிராம சேம நலம், சமுதாய முன்னேற்றத் திட்டங்கள், தேசிய முன்னேற்றத் திட்டம் ஆகிய வற்றின் பொறுப்புடன் விவசாய மந்திரியாகவும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

**1954 :**

காமராஜ் 1954-ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம் 13-ஆம் தேதி காங்கிரஸ் கட்சியின் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே, அவரது மந்திரி சபை அன்று பதவி ஏற்றது. அப்பொழுது திரு. பக்தவத்சலம் விவசாய மந்திரியாகப் பதவி ஏற்றார். காடுகள், மீன் பிடித்தல், தொழில், கிராமிய சேமநலம், சமுதாய முன்னேற்றத் திட்டங் கள், தேசிய முன்னேற்றத் திட்டங்கள், மாதர் நலம், கைத்தொழில், தொழிலாளர், மிருக வளர்ப்பு, மிருக வைத்தியம் ஆகிய இலாக்காக்களின் பொறுப் பையும் எற்றார்!

**1956 :**

மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்ட பிறகு திரு. ஏ. பி. ஷெட்டி தமது மந்திரி பதவியை 1956, அக்டோபர் 31–ஆம் தேதிப் பிற்பகலில் ராஜி நாமாச் செய்தார். இதன் விளைவாக, விவசாய மந்திரி பதவி வகித்த திரு. பக்தவத்சலத்துக்குக் கீழ்காணும் இலாக்காக்கள் அளிக்கப்பட்டன.

(1) காடுகள், (2) மீன் படித்தல், (3) கிராமச் சேம நலன், (4) சமுதாய முன்னேற்றம், (5) தேசிய முன்னேற்றம், (6) மாதர் சேம நலன், (7) கைத்தொழில், (8) தொழில், (9) மிருக வளர்ப்பு, மிருக வைத்தியம், (10) கூட்டுறவு, (11) வீடமைப்பு, (12) மாஜி இராணுவத்தினர்.

**1957 :**

காமராஜை முதன் மந்திரியாகக் கொண்ட மந்திரி சபையில் திரு. பக்தவத்சலம் உள் துறை மந்திரியாய் நியமிக்கப் பட்டார். (1) நீதி மன்றங்கள், (2) சிறைகள், (3) மது விலக்கு, (4) உணவு, (5) விவசாயம், (6) கதர், (7) கிராமக் கைத்தொழில்கள், (8) இந்து மத அறநிலையப் பாதுகாப்பு நிறுவனங்கள், (9) மிருக வைத்தியம், (10) தந்தி, தபால், ரயில்வே, சிவில் விமானப் போக்கு வரத்து ஆகிய இலாக்காக்களின் பொறுப்பை அவர் ஏற்று நடத்தி வந்தார்.

**1962 :**

மூன்றுவது பொதுத் தேர்தலுக்குப் பின் திரு. காமராஜ் புதிய மந்திரி சபை அமைக்கும்படி



காமராஜ் அமைச்சரவையில்



பெருந்தமிழரும் பெருந்தலைவரும்

கேட்டுக் கொள்ளப்பட்ட போது திரு. பக்தவத்சலம் உட்பட ஒன்பது அங்கத்தினர்களைக் கொண்ட மந்திரி சபையை அவர் அமைத்தார். அச்சமயம் திரு. பக்தவத்சலம் நிதி மந்திரியாய் நியமிக்கப்பட்டார். அவரிடம் கல்வி, தொழிலாளர், நீதி மன்றங்கள், சிறைகள், சட்டசபைகள், கதர், கிராமக் கைத்தொழில்கள், இந்து மத அறநிலையப் பாதுகாப்பு நிறுவனங்கள் ஆகியவை ஒப்படைக்கப்பட்டன!

**1963:**

காமராஜ் கட்சி வேலையின் பொறுப்பேற்கத் தம் பதவியை ராஜிநாமாச் செய்தார். காமராஜ் திட்டம், பல்வேறு மாநில மந்திரி சபைகளிலும் அநேக மாறுதல்களை விளைவித்தது. 1963-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 2-ஆம் தேதியிலிருந்து தமிழ் நாட்டில் முதன் மந்திரியாய்ப் பதவி ஏற்றார் திரு. பக்தவத்சலம். இப்பொழுது (1) நிதி, (2) கல்வி, (3) தொழிலாளர், (4) சட்டசபைகள், (5) தேர்தல், (6) இந்து மத அறநிலைய நிறுவனங்கள் ஆகியவை அவரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இன்று (1) பொதுச் செய்திகள், (2) மாவட்ட நிருவாகம், (3) ரெவின்யூ போர்டு, (4) ரெவின்யூ நிறுவனங்கள், (4) திட்டமிடுதல், (5) அரசாங்க மொழி என்பன அவர் பொறுப்பில் இருக்கின்றன.

**முற்போக்கு சிந்தனையாளர்:**

தாம் பதவி வகித்த காலத்தில், பக்தவத்சலம் ஆற்றியிருக்கிற சாதனைகளைப் பார்க்கும்போது



முதலமைச்சரானதும் முதல்விழா

அவருக்குள்ள ஆற்றலும் திறமையும் நன்கு வெளிப்படுகின்றன. 1946-ஆம் ஆண்டிலிருந்து, ஒவ்வொருவர் அமைத்த மந்திரி சபையிலும் அவர் பதவி வகித்துச் செய்திருக்கிற சாதனைகள் எண்ணிலடங்காதவை! அனுபவத்தாலும், ஆழ்ந்து சிந்திக்கின்ற தன்மையாலும், பக்தவத்சலம் உறுதியுடன் ஆற்றி இருக்கும் செயல்களுள் ஒவ்வொன்றும் வீண் போகவில்லை! நாட்டுக்காக, மக்களுடைய நலனுக்காக, எதிர்ப்புகளையும் துன்பங்களையும் ஏற்று அவர் பொறுமையுடன் செயலாற்றி யிருக்கிறார். இவ்வளவு சிறப்புடன் அவர் செயலாற்றி இருப்பதற்கு முக்கியமான காரணம், அவர் முற்போக்குச் சிந்தனையாளராய் இருப்பதுதான். தாம் பதவிக்கு வருவதற்கு



முன்பு, மராமத்து இலாக்காவில் நிரம்பி யிருந்த வேண்டாதவற்றை யெல்லாம், 'வேண்டா' என்று ஒதுக்கித் தள்ளிவிட்டார்! துணிச்சலோடும், அமைதியோடும் அவர் செய்த மாறுதல்கள், இறுதியில் தமிழ் நாட்டிற்குப் பெரும்பயனைத் தேடித்தந்தன!

**மூவகைத் திட்டங்கள் :**

பக்தவத்சலம் மராமத்து இலாக்காவை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு, ஒரு திட்டம் பலன் அளித்தால்தான் செயற்படுத்துவதற்கு ஏற்றுக் கொள்ளப்படும். அத்திட்டத்தின் மூலம் வருகிற அதிகமான நிலவரி, தண்ணீர்த் தீர்வை ஆகியவை, அவ்வாண்டின் சர்க்கார் வாங்கிய கடன் தொகை, வட்டி இவற்றிற்குச் சமமாய் இருந்தால் மட்டுமே, அத்திட்டம் பயன் அளிக்கும் என்ற எண்ணத்துடன் செயற்படுத்த ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இது ஒரு தேவையில்லாத கொடிய திட்டம் என்றும், இதன் மூலம் அதிகமாகக் கிடைக்கிற மற்ற வரிகளின் தொகையும், வேறு பல நல்ல மறைமுகமான பலன்களும் கண்களுக்குத் தெரியாமல் மறைத்து விடுகிற காரணத்தால், இது ஒரு பயன்படாத முறை என்றும் அரசாங்கம் எண்ணியது.

**கொடுமை ; இது வேண்டா :**

இத்தகைய கொடிய திட்டத்தின் குறைந்த பலன்களை நன்கு உணர்ந்த பக்தவத்சலம், உடனடியாகப் புதிய முறைத் திட்டத்தை நுழைக்க

விரும்பினர். இந்தக் கொடிய திட்டம் உடனடியாகக் கைவிடப்பட்டது. உணவில் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் மட்டுமேயன்றி, பின் தங்கியிருக்கிற விவசாயத் துறைக்குப் புதிய ஆக்கம் கொடுத்து முன்னேற்ற வேண்டுமென்னும் எண்ணத்துடனும் மூவகைத் திட்டம் உருவாகியது. குறுகிய காலத்திட்டம், மத்திய காலத்திட்டம், நீண்ட காலத்திட்டம் என்னும் இப்புது முறைத் திட்டத்தால், நல்ல பலன்கள் ஏற்படத் தொடங்கின.

### கீழ் பவானித் திட்டம்:

1946-ஆம் ஆண்டு, மக்கள் சர்க்கார் ஆட்சிக்கு வந்ததும், நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையில் கீழ் பவானி அணைத் திட்டத்தைத் தொடங்கியது! இது பெரிய, மலைபோன்ற திட்டமாகும்! இதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசன வசதியைப் பெற்றன.

### மணி முத்தாற்றுத் திட்டம்:

1950-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 20-ஆம் நாள் மராமத்து மந்திரியாய் இருந்த பக்தவத்சலம் மணி முத்தாற்று நீர்த்தேக்கத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இது திருநெல்வேலி மாவட்டத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும். நீர்ப்பாசன வசதி இன்றித் தவித்துக்கொண்டிருந்த அந்த மாவட்டத்து விவசாயப் பெருங்குடி மக்கள், இத்திட்டத்தால் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். காய்ந்து கிடந்த நிலங்



கள் கண்களுக்குக் குளிர்ச்சியாகக் காட்சியளிக்கத் தொடங்கின! வற்றி இருந்த ஏழைகளின் வயிறுகள், சற்றே நிம்மதியடைந்தன! சோர்ந்து சுருங்கிப் போயிருந்த விவசாயிகளின் முகங்கள், மலர்ந்து விரிந்தன! திருநெல்வேலி மாவட்டம் செழிப்பு மிகுந்த மாவட்டமாய் மாறத் தொடங்கியது! இந்தப் பிரமாண்டமான நீர்த்தேக்கத் திட்டம் பக்தவத்சலத்தின் சாதனைக்கு அடித்தளம் போலக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது! 1958-ஆம் ஆண்டு நிறைவெய்திய இத்திட்டம், தாமிரபரணி நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழுள்ள அணைக்கட்டுகளுக்கு ஒழுங்காக நீரை அனுப்ப உதவி செய்கிறது. அதுமட்டுமன்றி, அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, திருச்செந்தூர், நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய ஐந்து தாலூக்காக்களுக்கும் தண்ணீரைப் பாய்ச்சுகிறது!

### ஆரணியாற்றுத் திட்டம்:

பக்தவத்சலம் 1951, ஜூலை, 23-ஆம் தேதி ஆரணியாற்றுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்திற்குச் செலவான மொத்தத் தொகை ரூ. 95·2 லட்சங்கள். இதனால் 2970 ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசன வசதியைப் பெறுகின்றன. இன்னும் இது 2530 ஏக்கர்ப் புதிய நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அதுமட்டுமன்றி 5700 ஏக்கர் நிலத்திற்கு, ஒரு புதிய கால்வாய் மூலம் நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தித்தர, இத்திட்டம் பேருதவி செய்கிறது. ஆனால், ஆந்திர மாநிலம் தனியாகப் பிரிக்கப்பட்ட நேரத்தில், 1960-ஆம்

ஆண்டில் இது ஆந்திர சர்க்காருக்குச் சொந்த மானதாக மாற்றப்பட்டுவிட்டது.

**மேட்டூர் கால்வாய்த் திட்டம் :**

இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு 1949-ஆம் ஆண்டு அனுமதி கிடைத்தது. இதனால், சேலம், கோயமுத்தூர் மாவட்டங்கள் பெரிதும் பலனடைகின்றன. ஏறக்குறைய 45,000 ஏக்கர் நிலங்களுக்கு இதன் மூலம் நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இதைக் கட்டி முடிக்க ரூ. 245 லட்சம் செலவானது.

**ஏரிகள் :**

ஏரிகளின் மூலம் நீர் பாய்ச்சத் திட்டம் வகுக் கப்பட்டது. அதனால், அது 1949-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த மாநிலம் முழுவதும் சிதறுண்டுகிடக்கும் பல்லாயிரக்கணக்கான கிரா மங்களில் உள்ள குளங்களில் தண்ணீர் பெருகுவ தற்கு வழி வகுத்து அக்குளங்கள் திருத்தியமைக் கப்பட்டன. இது ஏழைகளுக்கும், மத்தியதர விவசாயிகளுக்கும் பெரும்பயனை அளித்தது. இம் முறையில் 1952-ஆம் ஆண்டு வரை சுமார் 1528 பாசனத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

புள்ளம்பாடி, கட்டளைக் கால்வாய்க் குடி தண் ணீர் கிடைக்கிற பிரச்சினையும், அரசாங்கத்தால் பரிசீலனை செய்யப்பட்டது.

**காவேரித் திட்டம் :**

காவேரித் திடல் தண்ணீர்த் திட்டம் 1951-ல் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு ரூ. 35 லட்சம் செலவாகலாம் என்பது தீர்மானிக்கப்பட்டது.



**இதோ முன்னேற்றம் !**

நீர்ப்பாசன வசதிதான் விவசாயத்தின் உயிர் நாடி ! நீர் இல்லாமல் எந்த வித முன்னேற்றத்தை யும் உணவுத் துறையில் ஏற்படுத்த இயலாது ! காய்ந்து வரண்ட பகுதிகள் வளமான நிலங்களாக வேண்டுமென்றால், நீர்ப்பாசனத் திட்டம் பெரிதும் தேவை. சுமார் நூற்றைம்பது ஆண்டு வரை ஆங்கிலேயர் ஆட்சியில் சென்னை மாநிலம் முழு வதற்கும் பாசன வசதிக்கென்று செலவிடப்பட்ட மொத்தத் தொகை, மேட்டூர்த் திட்டம் உட்பட, ரூ. 18 கோடி மட்டுந்தான் ! ஆனால், திரு. பக்த வத்சலம் பதவிக்கு வந்த காலத்திலும் அதற்குப் பிறகும், கடந்த ஐந்து வருட காலத்தில் பாசனத் திற்கு ரூ. 28 கோடிக்கும் அதிகமாகச் செலவிடப் பட்டிருக்கிறது. இது முன்னேற்றமல்லவா ? இரண் டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 3,30,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ராஜ்ய சர்க்கார் இரண்டு ஐந்தாண்டு திட்டக் காலத்தில்சிறிய பாசனத் திட்டங்களுக்கென ரூ. 739 லட்சம் செலவு செய் துள்ளது. குழாய்க் கிணறுகள் போன்றவற்றை முன்னேற்றப் பரவலான முறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் 1954–55-ஆம் ஆண்டில் இலட்சிய அளவைவிட அதிக பலன்கள் அளித்துள்ளன. எண்ணெய் எஞ்சின் கள், மின்சார மோட்டார்கள் ஆகியவற்றை மத்திய வகுப்பு விவசாயிகளுக்குத் தவணை மூலம் விற்பனை செய்யும் திட்டம் பெரும்பயனை அளித்துள்ளது. 'முன்னேற்றமில்லை,' என்போர் இதைச் சிந்திக் கட்டும் ! எந்த வகையில் முன்னேற்றமில்லை ?

**மின்சாரத்தில், 'மின்சார' முன்னேற்றம் :**

இன்றைய சமுதாயத்தில் மின்சாரத்தின் தேவை ஒதுக்கித் தள்ள இயலாத ஒன்ருகிவிட்டது. எடுத்ததற்கெல்லாம் மின்சாரத்தின் துணை தேவைப்படுகிறது. மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் சென்னை மாநிலம் பெருமைப்படுகிறது. மற்ற எல்லா மாநிலங்களைக்காட்டிலும், சென்னை மாநிலம் முன்னணியில் நிற்கிறது. மாநிலச் சர்க்கார் நிருவாகத்தில் பொறுப்பேற்றதும், முதன் முதலாகச் செய்த செயல், முப்பது கோடி ரூபாய்ச் செலவில் மின்சாரத்தைப் பெருக்கத் திட்டமிட்டது தான். இதன்கீழ் ரூ. 364 லட்சம் மதிப்புள்ள மெய்யாற்றுத் திட்டம், ரூ. 236 லட்சம் மதிப்புச் செலவில் கட்டப்பட்ட பைக்காரா மின்சாரத் திட்டம், ரூ. 28 லட்சம் செலவில் மதுரை மின்சார நிலையம், பாபநாசம் மின்சாரத் திட்ட விரிப்பு, ரூ. 265 லட்சம் செலவில் சென்னை நகர மின்சார உற்பத்தி நிலையம் ஆகியவை அடக்கப்பட்டு விட்டன. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 30 கோடி ஆகுமென மதிப்பிடப் பட்டது. இத்திட்டம் சென்னை மாநிலம் முழுதும் வகுக்கப்பட்டது.

**மெய்யாற்று நீர் விசை மின்சாரத் திட்டம் :**

மெய்யாற்று நீர் விசை மின்சாரத் திட்டம் 1250 அடி உயரத்திலிருந்து மெய்யாற்று மலைப் பள்ளத்தாக்கில் விழும் பைக்காரா மின்சார நிலையத் தண்ணீர் முழுவதையும் வீணுக்காமல், நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டம் வெற்றியடைந்து 1952-ஆம் ஆண்டிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்து அனுப்புவதில் தீவிரமாகச் செயற்படத் தொடங்கியது. இத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட டிரான்ஸ்மிஷன் லைன்கள் மெய்யாற்றிலிருந்து ஈரோடுக்கு இரட்டைச் சர்க்கியூட்டு 110 கிலோவாட்டு லைனும், பைக்காராவையும் மெய்யாற்றையும் ஒன்றேடொன்றை இணைக்கும் மற்றொரு 110 கிலோவாட்டு இரட்டைச் சர்க்கியூட்டு லைனும் முதலாவது யூனிட்டு இயங்க ஆரம்பிக்கும் முன்பே செயற்படுத்தப்பட்டு விட்டன.



**பாபநாசம்—இரண்டாவது திட்டம் :**

பாபநாசம் மின்சார உற்பத்தி இரண்டாவது கட்ட விரிப்புத் திட்டம். இதன்கீழ் நீர்த்தேக்கத்தில் அதிகமான தண்ணீரைத் தேக்க, பாபநாச அணைக்கட்டில் 'ஸ்பில்வே'க் கதவுகளை அமைப்பது மிகமிக முக்கியமான செயல் திட்டம் ! அதுமட்டுமன்றி, 7000 கிலோவாட்டு உற்பத்தி செய்யும் மற்றொரு யூனிட்டை அமைப்பதும் இத்திட்டத்தில் முக்கியக் கட்டமாகும் !

**பைக்காரா—மூன்ருவது திட்டம் :**

இதன் அடிப்படையில் நீரைத் தேக்கி வைக்கப் படுவதற்கெனப் பைக்காரா நதியின் குறுக்கே இரண்டாவது அணை கட்டத் திட்டமிடப்பட்டது ! ஒரு புதிய 'பென்ஸ் லாக்' லைன், சுமார் 13,600 கிலோவாட்டுச் சத்தியுள்ள இரு பெரிய உற்பத்தி யூனிட்டுகள்—இதன்கீழ் அமைக்கத் திட்டமிடப் பட்டது !

**நான்காவது திட்டம் :**

இதன்கீழ் 7,000 'கிலோவாட்டு' உற்பத்தி நிலையம் இயங்க ஆரம்பித்தது. இதோடு இந்த வேலை முழுமையடைந்துவிட்டது. பாபநாசம்—திருநெல்வேலி—கயத்தாறு—மதுரை—சிவகங்கை—மதுரை—திருமங்கலம்—தென்காசி—டிரான்ஸ்மிஷன் லைன்கள் அமைப்பு வேலை ஆரம்பிக்கப் பட்டு அவை 1953—54-ல் முடிக்கப்பட்டன!

**மின்னல் வேக மின்சாரத் திட்டம் :**

சென்னை மாநிலத்தில் மின்னல் வேகத்தில் மின்சாரத் திட்டம் செயற்படத் தொடங்கியது! மூன்று கட்டங்களில், அதிகமான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. 'பேசின் பிரிட்ஜ்' மின்சார நிலையம், மிக நல்ல முறையில் பெரிதாக் கப்பட்டு, சுமார் 60,000 கிலோவாட்டு மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு முன்னேற்றப் பட்டது! அடுத்தடுத்து, கொதிகலன்கள் நிறுவப் பட்டன. 1952-ஆம் ஆண்டு மே மாதம் முதலாவது கொதிகலன் நிறுவப்பட்டது. 1952-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாவது கொதிகலன் செயற் படத் தொடங்கியது. 1953-ஆம் ஆண்டு மே மாதம் மூன்றாவது கொதிகலன் இயங்க ஆரம்பித்தது. சென்னை அனல் மின்சார நிலையத்துடன், மேட்டூர் நீர் மின்சார நிலையம் இணைவதற்கான சென்னை—மேட்டூர் இணைப்புத் திட்டம், 1950-ஆம் ஆண்டு முடிவடைந்தது. பாபநாச நீர் விசை மின்சார நிலையத்திலிருந்து வரும் மின்சாரத்தை, இன்னும் அதிகமாக்குவதற்கு ஆரம்பிக்கப்பட்ட மின்சார



நிலையம் 1951-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 9-ஆம் தேதி இயங்க ஆரம்பித்தது.

**சட்டம் வந்தது :**

தனியார் துறையில் இருக்கும் மின்சார நிலையங்களைச் சர்க்காருக்குச் சொந்தமாக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தபோது, 1949-ஆம் ஆண்டு, சென்னை மின்சார நிறுவ னங்கள் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் அடிப்படையில் தனியார் துறை மின் நிலையங்கள் சர்க்காருக்குச் சொந்தமாயின. 1951—52-ஆம் ஆண்டு மூன்று மின்சார உற்பத்தி நிறுவனங் களும் இருபது ஸ்தல ஸ்தாபனத்தின் மின்சார உற்பத்தி நிறுவனங்களும், இந்தச் சட்டத்தின் கீழ்ச் சர்க்காரால் நிச்சயம் செய்யப்பட்டன. மின்சார உற்பத்தியின் மொத்தச் செலவு வருடத் திற்கு வருடம் அதிகரித்தது. 1950—51-ஆம் ஆண்டு, மின்சார இலாக்கா, சென்னை மாநிலத்தில் உள்ள மின்சார உற்பத்தியில் 99 சதவிகிதம் உற்பத்தி செய்தது!

**சில புள்ளி விவரங்கள் :**

அதிகமான மின்சார உற்பத்தி சென்னை மாநில அரசாங்க ஆட்சித் துறையில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. 1946-ஆம் ஆண்டில் மின் சார உற்பத்தி நிலையங்களின் மொத்த உற்பத்திச் சத்தி 98,100 கிலோவாட்டு. 1951-ஆம் ஆண்டு மின்சார உற்பத்திச் சத்தி 1,83,000 கிலோவாட்டு. இன்றைக்கு மின்சார வசதி பெறாத கிராமங்களின்

எண்ணிக்கை மிகக் குறைவு. பாதைகளே சரியாக இல்லாத கிராமங்களுக்குக்கூட மின்சார வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இருளின் முரட்டுக் கரங்களில் சிக்கித் தவித்த ஆயிரக்கணக்கான கிராமங்கள், இன்று ஒளி பெற்றுத் திகழ்கின்றன. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுடன் சென்னையை ஒப்பிட்டுப் பார்க்கிற போது, நம் மாநிலம் மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரை முன் நிற்பதைக் காணலாம். நல்ல முன்னேற்றம் மின்சாரத் துறையில் ஏற்பட்டிருக்கிறது. 1946-ஆம் ஆண்டில் 1,003 கிராமங்களும் நகரங்களும் மின் சார வசதியைப் பெற்றிருந்தன. ஆனால், 1951-ஆம் ஆண்டில் 1,800 கிராமங்கள் ஒளி மயமாக்கப் பட்டன. 1951-ஆம் ஆண்டின் இறுதிக்குள் மக்கள் மின்சாரத்தின் வேகத்தையும், அதனால் ஏற்படுகிற பயனையும் நன்கு உணர்ந்துகொண்டார்கள். சுமார் 16,500 ‘ பம்பு செட்டுகள் ’ இயங்கத் தொடங்கின. பருத்தியிலிருந்து பஞ்சைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலைகளுக்கும், நெல் அரைக்கும் மில் களுக்கும், எண்ணெய் ஆடும் ஆலைகளுக்கும், கருப்பஞ்சாறு பிழிந்தெடுக்கும் இயந்திரங்களுக் கும், மற்றும் பல்வேறு செயல்களுக்கும் 1,500க்கு மேற்பட்ட தொழில் மின்சார இணைப்புகள் இருந்தன.

**நெடுஞ்சாலைகள் :**

சாலைகள் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தின் ஏணிப் படிகள். போக்கு வரத் திற்குச் சாலைகள் இல்லாமற்போனால், வணிகத் துறை செயலற்று நின்றுவிடும். வணிகத்துறை





உழவுக் கருவிகள் பழுதுபார்க்கும் தொழிற்கூட வண்டி

நின்றுவிட்டால், பொருளாதார முன்னேற்றம் செடியிலிருந்து விழும் மலரைப்போல, வாடிப் போய்விடும். அதனால், 1946-ஆம் ஆண்டு எல்லாச் சாலைகளையும் அவற்றின் முன்னேற்றங்களையும் கவனித்துத் திறம்படச் செயலாற்றுவதற்குத் தனி யாக நெடுஞ்சாலை இலாக்கா ஒன்று அமைக்கப் பட்டது. 1951-ஆம் ஆண்டின் இறுதியில் இத் திட்டத்திற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. சென்னை மாநிலத்தில் மொத்தம் 2,12,516 மைல்கள் சாலைகள் இருந்தன.

**உணவும் உழவும் :**

திரு. பக்தவத்சலம் அவர்கள் சுமார் ஒன்பது ஆண்டுகள் விவசாய இலாக்காவின் பொறுப்பில் இருந்தார். 1957 முதல் 1962 வரை உணவு இலாக் காவும் அவர் பொறுப்பில் இருந்தது. சுருக்கமாகச்

சொன்னால், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடியும் வரை அவர் விவசாய இலாக்காவின் பொறுப்பை ஏற்று, அந்தத் துறைக்கே ஓர் வழி காட்டியாய்த் திகழ்ந்தார் எனலாம். பக்தவத்சலம் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். 'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்,' என்னும் திரிகடுகத்துக்கு இணங்க, விவசாயத்தால் விருந் தினரை ஓம்பி வாழ்ந்த உயர்ந்த குடியில் பிறந்த அவர், அத்துறைக்கே மந்திரியானது விவசாயத் திற்கே சிறப்பு; அவரது 'குடி'ச் சிறப்பு. இந்தத் துறையில் அவர் திறம்படச் செயலாற்றி யிருக்கிறார் என்றால், அதற்குக் காரணம் அவர் ரத்தத்தில் விவசாயம் ஊறிப்போயிருக்கிறது என்பதைத் தவிர வேறு என்ன இயம்ப இயலும்? விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர், விவசாய மந்திரியானார்; சிறப்பெய்தினார்!

விதைகளைக் குறைந்த விலைக்கு விற்றல், ரசாயன உரத்தைப் பயன்படுத்துதல், எரு உரம் சேகரிப்பு, மண் வளப் பாதுகாப்பு நடவடிக்கை கள், டிராக்டர்கள், புல்டோசர்கள் மூலம் நிலத்தை ஆழமாக உழுதல் ஆகியனபோன்ற பல்வேறு விவசாயத் திட்டங்களினால் இந்த மாநிலத்தில் உணவு உற்பத்திப் பெருக்கத்தின் சாதனைகள் ஏற்பட்டுள்ளன. விஞ்ஞானக் கருவிகளைப் பயன் படுத்துவதில் இந்த மாநில விவசாயிகள் பின் தங்கிவிடவில்லை. அவர்கள் பச்சைத் தழைகளின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்துள்ள காரணத் தால், பேரளவில் அவர்கள் அதையே உரமாகப் பயன்படுத்துகிறார்கள். 1962, மார்ச்சு, 31-ஆம் தேதி வரை, 40,90,000 ஏக்கர் நிலங்களுக்குப்



பச்சைத் தழைகளையே உரமாகப் பயன்படுத்தி யிருக்கிறார்கள் விவசாயிகள்:

**அள்ளிக் கொடுக்கும் அரசு:**

விவசாயிகளுக்கு அரசாங்கம், குறைந்த விலையில் தரமான விதைகளையும் கருவிகளையும் அள்ளிக் கொடுக்கிறது. இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 134 விதை வினியோகப் பண்ணைகள் செயற்பட்டுக் கொண் டிருந்தன. நெற்பயிர் நிலங்கள் – தானியப் பயிர் நிலப்பரப்பில் 45 விழுக்காடு – 2-ஆம் திட்டத்தின் இறுதியில் சிறந்த விதைகளைப் பயன்படுத்தின. 1955–56-ஆம் ஆண்டில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கடன் தொகை 6 கோடி. ஆனால், அது 1960–61-ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 25·7 கோடியாக அதிகரிக்கப்பட்டது! 'பணத் தரகர்கள்' கிராமங்களில் மிக அதிகம். கிராம மக்களது உடலைப் பிய்த்து எடுக்காத குறையாக, 'பணத் தரகர்கள்' பணம் பிடுங்கி களாய் இருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்கள் மூலம் அவர்களை ஒதுக்கித்தள்ள இயலும். பேரளவில் கூட்டுறவு சங்கங்கள் விவசாயி களுக்குப் பண உதவி செய்து வருகின்றன.

**உணவில் உயர்வு:**

சென்னை மாநிலத்தில் ஏக்கர் ஒன்றுக்கு அரிசியின் சராசரி உற்பத்தி 1300 ராத்தல். ஆனால், அகில இந்தியாவின் சராசரி உற்பத்தியோ, 816 ராத்தல். இதிலிருந்து சென்னை மாநில விவசாயி இந்தியாவில் உள்ள மற்ற விவசாயிகளை,

விடச் சராசரி 50 சதவிகிதம் அதிக உற்பத்தி செய்கிறன் என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே, இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களில் வாழ்கிற விவசாயிகள், நம் விவசாயிகளைப் பின் பற்றி நடந்தால், உற்பத்தி பெருகும் என்னும் முடிவுக்கு நாம் வர வேண்டியுள்ளது. நம் மாநிலத்தில் பத்து ஆண்டுகளுக்கு முன் 1,35,000 டன் உணவு பற்றக்குறை இருந்தது. ஆனல், இப்பொழுது 2,30,000 டன் உணவு அதிகமான அளவில் உற்பத்தியாகிறது. அந்த அளவுக்கு நம்மை நாம் மாற்றிக்கொண்டிருக்கிறேம் என்றல், சலியாத உழைப்பும், ஆர்வமுமே அதற்குக் காரணம். இந்த மாறுதல் எங்கும் ஒரே அளவாகக் கொண்டு வரப்படவில்லை. ஆனல், 1954–55-ஆம் ஆண்டிலேயே நாம் நம் சுயத்தேவைகளை முடித்துக்கொண்டு முன்னேறிவிட்டோம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாநிலம் ஆண்டிற்கு 36 லட்சம் டன்னிலிருந்து 44 லட்சம் டன் உற்பத்திக்கு உயர்ந்திருக்கிறது. இரண்டாவது திட்டக்காலத்தில் உணவு தானியங்களின் உற்பத்தி மட்டம் 44 லட்சம் டன்னிலிருந்து 52 லட்சம் டன்னுய் உயர்ந்தது. உள்ளூர் உரங்கள், சிறந்த விதைகள் வினியோகம், நாற்றுகள் பாதுகாப்பு, விவசாயக் கருவிகளின் பெருக்கம் முதலியவற்றைப் பஞ்சாயத்து யூனியன்களிடம் 1961-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்பது, விவசாயத் துறையில் ஏற்படுத்தியிருக்கிற உண்மையான சிறந்த மாற்றமாகும்.



**போர்டு நிறுவனங்கள் :**

போர்டு நிறுவனத்தின் சிபாரிசின்மீது, தஞ்சை மாவட்டத்தில் கொண்டுவரப்பட்ட தீவிர நெற்பயிர் விவசாயத் திட்டம் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது. அது உணவு உற்பத்தித் திட்டத்தை விரைவாகச் செயற்படுத்துவதற்கு ஊக்கத்தை அளித்துள்ளது.

**கதர், கிராமத் தொழில்கள் :**

கதரும் கிராமத் தொழில்களும், பொருளாதார முன்னேற்றத்தில் மிகப்பெரிய பங்கு பெற்றிருக்கின்றன. திட்ட வல்லுநர்களும், நிபுணர்களும், கதர் கிராமத் தொழில்களைப்பற்றிச் சீரிய முறையில் ஆராய்ந்து வருகிறர்கள். அவற்றின் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்ந்து ஒப்புக்கொண்டிருக்கிறர்கள். இந்திய நாட்டில் கதர் உற்பத்தியைச் சென்னை மாநிலந்தான் முதன் முறையாகக் கொண்டுவந்தது. மற்ற மாநிலங்களுக்கு இது வழி காட்டியாய் அமைந்துவிட்டது. அந்த வகையில் பக்தவத்சலம் அவர்களுக்கு வெற்றி பெரிது. 1947-ஆம் ஆண்டு சர்க்கார் அகில இந்திய நூற்பாளர் சங்கத்தால் நடத்தப்பட்டு வந்த கதர் உற்பத்தி நிலையங்களுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டது!

**கதர்க் கைத்தொழில் :**

இப்பொழுது கதர்க் கைத்தொழிலில் நான்கு லட்சம் நூல் நூற்போரும், பத்தாயிரம் நெசவாளிகளும் ஈடுபட்டிருக்கிறர்கள். ஆண்டுதோறும் சுமார் இரண்டரைக்கோடி ரூபாய் மதிப்புள்ள கதர்



நேருவுடன்

உற்பத்தி செய்யப்படுகிறது. கதர், நெல்லைக் கையால் குற்றுதல், தேனீ வளர்ப்பு, பனம்பாகு முன்னேற்றம் முதலியவை கிராமக் கைத்தொழில்களுடன் இணைக்கப்பட்டு இப்போது மாநிலக் கதர் கிராமக் கைத்தொழில்கள் குழுவின் நிருவாகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளன. பக்தவத்சலம் இந்தத் திட்டத்தின் முன்னோடியாய் விளங்குகிறார்.

**மீன் பிடிப்புத் தொழில் முன்னேற்றம் :**

சென்னை மாநிலத்தில் 620 மைல் நீளமுள்ள கடற்கரையும், நான்கு லட்சம் ஏக்கரில் பரவியுள்ள உள் நாட்டுத் தண்ணீரும் இருக்கின்றன. மீன் பிடிப்பவர்கள் இன்னும் பழைய முறைகளையே பயன்படுத்தி வருகிறார்கள். பரம்பரையாய்ப்



பயன்படுத்திவருகிற படகுகளையும் வலைகளையுமே இன்னுங்கூட அவர்கள் விடாமல் பயன்படுத்தி வாழ்கிறார்கள். புதிய முறையில் மீன் பிடிக்கிற வாய்ப்பும் வசதியும் அவர்களுக்கில்லை. இப்பொழுது மீன் பிடிப்பவர்கள் புதிய முன்னேற்ற இயந்திரங்களைப் பயன்படுத்துவதில் அதிகமாக ஊக்குவிக்கப்படுகிறார்கள். இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 25,47,000 கடனாகவும், உதவித் தொகையாகவும் 63 மீன் பிடிப்போர் கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீன் பிடிக்கும் தொழிலை முன்னேற்றுவதற்காகப் பெரிய அடித்தளம் அமைக்கப்பட்டது. மூன்றாவது திட்டக் காலத்தில் மீன் பிடிப்போர் தொழில் முன்னேற்றத்திற்கென்றே மொத்தம் ரூ. 222 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 79 லட்சம் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது என்பதைக் கவனிக்க வேண்டும்.

**காடுகள் முன்னேற்றம் :**

இந்தியா முழுவதிலும் இருக்கின்ற நிலப்பரப்பில் 33 சதவிகிதம் காடுகள் நிறைந்ததாய் இருக்கிறது. ஆனால், சென்னை மாநில நிலப்பரப்பில் 17 சதவிகிதம் மட்டுமே காடுகளாய் இருக்கின்றன. ஆகையால், இங்கே காடுகள் வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்துடன் இரண்டாவது திட்டத்தில் மிகத் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டது. முதல் இரண்டு திட்டங்களிலும் ரூ. 96 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் சுமார் 71 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. இந்தத் தொகையில் வணிகத்திற்கென்று வேண்டிய



**உதகமண்டலத்தில்**

மரங்களை வளர்ப்பதற்கென ரூ. 46 லட்சம் செலவு செய்யப்பட்டது. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் சோதனை முறை அடிப்படையில் 'காடு வளர்ப்புத் திட்டம்' ஒன்று செயற்படுத்தப்பட்டது.

### விலங்குகள் வளர்ச்சி :

ஐந்தாண்டுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படு முன்பு, மிருக வளர்ப்பு முன்னேற்றத்திற்கான வசதிகள் மிகவும் வரையறுக்கப்பட்டவைகளாய் இருந்தன. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 56 லட்சம் ரூபாயுடன் மிருக வளர்ப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அது ஓர் அடித்தளமாய் அமைந்து விட்டது. தீவிரக் கால் நடை முன்னேற்றத்திற்கான அகில இந்தியக் கிராமத்



திட்டத்தின்கீழ் இந்த மாநிலத்தில் பதினைந்து முக்கிய கிராம வட்டாரங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொன்றிலும் இரண்டாயிரம் பசுக்கள் - எருமைகள் - மற்றக் கால்நடைகள் - கவனிக்கப் பட்டன. புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக் கால் நடைகள் பண்ணை, நீலகிரியில் ரோமமுள்ள ஆடுகளுக்கென ஓர் ஆட்டுப் பண்ணை ஆகிய இவையிரண்டும் முதல் திட்டத்தின் முக்கிய சாதனைகள். இரண்டாவது திட்டக் காலத்தில் பேரளவில் முன்னேற்றம் ஏற்பட்டது. பல்வேறு மாவட்டங்களில் கிராம முன்னேற்ற நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இராமநாதபுரம் மாவட்டத் திலுள்ள செட்டி நாடு என்ற ஊரில் மாவட்டக் கால்நடைப் பண்ணை ஏற்படுத்தப்பட்டது. காட்டுப்பாக்கத்தில் ஓர் ஆட்டுப் பண்ணை நிறுவப் பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் நான்கு 'பசுப்பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இதற்காக ஆன செலவு 239 லட்ச ரூபாய்.

### சமுதாய நல முன்னேற்றம் :

கிராம நல முன்னேற்றத்தில் பக்தவத்சலம் அவர்களுக்கு நீண்டகாலப் பழுத்த அனுபவம் உண்டு. அவர் 1952-ஆம் ஆண்டு முதல் சென்னை மாநிலத்தில் 'கிராமப் புனரமைப்புத்' திட்டத்தின் ஒரே வழிகாட்டியாகி, அதை வெற்றிகரமாக நடத்தி வரும் பெருஞ் சக்தியாய் இருக்கிறார். இந்த மாநிலத்தில் செயல் முறைக்குக் கொண்டு வரப்பட்ட 'பிர்க்கா' முன்னேற்றத் திட்டம், சமுதாய நல முன்னேற்றத் திட்டத்திற்கு ஒரு

முன்ணுேடி என்று சொல்லலாம். சமுதாய முன்னேற்றத் திட்டம் முதலில் 1952-ஆம் ஆண்டில் செயல் முறைக்குக் கொண்டுவரப் பட்டது. அதன் பின், முதல் திட்டக் காலத்தின் இறுதியில் 66 வட்டாரங்களிலும், இரண்டாவது திட்டக் காலத்தில் 222 வட்டாரங்களிலும் இத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வந்தது. இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் ரூ. 19 கோடி செலவாயிற்று. முதல் திட்டத்தில் ரூ. 492 லட்சமாய் இருந்தது, இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 14 கோடியாய் உயர்ந்துவிட்டது. இந்தத் திட்டத்திற்காக, மூன்ருவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ரூ. 20 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

**புதிய விழிப்பு :**

இந்த மாநிலத்தில் 1961-ஆம் ஆண்டில் செயல் முறைக்குக் கொண்டு வரப்பட்ட பஞ்சாயத்து ஆட்சியின் மூன்று கட்டத் திட்டம், எல்லா மக்களேயும் விழிப்படைய வைத்திருக்கிறது. சோம்பி, உணர்ச்சியற்றுக் கிடந்தவர்களே, உணர்வு கொள்ளச் செய்திருக்கிறது அந்தப் புதிய திட்டம்; நம்பிக்கை இழந்தவர்களின் நெஞ்சில் நம்பிக்கையொளியை ஏற்றி வைத்திருக்கிறது; அவர்களது நீண்ட காலத் தூக்கத்தைப் போக் கடித்து, விழிப்படையச் செய்திருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களும், தன்னுடைய அங் கங்களே என்கிற புத்துணர்வை, மாநிலச் சர்க்காரின் நெஞ்சில் இந்தப் புதியத் திட்டம் உருவாக்கித் தந்திருக்கிறது. சென்னே மாநிலத்தில்



12,540 பஞ்சாயத்துகளும், 373 பஞ்சாயத்து யூனியன்களும் இருக்கின்றன. இந்த நாட்டின் தந்தையான காந்தியடிகளின் 'கிராம ஆட்சி' இன்று செயல் முறைக்கு வந்திருக்கிறது. இது நாம் அவருக்குச் செய்கிற அமைதியான நன்றியே. இந்தப் புதிய சீர்திருத்தத்தின் மூலம், இந்த நாட்டில் பரவலாகக் கிடைக்கிற கிராமங் களிலிருந்து ஆயிரமாயிரந் தலேவர்கள் தோன்று வார்கள்; தோன்றுவதற்கு நல்ல வாய்ப்பும் வசதி யும் உண்டு.

**அற நிலேயங்கள் :**

திரு. பக்தவத்சலம் அவர்கள் 1957-ஆம் ஆண்டு முதற்கொண்டு, அற நிலேயங்களே முன் னேற்றுவதில் அக்கறையுடையவராய்த் திகழ்ந்து வருகிருர். அற நிலேயங்கள் இலாக்காவை அவர் ஏற்றுக்கொண்டு, மிகச் சிறப்புறப் பணியாற்றிக் கொண்டிருக்கிருர். 1957-ஆம் ஆண்டு முதல், 1962-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் வரை அப்பதவியை அவர் ஏற்று நடத்திஞர். ஆனுல், 1962-ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் களுக்குப் பிறகும், அதே பொறுப்பு அவரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. 1963-ஆம் ஆண்டில் அவர் இந்த மாநிலத்தின் முதன் மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது முதல், இந்த இலாக்காவுடன் மற்ற இலாக்காக்களேயும் அவர் ஏற்றுத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வரு கிருர். எனவே, அவர் எட்டு ஆண்டுகளுக்குமேல் அற நிலேயங்களே நிருவகிக்கின்ற பெரும் பொறுப் பைத் தொடர்ந்து ஏற்று வருகிருர்.



புதுதில்லி விநாயகர் கோயிலில்

**திருத்தம் :**

1957-ஆம் ஆண்டில் இந்து மத அற நிலையங்கள் சட்டம் அமுலில் இருந்தது. இந்துமத அற நிலையங்களின் நிருவாகம் இந்த நிலையங்களின் நிருவாக அதிகாரிகள் கரத்தில் இருந்து வந்தது. இந்த இலாக்கா அவர்களை மேற்பார்வை செய்து வந்தது. இந்த நிலையங்களின் மூலம் வருகின்ற வருவாய் முழுவதும், நிலையங்களின் முன்னேற்றத்திற்கே பயன்படுத்தப்பட வேண்டுமென்று அவற்றின் நிருவாக அதிகாரிகள் நினைத்தார்கள். ஆனால், இலாக்காவின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்பு, பக்தவத்சலம் இந்த மாநிலத்தில் சிதறிக் கிடக்கின்ற ஆலயங்களுக்குச் சென்று பார்வை இட்டார். பாடல் பெற்ற ஸ்தல ஆலயங்



கள், பாடல் பெற்ற ஸ்தலமல்லாத ஊர்களிலுள்ள ஆலயங்கள், ஆகியவற்றின் கட்டடங்கள் பழுது பார்க்கப்பட வேண்டுவதின் அவசரத்தையும் அவசியத்தையும் அவர் உணர்ந்தார். ஆலயங்களில் கும்பாபிஷேகம் நடைபெற்று நீண்ட நாள்கள் ஆகியிருப்பதைக் கவனித்து, அவர் மிக எளிய நிலையில் உள்ள ஆலயங்களின் கோபுரங்களைத் திருத்தி அமைத்துக் கும்பாபிஷேகம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அத்தகைய ஆலயங்களுக்குச் சர்க்கார் மானியங்களை வழங்குவதில் முழுக்கவனம் செலுத்தினர். அதனால், ஆண்டு தோறும் வழங்கப்பட்ட சர்க்கார் மானியங்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | வழங்கப்பட்ட மானியத் தொகை | சர்க்கார் மானியம் வழங்கப்பட்ட அறநிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1956—57 | 1,85,000 | 28 |
| 1958—59 | 3,00,000 | 67 |
| 1960—61 | 3,00,000 | 59 |
| 1961—62 | 3,00,000 | 33 |
| 1963—64 | 1,00,000 | 29 |

**முக்கியப் பணிகள் :**

இது சம்பந்தமாகச் சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களுக்கு மக்களுடைய ஆதரவு நிறைந்த அளவில் இருந்தது. இந்தத் திட்டத்தின் விளைவாகத் திருச்சியிலுள்ள வெஞ்ச

மக்கூடல் தேவஸ்தானம் நீங்கலாக, பாடல் பெற்ற ஸ்தலங்களிலுள்ள எல்லாச் சைவ ஆலயங்களிலும், திருத்தம் செய்யப்பட்டு, கும்பாபிஷேகம் நடத்தப் பட்டது. ஆழ்வார்கள் பாடியுள்ள அநேக வைணவ ஆலயங்களும், அரசாங்க மானியத்தின் உதவி யுடன் புதுப்பிக்கப்பட்டன. இதற்குச் சர்க்கார் மானியம் நீங்கலாக, பொது மக்களிடமிருந்தும் நன்கொடைகள் கிடைத்தன. வருமானம் அதிக முள்ள ஆலயங்களின் பணமும் எளிய நிலைமை யிலுள்ள ஆலயங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீரங்கநாதர் ஆலயத்துக்கு நடத்தப்பட்ட 'சம்புரோக்ஷணமும்' மதுரை யிலுள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் சீரமைப்பும், அதற்கு நடத்தப்பட்ட கும்பாபிஷேக மும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை.

**பிரசாரம் :**

முக்கியமான எல்லா ஆலயங்களுக்கும், ஸ்தல புராணங்களைத் தயாரிக்கும்படி புதிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. திருவாசகம், திருக்குறள் போன்ற முக்கியமான நூல்களுக்கு ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்கள், சென்னையில் உள்ள மல்லீஸ்வரர் தேவஸ்தானம் போன்றவை மூலம் பிரசுரிக்கப்பட்டன. இந்த மாநிலத்திலுள்ள ஒவ் வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற ஆலயங்களின் வரலாறு தயாரிப்பதற்கும் அனுமதி வழங்கப் பட்டது. திருப்பாவை, திருவெம்பாவை போன்ற பக்திப் பாடல்கள், மார்கழி மாதத்தில் தகுதியான சந்தர்ப்பங்களில் பாடுவதற்கு நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்தப் பாடல்களைப் போலச்



சங்கீதக் கலைஞர்கள் பாட, இவை மிகக் கவர்ச்சி கரமான இசைத்தட்டுகளாக்கப்பட்டு, ஒலி பரப்பு களின் மூலம், கேட்பாரை மகிழ்விக்கின்ற வகையில் ஒலி பரப்பப்பட்டன. இசைத் தட்டுகள் அநேக ஆலயங்களுக்குத் தரப்பட்டன. இந்தச் சாதனை நகரில் வாழ்கின்ற மக்களாலும், கிராமங்களில் வாழ் கின்ற மக்களாலும், பெரிதளவு போற்றப்பட்டு வரு கின்றது.

**நாதசுரம், குழல் :**

ஆலயங்களில் சங்கீதத்தையும், நுண்கலைகளை யும் ஆதரித்து அவற்றுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு நாதசுரப் பயிற்சி வகுப்புகள் ஆரம் பிக்கப்பட்டன. குழல் வாசிப்பவர்களுக்கு நாதசுர இசையில் பயிற்சி வகுப்புகள் சுவாமி மலையில் 30–3–1958 முதல் ஆறு மாதங்களுக்கும், பழனி தேவஸ்தானத்தில் 2–11–1958 முதல் ஆறு மாதங் களுக்கும் நடத்தப்பட்டன. 2–11–1958-ல் மூன்று வருடச் சங்கீதப் பயிற்சி வகுப்புப் பழனியில் ஆரம்பிக்கப்பட்டது.

**பயிற்சி வகுப்புகள் :**

மதுரை, திருச்செந்தூர், பழனி போன்ற ஊர்களிலுள்ள பெரிய ஆலயங்கள் எல்லாவற்றி லும் வேத ஆகமங்களைப் போதிப்பதற்கெனப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. வருட மொன்றுக்கு இருபதினாயிரம் ரூபாய், அல்லது அதற்கு மேற்பட்ட தொகை, வருமானமாகக் கிடைக்கும் ஆலயங்களின் அதிகாரிகள் அவர் களுடைய ஆலயங்களில் "ஓதுவார்"களையும் வேத

பாராயணர்களையும், நியமிக்கும்படி வற்புறுத்தப் பட்டார்கள்.

| பயிற்சி வகுப்பின் பெயர் | நடத்தப்பட்ட காலம் | நடத்தப்பட்ட இடம் |
|---|---|---|
| 1. குருக்களுக்கு சைவ ஆகம போதனை | 30–10–57 முதல் | பேட்டை வாய்த்தலை, திருச்சி மாவட்டம் |
| 2. ,, ,, | 28–3–58 | திருவெண்காடு, தஞ்சை மாவட்டம் |
| 3. ஏழு மாதங்களுக்கு அர்ச்சகர்களுக்கும், குருக்களுக்குமுரிய சைவ வைஷ்ணவ ஆகமப் பயிற்சி வகுப்புகள் | 2–11–60 | சென்னை மல்லீஸ்வரர் தேவஸ்தானம் (121 அர்ச்சகர் பயிற்சி பெற்றனர்) |
| 4. பாஞ்சராத்திர ஆகமப் பயிற்சி வகுப்பு | 2–9–60 முதல் | நாச்சியார் கோயில், தஞ்சை மாவட்டம் |
| 5. வைகானச ஆகமப் பயிற்சி வகுப்பு | | ஸ்ரீ ராஜகோபால சாமி ஆலயம், மன்னார்குடி |
| 6. சைவ ஆகமப் பயிற்சி வகுப்பு | 1964 | ஸ்ரீபட்டீஸ்வரர் ஆலயம், பேரூர், கோவை மாவட்டம் |

**ஆராய்ச்சி :**

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பண்பொழியிலிருக்கும் திருமலைக் குமாரசுவாமி கோவிலிலும், தஞ்சை மாவட்டத்தில் திருப்புகலூரிலிருக்கும் அக்னீஸ்வர ஸ்வாமி கோவிலிலும் சித்த வைத்திய சாலைகளும் ஆராய்ச்சி நிலையங்களும் ஆரம்பிக்கப்



பட்டு, ஒழுங்காக நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையங்கள் பொது மக்களுக்குச்—சிறப்பாக எளிய மக்களுக்குப்—பேருதவியாய் இருந்து வருகின்றன.

**திருத்தச் சட்டம் :**

1951–ஆம் வருடத்தில் இந்து மத அற நிலையங்களின் சட்டத்தை அமுல் செய்வதில் சில சிக்கல்கள் ஏற்பட்டதால், இந்தச் சட்டத்தை எல்லா இந்து மதப் பொது ஆலயங்களுக்கும் அமுல் செய்யும் முறையிலும், நீதி மன்றங்களால் சுட்டிக் காட்டப்பட்ட சிக்கல்களையும் குறைபாடுகளையும் நீக்கும்பொருட்டும் மந்திரி பக்தவத்சலம் இச் சட்டத்துக்கு விரிவான திருத்தங்களை ஏற்படுத்த வேண்டுவது அவசியமென்று கருதினர். எனவே, அவர் 1959–ஆம் வருடத்து 22–ஆம் இலக்கமுள்ள ஒன்று திரட்டப்பட்ட சட்டமொன்றைச் சட்டசபையில் பிரேரேபித்தார். அச்சட்டம் 1–1–1960–ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தது. மத ஸ்தாபனங்களின் நிருவாக அதிகாரிகள், 31–12–59 வரை ஓரளவு (குவாசி) சர்க்கார் ஊழியர்களாகவே இருந்து வந்தார்கள். அவர்கள் 1959–ஆம் வருடத்து 22–ஆம் இலக்கமுள்ள சட்டத்தின் 12–ஆம் பிரிவின்படி 1–1–60 முதல் அரசாங்க ஊழியர்களானார்கள். இதனால், ஆலயங்களின் நிருவாக அதிகாரிகள், கெஜட் பதவியில்லாத அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் எல்லா உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவித்து வருகின்றார்கள்.

**கமிட்டிகள் :**

இந்த இலாக்காவின் நிருவாகத்தின் கீழுள்ள மத ஸ்தாபனங்களை நிருவகிப்பதிலும், பேணிப் பாதுகாப்பதிலும், உத்தியோகப் பற்றில்லாதவர் களின் ஒத்துழைப்பைப் பெறும்பொருட்டு ஓர் ஆலோசனைக் கமிட்டி நியமிப்பதற்கான ஷரத்து கள் 1959-ஆம் வருடச் சட்டத்தில் சேர்க்கப்பட் டன. இந்தக் கமிட்டி நடத்த வேண்டிய அலுவல் கள் சம்பந்தமான விதிகளும் ஏற்படுத்தப்பட்டுள் ளன. இந்த ஆலோசனைக் கமிட்டி கீழே தரப் பட்டுள்ள துணைக் கமிட்டிகளை ஏற்படுத்தி யுள்ளது.

(1) ஆகமம் கல்வி துணைக்கமிட்டி
(2) சீர்திருத்தத் துணைக்கமிட்டி
(3) மதக் கோட்பாடுகள் பிரசாரக் கமிட்டி
(4) ஆலயங்களுக்கு வரும் யாத்திரிகர் களுக்கு வசதிகள் செய்துதரும் கமிட்டி
(5) ஆலயங்களின் பண வருமானத்தை அபிவிருத்தி செய்வதற்கான கமிட்டி

இந்தத் துணைக்கமிட்டிகள் இவற்றுக்கு ஒதுக் கப்பட்டுள்ள விஷயங்களில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன.

**கல்லூரிகள் :**

பழனி தேவஸ்தானத்தின் அதிகாரிகள் (1) புராதன கலாசாரக் கல்லூரியையும், (2) கலைக் கல்லூரியையும் ஆரம்பித்துள்ளார்கள். மாதர் களுக்கான கலைக்கல்லூரியொன்று-பராசக்தி கல்



லூரி-இந்த நடப்பு வருஷத்தில் குற்றாலத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. மற்றொரு புராதன கலாசாரக் கல்லூரி தஞ்சை மாவட்டத்திலுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் ஆரம்பிக்கப்பட விருக்கிறது.

**பாவை மாநாடு :**

காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அளித்த யோசனைமீது, திருப்பாவை திருவெம் பாவை மாநாடுகள் ஒவ்வோர் ஆண்டும், மார்கழி மாதம் நடத்தப்பட்டு வருகின்றன. பன்னிரண்டு வயதுக்குட்பட்ட மாணவ மாணவிகளுக்கிடையே ஒரு போட்டியை ஏற்படுத்தி, பிழையின்றி சிறந்த முறையில் பக்திப் பாடல்களைப் பாடுபவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி, "**திருக்கோயில்**" என்னும் மாதப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க இந்த இலாக்காவுக்கு அரசாங் கம் அனுமதியளித்தது. அப்பத்திரிகை 2—10—58 முதல் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இந்த இலாக்கா அதிகாரிகளின் கருத்தரங்குகள் 1957 ஆகஸ்டி லும், செப்டெம்பரிலும் நடத்தப்பட்டன. ஒவ் வோர் ஆண்டும் கும்பாபிஷேகம் நடத்தப்பட்ட ஆலயங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :

| வருடம் | ஆலயங்கள் |
|---|---|
| 1957—58 | 50 |
| 1958—59 | 47 |
| 1959—60 | 62 |
| 1960—61 | 32 |
| 1961—62 | 40 |
| 1962—63 | 28 |

**குங்குமம், விபூதி, பன்னீர் :**

குங்குமம், விபூதி, பன்னீர் முதலானவற்றை முக்கியமான கோயில்களில் தயார் செய்து சுத்த மாகத் தருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சுத்தமான கற்பூரம் சென்னை மல்லீஸ்வரர் கோயில் மூலம் மற்றக்கோயில்களுக்குத் தருவதற்கு ஏற் பாடுகள் செய்யப்பட்டன.

சிந்திப் பசுமாடுகளை அரசாங்கமூலம் விலைக்கு வாங்கிக் கோயில்களில் கோ சாலைகள் ஏற்படுத்தப் பட்டன. அதனுல் பெறுகிற பால், அபிஷேகம் செய்வதற்கும், குழந்தைகளுக்குக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

**சர். சி. பி. கமிஷன் :**

சர். சி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் தலைமை யில் ஒரு கமிஷன் வந்தது. தமிழ் நாட்டுக் கோயில்களின் நிருவாகம் மிகச் சிறப்பாய் இருப் பதாகச் சர். சி. பி. ராமசாமி ஐயரவர்கள் கூறி ஞர்கள். அந்த அளவுக்கு ஆற்றலுடன் செய்தவர் நம் மந்திரியார் பக்தவத்சலம் அவர்களே.

திரு. பக்தவத்சலம் அவர்கள் பார்வையின் கீழ், இந்து மதம் தழைத்து வளர்ந்தது; இந்து மதத்தைப்பற்றிய புதிய ஊக்கமும், தெளிவும் மக்களிடையே ஏற்பட்டன; கோயிலும் கோபுர மும் வானேங்கி உயர்ந்தன; பாழடைந்த பக்தி இல்லங்கள் பழுது பார்க்கப்பட்டன; ஆராதனை களும், அபிஷேகங்களும் ஆண்டு முழுவதும் நடக்கத் தொடங்கின. திரு. பத்தவத்சலம் அவர் கள் பார்வையின் கீழ், இந்து மதம் மறுமலர்ச்சி



யுற்றுத் தழைத்து வளரத் தொடங்கியுள்ளது; இனியும் வளரும்; எங்கும் பரவும்.

**கோடை வகுப்புகள் :**

கோயில் நிருவாக அதிகாரிகள், ஆய்வாளர் கள், ஆசிரியர்கள் ஆகியவர்களுக்குக் கோடை வகுப்புகள் நடத்தி, இந்து சமயத்தைக் குறித்த விளக்கங்களை அறிய வாய்ப்பினை அளித்தார் பக்த வத்சலம். பத்து வருடங்களுக்கு முன்பிருந்ததை விட இப்போது கோயில்களில் வருமானம் அதிகம் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தூய்மை யும் பக்தியும் நிலவ வழி வகைகள் செய்து, சைவ வைணவப் பூசல்கள் ஏற்படாதவாறு திருப்பாவை திருவெம்பாவை மாநாடுகள் மூலம் சமரச சன் மார்க்க திருஷ்டி உண்டாக்கப்பட்டது.

**நல்லறங் காவலர் :**

மாயூரம் வள்ளலார்க் கோயில் தென்முகக் கடவுள் திருமுன்னர் பக்தவத்சலத்திற்குச் சிறப்புச் செய்து 'நல்லறங் காவலர்' என்றதொரு பட்டமும் வழங்கப்பட்டது.

திரு. பக்தவத்சலம், கோயில்கள் பழுதடைந் தால், அதற்கென்று கோயில் பரிபாலன போர்டே நியமித்திருக்கும் எஞ்சினீயர்களைக் கொண்டு செப்பனிட வழிகளை வகுத்தார். பழனி மலையில் ஏறுவது மிகக் கடினமாய் இருப்பதால், மின்சார வண்டிகளை அமைக்கலாமா என்ற எண்ணத்தைப் பரிசீலனைசெய்து ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கோயில் நிலங்களில் கூட்டுறவு சங்கங்கள் மூலம்

நன்மைகள் உண்டாக விவசாயப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன.

**கலியாண மண்டபம் :**

ஏழைகள் குறைந்த செலவில் திருமணம் செய்து கொள்வதற்காகக் கலியாண மண்டபங்கள் அமைக்கப்பட்டன. அர்ச்சகர்கள், கோயில் சிப்பந்திகள் ஆகியோருக்கு அதிக சம்பளம் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதற்கு முன்பில்லாத பிராவிடண்ட் பண்டு வருமானம் வர வழி வகுக்கப்பட்டது. கோயில் வருமானத்திலிருந்து குற்ருலத்தில் பெண்கள் கல்லூரியும், நாதஸ்வரக் கல்லூரியும் ஏற்படத் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

**கோயில் நிலங்கள் :**

கோயில் நிலங்களை மொத்தமாக நடுத்தர மனிதர்களுக்கு குத்தகைக்கு விடாமல், பயிரிடுகின்ற குடியானவர் ஒவ்வொருவருக்கும் 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்படாமல் குத்தகைக்கு விடுவதற்கான சட்டம் கொண்டுவரப்பட்டது. கோயில்களைப் புணருத்தாரணம் செய்யவும் சமயத்தைப் பரப்பவும் மடாதிபதிகள் முன்வர வேண்டும் என்று பக்தவத்சலம் பெரிதும் விரும்புகின்ருர்.

**கல்வி வளர்ச்சி**

முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கல்வி மந்திரியாய் இருந்து சாதித்தவை ஏராளம். கல்வித்துறையில் தமக்கிருக்கும் பழுத்த அனுபவத்தைக் கொண்டு அவர் பல சீர்திருத்தங்களைச் செய்தார்.



**தொடக்கக் கல்வி :**

முந்நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் வாழும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு பள்ளி ஏற்படுத்தப் பட்டது. 1963–64-ல் இத்தகைய பள்ளிகளின் எண்ணிக்கை 30,020. இது, அதற்கு முந்திய ஆண்டைவிட 1,010 அதிகமாகும். முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புகள் வரை அதற்கு முந்திய ஆண்டைவிட 4·26 லட்சம் மாணுக்கர் அதிகம் படித்தனர்.

**வழிகள் :**

கல்வித் தரத்தை உயர்த்தும் வழிகள் பல கையாளப்பட்டு வருகின்றன :

(1) பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ரூ. 140—250 அடிப்படைச் சம்பளத்தில் தலைமை ஆசிரியர்களாய் அமர்த்தப்பட்டார்கள்.

(2) ஆரும் வகுப்பில் 4 அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளை உடைய உயர்நிலைத் தொடக்கப் பள்ளி, முதுநிலை ஆதாரப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் அமர்த்தப்பட்டார்கள்.

(3) ஐந்தாம் வகுப்பில் மூன்றும் அதற்கு மேலும் பிரிவுகளையுடைய ஆரம்பப் பள்ளிகளில் மற்றும் ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியரை அமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டது.

(4) தொடக்கப் பள்ளிகளில் நூல் நிலைய வசதிகள் பெருக்கப் பட்டன. தொடக்கக் கல்வித் தரத்தை உயர்த்த, செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களை மட்டுமே ஆரம்பப் பள்ளி

களில் வைத்திருக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இன்றுள்ள ஹையர் கிரேடு பள்ளிகள் சிறிது சிறிதாக செகண்டரி கிரேடு பயிற்சிப் பள்ளிகளாக மாற்றப்படும். 1963-64-ல் பதினைந்து புதிய செகண்டரி கிரேடு பள்ளிகள் அவ்வாறு தொடங்கப்பட்டன. இப்பணி தொடர்ந்து நடைபெறும்.

**ஆங்கிலம் :**

மாணவர்களின் ஆங்கிலப் பயிற்சித் தரத்தை உயர்த்த 1963-64-ல் மூன்றும் வகுப்பிலேயே ஆங்கிலம் புகுத்தப்பட்டு விட்டது. குறிப்பிடத்தக்க மற்றொரு செயலாகும். மற்றும், ஆசிரியர் மாணவர் விகிதத்தை விரிவுபடுத்தி இருப்பதும் கவனிக்கத்தக்கது.

**உணவுத் திட்டம் :**

தொடக்கப் பள்ளிகளில் கல்வி கற்கும் ஏழைச் சிறுவர்களுக்கு உணவு அளிக்கும் திட்டம் பொதுவாகச் சென்னை மாகாணத்தில் எல்லாப் பள்ளிகளிலும் இப்போது வழக்கத்தில் இருக்கிறது. சுமார் 30,000 பள்ளிகள் இப்போது அச்செயலைச் செய்து வருகின்றன. சுமார் 14·4 லட்சம் சிறுவர்கள் இதனால் பயனடைகிறார்கள். 63-64-ஆம் ஆண்டு பட்ஜெட்டு இதற்காக ரூ. 135 லட்சம் அளிக்க வழி செய்தது. 64-65-ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 144 லட்சம். இதில் மத்திய அரசு 33⅓ சத விகிதத் தொகையை உதவியாக அளிக்கவிருக்கிறது.



**அன்பளிப்புகள் :**

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் உயர்ந்த தொண்டைப் பாராட்டும் வகையில் மத்திய அரசு ஏற்படுத்திய திட்டப்படி ஒவ்வோராண்டும் சென்னை மாகாணத்திலுள்ள ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப் பட்ட ஆசிரியர் இருவருக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் ரூ. 200 மதிப்புள்ள பரிசுப் பத்திரங்களும், பாராட்டு இதழ்களும், ரூ. 30 மதிப்புள்ள ஒரு வெள்ளிப் பதக்கமும் அளிக்கப்படும். 1961-62இல் ஆசிரியர் 54 பேர் இவ்வாறு சிறப்பிக்கப்பட்டனர். 62-63-இலும் இது நடைபெற்றது.

**நன்மைகள் :**

எல்லாப் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஓய்வு பெறும் வயதை 58ஆக அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது. அத்துடன் உதவி பெறும் கல்லூரிகளுக்கும் ஓய்வு கால உதவித்தொகைத் திட்டம் பொருந்துமாறு செய்திருக்கிறது.

**செகண்டரிக் கல்வி :**

அண்மைக் காலத்தில் செகண்டரிக் கல்வி நம் மாகாணத்தில் வியக்கத்தக்க வேகத்தில் முன்னேற்றம் கண்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு இலவசக் கல்வி அளித்தலும், ஆரம்பக் கல்வியின் புயல்வேக வளர்ச்சியும், செகண்டரிக் கல்வியின் தேவையைக் குறிப்பாகக் கிராமப்புறங்களில் அதிகமாக்கி விட்டன. 1962-63இல் அப்பள்ளிகளின் எண்ணிக்கை 1765; இப்



பெண் கல்விக்குப் பெருமை

போது 1954. 1963–64-ல் 189 புதிய உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப் பட்டன. 1962–63-ஆம் ஆண்டின் இறுதியில் செகண்டரிப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 8·39 லட்சம். இது 1963—64-இன் தொடக்கத்திலேயே 9·54 லட்சமாய் வளர்ந்துவிட்டது.

பள்ளி இறுதி வகுப்பு வரை இலவசமாக 85% பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது எல்லாப் பிள்ளைகளுக்கும் அச்சலுகை அளிக்கப்பட்டுவிட்டது.

**கல்லூரிப்படிப்பு :**

1962–63-ல் 63ஆக இருந்த சென்னை மாநிலக் கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை அடுத்த ஆண்



டில் 68ஆக உயர்ந்தது ; ஐந்து புதிய கலைக்கல்லூரிகள் பிறந்தன. அவை :

(1) பெண்கள் அரசினர் கலைக்கல்லூரி, கும்பகோணம்.

(2) ஐயா நாடார் ஜானகியம்மாள் கலைக் கல்லூரி, சிவகாசி.

(3) ஸ்ரீ பரமகல்யாண கலைக்கல்லூரி, ஆழ்வார் குறிச்சி.

(4) கிருஷ்ணம்மாள் பெண்கள் கல்லூரி, கோவை.

(5) ஸ்ரீ பழனி ஆண்டவர் கலைக்கல்லூரி, பழனி.

பின் நான்கும் அரசாங்க உதவித் தொகை பெறும் தனிப்பட்டோர் கல்லூரிகள். பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு வரும் மாணவர் வெள்ளத்தைச் சமாளிக்கப் பல கல்லூரிகளில் புகுமுக வகுப்பின் பிரிவுகள் அதிகமாக்கப்பட்டன. அதிக பட்ச மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக்கப் பட்டது. 1963–64-ல் புகுமுக வகுப்பில் அதிக பிரிவுகள் தொடங்கப்பட்ட—அல்லது முன்பே தொடங்கப்பட்டு மறுபடியும் மூடிவிடாமல் தொடரப்பட்ட கல்லூரிகள் ஐந்து. அவை :

(1) அரசினர் கலைக்கல்லூரி, சென்னை.

(2) மேரி ராணியார் கல்லூரி, சென்னை.

(3) அரசினர் கல்லூரி, கோவை.

(4) அரசினர் கல்லூரி, உதகை.

(5) அரசினர் கல்லூரி, சேலம்.

### என்.சி.சி., ஏ.சி.சி.

என்.சி.சி. ரைபிள்ஸ், மிக்க முன்னேற்றம் கண்டுவிட்டது. பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்களும், தொழிற்கல்வி நான்காவது ஐந்தாவது ஆண்டில் பயிலும் மாணவர்களும், பட்டப் படிப்புக்கு மேற்பட்ட கல்வி பயிலும் மாணவர் களும், மற்ற எல்லா ஆடவர் கல்லூரி மாணவர் களும் கட்டாயமாக என்.சி.சி. பயிற்சி பெற வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படுத்தி யிருப்பது குறிப்பிடத்தக்க ஒரு மாறுதலாகும்.

### தமிழ் வளர்ச்சி :

1959-ல் அமைக்கப்பட்ட சென்னை மாநிலத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் நன்றாகப் பணி புரிந்து வருகிறது. தமிழ் மொழியில் பல பாடங் களைக் கற்பதற்கு வசதியாக 14 பாடத்துறைகளுக் குத் தேவையான கலைச்சொற்களை—இக்குழு—தமிழ் வளர்ச்சிக்கான தன் பல்வேறு பணிகளுக்கிடை யில் தயாரித்திருக்கிறது. தமிழ் மொழிபெயர்ப்பு களையும், சொந்தப் படைப்புகளையும் பிரசுரிக்க ஒரு தமிழ் வெளியீட்டுக் கழகம் அமைக்கப்பட்டிருக் கிறது. கல்லூரித் தமிழ்க்குழுவின் பணிகளை இது ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதுவரை 49 புத்தகங் களை வெளியிட்டிருக்கும் இந்தக் கழகம், அரசினர் அளிக்கும் உதவிப் பணத்தால் நடத்தப்படுகிறது.

### விஞ்ஞானமும் கலாசாரமும் :

விஞ்ஞானத்துறையும், கலாசாரத்துறையும் நன்கு வளரத் திரு. பக்தவத்சலம் பெரிதும் பாடு பட்டார். அவர் செய்த பல அரிய சேவைகளினால்





நூலாசிரியருக்குப் பொன்னுடை

விஞ்ஞானத்திலும் கலாசாரத்திலும் புதிய திருப் பங்கள் ஏற்பட்டன.

### லலித கலை அகாடமி :

பிளாஸ்டிக்குத் தொழில் முதலிய கண்ணுக்கு விருந்தளிக்கும் கலைகளை வளர்க்க லலித கலை அகாடமி 1962-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் அமைக்கப்பட்டது. இது சென்னை மாநிலத்திலேயே முழுதும் பராமரிக்கப்படுகிறது.

### சங்கீத நாடக சங்கம் :

இசை, நாட்டியம், நாடகம், திரைப்படம் ஆகிய கலைகளின் மூலம் கலாசாரத்தைப் போற்ற இச்சங்கம் அமைக்கப்பட்டது. இசைப்போட்டிகள் நடத்துதல், நாட்டியமும் இசை நாடகமும் பற்றிய

புத்தகங்களை வெளியிடப் பண உதவியளித்தல், புதிய நாடகங்களைத் தயாரிக்க உதவுதல் ஆகியவை இதன் சில பணிகளாகும். 1964–65-ல் இதனால் ஏற்படும் செலவுக்கு ரூ. 1·50 லட்சம் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசினர் திட்டத்தின்கீழ் மாநிலங்களுக்கிடையே கலாசார நட்புறவு செய்துகொள்வதையும் இச்சங்கம் செய்து வருகிறது. 1963-ல் ராஜஸ்தானுக்குக் கலாசாரக்குழு ஒன்று அனுப்பப்பட்டது. பிறநாடுகளிலிருந்தும் நம் மாநிலத்திற்குக் குழுக்கள் வந்துள்ளன. 1963–64-ல் வந்த சோவியத்து விண் வெளி வீரர்களும் சோவியத்துச் சர்க்கஸும் இவ்வாறு வந்தவைகளே. இந்த ஆண்டு மத்திய பிரதேசத்திலிருந்தும், கேரளத்திலிருந்தும் சென்னைக்குக் கலாசாரக் குழுக்கள் வந்துள்ளன. இந்த நட்புறவுகளுக்காக 1964–65க்கு ரூ. 0.50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திறமையுள்ள கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் பண உதவி அளிக்கப்படுகிறது. செலவில் மூன்றில் ஒரு பகுதியை இந்திய அரசும், மீதியை மாநில அரசும் ஏற்கும். சென்னை மாநிலச் சங்கீத நாடக சங்கமும், மாநில ஹைபவர் கமிட்டியும் சிபாரிசு செய்தால், கலைஞர்களுக்கு இவ்வுதவியளிக்கப்படும்.

**தொழிற்கல்வி :**

தொழிற்கல்வித் துறைக்கு உட்பட்ட கல்லூரிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை, 1962–63-ல் 60 வரை கூட்டப்பட்டது. கிண்டித் தொழிற்கல்விக் கல்லூரியின் இடங்கள் 275லிருந்து 360ஆக உயர்த்தப்பட்டன. திருச்சி





கே. சி. ரெட்டி—கனுங்கோவுடன்

மாவட்டத்தில் தூவக்குடியில் ஆண்டுக்கு 250 பேருக்கு இடமளிக்கும் 'ரீஜனல் எஞ்சினீயரிங் கல்லூரி' 1964–65-ல் தொடங்கப்படும். நிலம் ஏற்கெனவே கிடைத்துக் கட்டட வேலையும் தொடங்கப்பட்டுவிட்டது. 1965–66-ல் சேலத்தில் ஒரு புதிய எஞ்சினீயரிங் கல்லூரி தொடங்கப்படும்.

**ஆராய்ச்சி :**

கிண்டி எஞ்சினீயரிங் கல்லூரியில் 1962–63 முதல் ஆராய்ச்சி நாட்டமுள்ள எஞ்சினீயர்களுக்காக ஆராய்ச்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. பட்டம் பெற்ற எஞ்சினீயரிங் மாணவர்களுக்கு ஆராய்ச்சிக்கு வழி செய்யவே இந்தப் புதிய திட்டம் உருவாக்கப்பட்டது. பொது மராமத்து நெடுஞ்

சாலைத் துறையினர், செய்து வரும் ஆராய்ச்சிப் பணிக்கும் இது துணை நிற்கும். இந்த ஆராய்ச்சி நிலையத்தை நடத்த தனி அதிகாரி ஒருவர் அமர்த் தப்பட்டிருக்கிறார். புதிய கட்டடமொன்று ரூ. 5 லட்சம் செலவில் இந்த நிலையத்திற்காகக் கட்டப் பட்டிருக்கிறது.

**பல்துறைத் தொழிற் பள்ளிகள் :**

இப்போது, 25 பாலி டெக்னிக்குகளும், பெண்கள் பாலி டெக்னிக்குகள் இரண்டும் மாநிலத் தில் உள்ளன. 1963-64-லிருந்து சென்னை மத்திய பாலி டெக்னிக்கில் மாணவர் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவ்வாண்டிலிருந்து மேலும் 5 கல்லூரிகளில் இத்தொகை 120-லிருந்து 180 ஆக உயர்த்தப்பட்டது. கோவையில் 1964-65-ல் மூன்றாவது பெண்கள் பாலி டெக்னிக் தொடங்கப்படும். காஞ்சீபுரத்தில் பக்தவத்சலம் அவர்களின் பெயரால் பாலி டெக்னிக்கு ஒன்று நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

**இரசாயன நிலையம் :**

ஆண்டுக்கு ஐம்பது பேருக்கு இடமளிக்கும் கெமிகல் டெக்னாலஜி இன்ஸ்டிடியூட்டு ஒன்று 1963-64-ல் தொடங்கப்பட்டது. இதற்கு அடை யாற்றில் கட்டட வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

**அச்சுக்கலைப் பள்ளி :**

அடையாற்று மத்திய பாலி டெக்னிக்கின் அச்சுக்கலைப் பகுதி விரிவாக்கப்பட்டுத் தனியாக இப்பெயருடன் இயங்கத் தொடங்கியிருக்கிறது.





எட்டயபுரம் பாரதி விழாவில்

இது, அச்சிடுதல், 'லிதோ கிராபிக் குரூப்ஸ்' ஆகியவற்றில் டிப்ளமா சர்ட்டிபிகேட்டுகள் வழங்கு வதற்கான வகுப்புகள் 'பிரின்டிங் டெக்னாலஜி'க் கான அகில இந்திய சர்ட்டிபிகேட்டுகளுக்கான வகுப்புகளையும் (முழு நேர, பாதி நேர வகுப்புகள்) நடத்தி வருகிறது.

**திரைப்படத் தொழிற்கல்வி :**

மத்திய பாலி டெக்னிக்கில் இருந்த 'சினி மாட்டோகிராபியும், ஒலிப்பொறியியலும்' என்ற பகுதி 1960-லிருந்து இப்பெயருடன் பெரிதாய் இயங்கிவருகிறது. 'சினிமாட்டோகிராபி', 'ஒலிப் பொறியியல்', 'பிலிம் புராஸஸிங்' ஆகியவற்றில் ஆண்டுக்கு 20 பேருக்கு டிப்ளமா தேர்வுக்கான

பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்போதைய சட்டப்படி கலை, டைரக்ஷன், தொகுப்பு, உயிரூட்டம், திரை, வசனம் எழுதுதல், ஒப்பனை முதலியவற்றிலும் பயிற்சியளிக்க வசதிகள் செய்யப்படும்.

**கணக்கியல் கலை:**

1. விஞ்ஞானிகள் அடிக்கடி பிற நாடுகளுக்குச் சென்று உதவும் திட்டத்தை அமைத்துச் செயலாக்குதல்.

2. இள இந்திய ஆராச்சியாளர்களை வெளி நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்புகளுக்காகக் காத்திருக்க விடாமல், இங்கேயே அடிப்படை விஷயங்களில் ஆராய்ச்சி செய்ய வசதிகள் அளித்து ஊக்குவித்தல்.

3. இவ்வமைப்பின் பொறுப்புகளை நடத்த நிலையான குழு ஒன்றை உண்டாக்குதல்.

இவை மூன்றும் மிகவும் முக்கியமான பகுதிகள். இவற்றிற்காகும் செலவை மாநில அரசு ஏற்கிறது. செலவில் ¾ பகுதியை மத்திய அணுச் சக்தித்துறை வழங்க இசைந்திருக்கிறது. அது அதிக பட்சம் ரூ. 60,000 உதவி வழங்கும்.

திரு. பக்தவத்ஸலம் அவர்கள், கல்விக்குச் செய்திருக்கிற தொண்டுகள் எண்ணிலடங்காதவை. ஒவ்வொன்றும், தமிழர்களின் முன்னேற்றத்திற்குச் செய்யப்பட்டது; தமிழ் நாட்டின் சீரமைப்பிற்காகச் செய்யப்பட்டது. இன்றைய மாணவர்கள் களிக்கிற வகையில் மிக நல்ல சீர்திருத்தங்களைக் கல்வித் துறையில் அவர் செய்திருக்கிறார். இனியும் செய்வார்.



# 8

## தங்கச் சுரங்கம்

**தங்கச் சுரங்கமடா—தமிழ்ச்**
**சான்றோர் இதயமடா!**
**மன்னனுள் நிதியமடா—உயர்**
**கன்னனுள் கனகமடா!**

—தமிழ்ப்பித்தன்.

காலை நேரம் வாரன் சாலை 15-ஆம் எண்ணுள்ள 'மல்லிகா' வீட்டில் ஒரே கூட்டம்: அந்த வீடு தான் மாநில முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலத்தின் வீடு. இரண்டு வழிகள் கொண்ட அவ்வீட்டிற்கு முன்னர் பல கார்கள் அணிவகுத்து நிற்கும் காட்சி கண்கொள்ளாததாக இருக்கின்றது.

கிழக்கு திக்கைப் பார்த்த நிலையில் இருக்கும் அவ் வீட்டினுள் நுழைந்தவுடனே 'போர்ட்டிகோ' அதைக் கடந்தால் இடது பக்கத்தில் பார்வையாளர் களுக்காக நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. வலது பக்கத்தில் முதலமைச்சரின் காரியாலய அறை. மத்தியில் ஒரு பெரிய கூடம். அக்கூடத் தில் சுற்றியும் சோபாக்கள் போடப்பட்டிருக் கின்றன. வெளியில் உட்கார இடமில்லாத பார்வை யாளர்களும், மற்ற பெண்களும் அங்கு வந்து உட்கார்ந்திருப்பது வழக்கம்.

கூடத்தில் இடப்பக்கமுள்ள பகுதியில் ஆடு கின்ற நடராஜரின் சிலையைப் பார்க்கிறோம். அக் காட்சி நெஞ்சத்தைத் தொடுகின்றது. அதற்கு எதிர்ப்புறம் கண்ணாடியில் மூடப்பட்ட அலமாரி— அமைச்சருக்கு அவ்வப்போது கிடைத்த பரிசுப் பொருள்களும் பழம் பொருள்களும் வெளி நாட்டினர் தந்த அழகுப் பொருள்களும் காண்பவர் நெஞ்சங்களைக் களிப்பில் ஆழ்த்துகின்றன.

வெளியிலிருந்து உள்ளே நுழைந்தவுடனே சுவறில் தெய்வீகக் காட்சியளித்துக் கொண்டிருக் கும் திருமலை திருவேங்கடவனைப் பார்க்கிறோம். அதற்கு எதிர்ச் சுவறில் பண்டித நேருஜியின் படம் பரவச மூட்டுகின்றது. கணீர் கணீர் என்று டெலிபோன் மணி முழங்கிக் கொண்டிருக்கும் ஒலியும் ராதாகிருஷ்ணனும், மற்ற சிப்பந்திகளும் ஓடோடிச் சென்று அதைக் கவனிக்கும் பான்மை யும் திகைப்பூட்டுவனவாக இருக்கின்றன. திரு வேங்கடவன் படத்திற்குக் கீழே மீனாட்சித் திரு மணத்தைக் கூறும் சிலைகள்! கூடத்தில் இடப்



பெருந்தமிழரின் பெருங்குடும்பம்

பக்கத்தின் மூலையில் மோன நிலையில் வீற்றிருக்கும் போதி முனிவன் புத்தபிரான். வலப்பக்க அறைதான் முதலமைச்சரின் படுக்கையறை. அங்குதான் அவர் சிறிது நேரம் ஓய்வெடுப்பது வழக்கம்.

**ஸ்ரீராம பக்தர் :**

காந்தியடிகளைப்போல, பக்தவத்சலம் அவர்களுக்கும் இராமபிரான்மேல் அதிகமான பத்தியுண்டு. காந்திஜிக்கு ஸ்ரீராம ஜெபந்தான் இறுதி வரை வெற்றியைத் தேடிக் கொடுத்தது. அந்தப் பரிசுத்த வாசகத்தால்தான் ஆங்கிலேயன் அலறித் துடித்துக்கொண்டு ஓடினான். காலையில் படுக்கையிலிருந்து கண் விழித்ததும் முதலில் அவர் செய்யும் பணி 'ஸ்ரீராம ஜெயம்' என்று பத்து முறைக்குக் குறையாமல், எழுதுவதுதான். எந்த வேலை செய்யத் தொடங்கினாலும், அதற்கு அச்சாரம், ஸ்ரீராம ஜெயத்தை எழுதிவிடுவதுதான். வாழ்க்கையில் சிலர் சில நாள் மட்டும் இப்படி எழுதி வெறுப்படைந்து விடுவதுண்டு. ஆனால், பக்தவத்சலம் ஒழுங்காக – அதேசமயம் உறுதியாக – இதைச் செய்துகொண்டு வருகின்றார். கோட்டைக்குச் சென்று அமர்ந்ததும் அவரது பேனா ஸ்ரீராம ஜெயத்தை எழுதாமல் ஒருநாள் கூட 'பைல்களைத்' தொட்டதில்லை. தம்மை எதிர்த்து வருகின்ற துன்பத்தை வெல்லக் கூரிய அம்புகளாக ஸ்ரீராம ஜெயத்தை அவர் பயன்படுத்துகிறார். அவரோடு கூடவே பிறந்துவிட்ட அந்த ஸ்ரீராம ஜெயம், அவர் எண்ணுகின்ற எண்ணங்களையெல்லாம் செயல்களாக்கத் தவறுவதேயில்லை.

காலம் தவறாமை என்பது பத்தவத்சலம் பிறந்தவுடன் அவரது உயிரோடு ஒன்றிப் பிறந்து விட்டதோ என்று சொல்லும் அளவிற்குக் காலத் தோடு பணியாற்றுகிறார் அவர். கூட்டங்களுக்குக் குறிப்பிட்ட நேரங்களில் போய்ச் சேருவதென்பது மற்றவர்களுக்குக் கடினமாக இருந்தாலும், பக்த வத்சலத்திற்கு மிகவும் எளிமையாகவும் சுலப மாகவும் இருக்கின்றது. நேரம் தவறாமை என்றால் அதற்கு பக்தவத்சலம் என்று பெயர்.

ஒரு நிகழ்ச்சிக்கு 4 மணிக்குப் புறப்பட வேண்டுமானால், 'டிரைவர்' இருந்தாலும் இல்லா விட்டாலும், கார் 'போர்ட்டிகோவில்' வந்து நின்றாலும் நிற்காவிட்டாலும், அவர் சரியாக 4 மணிக்கு வெளியில் வந்து நின்றுவிடுவார். சில நிமிடங்கள் காலதாமதமானாலும், அதை அவ ருள்ளம் அனுமதிக்காது என்பதுதான் உண்மை. தம்முடைய வேலைகளைத் தாமே செய்கின்ற ஒரே மந்திரி பத்தவத்சலந்தான் என்று துணிந்து கூறலாம்.

லாலா சங்கர்லால் அவர்களால் ஸ்தாபிக்கப் பட்ட டிராபிகல் இன்ஷுரன்ஸ் கம்பெனியில், அப்போது சேர்மனாக இருந்த சீனிவாசய்யங் காரின் வற்புறுத்தலின் பேரில் 1928லிருந்து, 1940 வரை பக்தவத்சலம் காரியதரிசியாக இருந்தார். அவருக்கு வக்கீலாக இருந்து நிறைய சம்பாதிக்கும் வாய்ப்பு இருந்தும் அதை விரும்பாது அரசியலில் இரண்டறக் கலந்தார்.

மாகாணக் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டங்கள் வெளியூர்களில் நடக்கும்போது



அந்தந்த ஊர்களில் காங்கிரஸ் பிரமுகர்கள் அங்கத் தினர்களுக்கு, எல்லா வசதிகளும் செய்து விருந் தளிப்பது வழக்கம். அனேகமாக அவர்கள் எல்லாருமே தங்கள் பெயர் பிரபலமாக வேண்டும் என்ற ஒரே நோக்கத்தால் தலைகால் தெரியாமல் பணத்தைச் செலவழித்து சிற்றுண்டி விருந்து முதலியன அளித்து உபசரிப்பது வழக்கம். ஒரு முறை பக்தவத்சலம் காரியக் கமிட்டியின் கூட்டத்தை தன் வீட்டில் நடத்தி அங்கத்தினர் களுக்கு விருந்தளித்தார். எல்லாரும் வியக்கும் வகையில் அவ்விருந்து இருந்தது. வெளியூர்களில் நடந்த விருந்து, ஆடம்பரங்கள், இவர் அளித்த விருந்தில் மருந்துக்குக்கூட இல்லை. ஒரு பொறியல் – பச்சடி – சாம்பார் – ரசம் – மோர் – ஊறுகாய் – இதுதான் அவர் அளித்த விருந்து. ஆடம்பர மற்றவர் என்பதற்கு இதைவிட வேறு சான்று என்ன கூற முடியும்.

காங்கிரஸ் காரர்களிடையேயோ அல்லது காங்கிரஸ் கமிட்டிகளிலேயோ பல்வேறு காரணங் களால் ஏற்பட்டுவிடும் சிக்கல்கள் – தகராறுகள் முதலியவற்றை தீர்க்க காரியக்கமிட்டி அவ்வப் போது பக்தவத்சலத்தையோ அல்லது காமராஜ் அவர்களையோதான் நியமிப்பது வழக்கம். அதற்குக் காரணம் காங்கிரஸ் காரர்களிடையே பக்தவத்சலத்திடமிருந்த நன்மதிப்பு. விஷயங் களை பொறுமையுடன் ஆராய்ந்து எவர் மனதும் புண்படாத வகையில் தீர்த்து வைக்கும் திறமை அவரிடத்தில் இருந்ததுதான்.

## தெரியாது :

அன்பை ஆரவாரமாக வெளியே காட்டிக் கொள்ளத் தெரியாதவர் அவர். ஒரு முறை தம் மகள் ருக்குமணி இளமையில் நோய்வாய்பட்டு மதுரையில் பி. டி. ராஜன் அவர்கள் வீட்டில் இருந்தபோது மகளின் படுக்கைக்கருகில் சென்ற பக்தவத்சலம், என்ன கேட்பதென்றே தெரியாமல், 'சாப்பிட்டாயா?' என்றுமட்டும் கேட்டுவிட்டு நின்றார். அவருக்குத் தெரிந்தனவெல்லாம் நல்ல நிர்வாகம் நடத்தலும், 'பைல்' கட்டுகளோடு போராடலும், புகார்களைக் கவனித்தலும், நாட்டிற்காகச் சேவை செய்தலுமே.

அன்று முதற்கொண்டு தந்நலம் கருதாமல் உண்மையாக உழைத்து உலகின்புறக் கண்டு தாமின்புறும் சிறப்பினைப் பெற்றவர் பக்தவத்சலம். தமக்கு ஒரு மந்திரி பதவி கிடைக்குமென்ற எண்ணத்தோடோ, அல்லது வேறு வாய்ப்புகள் பெறலாமென்ற விருப்பத்தாலோ அவர் பொது வாழ்க்கையில் ஈடுபட்டுத் தொண்டுகள் புரியவில்லை. அவருடைய உண்மை உழைப்பையும் சக்தியையும் புரிந்துகொண்டவர்களே, அவரை மந்திரி சபையில் அங்கம் வகிக்கச் செய்தார்கள்.

'பக்தவத்சலம் மந்திரி சபையில் இல்லாமையினால் அவருக்கு எந்த விதமான இழப்புமில்லை. ஆனால், மந்திரி சபைதான் பெருத்த இழப்படைந்து பொலிவிழந்து தோற்றமளிக்கும்,' என்று பகைப்புலத்தவரும் கூறுகின்ற அளவுக்கு உண்மை நெறியிலிருந்து பிறழாதவர் திரு. பக்தவத்சலம்.



அவரைப்போல வேறு எந்த மந்திரியாய் இருந்தாலும் சுற்றுப்பயணம் செய்வதென்பது துர்லபம். சுற்றுப் பயணந்தான் அவரது ஆயுளை நீடிக்க வைக்கின்ற மாமருந்தாய் இருக்கின்றது, என்று சொல்ல வேண்டும்.

## சுழலும் பம்பரம் :

சுற்றுப் பயணமில்லாமலோ, அல்லது வேறு எந்த விதமான வேலையுமில்லாமலோ, பக்தவத்சலத்தால் ஒரு நிமிஷத்தைக்கூடக் கழிக்க இயலாது. சுறுசுறுப்பு மிகுந்த அவருக்குச் சுழலும் பம்பரத்தையும், ஓடோடி வேலை செய்யும் எறும்புகளையும் உதாரணமாகக் கூறுவதே சாலப் பொருத்தமாகும்.

## அறுவைச் சிகிச்சை :

பக்தவத்சலத்திற்கு ஒரு முறை மூக்கில் தொந்தரவு ஏற்பட்ட போது டாக்டர் சங்கரநாராயணன் வந்து பரிசோதித்து, மூக்கிலுள்ள ஓர் எலும்பை அறுவைச் சிகிச்சைமூலம் குணப்படுத்தினர். மற்றொரு சமயம் பக்தவத்சலம் சட்டசபையில் கால் தடுக்கிக் கீழே விழுந்து விட்டார். மூக்கில் கடுங் காயம் பட்டு இரத்தம் பெருகியது. அது தவிர, அடிக்கடி உடல் நலிவு அவருக்கு ஏற்பட்டதேயில்லை. வாரத்திற்கொரு முறை பொதுமக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும் என்றுதான் பக்தவத்சலம் நினைக்கின்றார். ஆனால், அவருக்கு நேரமில்லாத குறையாலேதான் அப்படிச் செய்ய இயலவில்லை.

இனிப்புப் பண்டங்களை அவர் விரும்புவதில்லை; ஆனால், தேன்குழல், ஓமப்பொடி போன்ற பண்டங்களை மட்டும் விரும்பிச் சாப்பிடுவார். உறவினர்கள் வீட்டு நிகழ்ச்சிகளில் மட்டுமன்றி, தெரிந்தவர் வீட்டு நிகழ்ச்சிகளிலுங்கூடக் கலந்துகொள்ளும் நல்ல பழக்கம் அவரிடமுண்டு. பேச்சிலும் பொருளிலும் சிக்கனத்தைக் கையாளுகின்ற அவர், செயலில் மட்டும் தாராளமாய் இருக்கின்றார்.

பொறுமை மிகுந்த அவர் தவறிழைக்கின்றவர்களைக் கண்டு கோபம் கொள்ளாமல், அவர்களே நாளாவட்டத்தில் திருந்துவார்கள் என்று நினைத்துக்கொள்வார்; தம்மைப்பற்றி எவரேனும் குறை கூறினாலும்கூட மௌனமாகக் கேட்டுக் கொண்டு, 'காலந்தான் அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும்' என்று கூறாமல் மௌனியாகி விடுவார்.

பக்தவத்சலம் 1952-ல் நடந்த தமிழ் வளர்ச்சிக் கழக மாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவராயும், அகில இந்திய 'கல்சர் பிரீடம்' கமிட்டியின் தலைவராயும், எழுத்தாளர் மாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவராயும் இருந்து பெரியதொரு சேவையைச் செய்திருக்கின்றார். எல்லாச் சிறப்புகளும் பெற்ற அவருக்கு நாள்தோறும் 'டைரி' எழுதும் பழக்கமில்லை. கடவுள் பக்தி நிரம்பிய அவர், அரசியலில் தீவிரப் பங்கு கொண்டதாலேதான் எல்லாக் கோயில்களையும் காண முடிந்தது என்று கூறிப் பெருமைப் படுகின்றார்.



அவர் காலையில் எழுந்தவுடன் தாமே தமது படுக்கையைச் சுற்றி வைத்துவிடுவார். மற்றவர்கள் அதைச் செய்ய முன் வந்தாலும், 'வேண்டா' என்று சொல்லி விடுவார். அடுத்த வேலை பல் தேய்ப்பதுதான். அது முடிந்த உடன் 'ஷேவிங்'கை முடித்துக்கொள்வார். மிகவும் சுறுசுறுப்பாய் இருக்க அவர் 'ஷேவிங்' செய்வதை மறப்பதே இல்லை. ஒரு கப்புக் காபிக்குப்பின் குளியலறைக் கடமையை முடிப்பார். இவை அவருடைய அன்றாட அலுவல்கள்.

**உணவு:**

கண்ட இடங்களில் எல்லாம் கிடைத்தது லாபம் என்று எண்ணி உண்கிற தவறான பழக்கம் பக்தவத்சலத்திடம் இல்லை. அவர் போகிற இடங்களில் எல்லாம் அவருக்கு 'டீ பார்ட்டி' களும், 'டின்னர்' களும் அளிக்கத்தான் செய்கிறார்கள். அளிக்கின்றவர்களின் உள்ளம் புண்படக்கூடாதே என்பதற்காகச் சற்றே ருசித்துவிட்டு வந்துவிடுவார். அதோடு இரவுதான் சாப்பாடு. அநேகமாக இரவுகளில் 'இட்டலி' சாப்பிடுகிற பழக்கம் அவரிடம் உண்டு. இரண்டு இட்டலியோடு இரவு உணவு முடிந்துவிடும். அசெம்பிளி நடக்கிற நாள்களில் காலை 7-45-க்கு உணவை முடித்துக்கொள்வார்; பிறகு இரவுதான் உணவு. பகற்போதில் ஒன்றும் சாப்பிடமாட்டார். ஒன்றும் சாப்பிடாத காரணத்தினால் சோர்ந்து போய்விடுவதில்லை. வாழ்நாளில் அவர் இரண்டு வேளைகள் மட்டுமே உணவு சாப்பிடுகிறார். ஏழைகளும், குடிசை வாழ்வோரும் அப்படித்தானே செய்கிறார்கள்? முதலமைச்சர் அவர்

கள் நினைத்தால் ஒரு நாளைக்கு ஒன்பது முறை அரசபோக உணவு சாப்பிடலாமே! ஆனால், அதை அவர் விரும்புவதில்லை.

**‘நைட் கேம்ப்’ :**

திரு. பக்தவத்சலம் அவர்களிடம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பண்பு ஒன்று உண்டு. மற்ற எவரிடத்திலும் இல்லாத இந்தத் தனிப்பண்பு, அமைச்சரவர்களின் தனிச்சிறப்பாய் விளங்குகிறது. அவருக்கு ‘அலாரமே’ வேண்டுவதில்லை. அவருடைய நெஞ்சே அவருக்கு அலாரம். இரவு படுக்கைக்குப் போகும் போது அதிலும் ‘கேம்பு’களில் எல்லா வேலைகளையும் முடித்த பின்பு, படுக்கச் செல்லும் போது, ‘காலை நான்கு மணிக்கு எழுப்பி விடுங்கள்’ என்று சொல்லிவிட்டுப் படுப்பார். உடன் இருப்பவர்கள்; காலை 3–30க்கு எழுந்துகொள்வார்கள்; அயர்ந்து உறங்கிக்கொண்டிருக்கும் மந்திரியார் அவர்களை எழுப்பலாமா வேண்டாமா என்று மிகுந்த தயக்கத்துடன் இருப்பார்கள். ஆனால், மற்றவர்கள் ஆச்சர்யப்படும் வகையில் காலை 3–50 மணிக்கு அறையில் விளக்குப் போடப்படும். மற்றவர்கள் மலைத்துவிடுவார்கள். இது எல்லோருக்கும் வாய்க்கத் தகுந்த பேறு?

**‘கோபம் என்பது என்ன?’**

மற்றவர்கள்மேல் சிடுசிடு என்று எரிந்து விழுந்துகொண்டே இராவிட்டால் ஒரு சிலருக்கு உலகத்தில் பொழுது போகாது. இந்த முரட்டுத்தனமான பண்பிற்கு அப்பாற்பட்டவர் பக்தவத்சலம்.



பாரதக் குடியரசுத் தலைவருடன்

'கோபம் என்பது என்ன?' என்பது அவருக்குத் தெரியாது. சில நேரங்களில் கார் டிரைவர் தவறான பாதையில் வண்டியை ஓட்டிச் சென்று, வேறு இடத்திற்குப் போய்விட்டாலும், அவருடன் இருப்பவர்கள், தவறாக நடந்துகொண்டுவிட்டாலும், அந்தச் சமயத்தில் எல்லாம் "என்ன இப்படிச் செய்கிறீர்களே!" என்று மட்டுந்தான் கேட்பார். அவ்வளவுதான் அவருக்குத் தெரியும். அதுதான் அவர் அதிகமாகக் கோபப்பட்டுக் கூறுவது. அதற்கு மேல் அவருக்குக் கோபப்படத் தெரியாது; கோபமும் வாராது. அவர் உணர்ச்சி வயப்பட்டு எதையும் செய்யமாட்டார். அமைதியோடும், உறுதியோடும், அடக்கத்தோடும் எந்த ஒரு செயலையும் அழகாகச் செய்துமுடித்து விடுவார். உணர்ச்சி வயப்படாத இந்த நிலை - கோபப்படாத நிலை - அவருடைய நிருவாக வெற்றிக்குச் சிறந்த சான்று.

**எல்லாம் அறிவார் :**

பக்தவத்சலம் எல்லாச் செய்திகளையும் அறிவார். அவருக்குத் தெரியாத செய்திகளே இல்லை. அவருடன் இருக்கும் மற்றவர்கள் 'இந்த விஷயம் அவருக்குத் தெரியாது,' என்று எண்ணிச் சொல்வார்கள். அவர், தமக்குத் தெரிந்திருந்தாலும், தெரியாதவர்போல இருப்பாரே தவிர, தமக்குத் தெரியும் என்று காட்டிக் கொள்ளவேமாட்டார். இந்த உயரிய பண்பு வேறு யாரிடம் இருக்கிறது? தெரியாததையெல்லாம் தெரியுமென்று சொல்லிப் பறை அடிக்கிற உலகமாயிற்றே இது!

**மென்மையான நெஞ்சம் :**

பிறரைப் புண்படுத்தி வாழ வேண்டுமென்று பக்தவத்சலம் எப்போதுமே நினைத்ததில்லை; மனத்தால் எண்ணியதுமில்லை. எவரையும் உள்ளம் நோக வைக்கமட்டார் அவர். மற்றவர்களை அன்புடனும், பண்புடனும் நடத்துவதில் அவருக்கு நிகர் அவரேதான். கூட்டத்திற்கு வரும்படி ஆயிரக்கணக்கில் கடிதம் வரும். ஆனால், வர முடியாது என்று சொல்லி அழைத்தவர்களைப் புண்படுத்தவே மாட்டார். "இந்தத் தேதி எனக்கு ஒத்துக்கொள்ளவில்லை. வேறு தேதியில் வரட்டுமா?" என்று மட்டும் கேட்பார். மறுத்து, மற்றவர்களை எப்போதுமே அவர் துன்புறுத்த மாட்டார். 'விசிட்டர்கள்' அவரைக் காண ஆயிரக் கணக்கில் வந்துகொண்டிருப்பார்கள். 'பேச முடியாது; எனக்கு நேரமில்லை; நாளைக்கு வாருங்கள்,' என்று சொல்லித் திருப்பி அனுப்பி விடும் பழக்கம் அமைச்சரிடம் சிறிதும் இல்லை. எல்லாருடனும் பேசுவார்; இனிமையாக, அளவாகப் பேசுவார். சில நேரங்களில் 'நைட் கேம்பி' லிருந்து திரும்பி வருவார். வீட்டில் 'விசிட்டர்' கள் இருப்பார்கள். 'நான் மிகவும் சோர்வாய் இருக்கிறேன்; நாளைக்கு வாருங்கள்; என்று சொல்லி அனுப்பிவிடவே மாட்டார். இரவு மணி பன்னிரண்டு ஆனாலும், சோர்வின்றி, வந்திருக்கும் கடைசி விசிட்டர் வரை பேசிவிட்டுத்தான் போவார். இத்தகைய மென்மையான நெஞ்சம் அவருக்கிருப்பதாலேதான் அவரிடம் எல்லாரும் அன்பு வைத்திருக்கின்றனர்.



**இரும்பு நெஞ்சம் :**

அவர் நெஞ்சம் மென்மையில் பஞ்சுதான்; ஆனால், உறுதியில் இரும்பு. அவர் எந்த நிலையிலும் தமது மன வுறுதியை இழக்கமாட்டார்; மற்றவர்கள் தம் கருத்தை எதிர்த்தாலும் அஞ்சமாட்டார். கடைசி வரை நின்று தம் கருத்தை நிலைநாட்டும் இரும்பு நெஞ்சை அவர் பெற்றிருக்கிறார். அதே போலக் கீழுள்ள ஊழியர்களைப்பற்றி அவரிடம் புகார் செய்வார் சிலர். புகார் செய்தவர்களின் பெயரை ஒரு போதும் அவர் வெளியிட மாட்டார். சம்பந்தப்பட்டவர்களைத் தனியாக அழைத்து, செய்த குற்றங்களைச் சொல்லி, திருத்திக்கொள்ளும்படி சொல்லுவார்.

**'நான் - வெஜிட்டேரியன்':**

பக்தவத்சலம் சைவ உணவு உண்ணும் குடும்பத்தில் தோன்றியவர். சைவ உணவையே உண்பவர். 'டின்னர்'களில் அவருடன் உட்கார்ந்து அருகில் இருந்த வண்ணம் மற்றவர்கள் 'நான்-வெஜிட்டேரியன்' உணவு சாப்பிடுவார்கள். அதைப்பற்றி அவர் முகம் சுளிக்கவே மாட்டார். மற்றவர்கள் உண்பதைக் கண்டு கேலியோ கிண்டலோ செய்யும் பழக்கம் அவரிடம் என்றுமே இருந்ததில்லை. ஆனால், சிரிப்புடன் அவர் மட்டும் வெஜிட்டேரியன் உணவு சாப்பிடுவார். இது அவருடைய தனியான பண்பல்லவா?

**பக்தி மனம் :**

வீட்டிலிருந்து ஆபிசிற்கோ, அல்லது வேறு இடங்களுக்கோ செல்கிற சமயத்தில், பூஜை அறையை ஒரு முறை பார்த்துவிட்டுத்தான் வெளியே வருவார். காரில் உட்கார்ந்ததும் ஒரு முறை குனிந்து தம்முடைய கைகளால் கீழே தொட்டுக் கும்பிட்டுக்கொள்வார். அதே போலக் கார் செல்கிறபோது இடையில் கோழியோ, ஆடோ சிக்கிக்கொள்ளும் நிலை நேர்ந்தால், உடனே தம்முடைய கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்வார். இரவு படுக்கையில் படுப்பதற்கு முன்பும் இப்படியே செய்வார். மயிலாப்பூரில் தண்ணீர் தொட்டி மார்கெட்டுக்கருகில் உள்ள ஆஞ்சநேயர்மீது அவருக்கு அளவு கடந்த பக்தி. அவ்வழியே கார் கோயிலைக் கடந்து செல்கையில், பக்தி நிறைந்த பார்வையொன்றைக் கோயில் மீது செலுத்திவிட்டு, குனிந்து கீழே தொட்டுக் கும்பிட்டுக் கொள்வார். இதைப் புரிந்துகொண்ட டிரைவர், அக்கோயிலைக் கடக்கும் போது மட்டும் சிறிது மெல்லக் காரைச் செலுத்துவார். உயர்ந்த பண்பும், பக்தி மனமும், அன்பு நினைவும் திரு. பக்தவத்சலத்துக்கு உடன் பிறந்தவை. இதன் மூலம் அவர் சிறப்பின் உச்சிக்கே பறந்து சென்று விடுகிறாரே !

**'தம் கையே தமக்குதவி':**

அமைச்சரிடம் இருக்கும் ஊழியருக்குச் சுருக்கெழுத்துத் தெரிந்திருக்க வேண்டுமென்னும் கட்டாயம் எதுவுமில்லை. நம் முதலமைச்சர் பக்தவத்சலத்திற்கு மட்டுமே இந்தத் தனிப் பண்பு. காரணம், அவர் எந்த ஒரு கடிதத்திற்கும் தம் கையாலேயே பதில் எழுதுகிறார். சற்றே பதவி உயர்வு கிடைத்ததும் எழுதுவதை விட்டுச் சுருக்கெழுத்தாளரை வைத்துக்கொள்கிறவர்கள் வாழ்கிற நாட்டிலேதான் பக்தவத்சலமும் வாழ்கிறார். ஆனால், அவர் அந்தப் பழக்கத்தை அடியோடு வெறுத்து, யார் கடிதமாய் இருந்தாலும், தம் கைப்படக் கடிதமெழுதி 'டைப்' அடிக்கத் தருகிறார். 'தன் கையே தனக்குதவி,' என்னும் சித்தாந்தம் அவருக்கு இளமையிலிருந்தே அமைந்த ஒன்று. அமைச்சராய் இருந்தாலும், இந்த நல்ல பழக்கத்தை அவர் கைவிடவில்லை. பதவிகள் வரலாம், போகலாம். அதற்காகப் பண்புகளை இழக்கலாமா? பண்பை இழக்காத மந்திரிகளுள் பக்தவத்சலமும் ஒருவர்.

**காங்கிரஸ் :**

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட்டம் என்றால், பக்தவத்சலத்திற்கு ஒரே மகிழ்ச்சிதான். பள்ளிக்குச் செல்கிற மாணவன் போல, அவர் மகிழ்ச்சிப் பெருக்குடன் கமிட்டிக்குச் செல்வார்; இறுதி வரை அதில் இருப்பார். அதற்கு வருகை தருகிறவர்கள், இடையிடையே வெளியே வருவதும், உள்ளே போவதுமாகக் காலத்தைக் கழிப்பார்கள். ஆனால், பக்தவத்சலம் அப்படிச் செய்ய மாட்டார். கடைசியாக 'ஜனகணமன' பாடி முடிக்கிற வரை உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்து செல்லவே மாட்டார். ஏ. ஐ. சி. சி. என்றால் அவ்வளவு பக்தி அவருக்கு!

### செய்திகள் முக்கியம் :

எந்த வேலை எப்படி இருந்தாலும், செய்திகளைப் படிக்க அவர் மறக்கமாட்டார்; காபி குடித்த பிறகு மிகக் கவனமாகச் செய்தித்தாளை எடுத்துப் படிப்பார்; உலகச் செய்திகளைத் தெரிந்துகொண்டு தம் கருத்துகளை அவற்றுக்கேற்ப அமைப்பதில் தீவிரக் கவனம் செலுத்துவார்; எதையும் சிந்திப்பார். சிந்தித்தே முடிவுக்கு வருவார். முடிவுக்கு வந்தவுடன் செயல்படுத்துவார்.

> **'எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்**
> **எண்ணுவம் என்ப திழுக்கு.'**

என்னும் வள்ளுவரின் குறளுக்கேற்ப, வளமான சிந்தனையோடு சிந்தித்துத் துணிகின்ற பழக்கம் பக்தவத்சலத்திடம் இயற்கையாய் அமைந்திருக்கிறது. அதனால், செய்தித்தாள்களைத் தவறாமல் படித்து, தெளிவாகப் புரிந்துகொண்டு, அழகுறச் செயலாற்றும் வல்லமை திரு. பக்தவத்சலத்தின் தனிச்சொத்து.

### பள்ளிப் பருவம் :

பக்தவத்சலம் இளமையில் எந்த விஷயத்திலும் ஊக்கம் அதிகம் கொண்டவர். எல்லாவற்றையும் கேட்டு மனத்திற்குள் அடக்கிக்கொள்வார்; தமக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் சற்று ஒதுங்கியே இருப்பார். வேண்டாத செயல்களில் தாமே சென்று சிக்கிக்கொண்டு அவதிப்படுகிற பழக்கம் அவரிடத்தில் இல்லை. யாரிடத்திலும் புறங்கூறுதலோ, பொய் சொல்லுதலோ அவரிடத்தில் இல்லாத பண்பு. திரு. பக்தவத்சலம் அவர்



கள் வாழ்க்கையில் சம்பவங்கள் அதிகமில்லை. 'சம்பவங்கள்' அதிகமாய் இல்லாமல் இருப்பதே ஒரு பெரிய சம்பவம் என்று கூறுதல் வேண்டும். அதுதான் அவருடைய வாழ்க்கையின் தனிச் சிறப்பு. பள்ளிப் பருவத்திலிருந்தே ஆழ்ந்த அமைதியை வளர்த்துக்கொண்ட சீலர் அவர். விளையாட்டில் அவருக்கு அதிகமாகப் பற்றில்லை. அது சமயம் எவரிடமும் பேசாமல், தாமுண்டு, தம் வேலையுண்டு என்றிருந்தவர். இப்போதுதான் அவர் கூட்டங்களில் பேசுகிறார். காமராஜ் போல், பேச்சில் அவருக்கு நம்பிக்கை இல்லை. செயலிலேதான் அவருக்கு நம்பிக்கை. அவர் தாம் சொல்ல வந்ததைச் சொல்லாமல் வளவளவென்று பேசிக்கொண்டிருக்க மாட்டார். குறிப்பிட்ட விஷயத்தைச் சுருக்கமாக—ஆனால் விளக்கமாக—கூறுவார். பள்ளிப் பருவத்திலிருந்தே கூர்ந்து கவனிக்கிற இயல்பு—பண்பு—அவரிடமிருந்து வந்தது. எறும்பு வரிசையைக் கூர்ந்து பார்த்துதானே வாழ்க்கையில் நல்லதொரு பாடத்தைக் கற்றுக்கொண்டார் அவர். அந்தக் கூர்மையான பார்வையாலேதான் அவர் எல்லாவற்றையும் இப்போது வென்று, வெற்றிகரமாக அரசியலை நடத்திக்கொண்டிருக்கிறார்.

### சாந்து பொட்டு :

திருமணமான சில நாள் வரையிற்கூட பக்தவத்சலம் நெற்றியில் சாந்து பொட்டு வைத்துக்கொண்டிருந்தார். இந்தப் பழக்கம் மற்ற எவரிடத்திலும் இல்லாதது; அவருக்கென்றே அமைந்த தனிப் பண்பு.

## இரவில் உணவு :

பக்தவத்சலம் சில நேரங்களில் உணவு உண்ண இரவு பன்னிரண்டு மணியும் ஆகும். அந்த அகால நேரத்திலும் ஞானசுந்தரம் அம்மையாரே எழுந்து வந்து உணவு பரிமாறுவார்; பெரும்பாலும் வேலைக்காரரை அவர் எதிர் பார்ப்பதில்லை. காலையில் அணிந்துகொள்ள வேண்டிய துணிகளை ஞானசுந்தரம் அம்மையாரே எடுத்து வைத்து விடுவார். வெளியூர்களுக்குக் 'கேம்ப்' செல்கிற போது, திருமதி ஞானசுந்தரமோ அல்லது அவருடைய மகள் சரோஜினியோ துணிகளை எடுத்து வைத்துவிடுவார்கள். இரவில் உணவு உண்ணும் போதும், ஞானசுந்தரம் அம்மையார் அருகில் இருப்பார்.

## 'பைல்' பறக்கும்!

அலுவலக நேரங்களில் பக்தவத்சலத்தை காணப் பலர் வருவர். அவர் வந்தவர்களைத் தமக்கெதிரில் உட்கார வைத்துவிட்டு, அவர்களுடைய குறைகளையோ அல்லது அவர்கள் வந்த நோக்கத்தையோ சொல்லச் சொல்வார். வந்தவர்கள் அப்படியே சொல்லத் தொடங்குவார்கள். ஆனால், பக்தவத்சலம் பைல் கட்டுகளையே பார்த்துக் கொண்டிருப்பார். ஒவ்வொரு கட்டாகக் கீழே விழுந்து கொண்டிருக்கும். என்ன சொல்கிறார் என்பதைக் கவனிக்காதவர் போலவே காணப்படுவார். சொல்கிறவர்களும், 'நாம் சொல்வதைக் கேளாமல் பைல் கட்டுகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறாரே!' என்று மனத்திற்குள் புழுங்குவார்கள். அவர்கள் சற்று நிறுத்திவிட்டால், 'ஏன் நிறுத்தி



விட்டீர்கள்? மேலே சொல்லுங்கள்,' என்பார். அப்போதுதான் பக்தவத்சலம் ஒன்று விடாமல் கூர்ந்து கேட்டு அறிந்துகொள்ளும் 'அஷ்டாவதானி' என்பது அவர்களுக்குப் புரியும். வேலை களைத் தொடர்ந்து செய்துகொண்டே, வந்தவர்களோடு பேசி அவர்களுடைய குறைகளைப் போக்கி அனுப்புகிற ஒரே மந்திரி பக்தவத்சலந்தான். இப்படி எல்லோராலும் செய்ய இயலாது. ஒரே சமயத்தில் பல வேலைகளைக் கவனிக்கிறார் அவர். பைல் கட்டுகளின் வேலைகள் முடியும்; வந்தவர்களும் மனத்திருப்தியுடன் திரும்புவார்கள்.

## உழைப்பாளர் :

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி, செங்கற்பட்டு ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி, பொன்னேரித் தாலூக்காக் காங்கிரஸ் கமிட்டி, ஜில்லா போர்டு, தாலூக்கா போர்டு—இப்படி எல்லாவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்த பக்தவத்சலம், அலுப்புச் சலிப்பில்லாமல், அந்த ஸ்தாபனங்களின் முன்னேற்றத்திற்கு இடைவிடாமல் உழைத்து வந்தார். இந்நிலையில் பல பொது ஸ்தாபனங்களில் ஈடுபடுகிறவர்களுக்குச் சில்லரைச் சச்சரவுகள்—கருத்து வேறுபாடுகள்—தொண்டர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாதல் இயற்கை. ஆனால், பக்தவத்சலத்தைப் பொறுத்த வரையில், தமது கருத்துக்கு மாற்றுக் கருத்துத் தெரிவிப்பவர்கள் உட்பட எல்லோரையும் நிதானமாக—சமமாக—எண்ணிப் பழகுவார்; அவர்களிடம் அமைதியாகப் பேசித் தம் வழிக்கு இழுத்துக்கொண்டு வருவார். பக்தவத்சலத்தின் அம்மான் முத்துரங்க முதலியார் சில

நேரங்களில் ஆத்திரமாக ஒரு கருத்தை வலியுறுத்திக் கூறும்போதுகூட மௌனமாகவே கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, கடைசியில் முத்துரங்கத்தையே தாம் பேசியது சரியன்று என்று உணரக்கூடிய நிலையில் பேசித் தம் வழிக்குக் கொண்டு வரும் சாமர்த்தியம் திரு. பக்தவத்சலத்திடம் உண்டு. அவர் மாற்றாரும் மருள உழைப்பார்; பேசுவார்.

**குழந்தை உள்ளம் :**

ஒரு சமயம் பக்தவத்சலம் காலை 9 மணிக்குள் வெளியே செல்ல வேண்டியிருந்தது. அதைப் புரிந்துகொள்ளாமல் வீட்டிலிருப்பவர்கள் மறந்து அவரவர்கள் காரியங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். பக்தவத்சலம் காலைக்கடனில் ஒன்றான குளிக்கும் பிரச்சினையை முடித்துவிடுதற்குக் குளியலறைக்குச் சென்றார்; அப்படியே மலைத்து நின்றுவிட்டார். அவ்வறையில் குளிக்கத் தண்ணீர் வைக்கவில்லை. உடுத்துக்கொள்ள வேஷ்டியும் துவட்டிக்கொள்ள 'டவலும்' வைக்கவில்லை. அது மட்டுமன்றி, அன்று காலையிலேயே அவருக்குத் தரவேண்டிய காபியும் தரப்படவில்லை.

இவற்றையெல்லாம் பொறுமையோடு கவனித்த பக்தவத்சலம் அமைதியாய்ச் சமயலறைக்கு வந்தார். 'எனக்குக் காலையில் காபி கொடுக்கவில்லை, குளிக்கும் அறையில் தண்ணீரில்லை, வேஷ்டியில்லை,' என்று குழந்தையைப் போன்ற உள்ளங்கொண்ட அவர், மெல்லக் கூறிய போது எல்லாருமே திடுக்கிட்டனர். ஞானசுந்தரம் அம்மையாரும், தங்கையார் கண்ணம்மாளும் பெரிதும் வருந்தினார்கள். சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து சென்று தேவைகளைச் செய்து முடித்தார்கள். அவர் தேவையறிந்து உடனே செய்ய இயலாமல் போய்விட்டதே என்று ஞானசுந்தரத்திற்கு உள்ளுக்குள் பெருங்கவலைதான்.

சாப்பிடும்போது சமையலில் என்ன குறை வரினும் பேசாமல் சாப்பிட்டு முடிக்கும் இயல்பு பக்தவத்சலத்திடமுண்டு. ஒரு நாள் அவர் சாப்பிடும் போது குழம்பில் அளவிற்கு மிஞ்சிய உப்பு இருந்ததை ஞானசுந்தரம் அம்மையார் கவனிக்கவில்லை. ஆயினும், பக்தவத்சலம் பேசாமல் அதை ஒதுக்கிவிட்டு, இரசம் விட்டுக்கொண்டு சாப்பிட்டு எழுந்தார். அதேபோலக் காபியில் சர்க்கரை இடாமல் ஒரு நாள் கொடுத்துவிட்டார்கள். அவர் சட்டசபைக்குச் செல்ல வேண்டியிருந்தமையினால், சர்க்கரையைக் குறித்துக் கவலைப்படாமலே குடித்துவிட்டுச் சென்றார். பின்னர் நிகழ்ந்ததை அறிந்து கவலை கொண்டனர் குடும்பத்தினர்.

**குளியலறை :**

திரு. பக்தவத்சலம் குளிக்கச் செல்லும்போது மிகவும் எச்சரிக்கையாய்ச் செல்வார்; குளியலறையின் கதவு வீணாக மூடப்பட்டிருந்தால்கூடத் தட்டவேமாட்டார்; அப்படியே நின்றுகொண்டிருப்பார். இதையறிந்த குடும்பத்தினர் அவர் குளிப்பதற்கு முன்பு யாருமே குளிப்பதில்லை என்று தீர்மானித்துக்கொண்டனர்.

**நிமிஷ பூஜை :**

அறைக்குள் நுழைந்து மணிக்கணக்காக அமர்ந்து பூஜை செய்கிற பழக்கம் திரு. பக்தவத்சலத்திடமில்லை. காரணம், அவருக்கிருக்கும் அலுவல்களின் மிகுதியே. மக்களை வெளியே காக்க வைத்துவிட்டு, உள்ளே அமர்ந்து பூஜை செய்து கொண்டிருக்கும் பழக்கத்தை அவர் வெறுத்து ஒதுக்குவார். 'மக்கள் சேவையே மகேசன் சேவை,' என்பது அவரது எண்ணம்; அதனால், பூஜை அறைக்குள் யாருமில்லையானால், உள்ளே நுழைந்து, ஒரு 'நிமிஷ பூஜை' செய்து விட்டு வெளியே வருவார். உள்ளே செல்வதும் வெளியே வருவதும் ஒரு நிமிஷத்தில் முடிந்துவிடும். ஒரு நிமிஷமே செய்தாலும், ஒரு மணி நேரப் பூஜைக்கு அது சமமாய் இருக்கும்.

பக்தவத்சலத்துக்குக் கூச்சம் அதிகம். அதனால், எவரிடமும் அவர் அதிகம் பேசமாட்டார்; ஒதுங்கியே இருப்பார். அதனால், அவர் உறவினர்களுள் பலர் அவரைத் தவறாகக்கூட எண்ணிவிடுவதுண்டு. வேலைக்காரர்கள்மீதும் மற்றச் சிப்பந்திகள்மீதுங்கூட அனேகமாகக் கோபம் என்பதே ஏற்பட்டதில்லை. அதிகமாகக் கோபம் வந்துவிட்டால் யாரிடமும் பேசாமல் இருந்துவிடுவார்.

**ஓய்வில்லை :**

இரவு நேரத்தில் எப்போதும் அவரால் சரியான நேரத்தில் சாப்பிட இயல்வதில்லை. அவருக்கு ஓய்வென்பது ஒன்று இருந்தால்தானே



பிரதமருடன் முதல்வர்

அது இயலும்! ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளாய் இருக்கும்; என்றாலும், அன்றுகூட முந்நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள ஓர் ஊரில் நிகழும் பொது நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு மறு நாள் வீடு திரும்புவார்.

**காட்சிக் கெளியவர் :**

சாதாரணமாக எவரும் அவரை எப்போதும் பார்க்கலாம். எந்தவிதமான கட்டுப்பாடும் அங்கு கிடையாது. சர்க்கார் உத்தியோகஸ்தர் யாராவது பார்க்கும்போதுதான் உள்ளே வேறு ஆட்கள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. பொது மக்கள் ஒரே சமயத்தில் இரண்டு மூன்று பேர்கூட வந்து அமைச்சரின் முன்னர் உட்கார்ந்து கொள்ளு வார்கள். எவரும் எதையும் சொல்ல முடியாத நிலை. உள்ளே வந்தவர்கள் உட்கார்ந்திருப்பார்கள். எதற்காக வந்தார்கள் என்று கேட்கவேமாட்டார். அவருடைய வேலை (பைல்களைப் பார்த்தல்) மட்டும் நடந்துகொண்டே இருக்கும். வந்தவர்கள் தங்களுடைய ரகசியத்தை வெளியிலே சொல்ல முடியாதபடி மற்றவர்கள் எப்போது போவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் ஏதாவது பேசமுனைந்தால் 'என்ன வேண்டும் சொல்லுங்கள்' என்பார். அவருடைய வேலைகளைத் தொடர்ந்து செய்தவண்ணம் இருப்பார். யாராவது எதையாவது கேட்டால்..........

**'நீங்கள் சொல்லுங்கள் – என் காதில் விழுகின்றது. நான் வேலை பார்ப்பதால் உங்களுக்கென்ன கஷ்டம். நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்களேன்' என்பார்.**

வந்தவர்கள் ஒன்றும் சொல்ல முடியாத நிலையில் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்து விட்டு வேறு வழி இன்மையால் போய் விடுவார்கள்.

**அன்றே செய்வார் :**

எந்த விஷயத்தையும் நாளைக்கு என்று ஒதுக்கி வைக்கமாட்டார். ஒன்றே செய்தாலும் நன்றே செய்வார். நன்றே செய்வதையும் அன்றே செய்துவிடும் மனத்திண்மை பெற்றவர். உடனுக்குடன் பதில் எழுதுவதில் அவருக்கு நிகர் அவர் தான். யாரையும் மேலுக்கு உபசார வார்த்தைகள் கூறி வரவேற்க மாட்டார். ஆனால் அன்பில்லை என்று சொல்லவும் முடியாது. அன்பை வெளியில் காட்டிக் கொள்ளவே மாட்டார். யாருக்காவது எதையாவது செய்ய வேண்டுமென்றால் நியாயம் இருந்தால் செய்யத் தவறவே மாட்டார். அநியாயம் என்று பட்டால் செய்ய முடியாது என்று சொல்லவும் மாட்டார். அவர்களாகவே பார்த்து ஒதுங்கிக் கொள்ளும் வண்ணம் சாக்குப் போக்குச் சொல்லி விடுவார்.

**அழைக்கமாட்டார் :**

முதலமைச்சர் பக்தவத்சலம் அறையில் உட்கார்ந்து கொண்டிருப்பார். அவருக்கு ஏதாவது வேண்டுமென்றால்கூடக் குரல் கொடுத்து யாரையும் அழைக்கமாட்டார்; வெளியே எட்டிப் பார்ப்பார். அதை நன்றாகப் புரிந்துகொண்டு எவரேனும் வந்து என்னவென்று கேட்பர். கண்ணாலேயே கட்டளையிடுவார் அவர். மற்றவர்களும்

அதைப் புரிந்துகொள்வார்கள். அவர் வாழ்க்கையில் இது ஒரு சிறப்பு.

### குழந்தைப் பாசம் :

பக்தவத்சலம் அவர்களுக்குக் குழந்தைகளிடம் பாசமுண்டு. ஆனால், அதை அவர் வெளியே காட்டிக்கொள்ளமாட்டார். தம் குழந்தைகளைக் கூடச் சரியாகத் தூக்கிவைத்துக் கொஞ்சிப் பேச அவருக்குத் தெரியாது. தம்மிடத்தில் அப்பாவுக்கு அதிகப் பற்றில்லை என்றுதான் மகள் ருக்குமணி முதலிலே நினைத்தார். சுற்றத்தவர்களும் மற்றவர்களுங்கூட அப்படித்தான் எண்ணினார்கள்.

### தொண்டுள்ளம் :

ருக்குமணிக்குப் பேறு காலம் அணுகியது. தந்தையார் வெளியூருக்குப் போயிருந்தார். மன நிம்மதி இல்லாமல் தவித்த பக்தவத்சலம் வெளியூரிலிருந்து பல 'டிரங்க்கால்', 'டெலிபோன்' மூலம் மகளின் நலத்தைப் பற்றி விசாரித்த வண்ணமிருந்தார். வெளியூருக்குப் புறப்படும் போதே 'கார் வீட்டிலேயே இருக்கட்டும்; டிரைவர் இங்கேயே இருக்கட்டும்', என்று பாதுகாப்பாளரிடம் சொல்லிவிட்டுச் சென்றார். வீட்டில் மிக முக்கிய விஷயத்தைக் கூடக் கவனியாத அளவு பொதுத்தொண்டில் நாட்டத்தைச் செலுத்தி உயர்ந்த வாழ்க்கை வாழ்கிற உத்தமர் பக்தவத்சலம்.



கன்றும் கருத்தும் கலந்தன

**தந்தை பாசம் :**

இன்னொரு முறை ருக்குமணிக்குப் பேறு காலம் நெருங்கியது. அப்போதும் பக்தவத்சலம் வீட்டில் இருந்தபடியே துடியாய்த் துடித்துப் போனார்; வெளியிலேயே சாய்வு நாற்காலியில் இருந்துகொண்டு அடிக்கடி டெலிபோன் மூலம் விசாரித்துகொண்டே தூங்காமல் இரவையெல்லாம் கழித்தார். அப்போதுதான் அவருக்குள்ள தந்தை பாசம் எல்லாருக்கும் புரிந்தது. ஆனால், இப் பொழுதெல்லாம் தம் பேரன் பேர்த்திகள் என்றால் அவருக்கு உயிர்தான். அவர்களுடன் அவர் கொஞ்சிக் குலாவுவார்.

**பூண்டிப் பயணம் :**

என்றாவது ஒரு நாள் ஒரு ஞாயிற்றுக்கிழமை-அதிலும் பொது நிகழ்ச்சிகள் இல்லாத நாளில்-பக்தவத்சலம் தம் குடும்பத்தோடு பூண்டிக்குப் புறப்பட்டுவிடுவார்; அன்று முழுதும் இன்பமாய் அங்கிருந்துவிட்டு அடுத்த நாள் வீட்டிற்குத் திரும்புவார். சில சமயங்களில் தம் மனையாரிடம் அசெம்பிளி விஷயங்களைப்பற்றியும் அவர் மனம் விட்டுப் பேசுவதுண்டு.

**தூக்கிக்கொண்டார் :**

குழந்தைகளைத் தூக்கிக் கொள்வதென்றால் அவருக்குக் கூச்சம் என்பதைக்காட்டிலும், தெரியாது என்றுதான் கூறவேண்டும். ஊட்டியில் ஒரு முறை மகள் ருக்குமணியின் பிள்ளை ஸ்ரீதர் தவழ்ந்து வந்து தம்மைப் பிடித்துக்கொண்ட



போது, பேசாமல் தூக்கிக்கொண்டார்; தம் சட்டகர் பி. டி. ராஜனின் மகள் சாரதாவை ஒரு முறை தூக்கினார். இவையே அவர் குழந்தைகளைத் தூக்கிக்கொண்ட நிகழ்ச்சிகள்.

**‘நீ போ’ :**

கார் போர்ட்டிக்கோவில் வந்து நிற்கும். அது, அவர் வெளியே புறப்படுகிறார் என்பதற்கு அறிகுறி. வெண்ணிற முழுக்கைச் சட்டை-நான்கு முழ வேட்டி மேல் துண்டு இவைகளே அவருடைய உடை. விறுவிறு என்று வேகமாய் நடந்து வந்து பின் சீட்டின் ஓரத்தில் உட்கார்ந்துகொள்வார். அந்த நேரத்திலும் சிலர் வந்து எதையாவது கேட்பர். பொறுமையோடு பதில் சொல்லிவிட்டு, ‘நீ போ’ என்று டிரைவருக்குச் சொல்வார். வண்டி புறப்படுமுன் ஒரு முறை கீழே குனிந்து வணங்கி எழுவார்.

**மெல்லப் போ :**

டிரைவரின் பக்கத்தில் பாதுகாப்பாளர் ராதா கிருஷ்ணன் உட்கார்ந்துகொண்டிருப்பார். அவர் போகவேண்டிய இடத்தைச் சைகையின் மூலம் டிரைவருக்கு விளக்கிக்கொண்டே போவார். கார் போய்க்கொண்டே இருக்கும். சிறிது வேகமாய்ப் போனால், ‘மெல்லப் போ’, என்று கூறுவார். அடிக்கடி இடக்கையின் மணிக்கட்டுக்கருகில் இருக்கும் சட்டையை நீக்கிக் கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்துக்கொள்வார். ‘பார்த்துப் போ’ என்று டிரைவரிடத்தில் அடிக்கடி சொல்லிக் கொண்டே யிருப்பார்.

**வழியில் :**

கார் செல்லும் போது, சில இடங்களில் வழியில் மக்கள் கையில் மாலையுடன் நின்றுகொண்டிருப்பார்கள். பக்தவத்சலம் அங்கே காரை நிறுத்தச் சொல்லிவிட்டு, அவர்களிடம் அன்புடன் பேசுவார். அவர்கள் அளிக்கின்ற அன்பு மாலையைப் பெற்றுக்கொண்டு, அந்த மக்கள் கூறும் குறைகளை யெல்லாம் கேட்டுக் கவனிப்பதாக மறுமொழி கூறிவிட்டே தொடர்ந்து செல்வார்.

**'பட்ஜெட்' மயம்**

அப்போது அவர் நிதியமைச்சராக இருந்தார். ஒரு நாள் காலையில் சட்டசபைக்குச் செல்வதற்கு முன்னர் சாப்பிட்டு விட்டுச் செல்வது வழக்கம். அன்று அசெம்பிளியில் 'பட்ஜெட்' சமர்ப்பிக்க வேண்டியிருந்ததால், தன்னுடைய நினைப்பை எல்லாம் பட்ஜெட்டிலேயே ஆழ்த்தி யிருந்தார். இடது கையிலே அன்று படிக்கவேண்டிய பட்ஜெட் தலைவிரி கோலமாக இருந்தது. அவருடைய மனம் அதிலே லயித்திருந்தது. வலது கையால் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் அவருக்கு, ஞானசுந்தரம் அம்மையார் 'பாதாங்கீர்' கொண்டு வந்து வைத்தார். சாப்பிடுகின்ற உணவிலே எண்ணத்தைச் செலுத்தாத அவர் பாதாங்கீரை சாப்பிடுகின்ற உணவிலேயே ஊற்றிக் கொண்டு பிசைந்து சாப்பிட ஆரம்பித்தார்.

இதைக் கண்ணுற்ற ஞானசுந்தரம் அம்மையார்......





**நேருவின் சாம்பலுக்கு வணக்கம்**

'என்னங்க பாதாங்கீரை சாப்பாட்டில் ஊற்றிக் கொண்டு சாப்பிடுகின்றீர்களே' என்று வியப்புடன் கேட்டார். 'அப்படியா......சரி......' என்று சொல்லிவிட்டு பட்ஜெட்டைப் படித்துக் கொண்டே சாப்பிட்டு முடித்து சட்டசபைக்குக் கிளம்பினர். ஒரு விஷயத்தில் தன் கருத்தைச் செலுத்தினுல் அச்செயலில் இரண்டறக் கலந்து விடும் பண்பு பெற்றவர் பக்தவத்சலம் என்பது இதிலிருந்து தெரிகின்றதல்லவா?

திரு. பக்தவத்சலம் பண்புகள் நிறை குடத்தைப் போன்றது; மலைமேல் ஒளி விடும் சுடர் விளக்குப் போன்றது; வழி தெரியாமல் கடலில்

சுழல்கின்ற கப்பல்களுக்கு வழி காட்டும் கலங்கரை விளக்கம் போன்றது; இளைஞர் சமுதாயத்தின் இதயத் துடிப்புகளை வளர்க்கின்ற மக்கள் வெள்ளத்தின் மாண்பு மிக்க பண்பின் எடுத்துக்காட்டு. நன்கு புரிந்து செயல்படுபவர் பக்தவத்சலம். பண்பின் குன்றம் போல் வாழ்கின்ற அவர், இன்னும் பல்லாண்டுகள் அதேபோல் வாழ்ந்து, நாட்டை நல்ல பாதையில் அழைத்துச் செல்வார் என்பது திண்ணம்!

பெருந்தமிழர் பக்தவத்சலம் அவர்களின் அண்மைக்கால பணிகளில் பெரிதும் உலகறியாத ஆனால் உயர்ந்தார் உள்ளமறிந்த ஒன்று உண்டு. அது தவக்குறையின் விளைவாக பிரதமர் நேரு மறைந்த பின்னால் புதிய பிரதமரை நம் தலைவர் காமராஜர் தெரிந்தெடுக்க மேற்கொண்ட பணியில், அவர் புரிந்த துணையேயாகும். உலக நாடுகளெல்லாம் இந்தியாவில் குடியாட்சி வாழுமோ சாகுமோ என்று கலங்கி இருந்தநேரத்தில் தலைவர் காமராஜ் தரணி போற்றும் வகையில் பிரதமராக லால் பகதூர் சாஸ்திரியைத் தேர்ந்தெடுத்தார். அச்செயலாண்மைக்கு சிறந்த துணைவர்களில் ஒருவராக விளங்கியவர் நமது முதலமைச்சர் அவர்களே!



9

# எங்கும் தவழும் இசை

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

—திருவள்ளுவர்.

திரு. பக்தவத்சலம் அவர்கள் பல முறை வெளி நாடுகளுக்குச் சென்று அங்கு வாழும் மக்களுடைய நாகரிகத்தையும் பண்பாட்டையும் கண்டு வந்திருக்கிறார். மேற்கு நாடுகளுக்கு அவர் சென்ற போது, அங்கே பல வகையான புதுமைகளையும் புத்துணர்வின் எழுச்சிகளையும் கண்டுணர்ந்து, அத்தகைய புதுமை நிறைந்த எண்ணங்கள் பாரத நாட்டில் வாழ்கின்ற ஒவ்



அயல் நாட்டில்

வொருவருக்கும் இருக்க வேண்டும் என்று கனவு கண்டுள்ளார். அவருடைய கனவுகள் மெதுவாக – ஆனல் உறுதியான அடித்தளத்தின்மேல் – செயல் பட்டு வருவதை அவரே கண்கூடாகக் கண்டு களிப்படைந்து வருகிருர். அவருக்கு மேற்கு நாடுகளில் ஏற்பட்ட புதுமையான அனுபவங்களை நாமும் பகிர்ந்துகொள்ளலாமே!

முதன்முதலில் காமராஜ் அமைச்சரவையை அடைந்த போது, அதில் வேளாண்மை அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டார் பக்தவத்சலம். அச்சமயம் அவர் ஜினிவாவில் நடைபெற்ற உலகத் தொழில் அமைப்பிற்கு இந்திய அரசாங்கக் குழுவின் தலைவராய்ச் சென்று வந்தார். 1957-ஆம்



ஆண்டு ஐரோப்பிய நாட்டில் அவர் ஐம்பது நாள்கள் சுற்றுப்பயணம் செய்தார். ஒவ்வொரு நாட்டிலும் புதிய சூழ்நிலைகள், புதிய சந்திப்புகள், புதிய மனிதர்கள் – இப்படி எல்லாமே புதுமைக் கோலந்தான். அதற்குப்பின் அவர் 1960-ஆம் ஆண்டில் தொழில் நுணுக்கங்களைக் காண ரஷ்ய நாட்டிற்குச் சென்ருர்; இந்த நாட்டிற்கு வேண்டிய கருத்துச் செல்வத்தை அங்கிருந்து அள்ளிக் கொண்டு வந்தார்.

**இத்தாலி :**

இத்தாலி நாட்டில் சுற்றுப்பயணம் செய்த போது இன்றைய முதலமைச்சர் அவர்களின் கவனத்தை அன்று கவர்ந்தது ஒரு தங்கக் கோயில். அதைக் கண்டவுடன், நம்முடைய பாரத நாட்டின் தென்கோடியில் உள்ள சிதம்பரமே பக்தவத்சலம் அவர்கள் நினைவிற்கு வந்ததாம். ஆம். சேக்கிழார் வழி வந்த செம்மலல்லவா அவர்! சிதம்பரம் பொற்சபையில் காண இயலாத அளவுக்குத் தங்கத்தை அந்தக் கோயிலில் அவர் பார்த்தாராம்.

**இரத்தப் படிகள் :**

அதே போன்ற இன்னெரு கோயிலைப் பார்த்த போது மக்களுக்குக் கடவுள் பக்தி குறையவில்லை என்பதை உணர்ந்துகொண்டார் முதலமைச்சர். ஏசுநாதரைச் சிலுவையிலறைந்து கொல்வதற்கு முன்பு அவரது கரங்களாலேயே சிலுவையைச் சுமந்துகொண்டு போகச் சொன்னுர்கள் முறை

கேடர்கள். அப்போது அவருடைய உடலிலிருந்து இரத்தம் கசிந்து மண்ணில் சிந்தியது. அதன் மேல் காலை வைத்து நடக்கக் கூடாது என்று மக்கள், முழங்காலிட்டு நடந்து சென்ற விந்தையைப் பார்த்து, திருப்பதி 'முழங்கால் முரித்தான் மலை'யை அவர் எண்ணி வியந்தாராம்! இப்படி ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பாரத நாட்டுடன் இணைத்துப் பார்க்க அவர் தவறியதே இல்லை.

**இங்கிலாந்து :**

இங்கிலாந்து நாட்டில் அவரது உள்ளத்தைக் கவர்ந்த இடம் ஹைட்பார்க்குதான். அங்கே யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் பேசலாம். அரச பரம்பரை, ஆண்டவன் – இந்த இரண்டைத் தவிர வேறு எதைப்பற்றியும் அந்த இடத்தில் வைது பேசலாம். திரு. கிருஷ்ண மேனன்கூட ஒரு காலத்தில் 'ஹைட்பார்க்கு'ப் பேச்சாளராகவே இருந்தார்!

**ஜெர்மனி :**

இயந்திரங்களின் உலகமாயிருக்கிற ஜெர்மனிக்குப் போனார் பக்தவத்சலம்; அங்கே இருந்த இயந்திரங்களைக் கண்டு வியப்படைந்தார். அதே சமயம் ஜெர்மானியரும் கோயில்களைப் பாது காப்பதைக் கண்டு வியந்தார்.

**பாரிஸ் :**

பாரிஸ் நகரில் கட்டடங்களின் அழகைத் தம்மை மறந்து பார்த்துக்கொண்டே சென்ற



பக்தவத்சலத்திடம் ஒரு பிரெஞ்சுக்காரர் வந்து, "இந்து மதத்தை நான் பெரிதும் விரும்புகிறேன்! இந்துக்களையும் இந்து மதக் கோயில்களையும் காண நான் மிகவும் ஆவலாய் இருக்கிறேன்!" என்று சொன்னார். பாரத நாட்டின்மேல் வெளி நாட்டவருக்குள்ள பக்தியையும் மதிப்பையும் கண்டு பெரிதும் மகிழ்ந்தார் பக்தவத்சலம். அந்தப் பாரிஸ் நகரில் கல்லூரிகளில் இடம் இல்லாத திண்டாட்டம் இருப்பது கண்டு அவர் புன்னகை கொண்டார். தமிழ் நாட்டை அப்போது அவர் எண்ணிக்கொண்டார் போலும்!

**சுவிட்சர்லாந்து :**

ஸ்விடசர்லாந்தில், ஒரு சமயம் அவருடன் 'காந்தி குல்லா' அணிந்து ஒருவர் சாலையில் நடந்து வந்துகொண்டிருந்தார். அச்சமயம் பாதையோரத்தில் சிலர், 'நேருஜியா இவர்?' என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டிருந்தனர். நேருஜிமீது அந்த மக்கள் எவ்வளவு ஆர்வம் கொண்டுள்ளார்கள் என்பதை எண்ணி வியந்தது மட்டுமன்றி, மகிழ்ச்சியுமடைந்தார் திரு. பக்த வத்சலம்.

**இட்டலி சாம்பார் :**

மேல் நாடுகளில் இட்டலி, சாம்பார்ச் சாதம், குழம்பு இவையெல்லாம் கிடைப்பது மிகவும் அரிதுதான். வயிறு நிறைகின்ற எளிய உணவு தமிழ் நாட்டிலேதான் கிடைக்கிறது,' என்று பெருமையுடன் கூறுகிறார் பக்தவத்சலம். சைவ



உலக அரங்கில் உற்றுக் கேட்கிறார் (ஜெனிவா)

உணவும் அங்கே உண்டு; ஆனால், எல்லாம் பாதி வேக்காடுதான். அவர்கள் மதுவை மிகச் சாதாரணமாக அருந்துகிறார்கள்; அதை உணவோடு உட்கொள்கிறார்கள். ஆனால், இந்தியர்கள் சென்றால் மட்டான குடி (Soft drink) என்று அன்னாசியும் ஆரஞ்சும் பிழிந்து பழச்சாறு தருகிறார்கள். இது அவருக்குப் புதுமையாய் இருந்தது.

**ஸ்வீடன் :**

ஸ்வீடன் நகரத்தில் சுற்றுப்பயணம் செய்த போது அதிசய அனுபவம் ஒன்று அவருக்கு உண்டாயிற்று. அவர் ஒரு கிராமத்தைப் பார்க்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டார். ஆனால், ஒருவர், 'நீங்கள் இப்போது இருப்பதே ஒரு கிராமந்தான்,' என்று அவரிடம் கூறிய போது அவருக்குப் பெருந் திகைப்பாய் இருந்தது! காரணம், அந்தக் 'கிராமம், நம்முடைய சென்னையைப் போன்றிருந்ததுதான். பழைய வீடு அங்கே ஒன்றுகூட இல்லை. மக்களின் வாழ்க்கைத்தரம் மிகமிக உயர்ந்திருந்தது.

**ஸ்டாக்ஹோம் :**

ஸ்வீடனில் 'ஸ்டாக்ஹோம்' என்பது ஒரு கிராமம். அங்கே பால் பண்ணை ஒன்று இருக்கிறது. ஒரு 'கப்'புப் பால் விலை பன்னிரண்டு அணா. முரட்டுக் காளைகள் அங்கே மிக அதிகம். பாலைக் கறக்கப் பால்காரன் தேவையில்லை! இயந்திரங்களே அந்தத் தொழிலைச் செய்துவிடுகின்றன! இது ஒரு வியக்கத்தக்க முன்னேற்றமல்லவா?

**ரோம் :**

ரோம் நகரில் இருக்கின்ற பழமையான கட்டடங்களில் அற்புதமான சிற்ப வேலைகளும் ஓவியச் செல்வங்களும் காணப்படுகின்றன. அங்கும் பண்டைக் காலத்தில் கலையைப் பத்திரமாய்ப் பாதுகாத்து, ஆதரவளித்து வளர்த்திருக்கிறார்கள். நீர்ச் சுனைகளை, நவராத்திரி நாள்களிலே கண்ணைக் கவரும் வகையில் அங்குள்ளோர் அலங்கரிக்கின்றனர்.

**ரஷ்யா :**

சோவியத்து அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், நம் நாட்டிலிருந்து மத்திய, ராச்சிய விவ

சாய அமைச்சர்களும் மற்றவர்களும் அடங்கிய தூதுக் குழு அந்த நாட்டில் நடைபெறும் விவசாய முன்னேற்றங்களைக் காண்பதற்காகச் சென்று வந்தது. அந்தக் குழுவில் பக்தவத்சலம் அவர்களும் சென்னைச் சர்க்காரின் பிரதிநிதியாய் 1960-ஆம் ஆண்டு சென்றிருந்தார்; இரண்டு வாரங்களுக்கு மேல் அந்த நாட்டில் தங்கியிருந்து, விவசாய முன்னேற்றங்களையும், தொழில் நுணுக்கங்களையும் கண்டு, அவற்றின் அடிப்படையில் இந்த நாட்டையும் மாற்றியமைக்க வேண்டுமென்று மனத்தில் திட்டமிட்டுக்கொண்டார்.

விவசாயத்துறையில், அந்த நாட்டு மக்கள் விஞ்ஞானத்தைப் புகுத்தி ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள். புதிய இயந்திரங்களைப் பயன்படுத்தி, அதிகமான அளவில் உற்பத்தியைப் பெருக்குகிற விதங்களை அவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். எண்ணற்ற விவசாயப் பள்ளிகள் ரஷ்ய நாடு முழுவதும் பரவியுள்ளன. ஆனால், அதே சமயம் அவ்வளவு விவசாயப் பள்ளிகள் நம் நாட்டில் இல்லையே என்று வருந்துகிறார் திரு. பக்தவத்சலம். கூட்டுப் பண்ணைகள் மிக வியக்கத்தக்க வகையில் அங்கே வளர்ச்சியடைந்திருக்கின்றன. கோதுமை விளைச்சல் முதல் இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறது. இந்தக் கூட்டுப் பண்ணை முறை ரஷ்ய நாட்டில் மிகுந்த வெற்றியை அடைந்திருக்கிறது என்று கூறுகிறார் இன்றைய முதலமைச்சர். கோதுமை விளைச்சலுக்கென்று நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே விவசாயிகளுக்குக் கூலிதான் தருகிறார்கள். குறைந்த



பட்சம் மாதம் 400 ரூபிள் கூலியாகக் கொடுக்கப் படுகிறது. கூட்டுப் பண்ணை விவசாயிக்குச் சராசரி 530 ரூபிள் வருமானம் கிடைக்கிறது.

ரஷ்யாவில் விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்வதற்குப் பெரிதும் ஊக்குவிக்கப் படுகிறார்கள். ஒவ்வொரு விவசாயிக்கும் அரை ஏக்கர் முதல் இரண்டரை ஏக்கர் நிலம் வரை சொந்தமாக அளிக்கப்படுகிறது. அங்குள்ள 'கழகஸ்தான்' என்ற குடியரசு, இந்தியாவைவிட இரண்டு மடங்கு விஸ்தீரணம் உள்ளது. ஆனால், அங்குப் பத்துக்கோடி ஜனத்தொகைகூட இல்லை! நிலமோ, ஏராளமாய் இருக்கிறது. அதனால், ராக்ஷச இயந்திரங்கள் ஓயாமல் ஒழியாமல் பணியாற்றிக்கொண்டிருக்கிற விந்தையைக் கண்டு பக்தவத்சலம் அதிசயித்தார்.

ரஷ்யாவில் வீடுகள் கட்டுகின்ற பாங்கினைக் கண்டு, முதலமைச்சர் மகிழ்ச்சியடைந்தார். அங்கே வீடுகள் வேகமாக அடுக்கடுக்காகக் கட்டப் பட்டு வருகின்றன. கிராமங்களில் ஹரிஜனங்களின் வீடுகளைவிட மிக எளிய முறையில் மண்சுவரெழுப்பி வீடுகள் கட்டப்படுகின்றன. ஆனாலும், வீட்டுப் பிரச்சினை அங்குத் தீர்க்க வியலாத பிரச்சினையாய்த்தான் இருக்கிறது. மாஸ்கோ நகரில் ஏராளமான வீடுகள் கட்டப்பட்டு வந்த போதிலும், அங்கு ஓர் அறையில் பெற்றோர், இளந்தம்பதிகள் ஆகிய நான்கு பேர்களும் ஒன்றாக வாழக்கூடிய வசதிகள் போதுமானதாய் இல்லாமல் இருப்பதைக் கண்டார் அவர்.

அந்த நாட்டு மக்கள் இந்தியர்களிடத்தில் பேரன்பும் மதிப்பும் கொண்டிருப்பதைக் கண்டு பக்தவத்சலம் மகிழ்ந்தார். விருந்தோம்பலில் தமிழ் நாட்டாரையும் மிஞ்சும் அளவுக்கு அவர்கள் பண்பாட்டோடு நடந்து கொள்கிறார்கள். மணம் செய்துகொண்டு, கணவன் மனைவி, குழந்தைகள், பெற்றோர் என்னும் எல்லாரும் அன்புடன் வாழ்கின்றனர். ஆடவர்களோடு பெண்டிரும் நன்றாக உழைக்கிறார்கள். பெண்டிருள் எல்லாரும் அந்த நாட்டில் வேலைக்குப் போவதில்லை. "43 ஆண்டுகளில் கடுமையான ஆட்சி செலுத்திய ரஷ்யர்கள் அடைந்துள்ள மகத்தான அபிவிருத்தியோடு 13 ஆண்டுகளில் நாம் அடைந்திருக்கும் சாதனையை ஒப்பிட்டுப் பார்த்தால், நம் இலட்சியத்தை அடைய இன்னும் 30 ஆண்டுகள் வேண்டுவதில்லை; இன்னும் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் கூடிய வரையில் நமது இலட்சியத்தை அடைந்துவிடலாமென்ற நம்பிக்கைதான் ரஷ்யாவில் கிராமங்களையும் நகரங்களையும் சுற்றிப் பார்த்த பிறகு எனக்கு ஏற்பட்டிருக்கிறது", என்று கூறுகிறார் பக்தவத்சலம்.

**அமெரிக்கா :**

பக்தவத்சலம் 1963, ஜூன் மாதம், 4-ஆந் தேதி அமெரிக்காவில் வாஷிங்டனில் நடந்த உலக உணவு காங்கிரஸுக்குச் சிறப்பு அழைப்பாளராய்ச் சென்று கலந்துகொண்டார். எஸ் கே. பட்டீல் முதலில் இந்தியத் தூதுக் குழுவின் தலைவராய் இருந்தார். பின்னர்ப் பத்து நாள்களுக்குமேல் நடந்த அம் மாநாட்டில், இந்தியத் தூது கோஷ்டி



யின் தலைவராய்க் கடைசி வரையில் இருந்து மாநாட்டு நிகழ்ச்சிகளில் முக்கியப் பங்கு பெற்றார் பக்தவத்சலம்.

**திருக்குறள் :**

அவ்வுணவு மாநாட்டில் பல நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்கள் முன்னிலையில் பக்தவத்சலம் "இலமென்று அசைஇ யிருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்," என்ற தமிழ் மறையின் தத்துவத்தைக் கூறி, தமிழின் மேம்பாட்டையும் தமிழரின் சோம்பலின்மையையும் விளக்கினார். மறைந்த ஜனாதிபதி கென்னடியும், இந்திய ஜனாதிபதி ராதாகிருஷ்ணனும் அம் மாநாட்டில் கலந்துகொண்டனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

உலக உணவு மாநாடு பெரிதும் பயனுள்ளதாகவே இருந்தது. உணவுத் தேவையில் தன்னிறைவு அடைந்த அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளும், உலகில் உணவு உற்பத்தியை அதிகரித்து உணவுப் பஞ்சம் என்பதையே உலகில் இல்லாத ஒன்றாக்க வேண்டுமென்பதில் அக்கறைக் காட்டிப் பேசினார்கள். ஆப்பிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளும் விவாதங்களில் முக்கிய பங்கு கொண்டார்கள். விவசாயத் துறை விஞ்ஞானிகள் பலரும் அரும்யோசனைகள் பலவற்றைக் கூறி ஒத்துழைத்தனர்.

இந்த உலக மாநாட்டில் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆற்றிய சொற்பொழிவு

எல்லாரையும் வியப்பில் ஆழ்த்தியது. காரணம் அங்கு பேசிய அமெரிக்க அதிபர் கென்னடியும் மற்றேரும் குறிப்பு வைத்துக் கொண்டு பேசி ஞர்கள். டாக்டர் ராதாகிருஷ்ணன் குறிப்பு ஏது மில்லாமல் சரளமாக சொற்பொழிவு நிகழ்த்தினர்.

உணவு மாநாட்டிற்குப் பிறகு முதலில் பக்த வத்சலம் பலவகை மோட்டார் வாகன உற்பத்தி நடைபெறும் டெட்ராயிட் தொழில் நகருக்குப் போனர். அங்கு 'போர்டு' கார் தொழிற்சாலையை பார்த்தார். உலகிலேயே சொந்த உருக்காலே வைத்துள்ள கார் தொழிற்சாலே இது ஒன்றுதான். உருக்குத் தகடொன்று பலவிதங்களில் உருமாறி முடிவில் காட்சி அறையில் வைக்கப்படும் 'கார்' ஆகி வெளி வருவதை அங்கு கண்டார். 54 விநாடி களுக்கு ஒரு கார் வீதம் நாள் ஒன்றுக்கு 1064 கார்கள் அங்கு உற்பத்தியாகின்றன. அப்படி உற்பத்தியாகும் கார்களில் பெரும்பாலும் அமெரிக் காவிலேயே வாங்கப்பட்டு விடுகிறது. அங்கு வேலே செய்யும் 38 ஆயிரம் தொழிலாளர்களில் 22 ஆயிரம் தொழிலாளர்களுக்கு சொந்தக் கார்கள் இருக் கின்றன. இதற்கு மற்ருெரு காரணம் எளிதில் தவணே முறையில் கடனில் கார்கள் கிடைப்ப தாகும்.

அமெரிக்காவிலுள்ள இந்திய தூதராலய சிப்பந்திகள் அனைவரும் சொந்தக் கார்கள் வைத் திருக்கிருர்கள். பெட்ரோலும் அங்கு மலிவாகக் கிடைக்கின்றது.

சிகாகோ நகரில் பக்தவத்சலம் கல்வி போர்டு அலுவகம் ஒன்றை பார்த்தார். அந்தப் பெரிய நகரைப் பலமாவட்டங்களாக பிரித்திருக்கின்ருர் களாம். ஏராளமானவர்கள் பணிபுரியும் அந்த போர்டில், பாடப் புத்தகங்களை நன்கு நுணுகி ஆய்ந்து பார்த்த பின்னரே தேர்ந்தெடுக்கிருர்கள். பள்ளிக் கட்டடங்கள் கட்ட ஸ்தல ஸ்தாபனங்களே கடன் பத்திரங்கள் விற்றுப் பணம் திரட்டு கின்றன.

பள்ளிகளில் பகலுணவுத் திட்டம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. எல்லாக் குழந்தை களும் காசு கொடுத்தே தங்களுக்குத் தேவையான அளவு உணவை வாங்கிச் சாப்பிடுகிருர்கள். அதற்கு வகையில்லாத சில ஏழைக் குழந்தைகளும் இருக்கிருர்கள். ஆனல் அம்மாதிரி உள்ள குழந்தை களுக்கு ஆசிரியர்கள் பள்ளி நிதியிலிருந்து தினந் தோறும் ரகசியமாக பணம் கொடுத்து விடுவார்கள், இதனல் பள்ளியின் உணவு விடுதிக்குச் செல்லும் போது ஏழை என்கிற வேற்றுமை தெரியாமல், மற்றவர்களோடு சேர்ந்து உணவு வாங்கி உண்ண முடிகின்றது. ஏழைக் குழந்தைகளின் கவுரவமும் காக்கப்படுகின்றது.

அவர் அங்கு கலிபோர்னியா, சான்பிரான் சிஸ்கோ ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கும் விஜயம் செய்தார். அங்கு இந்திய வரலாற்றை விசேஷமாகப் பயிலும் சில பேராசிரி யர்களையும் சந்தித்துப் பேசினர். இந்திய விவகாரங்களில் அவர்கள் அதிக அக்கறை காட்டி வருவதையும் நேரில் அறிந்தார்.

அங்குள்ள நூலகத்தில் பொதுப் பிரிவில் சென்னையிலிருந்து வெளிவரும் இந்து, சுதேச



அமெரிக்காவிலிருந்து திரும்பியதும்

மித்திரன், ஆந்திர பத்திரிகா போன்ற பத்திரிகைகளைக் கண்டவுடனே பெரிதும் வியப்பு அடைந்தார். 1920-ஆம் ஆண்டின் ஏடுகளெல்லாம் கூட பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளதையறிந்து மலைத்துப் போனார். அமெரிக்காவிலிருந்து பக்தவத்சலம் இந்தியா திரும்பும் போது வழியில் ஜப்பான், ஹாங்காங், சயாம் வழியாகவே வந்தார்.

வெளி நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, அந்த நாடுகளின் பண்பாடு, மக்கள் வாழ்க்கை, கலாசாரம், மனப்போக்கு, பழக்க வழக்கங்கள் இவற்றையெல்லாம் அறிந்திருக்கும் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், 'பாரத நாட்டின் பண்பாட்டுக்கு ஈடு வேறெதுவுமில்லை,' என்றுதான்



சொல்கிறார். இத்தனை நாடுகள் சுற்றிய போதும், இந்தியப் பண்பாட்டை அவர் சிறிதும் இழக்கவில்லை! பாரத நாகரிகத்தை அவர் போற்றிப் பாதுகாக்கத் தவறவில்லை. காந்தியடிகள், புத்தர், பரமஹம்ஸர், விவேகானந்தர் போன்ற சத்திய சீலர்கள் பிறந்த இந்த நாட்டின் பண்பாட்டையும், கலாசாரத்தையும் அவர் தம் உயிர் போல எண்ணிப் பாதுகாத்து வருகிறார்! "பாரதப் பண்பாட்டின் திலகம்" போல அவர் வாழ்கிறார்; இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து நாட்டிற்குத் தொண்டு புரிவார் என்பதில் ஐயமே இல்லை.



பேட்டையிலே அருளாசி

## பக்தவத்சலம் வாழ்கவே !

சொல்லைக் குறைத்திங்கே
    தொண்டைப் பெருக்கிநிதம்
பொல்லாரை நல்லாராய்ப்
    போய்மாற்றி—எல்லோரும்
இன்புற் றிருக்கவழிச்
    செய்த முதல்வருக்கே
நன்றியினைச் சொன்னோம்
    நயந்து !

★

நீடு புகழ்பெற்று
    நீணிலத்தில் அன்பருளால்
கோடுயர் வேலவன்
    குன்றேபோல் வாழ்ந்துவரும்
தேடற் கரிய
    திருபக்த வத்சலத்தைப்
பாடநினைத் தின்புற்றேன்
    பாய்ந்து !

★

கண்டேன் களிகொண்டேன்
    கன்னல் தமிழுண்டேன்
தண்டேன் பெருந்தமிழன்
    தாழ்வில் முதலமைச்சைக்
கண்டதுமே பேரின்பங்
    கொண்ட நிலைபெற்றேன்
நின்றேன் பறிகொடுத்தேன்
    நெஞ்சு !

திருமகளைத் தூய
கலைமகளை யாளும்
பெருமகனுக் கின்று
பிறந்தநா ளென்றறிந்தோம் !
எம்மை யறியாத
பேரின்பத் தைப்பெற்றேம்
இம்மைப் பயனுற்றே
மின்று !

★

வெள்ளைக் கதருடுத்தி
வெள்ளை மனங்கொண்டு
வெள்ளையரைப் போக்க
மகாத்மா படைசேர்ந்தே
அல்லும் பகலும்
அயரா துழைத்ததமிழ்ச்
செல்வபக்த வத்சலந்தான்
வாழ்க !

★

**புத்தனின் மறுபிறப்பு !**

பொன்னவிர் முகமும் ஏதோ
புதுமையில் ஆழ்ந்த நெஞ்சும்
பன்னலச் செயலும் பண்பின்
பாச்சுவைச் சிறப்பும் தெய்வச்
சந்நதி உடலுங் கொண்டு
தளராது பணிக ளாற்றும்
அண்ணலாம் முதல மைச்சன்
அயர்வின்றி வாழ்க வாழ்க !



சிந்தனை மிகுந்த நெஞ்சம்
துன்பினைக் களையும் செய்கை
வந்தனைக் குரிய கேண்மை
வரலாற்றில் நிற்கு மாண்மை
இந்திய நாட்டி லார்வம்
இசையிலே பற்று, தெய்வச்
சிந்தனை, வாய்மை காக்கும்
சுருங்கிய பேச்சு மிக்கோன் !

★

மற்றவர் போற்ற வாழ்வை
வளர்பிறை யாக்கி விட்டோன்
கற்றவர் வணங்க நாளும்
கவின்மிகு அருளைப் பூண்டோன்
பற்றிலான் வீட்டில், நாட்டில்
பற்றுளோன் என்ன வாழ்வோன்
சிற்றினம் சேரா நோன்பு
சீருத செந்நா கொண்டோன் !

★

தன்வேலை யெல்லாம் தானே
செய்திட நினைக்கும் பண்பு
புண்ணுறும் வண்ணம் வாயால்
புகலாத புனிதக் கொள்கை
எந்நாளும் சோம்பி வாழா
ஏற்றத்தில் தேர்ச்சி நாட்டில்
தன்வீடு குழந்தை சுற்றத்
தார்நலன் பின்னே என்போன் !

★

எப்போதும் ஓடி யாடும்
    எறும்புபோல் சுறுசு றுப்பு !
கப்பிய சோர்வைக் கண்டு
    கலங்காத நெஞ்சம், மேலும்
செப்பிய சொல்லைக் காக்கும்
    சீர்மிகு கடமை, நோயில்
தப்பியும் படுக்கா செம்மை,
    தாளாண்மை மிக்கோன் மேலோன் !

*

அஞ்சுதற் கஞ்சும் ஆளன்
    அகிம்சையைப் பேணும் ஞானி
தஞ்சமென் றடைந்தோ ருக்குத்
    தவறாமல் நலத்தைச் செய்வோன் ;
கஞ்சனே, புகழை யார்க்கும்
    கொடுத்திட நினையா தாலே !
நெஞ்சினால் எளியோ ருக்கு
    நலஞ்சேர்க்க விழையும் செம்மல் !

*

கண்டவ ரிடத்தி லெல்லாம்
    கூடிடான், கூச்ச முள்ளோன் !
சண்டைகள் வாழ்வி லில்லை
    சச்சர வேது மில்லை
நன்றென எதையு மந்த
    நேரத்தில் செய்ய ஆர்வம்
கொண்டவன் புதிய வற்றைக்
    காணவே துடிக்கும் தூயோன் !

*



நலிவிலே சிக்கா மேனி
    நல்லறங் காக்கும் செந்நா,
கலைகளைப் போற்றும் ஆற்றல்
    காய்தலை மறந்த சிந்தை
அலைச்சலும் களைப்புங் கொண்டே
    அயராது பயணம் செய்வோன் !
பளிச்சென சூடாய்ப் பேசா
    புத்தனின் மறுபி றப்பு !

**வயது–65**

இதனைத்தான் இதனாற்றான் இவனாற்றான்
    முடியுந்தான் எனநி னைந்தே
அதனைத்தான் அதனாற்றான் அருள்பக்த
    வத்சலமி டத்தே தந்தோம் !
மதிபெற்றான் நிதிபெற்றான் எதுவரினும்
    கலங்காத ஏந்த லென்று
முதல்வரைத்தான் சொலச்செய்து வயதறுபத்
    தைந்தடைந்த அமைச்சன் வாழ்க !

(வேறு)

பெரும்பூ தூரில் நின்றவனை
    பேச்சால் எதிர்ப்பை வென்றவனை
எறும்பின் வேகம் பூண்டவனை
    எழுத்தை வளர்க்கும் ஆண்டவனை
அறுபத் தைந்தைப் பெற்றவனை
    அகிம்சை நெறியைக் கற்றவனை
இருப்போர்க் குள்ளே மூத்தவனை
    என்றும் நினைப்போம், வாழ்த்திடுவோம் !

*

## அறுபத்தெட்டா ?

கலைகளை யறிந்து காந்தி
காட்டிய வழியில் வந்து
நிலையிலே எளிமை பூண்டு
நேர்மையில் நின்று வெள்ளைக்
கலையினைக் கதராய் மாற்றிக்
காழ்ப்பினைத் துறந்த மூத்தத்
தலைவனுக் கறுபத் தெட்டு
துவக்கமா ? மலைத்தோம் வாழ்க !

*

கல்லினைக் கனிய வைக்கும்
கருத்தாழப் பேச்சும், நாட்டின்
செல்வத்தைப் பெருக்க—வேண்டும்
செயல்களைப் புரியும் பண்பும்
கல்வியைத் தெருக்கள் தோறும்
கவினுறப் பாய்ச்சும் தென்பும்
வல்லவர் வாழ்த்தும் பக்த
வத்சலம் பெற்றான் வாழ்க !

*

## செந்தமிழ்க் காந்தி

புனிதன் காந்தி காட்டிய வழியிலே
பொறுமை வாய்மை துணைவரச் சுதந்திரப்
பணியி லாழ்ந்து புகழினைக் கூட்டிய
புத்தன் பக்த வத்சலம் வாழ்கவே !

*



செல்வ மில்லா ஏழைய ருய்யவே
செய்யும் தொண்டைச் சிறப்புறச் செய்துயர்க்
கல்விப் பாலை யூட்டிய செந்தமிழ்க்
காந்தி பக்த வத்சலம் வாழ்கவே !

*

குடிசை வாழ்வோர் மனநிறை வெய்திட
குவல யத்தில் குறைகளொ ழிந்திட
அடிமைப் பண்பு முற்றிலும் நீங்கிட
அன்பு வழியில் நடப்பவன் வாழ்கவே !

*

இல்லை யில்லை என்றிடும் சொல்லையே
இல்லை யென்னும் நிலையிலே, நாட்டினில்
செல்வ வளத்தைக் கூட்டியே பெருக்கிய
தெய்வ நெஞ்சம் பெற்றவன் வாழ்கவே !

*

துன்ப மொழிந்து சுகம்பெற காங்கிரஸ்
தூய அமைப்பு ஸ்தாபன மொன்றையே
நம்பி வாழ்வோர் எழுச்சியைப் பெற்றதை
நவிலும் பக்த வத்சலம் வாழ்கவே !

*

உண்ண உணவும் இருந்திட இல்லமும்
உழைப்ப தற்கே செய்தொழி லொன்றையும்
தண்ணீ ரோடு தேவைக ளனைத்தையும்
தருதற் கெண்ணும் தமிழ்மகன் வாழ்கவே !

*

தன்னைப் போல பிறரையும் கருதியே
தியாகப் பண்பை மனதிலே பூண்டதோர்
அண்ணல் தியாகி முத்துரங் கம்பெரும்
அடிச்சு வட்டில் வளர்ந்தவன் வாழ்கவே !

★

ஆங்கி லத்தை முறையொடு பயின்றவன்
அகில மெல்லாம் போற்றிட வாழ்பவன்
தீங்கு யார்க்கும் நினைத்திடா தூயவன்
தேச பக்த வத்சலம் வாழ்கவே !

★

பேட்டை மண்ணில் பிறந்தவன், வாழ்விலே
பேச்சைக் குறைத்து பண்பினை வளர்த்தவன்
நாட்டைப் பெரிதென் றெண்ணியே வாழ்பவன்
நல்லோன் பக்த வத்சலம் வாழ்கவே !

★

ஒழுக்கம் தூய்மை அறத்தினை வளர்ப்பவன்
ஓது மொழியை சுருங்கவே உரைப்பவன்
பழுத்த தேசப் பற்றுடைத் தென்னவன்
பக்த வத்ச லத்தினை வாழ்த்துவாம்.

★



**முதலமைச்சர் வாழ்க**

வந்தேமா தரத்தில் தோன்றி
வாய்மையை யறத்தால் காத்துச்
செந்தமிழ்ச் செய்த வத்தால்
செல்வனாய் பக்த னாகி
இந்தியர்ச் செய்த வத்தால்
இசைநிறை அமைச்ச னாகி
முந்தியோர் செய்த வத்தால்
வந்தனன் தலைமை ஏற்றான் !

★

கலைகளை யறிந்து காந்தி
காட்டிய வழியில் வந்து
நிலையிலே எளிமை பூண்டு
நேருவை நெஞ்சி லேற்றி
தலைவராம் காம ராஜின்
தியாகத்தைப் போற்றி நாட்டின்
தலைமையை ஏற்றான் பக்த
வத்சலப் பெரியோன், வாழ்க !

★

மதிநிதி யணைப்பில் வாழ்ந்து
மற்றவர்க் கருத்த றிந்து
முதல்வனாய் தமிழ னாகி
மூதறி வாற்ற லாலே
புதியன சொல்லி, மக்கள்
போற்றலுக் குரியோ னாகி
குதித்திடுங் குழந்தை கட்கு
குறையிலா தளித்தான், வாழ்க !

★

## அமெரிக்கப் பயணம்

அமெரிக்க விவசா யத்தின்
ஆற்றலை எழுச்சி மிக்க
தமிழக விவசா யத்தோ(டு)
ஒப்பிட்டு காணு தற்கு
தமிழக அமைச்ச நீதான்
தூய்மையோ டேகு கின்றாய்!
தமிழகக் கடவுள் நின்னைத்
தளர்வின்றி காப்பான் வாழ்க!

★

வேறொரு மொழியார் வாழும்
மண்ணுக்குச் செல்லும் நீதான்
நேருவை நெஞ்சி லேற்றி
நினைப்பிலே தமிழை ஏந்தி
பாரதப் பண்பை தாங்கி
போகின்றாய், உன்றன் எண்ணம்
பாரெலாம் போற்ற வாழ்க!
பக்தவத் சலமே வாழ்க!

★

## தீபாவளி வாழ்த்து

அருள்தீபா வளிக்குத் தெய்வ
ஆசியைச் சொல்லி அண்ணல்
திறமைக்கு வணக்கம் கூறி
செயலுக்கு நன்றி காட்டி
பெருமைக்குத் தலையைத் தாழ்த்தி
பைந்தமிழ்ப் பாவா ரத்தை
இருபாதங் கட்கு எங்கள்
இருகையால் சூட்டு கின்றோம்!

★



## சிறப்புப் பெயரகராதி

[எண்கள் பக்கங்களைக் குறிக்கும்]

அமராவதிச் சிறை : 111.
ஆகஸ்டு போராட்டம் : 110, 111.
உதயவனம் கேம்ப் : 86.
உப்புச் சட்ட மறுப்பு : 84.
ஏவலப்ப முதலியார் : 5, 8, 10, 13, 18, 19, 28, 37, 38, 39, 40, 41, 62, 91, 102.
ஓமந்தூர் ராமசாமி ரெட்டி : 98, 104, 107, 119, 122, 123, 124, 125, 162.
கனகசபாபதி : 7, 9, 10, 12, 13, 17, 18.
கண்ணம்மாள் : 17, 30, 39, 238.
கராச்சி காங்கிரஸ் : 94, 95.
கல்கத்தா காங்கிரஸ் : 83.
காமராஜ் : 49, 66, 87, 96, 98, 103, 104, 105, 106, 109, 110, 111, 115, 118, 119, 120, 121, 122, 123, 124, 125, 128, 129, 130, 131, 132, 162, 164, 169, 221, 252, 254.
காக்கிநாடா மாநாடு : 74.
குமாரசாமி ராஜா : 124, 125, 126.
கோபால்சாமி முதலியார் : 57, 58, 59, 61, 70, 71, 72, 74, 75, 89, 139.
சரோஜினி வரதப்பன் : 72, 73, 102, 103, 136, 137, 138, 139, 236.
சத்தியமூர்த்தி : 52, 66, 77, 83, 88, 95, 96, 98, 100, 101, 103, 104, 105, 106.
சித்தரஞ்சன் : 74, 1[illegible], 140, 143, 144, 157.
சைமன் கமிஷன் : 79, 80, 81, 82, 83.
ஞானசுந்தரம்மாள் : 58, 59, 60, 61, 62, 71, 72, 74, 75, 89, 140, 143, 144, 148, 149, 150, 153, 1[illegible], 157, 158, 236, 239, 2[illegible].
தண்டி யாத்திரை : 85.
திருச்சி சிறை : 106, 107.
நசரத்பேட்டை : 8, 38, 62.
நேரு : [illegible]0, 66, 74, 78, 79, 82, 8[illegible], 100, 106, 110, 122, 252.
பிரகாசம் : 119, 120, 122, 12[illegible], 125, 127, 161.
பூவிருந்தவல்லி : 21.

மல்லிகா: 6, 9, 10, 11, 12, 13, 14, 16, 17, 18, 19, 44.
மகாத்மா காந்தி: 51, 54, 65, 67, 68, 69, 72, 73, 74, 75, 76, 77, 78, 84, 85, 86, 93, 94, 95, 108, 110, 112, 113, 119, 122, 154.
முத்துரங்க முதலியார்: 5, 8, 10, 18, 28, 30, 37, 38, 39, 40, 41, 42, 45, 46, 47, 49, 53, 62, 68, 70, 77, 78, 87, 88, 89, 90, 91, 92, 98, 100, 102, 104, 105, 107, 108, 110, 111, 116, 117, 119, 120, 121, 126, 127, 237.
மீஞ்சூர்: 6, 10, 12, 18.
மேஜர் ஜெனரல் அழகப்பா: 143.
வரதப்ப முதலியார்: (பெரியவர்) 4, 7, 9, 10, 11, 17, 19.
வரதப்பன்: (மருமகன்) 40.
வேலூர் சிறை: 89, 90, 91, 92.
ராஜாஜி: 66, 71, 78, 87, 89, 90, 94, 95, 96, 97, 98, 100, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 111, 115, 116, 117, 118, 119, 120, 121, 123, 125, 128, 129, 130, 131, 139, 162.
ராமசாமி முதலியார் வி.கே.: 144, 147.
ருக்குமணி: (மகள்) 92, 93, 145, 146, 147, 247, 248.
ரௌலட் சட்டம்: 51, 53, 54, 56.
ஹோம் ரூல் லீக்: 50, 51, 52.

V2:1,2147 m97
N64
108314
2/80